# தமிழரசு



## நான்காண்டுச் சாதனைச் சிறப்பிதழ்









# தமிழ்நாடு அரசின்
# நான்காண்டுச் சாதனைகளை
# விளக்கும்
# சிறப்புக் கட்டுரைகள்


தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு: 2026

ஆனி: 2 மற்றும் ஆனி: 17

மலர்: 25 இதழ்: 24

மலர்: 26 இதழ்: 1

16.6.1995 - 1.7.1995

விலை ரூபாய் பத்து


## 26-வது ஆண்டில் 'தமிழரசு'

'தமிழரசு' 26-வது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது. அரசின் அறிவிப்புகள், ஆக்கப் பணிகள், சாதனைகள் குறித்த செய்திகள், அமைச்சர் பெருமக்களின் முக்கிய சொற்பொழிவுகள்– எழுத்தோவியங்கள், தமிழ்ச் சான்றோர்கள், தேசத் தலைவர்கள் ஆகியோரின் வாழ்க்கை வரலாறுகள், அறிவியல் புதுமைகள், கவிதை மாலைகள், மாணவர்க்குரிய கட்டுரைகள், கதைகள் மற்றும் மாவட்ட மலர்கள் என இப்படிப் பல்வேறு பயனுள்ள எழுத்தோவியங்களை வழங்கித் தொண்டாற்றி வருகிறது 'தமிழரசு'.

அரசின் சார்பில் நடத்தப் பெறும் ஏடு என்ற போதிலும், பொதுமக்கள் விரும்பிப் படிக்கும் பொலிவு மிக்க ஏடாகத் தமிழரசு விளங்கி வருகிறது. ஆம். படிக்க– பயன்பெற– பாதுகாக்கத் தக்க வகையிலே மிக்க கவனத்துடன் தயாரிக்கப் படுகிறது.

'தமிழரசு' இதழுக்குத் தொடர்ந்து ஆதரவு அளித்து வரும் வாசகர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள், சந்தாதாரர்கள், முகவர்கள், விளம்பர தாரர்கள் அனைவருக்கும் எங்களது மனம் கனிந்த நன்றியைக் காணிக்கை ஆக்குகிறோம்.

—ஆசிரியர்

# ஏழைகளின் துயரினைத் துடைப்பதே என்னுடைய கடமை

## மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா



ஆட்சிப் பொறுப்பேற்ற நாள் முதல், இன்று வரை, மக்கட் பணியே தனது தலையாய கடமை என்பதனை நன்குணர்ந்து, இந்த அரசு உறுதியோடு செயல்பட்டுக் கொண்டு வருகின்றது. இந்த உண்மையைத் தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் நன்கு அறிவார்கள். குறிப்பாக, ஏழைகள், ஆதரவற்றோர், முதியோர், கைம்பெண்டிர், சமுதாயத்தின் அடித்தளத்தில் வாழும் மக்கள் போன்றோரின் துன்பங்களை, துயரங்களை, வாழ்க்கைப் பிரச்சினைகளை, அரசு முன்னின்று, முடிந்த வரை தீர்த்து வைக்க வேண்டும் என்ற உயரிய கொள்கையை நாங்கள் கடைப்பிடித்து வருகின்றோம். பல நடைமுறைச் சிக்கல்கள் இருப்பினும் கூட, இந்தக் கொள்கையை உங்கள் அரசு சிறிதும் வழுவாமல் பின்பற்றி வர வேண்டும் என்பதில், நானும், எனது அமைச்சரவையும், உறுதியோடு நின்று செயல்பட்டு வருகின்றோம் என்பதை, பெருமிதத்தோடு கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஓர் அரசினையும், அதன் செயல்பாடுகளையும் பற்றிக் குறிப்பிடுகையில், பொதுவாக அரசு இயந்திரம் என்று, பலரும் கூறுவதை நான் கேட்டிருக்கிறேன். இங்கு

இயந்திரம் என்ற வார்த்தை பயன்படுத்தப்படுவதை நான் குறை கூறவில்லை. ஆனால், அந்த அரசு இயந்திரத்தை இயக்குபவர்கள், ஓர் இயந்திரமாக, மக்களின் தேவைகளையும், பிரச்சினைகளையும், புரிந்து கொள்ளும் சக்தியின்றி, இயந்திர கதியில் இயங்குவதைத்தான், என்னால் ஒரு போதும் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

வாக்குகளை அளித்து, தங்களுக்குப் பிடித்தமான அரசினைத் தேர்ந்தெடுத்து, ஆட்சிப்பொறுப்பில் அமர்த்திவிட்டு, தங்களுடைய வாழ்க்கையில் நிலவிக் கொண்டிருக்கும் வறுமையை, வேலையில்லாத் திண்டாட்டத்தை, பொருளாதாரச் சீர்கேட்டினை, மற்றும் எண்ணற்ற அன்றாடப் பிரச்சினைகளை ஒரளவேனும் தாங்கள் தேர்ந்தெடுத்த அரசு, களைய முற்படாதா என்றுதான், சமுதாயத்தில் பல்வேறு பிரிவுகளைச் சார்ந்த மக்களும், எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கின்றனர் என்பதை, நான் நன்கு அறிவேன். அத்தகைய ஏழைகளின் துயரினைத் துடைப்பதைத்தான், என்னுடைய கடமைகளில் முதன்மையானதாகக் கருதுகின்றேன்.

ஆகவே, வருங்காலச் சமுதாயத்திற்கு உதவக்கூடிய வகையில், தொலை நோக்குத் திட்டங்களைத் தயாரித்துச் செயல்படுத்துவது, உற்பத்திப் பெருக்கத்திற்கு வழிவகை செய்வது, பொருளாதார முன்னேற்றத்திற்கு அடித்தளம் அமைப்பது போன்ற கடமைகள், நீண்ட காலத் திட்டங்களாகவே பெரும்பாலும் இருக்கின்றன.

இவை ஓர் அரசின் இன்றியமையாத கடமைகளாக இருப்பினும் கூட, மக்களின் அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளையும், அவர்களின் பல்வேறு இன்னல் களையும், உடனடியாகத் தீர்த்து வைக்கவேண்டும் என்ற மனிதாபிமானக் கடமையினை எந்த ஒரு மக்கள் அரசும் புறக்கணிக்கக் கூடாது என்ற கொள்கையைத்தான், பேரறிஞர் பெருந்தகை அண்ணா, இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆகிய உத்தமத் தலைவர்கள், தங்கள் வாழ்நாள் முழுவதும் பின்பற்றி வந்தார்கள். அந்தப் புனிதத் தலைவர்களிடம் உள்ள கோட்பாடுகளுக்கு ஏற்பவே, உங்கள் சகோதரியின் இந்த மக்கள் அரசும் இயங்கி வருகின்றது என்பதைப் பெருமிதத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

*புரட்சித்தலைவியின் முழக்கம் தொகுதி-3*
என்னும் நூலிலிருந்து.



# வள்ளுவர் வழியில் வளம் பெறும் அரசு

மாண்புமிகு நிதியமைச்சர்

## டாக்டர் நாவலர் இரா.நெடுஞ்செழியன்

'இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு'

—என்பார் திருவள்ளுவர்.

உண்மையான ஆட்சித் தலைவர் அரசுக்குப் பொருள் வருகின்ற வழிகளை இயற்றிப் பொருள்களைத் திரட்டுதல், அவ்வாறு திரட்டப்படும் பொருட்களை ஒருங்கு சேர்த்தல்; அப்படிச் சேர்த்த பொருட்களைப் பாதுகாத்தல்; பின்பு,அவற்றை நாட்டு மக்களின் நலனுக்காக மதி நுட்பத்தோடு பயன்படுத்துதல் ஆகியவற்றில் வல்லவராக இருக்க வேண்டும். இவையே,தமிழ்மறை கண்ட சான்றோர் திருவள்ளுவர் மேற்காணும் தமது குறட்பாவில் தொகுத்துரைத்துள்ள எக்காலத்திற்கும் பொருந்துகின்ற ஆட்சி நெறியின் அடிப்படைத் தத்துவங்களாகும். இவை இன்றைக்கும் கூட அப்படியே பொருந்தி நிற்கின்றன.

நமது மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஏழை மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களின் உயர்வுக்காக அரிய முன்னோக்குடனும் பேராற்றலுடனும், பெருந் திறலுடனும் ஆற்றிவரும் பணிகளால் இந் நாட்டின் மிகப்பெரும் தன்னிகரற்ற ஆட்சித் தலைவராக உயர்ந்து விளங்குகின்றார். அவருடைய தண் குடைக்கீழ், தமிழகம் தலைசிறந்து திகழுகின்றது.

டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் தலைமையிலான இவ்வரசு, 1991 ஜூனில் பதவியேற்றது. அந்நாளில் நமது அரசு மிகக் கடுமையான நிதி நெருக்கடி நிலையை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. அன்றைய நிதிநிலையின்படி, அரசு எதிர்கொள்ள வேண்டியிருந்த மொத்தப் பற்றாக்குறை (total deficit) ரூ.1220 கோடி ஆக இருந்தது. நம்முடைய அன்றைய ஆண்டுத் திட்ட ஒதுக்கீடோ ரூ.1600 கோடி, ஆனால், மொத்தப் பற்றாக்குறையோ ரூ.1220 கோடி; நம்முடைய திட்ட ஒதுக்கீட்டை எய்த இயலாமற் போகும் என்றும், மாநிலம் நிதிவகையில் மீள முடியாத

**1995-96-ஆம் ஆண்டிற்கு வரி இல்லா வரவு- செலவுத் திட்ட அறிக்கை தாக்கல் செய்து, வரலாற்றுப் புகழ் வாய்ந்த சாதனையை எய்தியது.**

**1995-96-ஆம் ஆண்டில் வறியவர் நலன் காக்கும் சமூகப் பாதுகாப்புத் திட்டத்திற்கான மொத்த முதலீடு ரூ.1960.93 கோடியாகும். இச்சீரிய முயற்சிகளை நாடும் உலகும் பாராட்டியுள்ளன.**

கடும் நெருக்கடிக்குத் தள்ளப்பட்டுவிடும் என்றும் அச்சம் எழுந்தது. அப்போது இந்த அரசு, நமது மாநிலத்தின் நிதி நிலையை மேம்படுத்துவதற்காக உறுதியான பல நடவடிக்கைகளை எடுத்தது.

இதன் மூலம் அடுத்த சில ஆண்டுகளில் நமது ஒட்டு மொத்த நிதிநிலைமை குறிப்பிடத்தக்க அளவிற்கு மேம்பட்டுள்ளது. இறுதியில், இந்த ஆண்டில், அதாவது 1995-96 - ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில், இந்தப் பற்றாக்குறையை ரூ.175.50 கோடியாகக் குறைக்க முடிந்துள்ளது.

இவ்வாறு மாநிலத்தின் நிதிநிலைமையை மிகச் சிறப்பான வகையில் திறம்பட்ட முறையில் சமாளித்து வந்ததன் வாயிலாக 1980 -81-ஆம் ஆண்டிற்குப் பின்னர் முதன் முதலாக இப்போதுதான். அதாவது, 1995- 96 - ஆம் ஆண்டிற்கு "வரியில்லா வரவு செலவுத் திட்ட அறிக்கையை" இவ்வரசு தாக்கல் செய்ய முடிந்துள்ளது. இந்த வரலாற்றுப் புகழ் வாய்ந்த சாதனையை எவ்வாறு எய்த முடிந்தது? "மக்கள் மீதான வரிச்சுமை மிகமிகக் குறைவாக இருக்க வேண்டும், அதே சமயம் வளர்ச்சிப் பணிகள் பெருமளவில் நடைபெற வேண்டும்" என்று இவ்வரசு வகுத்துக் கொண்ட கொள்கையின் விளை வாகவே இது சாத்தியமாயிற்று.

பல்வேறுபட்ட நிதி இடர்ப்பாடுகள் நில விய சூழ்நிலையிலும், இந்த அரசு, தொடர்ந்து ஒவ்வோராண்டிலும் ஆண்டுத் திட்ட ஒதுக்கீட்டு இலக்கை விஞ்சித் திட்டச் செலவைச் செய்து சாதனை நிகழ்த்தியுள்ளது. அதே போன்று, இவ்வரசு சமூக நலப்பணித் துறைகளுக்கான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடுகளை எப்பாடுபட்டாயினும் உரிய அளவிற்குக் குறையாமல் செய்து காத்து வந்துள்ளது.

1991 -92-ஆம் ஆண்டில், நமது மாநிலத்தின் திட்டப் பணிகளுக்கான ஒதுக்கீடு ரூ.1065 கோடி; ஆனால், நாம் அந்த ஆண்டில் திட்டப் பணிகளுக்காக ரூ.1725 கோடி செலவிட்டுச் சாதனை புரிந்துள்ளோம். இதேபோன்று, 1992-93-இல் திட்ட ஒதுக்கீடு ரூ.1766 கோடி, நாம் எய்திய சாதனை ரூ.1935 கோடி. 1993-94-ல் ஏற்பளித்த திட்ட ஒதுக்கீடு ரூ.2101 கோடி, எய்திய சாதனை ரூ.2135 கோடி. 1994 -95-இல் நாம் வரையறுத்த ஆண்டுத் திட்ட ஒதுக் கீட்டளவு ரூ.2750 கோடி, இது 1993-94-ஆம் ஆண்டின் அளவைக் காட்டிலும் 30.89 சதவீதம் அதிகமாகும். இந்த ஒதுக்கீட்டள வையும் விஞ்சி இதில் எய்திய சாதனைரூ.2850 கோடியாகும். 1995- 96-இல் மாநிலத்தின் ஆண்டுத்திட்ட ஒதுக்கீடு ரூ.3200 கோடி என்று வரையறுக்கப்பட்டது. 1995 -96-இல், திட்ட ஒதுக்கீட்டினை முழு அளவில் எய்த உறுதி செய்யும் வகையில், வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.3250.58 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**பொருள் இல்லாதவர்க்கு இவ்வுலகத்து வாழ்க்கை இல்லாதவாறுபோல, உயிர்களிடத்தில் அருள் இல்லாதவர்க்கு அவ்வுலகத்து வாழ்க்கை இல்லையாம்.**

**–திருவள்ளுவர்**

இவ்வாறாக, நமது மாநிலம் மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்களின் பொன்னான நான்காண்டுக்கால ஆட்சியில் உயர் வளர்ச்சி வேகத்தை எட்ட முடிந்துள்ளது. எட்டாம் ஐந்தாண்டுத் திட்ட இலக்குகளை நாம் எவ்விதக் குறையுமின்றி நிறைவேற்றும் நிலையை நெருங்கிக் கொண்டிருக்கிறோம். பல்வேறு மாநிலங்கள், தங்களுடைய எட்டாம் ஐந்தாண்டுத் திட்ட இலக்குகளை எய்துவதற்கு இயலாமல் தடுமாறித் தத்தளித்துக் கொண்டி ருக்கும் இடர்ப்பாடான சூழலில், நாம் நமது இலக்குகளை முழுமையாக எய்தவிருக் கின்றோம். நீண்டகால இடைவெளிக்குப் பின்னர், 1994- 95-ஆம் ஆண்டிற்கான தமிழ் நாட்டின் திட்ட ஒதுக்கீடு தேசிய சராசரியைக் காட்டிலும் உயர்ந்துள்ளது. 1994 -95-இல்

நபர்வாரித் திட்ட ஒதுக்கீட்டின் தேசிய சராசரியளவு ரூ.433.20 ஆக இருக்க, தமிழ் நாட்டின் நபர்வாரித் திட்ட ஒதுக்கீடு அதை விட அதிகமாக, அதாவது ரூ.492.30 ஆக இருந்தது.

வெளிநாட்டு நிதியுதவி பெறும் திட்டங் களைச் செயற்படுத்துவதில் தமிழ்நாடு தனிச் சிறப்பான சாதனையைப் புரிந்துள்ளது. இந்தத் திட்டங்கள் யாவும் மாநிலத்தின் திட்ட ஒதுக்கீட்டில் மிகவும் குறிப்பிடத்தக்க அளவு பகுதியைக் கொண்டவை.

*1994- 95*-ஆம் ஆண்டில், தமிழ்நாடு அரசு, வெளிநாட்டு நிதியுதவி பெறும் திட்டங் களுக்கான கூடுதல் மத்திய நிதியுதவியாக ரூ.*671* கோடியைச் செலவிட்டது. இந்திய மாநிலங்கள் அனைத்திலும், நமது மாநிலம் செலவிட்ட இத்தொகையே மிகப் பெரிது ஆகும். இவ்வாறாக, வெளிநாட்டு உதவியை வழங்கும் நிறுவனங்களின் முகவரமைப்புகள், பெரிதும் விருப்பத்துடன் வந்து செயல்பட விழையும் மாநிலமாக நமது மாநிலம் ஆகிவிட்டுள்ளது. இவ்வகையில் இங்கு இரு பெரிய திட்டங்களுக்கு நிதியுதவி வழங்கு வதற்காகப் பேச்சு வார்த்தைகள் நடந்து முடிந்துள்ளன. இவற்றில் ஒன்று, புதிய வீராணம் திட்டம் ஆகும். இதற்காகும் செலவு ரூ.*1638* கோடி, பிறிதொன்று, நீர் ஆதாரங் களை நிலைப்படுத்தும் திட்டம் ஆகும். இதற்காகும் செலவு ரூ.*1140* கோடி.



கண்ணோட்டம் என்று சொல்லப் படுகின்ற மிகச் சிறந்த அழகு இருக்கும் காரணத்தால்தான், இந்த உலகம் அழியாமல் இருக்கின்றது

–திருவள்ளுவர்

இவ்வாறாக, மிக இன்றியமையாத அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளிலும், சமூகப் பணித் துறைகளிலும் உயர் அளவிற்கு முதலீடுகள் செய்யப்படுவதற்கான அனைத்து வாயில்களையும் இவ்வரசு பயன்படுத்தி வருகிறது எனலாம்.

நிதி நிலைத்தன்மையை ஏற்படுத்துதல், மற்றும் பொருளாதாரக் கட்டமைப்புகளைச் சரிக்கட்டல் ஆகியவை தொடர்பாக மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள், ஏழை எளிய மக்களின் வாழ்க்கை நிலைமையை மிக மோசமாகப் பாதித்துவிடக் கூடுமோ என்ற கடுமையான அச்சம் தோன்றியபொழுது, மிகவும் முக்கியமான சமூகப்பணித் துறை களுக்கான ஒதுக்கீடுகள் உரிய அளவிற்குச் சிறிதும் குறையாதிருக்கும் வகையில், இந்த அரசு தனது நடவடிக்கைகள் மூலம் உறுதி செய்தது. இதற்கென வறியவர் நலன் காக்கும் சமூகப் பாதுகாப்புத் திட்டம் வெற்றிகரமாகச் செயற்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டம், மத்திய அரசு மேற்கொண்ட பொருளாதாரக் கட்டமைப்புச் சரிக்கட்டல் நடவடிக்கைகளை ஒட்டி எழுந்த கடுமையான சமூகப் பதட்டநிலைமை, வறியவர்களைப் பாதிக்காமல் அரண்போல் தடுத்துக் காத்தது.

*1995- 96*-ஆம் ஆண்டில் வறியவர் நலன் காக்கும் சமூகப் பாதுகாப்புத் திட்டத்திற்கான மொத்த முதலீடு ரூ.*1960.93* கோடியாகும். டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் தலைமை யிலான தமிழ்நாடு அரசின் இச்சீரிய முயற்சிகளை நாடும் உலகும் ஒருங்கே பாராட்டியுள்ளன.

சிறுசேமிப்புத்துறை இம்மாநிலத்தில் பல்வேறு சிறு சேமிப்புத் திட்டங்களின் முக் கியத்துவம் பற்றிப் பிரச்சாரம் செய்து வருவதுடன், அவற்றைச் செயற்படுத்துவதைக் கண்காணித்தும் வருகிறது. மத்திய அரசு, சிறுசேமிப்புத் திட்டங்களின் நிகர வசூலில் 75 சதவீதம் தொகையை, இம்மாநிலத்தில் பல்வேறு திட்டப் பணிகளைச் செயற்படுத்து வதற்காக இம்மாநில அரசுக்குக் கடனாக வழங்குகிறது.



வளர்ச்சிப் பணிகளுக்காகச் சிறுசேமிப்புகளைத் திரட்டுவதில் தமிழ்நாடு மிகமிகச் சிறப்பாகப் பணிபுரிந்திருக்கிறது. **1994 -95**-ஆம் ஆண்டில் நமது மாநிலம் சிறுசேமிப்பு வசூலில் மிக விரைந்த வளர்ச்சியைப் பெற்றுள்ளது.

சிறு சேமிப்பு வசூல் கடந்த நான்காண்டுகளில் படிப்படியாக உயர்ந்து வந்துள்ளது என்பதைக் கீழ்க்காணும் அட்டவணை காட்டுகிறது.

வள்ளுவர் காட்டிய வழியில், மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தலைமையில் வளமும் நலமும் பெற்று வருகிறது. தமிழக அரசு என்பது உண்மை வெறும் புகழ்ச்சியில்லை. *

| ஆண்டு | இலக்கு | பெருமொத்த வசூல் | நிகர வசூல் | மத்திய அரசிடமிருந்து பெற்ற கடன் |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் கோடியில்) | | |
| *1991 -92* | *550.00* | *1381.41* | *579.71* | *349.75* |
| *1992 -93* | *550.00* | *1710.70* | *614.89* | *401.58* |
| *1993- 94* | *590.00* | *2211.66* | *621.47* | *331.36* |
| *1994- 95* | *600.00* | *2647.09* | *674.20* | *569.91* |

# சட்டத் துறையின் சாதனைப் பணிகள்

மாண்புமிகு சட்ட அமைச்சர்

## திரு கே.ஏ. கிருஷ்ணசாமி

**"சட்டம்"** என்பது நாகரிக சமூகத்தின் அடையாளம். மக்கள் தங்களைத் தாங்களே ஆண்டு கொள்ள உருவாக்கியிருக்கும் ஏற்பாடுதான் சட்டம்" என்று பேரறிஞர் **அண்ணா அவர்கள் கூறினார்கள்.**

சட்டம் என்பது மனித சமூகத்தை ஒழுங்குபடுத்தும் கருவி. முறைப்படி எல்லாம் நடக்க வேண்டும் என்பதற்கான வழிவகைகளைச் சட்டம்தான் தருகிறது.

ஜனநாயகத்தின் மிகமுக்கியமான பொறுப்பு சட்டத் துறையிடம்- நீதித் துறையிடம் விடப்பட்டுள்ளது.

இப்பொறுப்பினை உணர்ந்து செயல்படவேண்டிய இத் துறைகள் சமூக நீதிக்கும் இடம் தரவேண்டும். குற்றமிழைப்போர் திருந்திடவும், தண்டனை பெறுவோர் மறுவாழ்வு பெறவும் சீரிய முயற்சிகள் மேற்கொள்ளப் பட வேண்டும்.

### புரட்சித்தலைவி அரசின் குறிக்கோள்

மேலே கூறப்பட்ட சீரிய குறிக்கோள்களைக் கொண்டு சட்டம் நீதித் துறைகளின் செயல்பாடுகளை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு நடத்திவருகிறது.



**தமிழகத்தில் சட்ட அலுவலர்களின் கூட்டமைப்பு மிகவும் சிறந்த முறையில் அமைந்துள்ளது. மாநிலத்திலுள்ள 700 நீதிமன்றங்களில் ஒரு நீதிமன்றத்திற்கு ஒரு வழக்குரைஞர் என்ற அளவில் அரசு சட்ட அலுவலர்களை அமர்த்தியுள்ளது.**

**ஏழை எளியவர்களுக்காக இலவசச் சட்ட உதவி வழங்கிட, தமிழ்நாடு இலவசச் சட்ட உதவி ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டுள்ளது.**

"நீதி கிடைக்கவேண்டும், அதுவும் தாமதமின்றி, விரைவாக வழங்கப்பட வேண்டும். செலவின்றி எளிய முறையில் ஏழையும் பெறுகின்ற வகையில் நீதி வழங்கப்பட வேண்டும்" என்பதே மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின்- மக்கள் அரசின் குறிக்கோள் ஆகும்.

இந்தக் குறிக்கோளுக்கு ஏற்ப நீதிமன்றங்களுக்கான வசதிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

நீதி நிருவாகம் என்ற கட்டமைப்பு- குற்றங்களை ஆய்ந்து, குற்றப் பத்திரிகைகளைத் தாக்கல் செய்யும் பணியை நிறைவேற்றிவரும் காவல்துறையும், இக்குற்றங்களைக் குறித்து வழக்குகளைத் தெள்ளத் தெளிய எடுத்துரைத்து நீதிமன்றங்களில் வழக்காடும் அரசு வழக்குரைஞர்களையும், குற்றவாளிகளைத் தண்டித்து நிரபராதிகளைப் பாதுகாக்கும் பணியினை நீதிமன்றங்களும், குற்றவாளிகள் என்று நிர்ணயிக்கப்பட்ட நபர்களைச் சிறையில் வைத்து, தண்டனையை நிறைவேற்றும் பணியினைச் சிறைத்துறையும்— ஆகிய இந்நான்கும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்த அமைப்புகளைத் தன்னகத்தே





கொண்டதாகும்.

மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் முதலமைச்ச ராகப் பொறுப்பேற்ற காலந் தொட்டு கடந்த நான்காண்டு களில் இத்துறை பல்வேறு ஈடு இணையற்ற சாதனைகள் படைத்துள்ளது.

உயர்நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையைப் பொறுத்த மட்டில் 28-ஆக இருந்ததை, மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் அரசின் முயற்சியால் 32-ஆக உயர்த்த மைய அரசு இசைந்தது. இன்றைய நிலவரப்படி, சென்னை உயர்நீதிமன்றத்தில் 29 நீதிபதி களில் 23 பதவிகளில் நீதிபதிகள் உள்ளனர்.

மாவட்ட முன்சீப் பதவி களில் பணியாளர்களை நிய மிக்கத் தமிழ்நாடு தேர்வாணைக் குழு அவசரக் கால நடவடிக் கைகள் மேற்கொண்டுள்ளது. ஏனைய காலியாகவுள்ள பதவி களை நிரப்பவும், உயர்நீதிமன்ற மும், அரசும் தக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளன.

இத்துறைக்கான நிதி ஒதுக்கீடு விவரங்களை நோக்கும்போது—

*1985-86*-ஆம் ஆண்டில் ரூ.*17.20* கோடியாக இருந்தது,

*1989-90*-ஆம் ஆண்டில் ரூ.*29.70* கோடியாக அமைந் திருந்தது.

*1991-92*-ஆம் ஆண்டில் ரூ.*40.19* கோடியாகவும்,

*1994-95*-ஆம் ஆண்டில் ரூ.*64.95* கோடியாகவும்,

*1995-96*-ஆம் ஆண்டில் ரூ.*69.80* கோடியாகவும் உயர்த்தி மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் அரசு சாதனைபடைத்துள்ளது. இதே போல வேறுபல பணிகளுக்கும் கூடுதலான நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் அரசு பொறுப்பேற்றப் பிறகு நான்காண்டுகளில் இதுவரை காணாத அளவில் 66 நீதிமன்றங்களைத் துவக்கிச் சாதனை புரிந்துள்ளது.

புதியதாக அமைக்கப்பட்ட வருவாய் மாவட்டங்களில் தருமபுரி மற்றும் பெரியார் நீங்கலாக, ஏனைய அனைத்து வருவாய் மாவட்டங்களிலும் புதிய மாவட்ட நீதிமன்றம் மற்றும் குற்றவியல் தலைமை நீதிமன்றங்களை அமைத்த பெருமை மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர் களின் தலைமையிலான அர சையே சாரும்.

அதிலும், குறிப்பாக, வரு வாய் மாவட்டம் பிரிக்கப்படும் போதே, மாவட்ட நீதிமன்றமும் பிரிக்கப்பட்டு, புதிய மாவட்டத் தில் மாவட்ட நீதிமன்றமும் தோற்றுவித்தல் என்ற கோட் பாடு இவ்வரசின் பிறிதொரு சாதனையாகும்.

இதன் அடிப்படையில், தென்னார்க்காடு மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்ட பொழுது, விழுப்புரத்தில் மாவட்ட செசன்சு நீதிமன்றம் மற்றும் தலைமைக் குற்றவியல் நீதிமன்றங்களை அமைத்தது குறிப்பிடத்தக்கதாகும்.

மலைவாழ் மற்றும் பழங்குடி மக்கள் பயனடையும் வகையில் கோடையில் ஒரு நீதிமன்றமும், கோத்தகிரியில் ஒரு நீதிமன்றமும் அமைக்கப்பட்டுள்ளன. பின்

தங்கிய மாவட்டமான தருமபுரி மாவட்டம் தேன்கனிக்கோட்டையில் ஒரு முன்சீப் நீதிமன்றம் அமைக்கப்பட்டது.

சந்தன மரக் கடத்தல் குறித்த வழக்குகளை விசாரிக்க வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டம் திருப்பத்தூரில் ஒரு நீதிமன்றமும், சேலத்தில் ஒரு நீதிமன்றமும் அமைக்கப்பட்டன.

சிலை திருட்டு வழக்குகளை விசாரிக்க திருவில்லிபுத்தூரில் உள்ள குற்றவியல் நீதிமன்றத்திற்கு, உயர்நீதிமன்ற ஒப்புதலுடன், அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிரான குற்றங்கள், பொருளாதாரக் குற்றங்களை விசாரிக்கத் தனி நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. பயங்கர வாதக் குற்றங்களைத் தடுக்க ஐந்து "தடா" நீதிமன்றங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

வழக்காடும் மக்களின் துயர் துடைக்க, மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள், உயர்நீதிமன்ற இசைவுடன், *43* குற்றவியல் நீதிமன்றங்களை உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்களாகச் செயல்பட வேண்டும் என்று ஆணையிட்டுள்ளார்கள். இதற்கான உத்தரவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

**முன்னோடித் திட்டம்**

தமிழகத்தில் மட்டும் ஏறத்தாழ *11* இலட்சம் வழக்குகள் நிலுவையில் உள்ளன. இதனைக் குறைக்க எடுக்கவேண்டிய நடவடிக்கைகளைப் பரிந்துரை செய்ய *1987*-இல் மைய அரசு நீதிபதி மாலிமத் தலைமையில் ஒரு குழுவினை நியமித்தது.

இக்குழு, பல்வேறு நீதிமன்றங்களை நேரில் ஆய்ந்தறிந்து பல்வேறு அம்சங்களைக் கொண்ட பரிந்துரைகளை மைய அரசின் முன் வைத்தது.

இதற்கான (நீதிமன்ற அதிகார வரம்பினை உயர்த்த) சட்டத் திருத்தங்கள் *1995-96*-ஆம் ஆண்டிற்கான 'பட்ஜெட்' கூட்டத் தொடரிலேயே கொண்டு வரப்பட்டு சட்டமன்றத்தினால் ஏற்பளிக்கப்பட்டுள்ளது.

மேலும், உயர்நீதிமன்ற மாண்புமிகு தலைமை நீதிபதி திரு கே.ஏ. சுவாமி அவர்கள், "Pilot Project Scheme" என்ற திட்டத்தை *17.10.1994* அன்று அமலாக்கி உள்ளார்கள். இதன்படி, தருமபுரி, நீலகிரி, சிதம்பரனார், நாகை காயிதே மில்லத், இராமநாதபுரம், பசும்பொன் முத்து ராமலிங்கத்தேவர், காமராசர் மற்றும் புதுக்கோட்டை ஆகிய எட்டு மாவட்டங்களில் உள்ள வழக்குகளின் தேக்கத்தை இரண்டு ஆண்டுகளில் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**நீதிமன்றக் கட்டடங்கள் நீதிபதிகள் குடியிருப்புகள்**

மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் பெருமுயற்சியால் நீதிமன்றங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்டுதல், நீதித்துறை அலுவலர்களுக்குக் குடியிருப்புகள் கட்டுதல் என்ற இருவகைப் பணிகளுக்கான செலவினத்தைத் "திட்ட இனத்தின்" கீழ் கொணர்ந்து *1993-94*-ஆம் ஆண்டு முதல் செயலாக்கி வருகிறது.

*1993*-டிசம்பர் திங்கள் முதல் இன்றுவரை, சேலம், இராமநாதபுரம், கோபிசெட்டிபாளையம் உட்பட *14* நீதிமன்றக் கட்டடங்கள் ரூ.*20* கோடி செலவில் கட்டவும், நீதித்துறை அலுவலர்களுக்காக *63* குடியிருப்புகளை ரூ.*5* கோடி செலவில் கட்டவும், *77* திட்டங்கள் ரூ.*25* கோடி செலவில் செயல்படுத்தப்பட்டு, பல்வேறு நிலைகளில் பணிகள் நடைபெறுகின்றன.

சென்னை உயர்நீதிமன்றத்திற்கென ரூ.*4* கோடி செலவில் 'இணைப்புக் கட்டடம்' *1992*-இல் கட்டி, அதனை மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் *1992* பிப்ரவரித் திங்களில் துவக்கி வைத்தார்கள்.

நவீன மயமாக்கும் திட்டத்தின்கீழ், *1995*-இல் சென்னை உயர்நீதிமன்றத்தில் தேசிய தகவல் தொடர்பு மையம் கணணி தொடர்புகளை நிறுவியுள்ளது.

சென்னை உயர்நீதிமன்ற இணைப்புக் கட்டடம் மற்றும்

படிப்பு

**நாம் எவ்வளவு படிக்கிறோமோ அதைப் பொறுத்துத்தான் நமது அறியாமை நம்மை விட்டு நீங்குகிறது.**

**—ஷெல்லி**

முன்னேற்றம்

முன்னேற்றம் அடைவதற்கு முதலில் தன்னம்பிக்கையும் அடுத்தபடியாக இறைவன் மீது நம்பிக்கையும் வேண்டும்.

–சுவாமி விவேகானந்தர்

நீதிபதிகளின் அறைகளைக் குளிர்ப்பதன வசதி செய்வதற்கு அரசு ஆணையிட்டு, பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 'பேக்ஸ் வசதி' 'மின்ணனுத் தட்டச்சு இயந்திரம்' 'ஜெராக்ஸ்' இயந்திரங்கள் போன்றவையும் வழங்கப்பட்டுள்ளன.

தமிழகத்தில் சட்ட அலுவலர்களின் கூட்டமைப்பு மிகவும் சிறந்த முறையில் அமைந்துள்ளது. மாநிலத்திலுள்ள 700 நீதிமன்றங்களில் ஒரு நீதிமன்றத்திற்கு ஒரு வழக்குரைஞர் என்ற அளவில் இவ்வரசு சட்ட அலுவலர்களை அமர்த்தியுள்ளது.

**நீதித்துறை அலுவலர்களுக்கான சலுகைகள்**

நீதித்துறை அலுவலர்களுடைய நீண்ட நெடுநாள் கோரிக்கைகளை இவ்வரசு கனிவுடன் அணுகி, மாவட்டங்களில் நீதித்துறை தலைமை மாஜிஸ்ட்ரேட் பதவிகள், மாவட்ட நீதிபதிகள் நிலை 2 பதவித் தரத்தில் மாவட்டக் கூடுதல் நீதிபதிகளாக நிலை உயர்த்த கொள்கை அளவில் அரசு இசைந்துள்ளது.

உயர்நீதிமன்றம் நீங்கலாக எஞ்சியுள்ள நீதிமன்றங்களில் பணியாற்றும் நீதிபதிகளின் ஓய்வுபெறும் வயதை 58-லிருந்து 60-ஆக உயர்த்தியும், இவர்களுக்குச் சட்டப் புத்தகங்கள் வாங்க ரூ.49 இலட்சம் ஒதுக்கியும், சென்னை மாநகரிலுள்ள நீதித்துறை அலுவலர்கள் பயனுக்கென 3 வேன்களை அனுமதித்தும் அரசு சலுகைகள் வழங்கியுள்ளது.

தமிழ்நாடு நீதித்துறை சார் பணியாளர்கள் சங்கம், தலைமை எழுத்தர் முதலிய பதவிகளை மேல்நிலைக்கு உயர்த்தவேண்டும் என்ற கோரிக்கையினை 1976-ஆம் ஆண்டு அரசுக்கு வைத்தது.

நீண்டகாலமாக நிலுவையில் இருந்த இக்கோரிக்கையினைத் தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பரிசீலித்து, 364 தலைமை எழுத்தர் போன்ற பதவியினைக் கண்காணிப்பாளர் பதவிகளுக்கும், 500 இளநிலை உதவியாளர் பதவிகளை உதவியாளர் பதவிகளுக்கு நிலை உயர்த்தி (upgrade) செய்து, 1992-93 மற்றும் 1993-94 ஆகிய இரு ஆண்டுகளில் ரூ.54.44 இலட்சம் கூடுதலாக செலவிடப்பட்டுள்ளது.

வழக்கறிஞர்களுக்கான ஓய்வுக் காலப் பயனை ரூ.30 ஆயிரத்திலிருந்து ரூ.60 ஆயிரமாக உயர்த்த சட்டத் திருத்தங்களை அரசு வெளியிட்டுள்ளது. வழக்குரைஞர்களின் நல நிதிக்கு ரூ.5 இலட்சம் மானியம் வழங்கியும், சென்னை வழக்குரைஞர்களின் சங்க கட்டட மேல்தளம் கட்ட ரூ.6.50 இலட்சம் மானியமாகவும் அரசு வழங்கியுள்ளது.

அரசு வழக்குரைஞர்களின் ஊதியத்தை உயர்த்தியும், அனைத்து அரசு வழக்குரைஞர்களின் (அரசுத் தொடர்பு வழக்குகள்) பணிகளைக் கண்காணிக்க ஒரு தனி இயக்குநரகத்தையும், 7 உதவி இயக்குநர்களையும் நியமித்துள்ளது.

35 உதவி அரசு வழக்குரைஞர்கள் நிலை 2 லிருந்து நிலை 1-க்குப் பதவி உயர்வு அளிக்கப்பட்டுள்ளனர். நெடுநாட்களாக நிலுவையிலிருந்த 25 உதவி அரசு வழக்குரைஞர்கள் பதவிகள் அண்மையில் நிரப்பப்பட்டுள்ளன.

Directorate of Prosecution சிறப்பாகச் செயல்பட திரு.பெருமாள் ஐ.பி.எஸ்.காவல் துறைத் தலைவர் தலைமையில் அண்மையில் துவக்கப்பட்டுள்ளது.

**ஏழை எளியவர்களுக்கான இலவச சட்ட உதவி மையம்**

அரசியலமைப்புச் சட்டப்படி ஏழை எளியவர்களுக்கான இலவச சட்ட உதவி வழங்குவது அரசின் தலையாய கடமையாகும். இதனைச் சிறப்பாகச் செயல்படுத்த, தமிழ்நாடு இலவசச் சட்ட உதவி ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் நீதிமன்றங்களில் வழக்குகள் தொடரவும், ஏழை எளியவர்கள் இலவசச் சட்ட உதவி பெறவும், கணவன் மனைவி வழக்குகள், மோட்டார் வாகன விபத்து வழக்குகளில்

மிக விரைவில் தீர்வுகாணவும் வழியேற்பட்டுள்ளது.

இதற்கான மானியத்தினைப் படிப்படியாக உயர்த்தி, தற்போது மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் **1994-95**-ஆம் ஆண்டில் ரூ.1 கோடி அனுமதித்துள்ளார்கள்.

**சிறைத்துறை சீர்திருத்தங்கள்**

"சிறை" என்றால் குற்றவாளிகள் அடைக்கப்படும் இடம் என்றும், அவர்களுக்கு மனிதாபிமானமற்ற வகையில் உடலை வருத்தும் தண்டனைகள் வழங்கப்படும் இடம் என்றும் வழக்கில் இருந்து வந்தது.

இதனை மாற்றி, 'சிறைச்சாலை' என்பது குற்றவாளிகள் திருந்தி, நல்ல மனிதர்களாக மாற ஒரு சமூகக்கூடமாக மாறி வருகிறது. இவர்கள் வெளியே வந்து சமூகத்தில் - சமுதாயத்தில் சேர்ந்துவாழ பல்வேறு திட்டங்கள் கொண்டுவந்து, பல சிறைவாசிகள் பயனடைந்து வருகின்றனர்.

அனைத்துச் சிறைகளிலும் வாழ்க்கைத் தொழிற் பயிற்சி அனைத்துச் சிறைவாசிகளுக்கும் அளிக்கப்பட்டு வருகின்றது.

ஒவ்வொரு ஆண்டும், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் பிறந்தநாளில், பயிற்சி பெற்ற சிறைவாசிகளுக்கு உபகரணங்கள், தையல் இயந்திரங்கள், மிதிவண்டி ரிக்சா, சலவை வண்டி, மாவு அரைக்கும் இயந்திரம் ஆகியவை வழங்கப்படுகின்றன.

சிறுதொழில் பயிற்சி பெற்ற சிறைவாசிகளுக்கு அருகிலுள்ள தொழிற் பயிற்சிப் பள்ளி முதல்வரால் சிறையிலேயே தேர்வு நடத்தி, சான்றிதழ் வழங்கியதால், வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து, உதவிபெற ரூ.50 ஆயிரம் ஒதுக்கப்பட்டு இதுவரை 200 பேர் பலன் பெற்றுள்ளனர்.

சிறைச்சாலையில் உள்ள தொழிற்கூடங்களில் மரச் சாமான்கள், துணிகள், சோப்பு, அரக்கு, பினாயில், காலணி போன்றவையும் தயாரிக்கப்பட்டு, அதன்மூலம் சிறைவாசிகள் வருமானம் ஈட்டியும் வருகின்றனர்.

அனைத்துச் சிறைகளிலும், ஆசிரியர்கள் 'முதியோர் கல்வி' கற்பிக்கிறார்கள். மேற்படிப்பு படிப்போருக்கு அனைத்துச் சலுகைகளும் வழங்கப்படுகிறது. நூலக வசதி, பொழுதுபோக்கு வசதி ஆகியவையும், நன்கொடையாளர்களால் தொலைக்காட்சிப் பெட்டிகளும் வைக்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் சீரிய தலைமையில் இத்துறை கடந்த நான்காண்டுகளில் மாபெரும் சாதனைகள் புரிந்துள்ளது. மேலும் சாதனைகள் தொடர மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் வழிகாட்டுதலில் இத்துறை தொடர்ந்து தொய்வில்லாமல் செயலாற்றும் என்பது திண்ணம்.

*

## புத்தகசாலை வேண்டும்!



மனிதரெலாம் அன்பு நெறி காண்ப தற்கும்
மனோபாவம் வானைப்போல் விரிவ டைந்து
தனிமனித தத்துவமாம் இருளைப் போக்கிச்
சகமக்கள் ஒன்றென்ப துணர்வ தற்கும்,
இனிதினிதாய் எழுந்தஉயர் எண்ண
மெல்லாம்
இலகுவது புலவர்தரு சுவடிச் சாலை.
புனிதமுற்று மக்கள்புது வாழ்வு வேண்டில்
புத்தகசா லைவேண்டும் நாட்டில் யாண்டும்.

—பாவேந்தர் பாரதிதாசன்



# வருவாய்த்துறையின் பெருமைமிகு சாதனைகள்!

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்

## திரு எஸ்.டி. சோமசுந்தரம்

இந்த நான்காண்டுக் காலத்தில் நம்முடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தமிழ்த் தரணிக்கு ஆற்றியுள்ள பணிகள் அளவற்றவைகளாகும். குறிப்பாக, நம் வருவாய்த்துறைப் பணிகள், அவர் வழிகாட்டுதலால் புகழ்பெற்றுள்ளன.

அரசின் நலத் திட்டங்கள் மக்களை எளிதில் சென்றடையவும், பொதுமக்கள் தங்களது தேவைகளை உடனுக்குடன் எளிதில் பூர்த்தி செய்து கொள்ளவும், மற்றும் நிர்வாக நலன் கருதியும், அளவில் பெரிதாக உள்ள மாவட்டங்கள், கோட்டங்கள், மற்றும் வட்டங்கள் பிரிக்கப்பட்டுள்ளன. அந்த வகையில் 1991 ஜூலைத் திங்கள் முதல் 1995 மே திங்கள் வரை பிரிக்கப்பட்ட, தோற்றுவிக்கப்பட்ட மாவட்டங்கள், கோட்டங்கள், வட்டங்கள் விவரம் வருமாறு:

1. தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டங்களாகவும்,

2. தென்னார்க்காடு மாவட்டம், தென் ஆர்க்காடு வள்ளலார் மற்றும் விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டங்களாகவும் அமைக்கப்பட்டுள்ளன.

3. விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டத்திலுள்ள திருக்கோவிலூர் வருவாய் கோட்டம், திருக்கோவிலூர் மற்றும் கள்ளக்குறிச்சி வருவாய்க் கோட்டமாக ஏற்படுத்தப்பட்டுள்ளது.

4. மதுரை மாவட்டத்திலுள்ள திருமங்கலம் மற்றும் உசிலம்பட்டி வட்டங்களைச் சீரமைத்து, புதியதாகப் பேரையூர் வட்டமும்

5. விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டத்திலுள்ள கள்ளக்குறிச்சி வட்டத்தினை இரண்டாகப் பிரித்து, புதியதாக சங்கராபுரம் வட்டமும்,

6. தர்மபுரி மாவட்டத்திலுள்ள கிருஷ்ணகிரி மற்றும் ஊத்தங்கரை வட்டங்களைச்

**நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள குடிசைவாசிகளுக்கு இலவசமாகப் புடவை, வேட்டி வழங்கும் திட்டத்தின் கீழ் 60 இலட்சம் பெண்களும், 60 இலட்சம் ஆண்களும் ஆண்டுதோறும் பயன் பெற்று வருகின்றனர்.**

**நலிந்த குடும்பத்தினருக்கு நிதி உதவி செய்யும் நோக்கத்துடன், அரசு 'தமிழ்நாடு நலிந்தோர் நலத் திட்டத்தினை' அறிமுகப்படுத்தியுள்ளது.**

சீரமைத்து, புதியதாகப் போச்சம்பள்ளி வட்டமும் அமைக்கப்பட்டுள்ளன.

7. இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள முதுகுளத்தூர் வட்டத்தினை இரண்டாகப் பிரித்து கடலாடியைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய வட்டமும்

8. தர்மபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி வட்டத்திலுள்ள உள்வட்டங்களைச் சீரமைத்து பெரியமுத்தூரைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய உள்வட்டமும்,

9. முதுகுளத்தூர் வட்டத்தில் மேலக் கொடுமலூர், மற்றும் காக்கூர் ஆகிய இரண்டு உள்வட்டங்களும், கடலாடி வட்டத்தில் அப்பனூர் எஸ். தரைக்குடி ஆகிய இரண்டு உள்வட்டங்களுமாக கூடுதல் நான்கு உள் வட்டங்களும் புதியதாகத் தோற்றுவிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

**வருவாய்த்துறை அலுவலர்களுக்குப் பயிற்சி**

வருவாய்த்துறை அலுவலர்கள் மேலும் திறம்பட செம்மையாகப் பணியாற்றுவதற்கு அவர்களுக்கு நிர்வாகத்தில் பயிற்சி அளிக்கப் படல் வேண்டும் எனவும், இவ்வாறான பயிற்சி அவர்களது திறமையை, மேலும் வளர்த்துக் கொள்ளுவதற்கும், அடிப்படையிலே மாற்றத்தை உருவாக்குவதற்கும், உறுதுணையாக அமையும் எனவும் கருதிய அரசு, வருவாய்த்துறை அலுவலர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கான வழிமுறைகளை, அரசுக்குப் பரிந்துரைப்பதற்கு என ஒரு குழுவை அமைத்தது.

**கிராம நிர்வாக அலுவலர்கள்**

கிராம நிர்வாக அலுவலர்கள் மேம்பாட்டுக்காக மலைப்பிரதேசத்தில் பணி யாற்றிவரும் கிராம நிர்வாக அலுவலர் களுக்கு 25 அலுவலகம் இணைந்த குடியிருப் புகள் கட்ட உத்தரவிடப்பட்டது. கடந்த 14.11.1980-இல் பணியிழந்தபின் தகுதியின் அடிப்படையில் கிராம நிர்வாக அலுவலர் களாகப் பணியேற்று, 10 ஆண்டுகள் பணி நிறைவு செய்யாது ஓய்வுபெறும் கிராம நிர்வாக அலுவலர்களின் தேர்வுகளில், அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்கு மட்டும் அவர்களது பணிக்காலத்தை அவர்கள் மீண்டும் கிராம நிர்வாக அலு வலர்களாகப் பணியேற்ற தேதியிலிருந்து கணக்கிடுவதற்குப் பதிலாக அவர்கள் பணி யிழந்த நாளான 14.11.1980 லிருந்து அவர்கள் பணி ஓய்வு பெறுகின்ற நாள்வரை கணக் கிட்டு, குறைந்தபட்ச ஓய்வூதியம் வழங்கலாம் என ஆணையிடப்பட்டுள்ளது.

1. கிராம நிர்வாக அலுவலர்கள் கட்டியுள்ள பிணை வைப்புத்தொகை நீண்ட கால வைப்புத் தொகையாக மாற்றப் பட்டுள்ளது.

2. கன்னியாகுமரி மாவட்டத்திலும், செங்கோட்டைப் பகுதியிலும் மற்றும் தமிழ்நாட்டில் குறிப்பிட்ட சில பகுதிகளிலும் ரூ.825-1200 என்ற ஊதிய விகிதத்தில் பணிபுரியும் கிராம நிர்வாக அலுவலர்கள் ஏனைய கிராம நிர்வாக அலுவலர்களைப் போன்ற அனைத்துத் தகுதிகளும் பெற்றிருந் தால் அவர்களுக்கும் ஏனைய கிராம நிர்வாக அலுவலர்களுக்கு வழங்கப்படுவது போல ரூ.975-1660 என்ற ஊதிய விகிதத்தில் அவர் களது ஊதியம் மாற்றியமைக்கப்படுகின்றது.

3. கிராம நிர்வாக அலுவலர்களுக்கு வழங்கப்பட்டு வரும் பயணப்படி ரூ.40 லிருந்து ரூ.50 ஆக 1.11.1993 முதல் உயர்த்தி வழங்கப்படுகிறது.

4. கிராம நிர்வாக அலுவலர்களுக்கு அலு வலக வாடகை, பராமரிப்பு மற்றும் ஆண்டு ஆய்வுக் கணக்குச் செலவு என்று ஆண் டொன்றுக்கு மொத்தமாக ரூ.1,200 வழங்கப் படுகிறது.

இது தவிர, அரசு கீழ்க்கண்டவாறு உத்தரவு பிறப்பித்துள்ளது. கிராம நிர்வாக அலுவலர்கள் சங்கக் கட்டடங்கள் கட்டுவதற்குக் கேட்கின்ற நிலத்தின் தன்மைக்கு ஏற்ப, மாவட்ட ஆட்சியர்கள் முடிவு எடுக்கலாம்.






சென்னையில் பணியாற்றும் 53 கிராம கர்ணங்கள் கிராம நிர்வாக அலுவலர்களுக்கான அனைத்துத் தகுதிகள் பெற்றிருந்தால் அவர்களை கிராம நிர்வாக அலுவலர்ளாக நியமிக்கலாம்.

### கிராம உதவியாளர்கள்

1.1.1995 முதல் மதிப்பூதியம் ரூ. 745 ம், பஞ்சப்படி ரூ.80-ம், கூடுதல் பஞ்சப்படி ரூ.246-ம் (33 சதவிகிதம்), இடைக்கால நிவாரணமாக ரூ.40 ம், மொத்தம் ரூ.1,111 ஆகவும் கிராம உதவியாளர்களுக்கு வழங்கப்படுகிறது.

கிராம உதவியாளர்கள், பணியில் இருக்கும்போது இறந்தால், குடும்ப நலநிதி ரூ.40,000 லிருந்து ரூ.60,000 உயர்த்தி வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

கிராம உதவியாளர்களுக்கு மதிப்பூதியம் வழங்கப்படுவதை மற்ற அரசு அலுவலர்களுக்கு வழங்கப்படுவதைப்போல் சம்பளப் பட்டியலில் வழங்க ஆணையிடப்பட்டது.

தலையாரி, நீர்கண்டி, வெட்டி என்று பல்வேறு பெயர்களில் அழைக்கப்பட்டு வந்ததை மாற்றி அனைத்துத் தரப்பினரையும் கிராம உதவியாளர் என்ற பெயரில் அழைக்கப்பட வேண்டும் என்று ஆணையிடப்பட்டது.

அனைத்துக் கிராம உதவியாளர்களுக்கும் அடையாள வில்லைகள் வழங்கப்பட்டுள்ளன.

பண்டிகை முன்பணம் ரூ.200 லிருந்து ரூ.300 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

சைக்கிள் வாங்க முன்பணம் ரூ.600 லிருந்து ரூ.800 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

பெண்களையும் கிராம உதவியாளர்களாக நியமிக்கலாம் என்று ஆணையிடப்பட்டுள்ளது.

பகுதிநேர கிராம உதவியாளர்கள் முழு நேர அரசு ஊழியர்களாக மாற்றப்பட்டுள்ளனர்.

### வறட்சி நிவாரணத் திட்டம் 1995-96

டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் தன்னிகரற்ற தலைமையிலான இந்த அரசு, 1991-92 முதல் 1993-94 வரை, மொத்தம் ரூ.3693 இலட்சம் ஒதுக்கீடு செய்து மாநிலத்தில் கீழ்க்கண்ட குடிநீர்ப் பற்றாக்குறை நிவாரணத் திட்டங்களுக்காக நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

☆ 1000 புதிய ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்தல்

☆ குடிநீர்க் குழாய்களை விரிவுபடுத்துதல்.

☆ திறந்தவெளிக் கிணறுகளை அமைத்தல்.

☆ இதர குடிநீர்ப் பற்றாக்குறைத் திட்டங்கள்

கடந்த 1994 நவம்பர் - டிசம்பரில் ஏற்பட்டப் புயல்/வெள்ளத்தின் போது பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் நிவாரண முகாம்கள் அமைக்கப்பட்டு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டன. புயல் வெள்ளத்தினால் இறப்புற்ற நபர்களின் வாரிசுதார்களுக்கு தலா ரூ.10,000 தமிழக அரசின் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்டது.

இயற்கைச் சீற்றத்தால் பாதிக்கப்பட்ட குடிசைகளின் சீரமைப்பிற்காக முழுமையாகப் பாதிக்கப்பட்ட குடிசைகளுக்குத் தலா ரூ.250-ம் வழங்கப்பட்டுள்ளது. சென்னை நகருக்கு மட்டும் ரூ.600-ம் மற்றும் 300-ம் வழங்கப்பட்டுள்ளது. இது தவிர ஒவ்வொரு குடும்பத்திற்கும் 5 கிலோ அரிசி, 1 லிட்டர் மண்ணெண்ணெய், ஒரு வேட்டி, ஒரு சேலை இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

அரசு ஏற்கெனவே 124 புயல் பாதுகாப்பு இல்லங்கள், கடலோரப் பகுதியிலும் மற்றும் மலைப்பகுதியான நீலகிரி மாவட்டத்திலும் கட்டி முடித்துள்ளது. மேலும், 69 புயல் பாதுகாப்பு இல்லங்களை வெளிநாட்டு நிதி உதவியுடன் கட்டுவதற்கு ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

1. சாலைகள் பராமரிப்பு, 2. பாசனக் கால்வாய்கள், பாசன ஏரிகள் பராமரிப்பு, 3. பஞ்சாயத்து டவுன் பஞ்சாயத்துச் சாலைகள், நீர்த்தேக்கத் தொட்டிகள் சிறுபாசனக் கால்வாய்கள் பராமரிப்பு, 4. மாநகராட்சிக்குச் சொந்தமான சாலைகள், எம்.எம்.டி.ஏ. காலனிகளின் சாலைகள் பராமரிப்புகள், 5. மீன் துறைக்குச் சொந்தமான படகுகள் பராமரிப்புக்காக மொத்தம் ரூ.6.55 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## பொது மக்கள் குறை தீர்க்கும் பிரிவு

பொதுமக்களின் குறைகளை விரைவாகவும் செம்மையாகவும் தீர்க்க மாவட்ட நிர்வாகத்தைப் பொதுமக்களிடையே கொண்டு செல்லவேண்டும் என்னும் அரசின் குறிக்கோளை நிறைவேற்றும் வண்ணமும், அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களிலும் ஒரு சிறப்புத் துணை ஆட்சியரைத் தலைமையாகவும் மற்றும் அவருக்கு உதவியாக அலுவலர்களும் கொண்ட "பொது மக்கள் குறை தீர்க்கும் பிரிவு" ஏற்படுத்தப் பட்டது.

மக்கள் குறை தீர்க்கும் பிரிவு அமைக்கப்பட்ட பிறகு குறை தீர்க்கும் நாள் மனுக்கள் சிறப்பான முறையில் கண்காணிக்கப்பட்டு உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு, குறைகள் தீர்க்கப்படுகின்றன.

## மக்கள் தொடர்புத் திட்டம் - மனு நீதித் திட்டம்

மாவட்ட வருவாய் அலுவலரும், மாவட்ட ஆட்சியரும் ஒவ்வொரு கோட்டத்தில் ஒவ்வொரு கிராமத்தில் சுழற்சி முறையில் மனு நீதித் திட்டம் நடத்த வேண்டும், ஒரு மாதத்தில் இரண்டு மனு நீதித் திட்ட நிகழ்ச்சிகளை மாவட்ட ஆட்சியர்- மாவட்ட வருவாய் அலுவலர் நடத்தவேண்டுமெனத் தனித்தனியாகப் பிரித்துக் கூறப்பட்டுள்ளது.

## குறை தீர்க்கும் நாள்

சாதாரணக் குடிமகனும் தனது குறைகள் தீர்க்கப்படுவதற்கு அரசு அலுவலகங்களில் பின்பற்றப்படும் பல்வகை வழிமுறைகள் மற்றும் ஆலோசனைகளைத் தகவல் அறிவிப்புப் பலகை மூலம் பொதுமக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும் என இந்த அரசாணை வலியுறுத்துகிறது. மனுக்கள் பெற்றுக் கொண்டமைக்கு முறைப்படி ஒப்புதல் அளிப்பதும், உயர்நிலை அதிகாரிகளைக் கொண்டு நேரடி விசாரனை செய்விப்பதும், 'நிக்நெட்' கணிப்பொறி மூலம் இத்திட்டத்தைத் தொடர்ந்து கண்காணிப்பதும் நடைமுறைப்படுத்தபட்டுள்ளன.

## பொங்கல் பண்டிகைக்கு இலவசப் புடவை வேட்டி

தமிழ்நாட்டில் முதன் முதலாக 1992-ஆம் ஆண்டுதான் பொங்கல் பண்டிகைக்கு நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள குடிசைவாசிகளுக்கு இலவசமாக, புடவை வேட்டி வழங்கும் திட்டம் கொண்டு வரப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் 60 இலட்சம் பெண்களும், 60 இலட்சம் ஆண்களும் ஆண்டுதோறும் பயன்பெற்று வருகின்றனர். மேலும் இயற்கையின் சீற்றம் அதிகமாக இருந்ததால் கூடுதலாக 15 இலட்சம் வேட்டிகளும் 15 இலட்சம் சேலைகளும்

வழங்க 1993-ஆம் ஆண்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

ஏழை எளியோரின் வாட்டம் நீக்கவும், அவர்கள் இல்லந்தோறும் வளமும் நலமும் சேர்க்கவும், நமது முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் தமிழ்நாடு அரசு தீட்டிச் செயல்படுத்திவரும் திட்டங்கள் ஏராளம், ஏராளம்.

## விபத்து நிவாரணத் திட்டம்

வரன்முறைப்படுத்தப்படாத Unorganised sector தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் தொழிலில் ஈடுபட்டிருக்கும்போது இறக்க நேரிட்டால் அல்லது உடல் அங்கீனம் ஏற்பட்டால் அதற்கேற்ப அரசு நிதி உதவி அளிப்பதற்காக முதற் கட்டமாக 22 ஏழைத் தொழில்களை மட்டும் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த விபத்து நிவாரணத் திட்டம் அரசால் அறிமுகப்படுத் தப்பட்டது.

தற்போது இத்திட்டத்தின் கீழ் 44 ஏழைத் தொழில் வகைகள் சேர்க்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் 1991-92 முதல் 1994-95 வரை 4,062 குடும்பங்கள் பயன்பெற்றுள்ளன. வழங்கப்பட்ட நிவாரணம் ரூ.310 இலட்சம் ஆகும்.

## நலிந்தோர் நலத் திட்டம்

தொழிலீட்டுவதன் மூலம் ஒரு குடும்பத்தைக் காப்பாற்றும் குடும்பத் தலைவர் இறக்க நேரிட்டால் குடும்பம் சொல்லமுடியாத துன்பத்திற்கு ஆளாக நேரிடுகிறது. மேற்படி இன்னலுக்கு ஆளாகும் நலிந்த குடும்பத்தினருக்கு நிதி உதவி செய்யும் நோக்கத்துடன் அரசு 'தமிழ்நாடு நலிந்தோர் நலத் திட்டத்தினை' அறிமுகப்படுத்தியுள்ளது.

குடும்பத்தினருக்கு எல்லா வழிவகைகளிலும் ரூ.5,000-க்கு மிகைப்படாமல் ஆண்டு வருமானம் இருப்பின், அன்னாரின் குடும்ப வாரிசுதாரருக்கு இத்திட்டத்தின் கீழ் நிவாரணமாக ரூ.5,000 வழங்கப்படும்.

இத்திட்டத்தின் கீழ், 1991-92 முதல் 1994-95 வரை பயன்பெற்ற குடும்பங்கள் 1,46,483 ஆகும். வழங்கப்பட்ட தொகை ரூ.59,18,37,800 ஆகும்.

## முதியோர் உதவித்தொகைத் திட்டம்

வயது முதிர்ந்த ஆதரவற்றவர்களைக் காப்பாற்றும்பொருட்டு சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் அரசு முதியோர் உதவித் தொகைத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

அவர்கள் இருந்த இடத்திலேயே முதியோர் உதவித் தொகை பெறுவதற்காக மாதம்தோறும் ரூபாய் 75 அரசு தன் சொந்தச் செலவில் பண அஞ்சல் மூலம் அனுப்புகின்றது. இதைத்தவிர முதியோர் உதவித்தொகை பெறுவோர்க்கு 1979 ஆம் ஆண்டில் இருந்து இலவச வேட்டி புடவை பொங்கல் மற்றும் தீபாவளி பண்டிகையின் போது இலவசமாக வழங்கப்படுகின்றது. இத்திட்டத்தினால் 23 இலட்சம் பேர்கள் வரை பயனடைகின்றனர்.

## 20 அம்சத் திட்டம்

20 அம்சத் திட்டத்தின் கீழ் அரசு 1991-92 முதல் 1994-95 வரை 12,02,786 பேர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

இதில் தாழ்த்தப்பட்டவர்கள் மற்றும் பழங்குடியினர்கள் 4,86,281 பேர்கள் ஆகும்.

## நில ஒப்படை

நிலமற்ற ஏழைகளுக்கு 1991-92-ஆம் ஆண்டு முதல் 1994-95-ஆம் ஆண்டு வரை 33,037 பேர்களுக்கு வேளாண்மை நிலங்கள் ஒப்படை செய்யப்பட்டுள்ளன.

இதில் தாழ்த்தப்பட்டவர் மற்றும் பழங் குடியினர் 7,859 ஆவார்கள்.

## மரம் வளர்த்தல் திட்டம்

1991-92 முதல் 1994-95 வரை, மாண்புமிகு புரட்சித்தலைவி ஆட்சிமிளிரும் தமிழ்நாட்டில்

மொத்தம் 12,78,701 மரங்கள் நடப்பட்டுள்ளன.

### நில அளவைத் திட்டம்

இம்மாநிலத்தில் உள்ள அனைத்து வட்டங்களிலும் உள்ள நிலம் பதிவுருக்களைக் கம்ப்யூட்டர் மயமாக்கும் திட்டத்தைக் கொள்கை அளவில் அரசு ஏற்றுள்ளது.

இதன் முதற்கட்டமாக இத்திட்டம் சேலம் மாவட்டத்தில் உள்ள 10 வட்டங்களில் முன்னோடித் திட்டமாக ரூ.40 இலட்சம் செலவில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

### பட்டா பாஸ்புத்தகத் திட்டப்பணி

பட்டா பதிவுப் புத்தகத் திட்டம் 1.4.1993 முதல் வடார்க்காடு அம்பேத்கர், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், மதுரை, சிதம்பரனார் ஆகிய மாவட்டங்களில் செயல்பட்டு வருகிறது.

டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் இணையிலா ஆட்சியில் நத்தம் நிலவரித் திட்டத்தின் கீழ் 1991-92 முதல் 1994-95 வரை 52,52,916 பேர்களுக்குப்பட்டா வழங்கப் பட்டுள்ளது. இதில் தாழ்த்தப்பட்டவர்கள் 14,01,694 பேர்கள் ஆவர்.

### வேளாண்மை வருமான வரி

தமிழ்நாட்டில் 1955-ஆம் ஆண்டில் வேளாண்மை வருமான வரி விதிப்புச் சட்டம் அமல்படுத்தப்பட்டு, மலைத்தோட்டப் பயிர்களில் இருந்து பெறப்படும் வருமானத்திற்கு மட்டுமே வரிவிதிப்பு செயல்படுத்தப்பட்டது. பின்னர் 1958-ஆம் ஆண்டில் சட்டம் திருத்தப்பட்டு மலைத் தோட்டம் அல்லாத பயிர்களிலிருந்து பெறப்படும் வருமானத்திற்கும் வரிவிதிப்பு மேற்கொள்ளப்பட்டது.

திருத்தப்பட்ட சட்டம் 40-91 இன்படி சிறு விவசாயிகட்கு நிவாரணம் அளிக்கும் முகத்தான் மலைத்தோட்டமல்லாத பயிர்கள் மீது வேளாண்மை வருமான வரி விதிப்பு 1.4.92 முதல் முழுமையாகக் கைவிடப்பட்டது.

எட்டு ஏக்கருக்கு மேல் நிலம் வைத்திருப்போர் மட்டுமே 1.4.92 முதல் தமிழ்நாடு வேளாண்மை வருமான வரி விதிப்புச் சட்டம் 1955 இன் கீழ் வரி விதிப்புச் செய்யப்படுகின்றனர்.

**அகில உலகமும் புரிந்துகொள்ளக்கூடிய மொழி நம்மிடம் ஒன்று உண்டு. அதுதான் அன்பு.**

**—பெர்னார்டுஷா**

தமிழ்நாடு நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல் சட்டம் 1978 இன் கீழ் மிகை வெற்று நிலத்துக்குப் பிரிவு 21-இன் கீழ் 1.7.91 முதல் 31.5.95 வரை 70 நேர்வுகளில், 85 எக்டேர் 48 ஏர் 76 ச.மீ.க்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

இச்சட்டத்தின் கீழ் 1.7.91 முதல் 31.5.95 வரை 1,192 நேர்வுகளில் 784 எக்டேர் 91 ஏர், 53 ச.மீ. நிலம் கையகப்படுத்தப்பட்டது. இதில் 30 நேர்வுகளில் 15 எக்டேர், 92 ஏர், 18 ச.மீ. நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### நகர்ப்புற நிலவரிச் சட்டம்

இச்சட்டத்தின் கீழ் 1991-92 முதல் 1994-95 வரை ரூ.2,602 இலட்சம் வசூல் செய்யப் பட்டுள்ளது.

மேற்படி சட்டத்தின் கீழ் 1.7.91 முதல் 31.5.95 வரை 45 இலட்சங்களுக்கு, பிரிவு 27 (1) இன் கீழ் நகர்ப்புற நிலவரி செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நிலச் சீர்திருத்தச் சட்டத்தில் 1991-92 முதல் 1994-95 வரை 16,919 ஏக்கர் நிலம் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. மொத்தம் பயனடைந்த நபர்கள் 15,301 பேர். இதில் தாழ்த்தப்பட்டவர்கள் 5,344 பேர்கள் ஆவார்.

இவ்வாறாக நம் இதயதெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொன்னான ஆட்சி, ஒப்பாரும் மிக்காரும் இன்றி உயர்ந்து விளங்குகிறது ✻



# உணவுத்துறையில் தமிழக அரசின் நான்காண்டுச் சாதனைகள்

### மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர்

## திரு இராம வீரப்பன்

கடந்த நான்காண்டுகளில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் தலைமையின் கீழ், தமிழக அரசு உணவுத் துறையில் புரட்சிகரமான செயல்திட்டங்களை மக்கள் நலனுக்காகச் செயல்படுத்தியுள்ளது. இன்றியமையாப் பொருட்களைத் தொலை தூர இடங்களில் வசிப்பவர்கள் உள்ளிட்ட அனைத்துப் பொதுமக்களும் போதுமான அளவிலும், ஏற்புடைய தரத்திலும், நியாய மான விலையிலும், இருப்பிடங்களுக்கு அருகிலும் குடும்ப அட்டைகள் மூலம் பொது விநியோக முறையில் கிடைப்பதை உறுதி செய்ய இவ்வரசு எடுத்துவரும் நட வடிக்கைகள் பலப்பல.

1992-ஆம் ஆண்டு டிசம்பர் வரை அமலில் இருந்த குடும்ப அட்டைகளை 1993-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் 6 ஆண்டு களுக்குப் புதுப்பிக்கப்பட்டு, 123 இலட்சம் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டன. மேலும் பொது விநியோக முறையின் பயனைப் பெறவில்லையே என்று நீண்டகாலம் காத் திருந்த பொதுமக்களின் குறைகளைக் களை யும் பொருட்டு, இவ்வரசு 1993-94-இல் மேலும் 27 இலட்சம் புதிய குடும்ப அட்டைகள் வழங்கியுள்ளது. இதனால் இம்மாநிலத்தில் உள்ள அனைத்துக் குடும்பங்களும் குடும்ப அட்டைகள் பெற்றுப் பொது விநியோக முறையின் பயனை முழுவதுமாக அனுப வித்து வருகின்றன.

பொது விநியோக முறையின் கீழ் விற்பனை செய்யப்படக்கூடிய அரிசி பின் வரும் வழிமுறைகளின் மூலம் பெறப்பட்டு வந்தன:

1. மைய அரசு ஒதுக்கீடு
2. லெவிக் கொள்முதல்
3. காவிரி பாசனப் பகுதிகளில் ஏகபோகக் கொள்முதல்
4. வெளிச்சந்தைக் கொள்முதல்

இவ்வரசு பதவியேற்ற பின் நெல்/அரிசி

**1993-94-இல் மேலும் 27 இலட்சம் புதிய குடும்ப அட்டைகள் வழங்கப் பட்டுள்ளன.**

**பெண்களின் நலனைக் கருத்தில் கொண்டு, குக்கிராமங்களிலேயே, பெண்களை முகவர்களாகக் கொண்டு, நியாயவிலைக் கடைகள் திறக்கத் திட்டம் ஒன்றினை அரசு தயாரித்துள்ளது.**

அளவையும், உற்பத்தித் திறனையும் கருதிப் பார்த்து, இவ்வணிகர் லெவி திட்டத்தை 29.1.1992 முதல் ரத்து செய்து, ஒரு துணிச்சலான முடிவினைச் செயல்படுத்தி வருகிறது.

இவ்வரசு சீரிய திட்டங்களைச் செயல்படுத்தியதன் மூலமாக, நெல் உற்பத்தி அதிகரித்ததைக் கருத்தில் கொண்டு, 1.5.1993 முதல் ஏகபோகக் கொள்முதல் முறையை ரத்து செய்வது என்ற மற்றுமொரு துணிச்சலான முடிவை மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களது அரசு எடுத்தது.

**படித்தவன் உழவேண்டும், உழுபவன் படிக்க வேண்டும். படிப்பவன் அறிவுப் பசியைத் தீர்க்க, உழுபவன் உற்பத்தியைப் பெருக்க இருசாராரும் இணைந்தால்தானே ஏற்றம் காணமுடியும் !**

**—பேரறிஞர் அண்ணா**

மேலே கூறிய இரு கொள்முதல் முறைகளையும் ரத்து செய்ததன் பயனாக, 1993-ஆம் ஆண்டு குறுவைப் பருவத்திலிருந்து இணைக் கொள்முதல் திட்டத்தை இவ்வரசு கொண்டு வந்தது. இத்திட்டத்தின் கீழ் விவசாயிகள் தங்கள் நெல்-அரிசியை தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்திற்கோ, அல்லது தனியார் வணிகர்களுக்கோ, எது ஆதாயமோ அங்கு விற்கலாம் என்று ஆயிற்று. இதனால் விவசாயிகள் அதிக வருமானம் பெற்றனர். மேலும் நெல்லும் அரிசியும் மாநிலம் முழுவதும் தங்கு தடையின்றி எடுத்துச் செல்ல ஏதுவாயிற்று. அனைத்து மாவட்டங்களிலும் ஒரே சீரான விலைகள் நிலவ ஆரம்பித்தன.

பொது விநியோக முறையில் வழங்கப்படும் பொருட்களில் அரிசியே தமிழ்நாடு மக்களின் முக்கிய உணவுப் பொருளாகும். பொது விநியோகத் திட்டத்தில் வழங்கப்படும் அரிசியின் விலை, மைய அரசால் அவ்வப்போது உயர்த்தப்பட்டாலும், இவ்வரசு அரிசியை மானிய விலைகளிலேயே வழங்கி வருகிறது. ஏழை, எளிய மக்களின் நலனைக் கருத்தில்கொண்டு, மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களது அரசு 1995 ஏப்ரல் 1-ஆம் நாள் முதல் அனைத்து ரக அரிசியின் விலைகளையும் கிலோ ஒன்றுக்கு 1 ரூபாய் குறைத்தது. சாதாரண ரக அரிசி ரூபாய் 3.50 என்றிருந்ததை ரூ.2.50 என்றும். சன்னரக மற்றும் மிகச் சன்னரக அரிசியை ரூ.4.75 என்றிருந்ததை ரூ.3.75 ஆகவும் இவ்வரசு குறைத்தது. 1.7.1995 முதல் சாதாரண ரக அரிசியின் விலையை மேலும் 50 காசுகள் குறைத்து, கிலோ ரூ.2 என்ற வீதத்தில் வழங்க அரசு முடிவெடுத்து உள்ளது.

**அனைத்திந்திய அளவிலேயே, தமிழ் நாட்டில்தான், பொது விநியோகத் திட்டத்தில் அனைத்துத் தரப்பினருக்கும் எவ்வித வருமான வரம்பும், பாகுபாடும் இல்லாமல் மிகக் குறைந்த விலையில் கிலோ ஒன்றுக்கு ரூ.2 என்ற வீதத்தில் அரிசி வழங்கப்பட உள்ளது.**

இவ்வாறு விலையைக் குறைத்து வழங்குவதால், கூடுதலாக ரூ.168 கோடியும், ஆண்டு முழுவதற்குமாக ரூ.618 கோடியும் உணவுப் பொருள் மானியமாக இவ்வரசு ஏற்க வேண்டியுள்ளது. பொதுமக்களின் நலனைக் கருத்தில்கொண்டு, இக்கொள்கை முடிவை, இவ்வரசு ஏற்றுள்ளது.

தமிழகத்திலுள்ள ஒவ்வொரு வருவாய்க் கிராமத்திற்கும் ஒரு நியாயவிலைக் கடை எனச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 21,985 முழுநேர நியாயவிலைக் கடைகளுடன், 1,719 பகுதிநேர நியாயவிலைக் கடைகளும், தற்போது உள்ளன. இவையன்றி மலைப் பகுதிகள் மற்றும் எளிதில் செல்லமுடியாத பகுதிகள் ஆகியவற்றில் உள்ள மக்கள் அத்தியாவசியப் பொருட்களை அருகாமையில் வாங்க, 27 நடமாடும் நியாயவிலைக்

கடைகளும் செயல்பட்டு வருகின்றன. இத்தகைய பெரிய அளவிலான அமைப்பு இருந்தபோதிலும், குக்கிராமங்களில் உள்ள மக்கள் குறிப்பாக பெண்கள், தங்கள் ஊதியத்தைத் துறந்துவிட்டு, சுமார் 3 கிலோமீட்டர் தூரம்வரை நடந்து சென்று நியாயவிலைக் கடைகளில் பொருட்களை வாங்கி, தங்களது இருப்பிடங்களுக்கு மீண்டும் அவ்வளவு தூரம் நடக்க வேண்டிய சூழ்நிலை உள்ளது. இம்மக்களின் நலனை, முக்கியமாக பெண்களின் நலனைக் கருத்திற்கொண்டு, இம்மாதிரியான குக்கிராமங்களிலேயே அக் கிராமங்களில் உள்ள பெண்களை முகவர் களாகக் கொண்டு, சில நெறிமுறைக்குட்பட்டு, நியாயவிலைக் கடைகளைத் திறக்க திட்டம் ஒன்றினை மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களது அரசு தற்போது தயாரித்துள்ளது. இத்திட்டத்தின் முன்னோடி யாகப் பெரியார் மாவட்டம், பெருந்துறை வட்டம், தட்டான்காட்டுப்புதூரில் ஒரு கிளை சில்லறை விற்பனைக் கடை திறக்கப் பட்டுள்ளது.

மாநிலத்தில் நெல்-அரிசி உற்பத்தி அதிகரித்த போதிலும், செயற்கையான பற்றாக்குறை ஏற்படக்கூடாது என்ற நோக் கில், வெளி மாநிலத்திற்கு நெல்-அரிசி கொண்டு போக விரும்பும் வியாபாரிகள், அவர்கள் எடுத்துச் செல்ல விரும்பும் அளவிற்கு ஈடான நெல்-அரிசியை லெவியாக அரசுக்குக் கொடுக்க வேண்டும் என்ற லெவி முறையை இவ்வரசு கடைப்பிடித்து வருகிறது. வெளிநாடுகளில் மிகச் சன்னரக அரிசியை விரும்புவதைக் கருத்திற் கொண்டும் அதன் மூலம் விவசாயிகளுக்குக் கிடைக்கக்கூடிய இலாபங்களைக் கருத்திற்கொண்டும் இவ் வரசு ஜே.ஜே.1992 வகை மிகச்சன்னரக அரிசி மற்றும் பாசுமதியல்லாத மிகச் சன்னரக அரிசி வகைகளை ஏற்றுமதி செய்யும் பொருட்டு, மேற்கூறிய லெவியிலிருந்து விலக் களித்துள்ளது.

நாடு முழுவதிலும் ஏற்படும் இயல்பான ஏற்ற, இறக்க நிலை நீங்கலாக, மொத்த விலை நிலைமை தமிழ்நாட்டில் பெரிதும் கட்டுப் பாட்டுக்குள் உள்ளது. இன்றியமையாப் பொருட்கள் அனைத்தும் அங்காடியில் எளிதில் கிடைக்கின்றன. தட்டுப்பாடு உள்ளது என்று எங்கும் புகார் இல்லை. விலை நிலவரம் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு தேவையானபோது அங்காடித் தலையீடு (Market Intervention) முதலான நடவடிக் கைகள் மூலம் நிவாரண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. கூட்டுறவுச் சில்லறை விற்பனை நிலையங்கள் பொது விநியோக முறையின் மூலமாகப் பொருட் களை வழங்குவதோடு, நிர்ணயிக்கப்பட்ட விலையில், இன்றியமையாப் பொருட் களையும் விற்பனை செய்கின்றன. தமிழ்நாடு அரசு தலைமைச் செயலாளரின் தலைமை யின் கீழ் விலைக் கண்காணிப்புக் குழு ஒன்றை இவ்வரசு அமைத்துள்ளது. இக்குழு, குறிப்பிட்ட காலத்திற்கொரு முறை இன்றிய மையாப் பொருட்களின் அங்காடி விலை மற்றும் வழங்கல் நிலைமை பற்றி ஆய்வு செய்து, தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

உணவுத் தானியங்களைச் சேமித்து வைப்பதற்குரிய கிடங்கு வசதிகளை இவ்வரசு ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்து வருகிறது. தமிழ்நாடு முழுவதும், 110 இடங்களில், மொத்தம் 5,77,755 டன் சேமிப்புத்திறன் கொண்ட கிடங்கு வசதிகளை, தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் ஏற்படுத்தி யுள்ளது. இக்கழகம், பொது விநியோக முறையில் பொருட்களை விற்பனை செய்யும் விற்பனை நிலையங்களுக்காக உணவுத்

**ஈகையை விட நல்லது!**

முகம் மலர்ந்து இன்சொல் உடைய வளாக இருக்கப் பெற்றால், மனம் மகிழ்ந்து பொருள் கொடுக்கும் ஈகையை விட நல்லதாகும்.

—திருவள்ளுவர்

4



தானியங்களைக் கொள்முதல் செய்து வழங்கும் ஓர் அரசு முகவரமைப்பாகும். இக்கழகத்திற்கு மானியங்கள் வழங்குவதன் மூலம், இது தொடர்பான கட்டுமானச் செலவினை அரசு ஏற்கிறது. 1994-95-ஆம் ஆண்டு 7 இடங்களில், ரூ.143 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில், மொத்தம் 10,250 டன் சேமிப்புத் திறன் கொண்ட கிடங்குகளின் கட்டுமானப் பணி நடந்தேறி வருகிறது. 1995-96-ஆம் ஆண்டில், ரூ.110 இலட்சம் செலவில் மேலும் 5 கிடங்குகள் கட்டும் பணி மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ளது.

நுகர்வோர் நலனைப் பாதுகாக்கும் வகையில், நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தையும், அதன் கீழ் வரும் விதிகளையும் செயல்படுத்துவதில் தமிழக அரசு முன்னணி வகிக்கிறது. 23 மாவட்டங்களில் உள்ள நுகர்வோர் குறை தீர்க்கும் அமைப்புக்களைத் தவிர, மாநில அளவில் நுகர்வோர் குறை தீர்க்கும் ஆணையம் ஒன்றும் செயல்பட்டு வருகின்றது.

கலப்படக் குற்றங்களைக் கண்டுபிடித்தல், உணவுப் பொருட்கள் கடத்தல் மற்றும் பதுக்கப்படுவதைத் தடுத்தல், கள்ளச்சந்தையினைத் தடுத்தல் ஆகிய முக்கியப் பொறுப்புக்களைச் செயலாற்றுவதற்காக, குடிமைப் பொருள் குற்றப்புலனாய்வுத்துறை ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இது தவிர, மாவட்ட எல்லைகளில் பொருட்கள் கடத்தப்படுவதைத் தடுத்தல், பொது விநியோகத்திற்கான பொருட்கள் நியாயவிலைக் கடைகளிலிருந்து வெளிச்சந்தைகளுக்குக் கடத்திச் செல்வதைத் தடுத்தல், நீதிமன்றங்களில் உள்ள வழக்குகளைக் கவனித்தல், மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர்கள் நடத்தும் அரிசி-நெல் பறிமுதல் வழக்குகளில் கலந்து கொள்ளுதல் ஆகிய பணிகளையும் இவர்கள் மேற்கொள்கிறார்கள்.

இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின் கீழ் பிறப்பிக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு ஆணைகளின்படி, 1994-ஆம் ஆண்டு, 10,542 திடீர்ச் சோதனைகள் செய்யப்பட்டு, 237 நபர்கள் கைது செய்யப்பட்டதுடன், 3,479 நபர்கள் மீது குற்ற வழக்குகள் நடத்தப்பட்டு, 3,461 நபர்களுக்குத் தண்டனை வழங்கப்பட்டது. இந்த திடீர்ச் சோதனைகள் மூலம் ரூபாய் 147.08 இலட்சம் மதிப்புள்ள இன்றியமையாப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. ரூபாய் 267.21 இலட்சம் மதிப்புள்ள இன்றியமையாப் பொருட்கள் கைப்பற்றப்பட்டன ❋

**உனக்குப் பெருமை வேண்டுமானாலும் உற்சாகம் வேண்டுமானாலும் பிற மனிதனுக்குத் தொண்டு செய்வதில் போட்டி போடுவதன் மூலம் தேடிக்கொள்.**

**—தந்தை பெரியார்**



# மக்கள் நல்வாழ்வுத் துறையின் சாதனைகள்

### மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்
## திரு. எஸ். முத்துசாமி

**மா**ண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் தமிழகத்தில் பொறுப்பேற்ற இந்த நான்கு ஆண்டுகளில் மக்கள் நல்வாழ்வுத்துறையில் பல எண்ணற்ற பணிகள் அடிமட்ட மக்களுக்கும் சென்றடையும் வகையில் பல மருத்துவ நலத் திட்டங்களை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்கள். மேலும், எவரும் செய்திடாத நிலையில், இந்த நான்கு ஆண்டுகளில் அதிகபட்ச நிதியை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மக்கள் நல்வாழ்வுத்துறைக்கு ஒதுக்கித் தந்துள்ளார்கள்.

தமிழக அரசின் வரவு செலவுத் திட்டத்திற்கான மொத்த வருவாய்க் கணக்கில் சுமார் 7 சதவீதம் மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. மக்கள் நல்வாழ்வுத் துறைக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் 1990-91-ல் ரூபாய் 343.09 கோடி, 1991-92-ல் ரூபாய் 410.83 கோடி 1992-93-ல் ரூபாய் 469.23 கோடி, 1993-94-ல் ரூபாய் 557.70 கோடி மற்றும் 1994-95-ல் ரூபாய் 618.02 கோடி, 1995-96-ல் 666.95 கோடி ஒதுக்கப்பட்டது.

1992-93-ஆம் ஆண்டில் ரூ.7.29 கோடி செலவில் 50 புதிய பணிகளை இத்துறை செயல்படுத்தியுள்ளது. மேலும் 1993-94-ல் ரூபாய் 8.44 கோடி செலவில் 61 புதிய திட்டப்பணிகளுக்கான ஆணைகளை இத்துறை வெளியிட்டுள்ளது. 1994-95-ல் ரூ.9.05 கோடி செலவில் 54 புதிய பணிகளைத் தொடர நிதிநிலைக் குழு ஒப்புதல் அளித்துள்ளது. 1995-96-ல் ரூ.11.49 கோடி செலவில் 52 புதிய பணிகளைத் தொடர நிதிநிலைக்குழு ஒப்புதல் அளித்துள்ளது.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தமிழக முதல்வராகப் பொறுப்பேற்றவுடன், ஒதுக்குப்புறத்தில் உள்ள கிராம மக்களுக்கும் மருத்துவ வசதி சென்றடைய வேண்டும், மேலும் அவர்களுக்கு மருத்துவ விழிப்புணர்வு ஏற்பட வேண்டும் என்பதற்காகப் பொது மருத்துவ முகாம் நடத்த ஆலோசனை

**"ஏழை மக்களுக்கான விரிவுபடுத்தப்பட்ட மருத்துவத் திட்டம்" என்றொரு புதிய திட்டம் 1992-இல் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ், ஏப்ரல் 1992 முதல் 15.5.95 வரை ரூ.2.34 கோடி நிதி உதவி வழங்கப் பட்டுள்ளது.**

**1995-96-ஆம் ஆண்டிற்கு 70 ஆரம்பச் சுகாதார நிலையக் கட்டடங்கள் கட்டுவதற்கு ரூ.350 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.**

வழங்கினார்கள். அதன் அடிப் படையில் 18.1.1992 அன்று புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா மருத்துவ நலத் திட்டம் தொடங்கப்பட்டது. சுமார் 10 ஆயிரம் முகாம்கள் மாநிலம் முழுவதும் நடத்தப் பட்டன.

மருத்துவ முகாம்களில் பங்கு கொண்டவர்கள் 51,64,641.

சிகிச்சை பெற்றவர்கள் 1,85,400.

குழந்தைகள் நோயினால் எளிதில் பாதிக்கப்படக்கூடிய மக்கள் பிரிவினருக்கு (அதாவது மகளிர், குழந்தைகள்) மருத்துவச் சோதனையை மேற்கொண்டு சிகிச்சையளிக்கும் அரும் பெரும் திட்டத்தை, தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ளது. மாநிலம் முழுவதும் 1,362 அடிப்படை சுகாதார முகாம்கள் நடத்தப் பட்டன. இந்த முகாம்கள் வாயி லாகப் பயனடைந்தவர்களின் எண்ணிக்கை குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டிருக்கின் றன:

முகாமிற்கு வந்து சிகிச்சை பெற்ற பெண்கள் - 2,16,537, சிறுவர்கள் - 2,23,436.

சிறப்புச் சிகிச்சை முகாமிற்கு அனுப்பப்பட்ட நோயாளிகளில் பெண்கள் - 15,744, சிறுவர்கள் - 9,780.

1988-89- லிருந்து இம்மாநிலத் தில் இளம்பிள்ளை வாதத்தால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு இளம்பிள்ளை வாத சிகிச்சைத் திட்டத்தை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களது பொற்கால அரசு செயல்படுத்தியுள்ளது. இளம்பிள்ளை வாத அறுவை சிகிச்சை பல்வேறு மாவட்ட




மருத்துவமனைகளிலும் கல்லூரி களுடன் இணைந்த மருத்துவ மனைகளிலும் 2097 அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டு உள்ளன.

1994 ஜூன் மாதத்தில் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா பள்ளி சுகாதார முகாம்கள் என்ற பெயரில் ஒரு திட்டம் தொடங்கப்பட்டது. அதில் பள்ளி சிறார்களுக்கு ஏற்படும் வியா திகள், குறைபாடுகள் பற்றி கண் டறியப்பட்டது. 28.2.95 வரை 74,48,090 பள்ளிச்சிறார்கள் ஆய்வு செய்யப்பட்டனர். அதில் 42,88,139 சிறார்களுக்கு -வியா திகள் குறைபாடுகள் இருப்பதாக கண்டறியப்பட்டது. குறை பாடுகள் உடைய 42,88,139 சிறார்களில் 2,17,907 சிறார்கள் தலைமையிட மருத்துவமனை களில் முழுமையான சிகிச்சை பெற அனுப்பப்பட்டார்கள்.

ஏழை மக்களுக்கான விரிவு படுத்தப்பட்ட மருத்துவத்திட்டம் என்றொரு புதிய திட்டம் 1992-ல் தொடங்கப்பட்டது. இத்திட்டத் தின் கீழ் ஏப்ரல் 1992 முதல் 15.5.95 வரை ரூ.2.34 கோடி நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் கீழ் இருதய அறுவை சிகிச்சையால் பயனடைந் தோரின் எண்ணிக்கை 1905. மற்றும் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சையால் பயனடைந் தோரின் எண்ணிக்கை 66 ஆகும்.

1991-ஆம் ஆண்டு மக்கள் தொகை தணக்கெடுப்பின்படி தமிழகத்தின் மக்கட்தொகை 5.56 கோடி ஆகும். தமிழகத்தில் 1995ஆம் ஆண்டின் இடைக்கால உத்தேச மக்கள் தொகை 598.13 இலட்சம் ஆகும் (600 இலட்சம்)

தமிழகம் சீரிய முறையில் மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களை நிறைவேற்றியதின் பயனாக இந்நாட்டில் கி.பி.2000 ஆம் ஆண்டில் எய்த வேண்டிய சில மக்கள் நலக் குறிக்கோள்களை, இம்மாநிலம் 10 ஆண்டுகளுக்கு முன்பே எய்திவிட்டது. தேசிய சுகாதாரக் கொள்கையின்படி பிறப்பு விகிதம் 1000-க்கு 21 ஆகவும், இறப்பு விகிதம் 1000க்கு 9 ஆகவும், குழந்தை இறப்பு விகிதம் 1000-க்கு 60 ஆகவும் கி.பி.2000-ஆம் ஆண்டில் அடைய வேண்டும். இத்தேசிய குறியீட்டைத் தமிழகம் 1993-ஆம் ஆண்டிலேயே அடைந்துவிட்டது. உலக அளவில் சிறப்புப் பணிக் குழு (அமெரிக்க அதிகாரிகளும், வளர்ந்து வரும் நாடுகளின் வல்லுநர்களும்) மேற்சொன்ன திட்டத்தில் இவ்வரசின் சாதனையை மதிப்பிடுவதற் காக 1994 ஜனவரியில் வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டத்திற்கு வருகை தந்து, தமிழ்நாடு சுகாதாரப் பாதுகாப்புச் சேவையில் மிகச் சிறந்த சாதனை ஒன்றை எய்தியுள்ளது, என்றும் இதன் விளைவாக நாட்டின் பிற பகுதிகளை விட இங்கு பத்தாண்டுகளுக்கு முன்னரே எல்லா மக்களும் முழு அளவில் பயனடைந்துள்ளனர் என்றும் அக்குழுவின் வல்லுநர்கள் குறிப்பிட்டுள்ளனர். மக்கள் தொகை நெருக்கடி பற்றிய குழு என்ற ஒரு உலக நிறுவனம் இந்தியாவில் குடும்ப நலத் திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்தி வரும் ஐந்து பெரும் மாநிலங்களில் (கேரளம், தமிழ்நாடு, மகாராட்டிரம், குஜராத், பஞ்சாப்) ஒன்றாகத் தமிழ்நாட்டைத் தெரிந்தெடுத்துள்ளது.

குடும்ப நலத்திட்டத்தின் கீழ் தமிழ்நாடு எய்திய இலக்கு சாதனைகள் மற்ற அண்டை மாநிலங்களோடு ஒப்பிட்டு நோக்கும்போது மிக அதிகமாகும்.

தொண்டை அழற்சி நோய், கக்குவான் இருமல், இசிவு நோய், எலும்புருக்கி நோய், தட்டம்மை நோய், இளம்பிள்ளைவாதம் போன்ற தடுப்பூசி மருந்தால் தடுக்கத்தக்க நோய்களுக்குத் தடுப்பூசி மருந்து கொடுப்பதன் மூலமாக நோய் பீடிக்கப்படுவதையும் இறப்பு வீதத்தையும் குறைக்க வேண்டும் என்ற கருத்தில் அனைவருக்கும் நோய்த்தடுப்பூசி போடுவதன் மூலம் இம்மாநிலத்தில் தடுப்பூசியினால் கட்டுப்படுத்தப்படும் நோய்கள் பெருமளவில் குறைக்கப்பட்டுள்ளன. இளம்பிள்ளைவாத நோயினால் ஊனமுற்ற குழந்தைகளின் எண்ணிக்கை 1987-ஆம் ஆண்டில் 4409-ஆக இருந்தது. 1994-ஆம் ஆண்டில் 262-ஆகக் குறைந்துள்ளது. இசிவு நோய்களின் எண்ணிக்கையும் மிகக் குறைந்துள்ளது.

குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை ஊக்குவித்தல், ஆண் குழந்தைகள்தான் வேண்டும் என்ற போக்கினை மாற்றுதல், பெண் சிசுக்கொலையை ஒழித்தல், பெண் குழந்தைகளின் நலனை மேம்படுத்துதல் போன்றவற்றிற்காக அரசு பெண் குழந்தைகளுக்கான புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா திட்டம் என்கிற திட்டம் ஒன்றை 1.4.1992 முதல் அறிமுகப்படுத்தியுள்ளது. ஒன்று அல்லது இரண்டு பெண் குழந்தைகள் இருந்து ஆண் குழந்தை இல்லாத ஏழைக்குடும்பத்தில் கருத்தடை அறுவை சிகிச்சை செய்து கொண்டால் அவர்களுக்கு ரூபாய் இரண்டாயிரம் வழங்கப்படும், இத்தொகை ஒரு நிதியில் முதலீடு செய்யப்பட்டு அந்தப் பெண் குழந்தைகளுக்கு அவர்களது தொடக்க கல்வி, நடுநிலைக்கல்வி, உயர்/மேல் நிலைக்கல்வி முடிப்பதற்கு ஏதுவாக அவர்களுக்கு அத்தொகை குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு முறை வழங்கப்படும். அப்பெண் குழந்தை 20 வயது அடைகிற போது தன்னுடைய வாழ்க்கையை அமைத்துக் கொள்வதற்கு அல்லது உயர் கல்வி தொடர்வதற்கு ஒட்டுமொத்தத் தொகையாக ரூபாய் 10,000 வழங்கப்படும். இத்திட்டம் 1.4.1992ஆம் ஆண்டிற்குப் பின்னர் கருத்தடை அறுவை சிகிச்சை செய்துகொண்ட தம்பதியர்களுக்குப் பொருந்தும். பின்னர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தத் தொகையை 11.11.1993 ஆம் நாளன்று ரூபாய் 20,000 ஆக அதிகரித்ததோடு பெண் குழந்தையின் முதல் பிறந்த நாளில் தங்கமோதிரம் ஒன்றும் பரிசளிக்கப்படும் என்று அறிவித்தார்.

**கண் சிகிச்சை முகாம்**

கண் சிகிச்சை (காட்ராக்ட் அறுவை சிகிச்சை) செய்யப்பட வேண்டியவர்கள் ஐந்து லட்சம் பேர் உள்ளார்கள் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. 5 ஆண்டுகளில் இந்த 5 இலட்சம் பேருக்கும் அறுவை சிகிச்சை செய்து முடிக்கப்பட வேண்டும் என்று குறியீடு நிர்ணயித்திருந்தாலும், வெகு விரைவிலேயே இவர்கள்

அனைவருக்கும் கண் சிகிச்சை அளிக்க வேண்டும் என்ற நோக்கோடு செயல்பட்டு வருகிறது. இதற்கு மேலும் 500 சிறப்பு முகாம்களை நடத்தி விரைவாக இக்குறியீட்டை எட்டிப் பிடிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**எய்ட்ஸ் நோய்த் தடுப்புத் திட்டம்**

11.05.1994 முதல் தமிழ்நாடு சங்கங்கள் விதியின் கீழ், மாநில எய்ட்ஸ் திட்ட மையம் ஒரு சங்கமாகப் பதிவு செய்யப்பட்டது. தமிழ்நாட்டில் 88 அரசு குருதி வங்கிகள், 61 தனியார் குருதி வங்கிகள் மற்றும் 13 மண்டல குருதி சோதனை மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இரத்த மாதிரியை சோதனை செய்ய 'எலிஸா ரீடர்' கருவிகள் 11 இடங்களுக்கு வழங்கப்பட்டு உள்ளன. எலிஸா ரீடர் கருவிகள் வழங்கப்படாத சிறிய இரத்த வங்கிகளுக்கு ரேபிட் டெஸ்ட் (சீரோடையா) கிட்ஸ் வழங்கப் பட்டுள்ளன. இன்குபேட்டர், மைக்ரோஸ்கோப் சென்டிரி பியூஜ், ஆட்டோகிளேவ் போன்ற கருவிகள் மற்றும் அன்றாடம் தேவைப்படும் பொருட்கள் 66 குருதி வங்கிகளுக்கு வழங்கப் பட்டுள்ளன. அரசு மற்றும் தனியார் குருதி வங்கிகளில் பணிபுரியும் 382 ஆய்வுக்கூட நுட்பனர்களுக்கு ரேபிட் டெஸ்ட் கிட்ஸ் கையாளுவதற்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. கருவிகளும் டெஸ்ட் கிட்ஸ்களும் வழங்கப்பட்டு உள்ளதால் 1993-ல் சேகரிக்கப்பட்ட 33,645 என்ற குருதியின் அளவு ஜனவரி 1994 முதல் டிசம்பர் 1994 முடிய 50,500 ஆக உயர்ந்துள்ளது.

தமிழ்நாட்டில் சுமார் 10 இலட்சம் காசநோயாளிகள் உள்ளனர். அவர்களில் நான்கில் ஒரு பங்கினர் - அதாவது 2.5 இலட்சம் பேர்களால் நோய் பரவக்கூடிய நிலை உள்ளது. இந்நோய்க்காக அவசர தீவிர சிகிச்சை செய்திட காசநோயாளிகளுக்கெனத் தனிப் படுக்கை வசதிப்பிரிவுகள் எல்லா மாவட்டங்களிலும் இருக்கின்றன. இம் மாநிலத்தில் காசநோயாளி நலம் பேண பத்து காசநோய் மருத்துவ மனைகள் உள்ளன.

இதே போலத் தொழுநோய் மிக அதிகமாகக் காணப்படும் மாநிலங்களில் தமிழ்நாடு ஒன்றாகும். கடந்த 10 வருடங்களாகப் பல்வகை மருந்து சிகிச்சை முறையை செயல்படுத்திய பின்னர் தொழுநோயாளிகளின் எண்ணிக்கை 63,890 ஆகக் குறைந்துள்ளது. தற்போது 1000 பேரில் நோய் கண்டுள்ளவர்களின் விகிதாச்சாரம் 1.1. ஆக இருந்து வருகிறது.

**பார்வையின்மைத் தடுப்புக்கான தேசியத்திட்டம்**

தேசிய சுகாதாரக் கொள்கையில் பார்வையின்மையைத் தடுக்கும் தேசியத் திட்டத்தின் குறிக்கோள் இந்தியாவில் கி.பி. இரண்டாயிரத்தில் கண் பார்வை யற்றோர் எண்ணிக்கையை 1000 பேர்களுக்கு 14 பேர் என்ற வீதத்திலிருந்து 1000 பேர்களுக்கு 3 என்ற வீதமாகக் குறைக்கப்பட வேண்டும் என்பதாகும். தமிழ்நாட்டில் பார்வையற்றோரின் எண்ணிக்கை விகிதாச்சார அளவு 1.65 ஆகும். மேற்குறிப்பிட்ட திட்டப் பணிகளுக்காக 1994-95-ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.1.76 கோடி ஒதுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. கண்சிகிச்சை முகாம்கள் நடத்துவதற்காக இந்திய அரசு மாவட்டங்கள் ஒவ்வொன்றுக்கும் தனித் தனியாக மாவட்டப் பார்வையின்மை கட்டுப்பாட்டுச் சங்கத்திற்கு ரூ.3.00 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. உலக வங்கி உதவியுடன் ரூ.64 கோடி தொகைக்கான செயல்பாட்டுடன் கூடிய திட்டத்தை மத்திய அரசு அங்கீகரித்துள்ளது.

**ஆரம்ப சுகாதார நிலையங்கள்**

இதற்கு முன் எப்போதும் இல்லாத அளவிற்குத் தமிழக மக்களுக்காக அரசு 1995-96-ஆம் ஆண்டிற்கு 70 ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடங்கள் கட்டுவதற்கு ரூபாய் 350 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

மொத்தச் செலவு (ரூபாய் இலட்சத்தில்)

1. 70 ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடங்கள் கட்ட 350.00.
2. ஆரம்ப சுகாதார நிலையங்கள் செம்மையாகச் செயல்பட 20 உபயோகமற்ற வாகனங்களுக்குப் பதிலாக, 20 புதிய வாகனங்கள் வாங்க 50.00.

இதனைப் போலவே 'டேனிடா மக்கள் நல்வாழ்வுத்திட்டத்தின்' கீழ் இரண்டாம் நிலை பணி சேலம், தென்னார்க்காடு வள்ளலார், விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டங்களில் 1.4.89 முதல் 31.3.92 வரை செயல்படுத்தப்பட்டு அது மேலும் 31.3.95 வரை மொத்த திருத்திய மதிப்பீடு ரூ.24.77 கோடிக்கு செயல்படுத்த அனுமதிக்கப்பட்டது.

இந்திய மக்கள் தொகைத் திட்டம் 5-ன் கீழ் சென்னை மாநகரிலும் சுற்றியுள்ள புறநகர் பகுதிகளிலும் உலக வங்கியின்

உதவியுடன் 1988-லிருந்து இந்திய மக்கள் தொகைத் திட்டம் 5 செயல்பட்டு வருகிறது. 1995-96-ல் முக்கியமான திட்டமாக திட்டப் பகுதிக்குட்படாத 7 மாவட்டம் மற்றும் 137 வட்ட மருத்துவ மனைகளில் உள்ள தாய்சேய் நலப்பிரிவுகளை மேம்படுத்து வதற்கு உலக வங்கி மற்றும் இந்திய அரசு ஒப்புதல் வழங்கி யுள்ளது. இதற்கான திட்டமிடப் பட்ட மூலதனச் செலவு ரூ.7 கோடி. இவற்றுள் ரூ.6.35 கோடி உபகரணங்கள் வாங்கவும் மற்றும் ரூ.0.65 கோடி கட்டிடப் பணிகளுக்கும் செலவிடப்படும். 1995-96-க்கான மொத்த வரவு செலவு ரூ.18.55 கோடி ரூபாய் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. 1995-96-ஆம் ஆண்டு இத்திட்டத் தின் இறுதி ஆண்டாக இருப்பதால் இத்திட்டத்தின் கீழ் உள்ள பணிகள் 1995-96-க்குள் நிறைவு பெற்றுவிடும்.

தாலுக்கா அளவில் சிறப்பு மருத்துவர்கள் நிரந்தரமாக இல்லாமல் இருந்த சூழ்நிலையை மாற்றும் வண்ணம் ஒவ்வொரு தாலுக்கா மருத்துவமனைகளிலும் குழந்தைகள் நல மருத்துவர் ஒருவர், மகப்பேறு நல மருத்துவர் ஒருவர், மயக்க மருத்துவர் ஒருவர் கண்டிப்பாக இருக்க வேண்டும் என்ற ஏற்பாட்டைத் தமிழக அரசு செய்துள்ளது.

மருத்துவமனைகளுக்கு மருந்து கிடைக்காத பிரச்சினை அல்லது உள்ள மருந்தை தேவையான மருத்துவமனைகளுக்கு விநியோகம் செய்யாதது போன்ற பல்வேறு சிக்கல்கள் நெடுங்காலமாக தொடர்ந்து இருந்திருக்கிறது. அதற்குக் காரணம் இதைக் கண்காணிக்க முறையான தனி அமைப்பு இல்லாததே. தற்பொழுது, 'மருந்துக் கழகம்' என்ற அமைப்பை ஏற்படுத்தி, அதன் தலைவராக நல்வாழ்வுச் செயலரும் முழுநேர நிர்வாக இயக்குநராக ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியும் பொது மேலாளராக ஒரு மருத்துவரும் நியமிக்கப் பட்டுள்ளார்கள். அவர்களுக்குத் தேவையான பணியாளர்கள் - கம்ப்யூட்டர் போன்ற கருவிகள் கொடுக்கப்பட்டுள்ளன. முழுநேரமாக இவர்கள் இப்பணியைப் பார்ப்பதன் மூலம் குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டு, எதிர்காலத்தில் இது சிறப்பாகச் செயல்படும்.

மருத்துவக் கல்வி மற்றும் மருத்துவ உயர்கல்விக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதில் ஒவ்வொரு ஆண்டும் சிக்கல்களும் தவறுகளும் இருந்து கொண்டே இருக்கும். ஒரு நிரந்தரமான அமைப்பும் வசதியான கட்டடமும் இல்லாமல் தற்காலிக அமைப்பாக ஈடுபட்டதே காரணம். இந்நிலையிலும் இந்த ஆண்டு சுமார் 600 மாணவர்கள் அரசினர் மருத்துவத் தேர்வை எதிர்த்து உச்ச நீதி மன்றத்தில் வழக்குப் பதிவு செய்தார்கள். அவைகள் அனைத்திலும் உண்மை இல்லை; அரசாங்கம் சரியாகவே மருத்துவ மாணவர்களைத் தேர்வு செய்துள்ளது என்று உச்ச நீதி மன்றம் சுட்டிக் காட்டி அரசை எதிர்த்துத் தாக்கல் செய்யப்பட்ட அத்தனை மனுக்களையும் ரத்து செய்துள்ளார்கள். இதில் இன்னும் சிறப்பாகச் செயல்படும் வகையில் செலக்ஷன் கமிட்டியை நிரந்தரமானதாக அமைக்கவும், வசதியான கட்டடத்தை கட்டிக்கொடுக்கவும் தேவையான கம்ப்யூட்டர் போன்ற உபகரணங்கள் வாங்கிக் கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது.

அரசு வேலைக்குத் தேர்ந்தெடுக்கப்படும் செவிலியர்கள், செவிலியர் பயிற்சியை மட்டுமே பெற்றிருந்தார்கள். சிறப்புப் பயிற்சி இல்லாதவர்களாக இருந்தார்கள். தற்பொழுது அவர்களுக்கு 1 ஆண்டு சிறப்புப் பயிற்சி கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது.

நிர்வாகப் பொறுப்பை ஏற்கும் மருத்துவர்கள் அதற்கான தனிப் பயிற்சியைப் பெற முடியாமல் இதுவரை இருந்த காரணத்தால் நிர்வாகத்தில் சில குறைபாடுகள் தொடர்ந்து இருந்து கொண்டு வந்தது. இதைப் போக்கும் வகையில்,

1. தமிழ்நாடு பொதுச் சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்து பணிநிலைப் பிரிவு.

2. தமிழ்நாடு மருத்துவப் பணி நிலைப் பிரிவு.

3. தமிழ்நாடு மருத்துவக்கல்வி பணிநிலைப் பிரிவு என்றுமூன்று பிரிவுகளை (Cadre) ஏற்படுத்த அரசு முடிவெடுத்துள்ளது.

புரட்சித்தலைவியின் தலைமையில் நான்கு ஆண்டுகளில் சீரிய முறையில் இயங்கும் ஆட்சி, ஏழை எளிய மக்களுக்கு சிறப்பான மருத்துவச் சேவை புரிந்து வருவதால், விரைவில் நோயற்ற வாழ்வு என்ற இலக்கினைத் தமிழகம் அடைந்துவிடும் என்பது உறுதி.

*

# போக்குவரத்து - வனத்துறைகளின் பொற்காலச் சாதனைகள்

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்

## திரு. கே.ஏ. செங்கோட்டையன்



ஓடிவரும் நதி வெள்ளத்தின் வேகம், ஆடிவரும் தென்றலின் அழகு லாவகம், சூடி மகிழும் சுந்தர மலர்களின் சுகவாசம், இவை அனைத்தும் ஒருருவாய் மாறி, வாடிநிற்கும் மக்களைத் தேடிவந்து உதவுகின்ற தெய்வ மனோபாவம்... இவையே நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் கடந்த நான்காண்டுகளாய் நடத்திவரும் நல்லாட்சியின் இலக்கணம். இன்னும் பல நூற்றாண்டுகளுக்கும் தொடர இருக்கும் இலக்கியம்.

தமிழக அரசு, துறைதோறும் படைத்துள்ள சாதனை, ஓர் உணர்ச்சிமிக்க தமிழகத்தை, தன்னிறைவு கொண்ட தமிழகத்தை, தங்கச் சிறப்புமிகு தமிழகத்தைப் படைத்திருக்கிறது எனில் அது மிகையாகாது. அந்த அளவுக்கு, கடந்த நான்கு ஆண்டுகளில் இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் காட்டிய செயல்வேகம் பல நூறு ஆண்டுகளில் காணாத புயல்வேகம் ஆகும்.

இந்தப்புயல் வேகச் செயல்திறனால், போக்குவரத்துத் துறையிலும், வனத்துறையிலும் ஒரு பொற்காலம் படைத்து, புதிய புதிய சாதனைகளைப் படைத்துள்ளது தமிழக அரசு.

**குறைந்த கட்டணம், நிறைந்த சேவை!**

தமிழ்நாடு அரசின் போக்குவரத்துக் கழகங்கள் அனைத்தும் செயல்திறனில் ஏனைய மாநிலங்களுக்கு முன்னோடியாகவும், முன்மாதிரியாகவும் செயல்பட்டு வருகினறன. அ்த நேரம் பயணக் கட்டணம் மிகக் குறைவாக இருப்பதும் தமிழகத்தில்தான். ஏனைய பல மாநிலங்களில் இருப்பதுபோல கட்டண உயர்வு தமிழகத்தில் இருக்குமேயானால், ஏறத்தாழ 200 கோடி ரூபாய்க்கு மேலாக நாம் இலாபம் ஈட்ட முடியும்.

**எல்லாக் கிராமங்களுக்கும் வாகனப் போக்குவரத்து வசதி செய்து தரப்பட்டிருக்கிறது.**

**சமூகக் காடுகள் அமைப்பதிலும் ரூ.8,867 இலட்சங்கள் செலவு செய்து, 62,670 எக்டர் பரப்பில் சமூக நிலங்களில் காடுகள் வளர்க்கப்பட்டுள்ளன.**

**வனத் துறையில் மகளிருக்கு வேலை வாய்ப்பு அதிகரிக்கப் பட்டுள்ளது.**



தமிழகத்தின் மக்கள் தொகை சுமார் 6 கோடி, இயக்கப்படும் பேருந்துகளோ 15,209, ஏற்பட்டுள்ள நஷ்டமோ மிக மிகக் குறைவு.

தமிழகத்தில் பேருந்துக் கட்டணம் 1 கி.மீட்டருக்கு 14.00 காசு

கர்நாடகத்தில் பேருந்துக் கட்டணம் 1 கி.மீட்டருக்கு 16.31 காசு

ஆந்திர மாநிலத்தில் பேருந்துக் கட்டணம் 1 கி.மீட்டருக்கு 17.00 காசு

கேரளா மாநிலத்தில் பேருந்துக்கட்டணம்1 கி.மீட்டருக்கு 18.00 காசு

குஜராத் மாநிலத்தில் பேருந்துக்கட்டணம் 1 கி.மீட்டருக்கு 20.16 காசு

மஹாராஷ்டிராவில் பேருந்துக் கட்டணம் 1 கி.மீட்டருக்கு 20.83 காசு

உத்திரப்பிரதேச மாநிலத்தில் பேருந்துக் கட்டணம் 1 கி.மீட்டருக்கு 21.00 காசு.

பஞ்சாப் மாநிலத்தில் பேருந்துக் கட்டணம் 1 கி.மீட்டருக்கு 21.23 காசு.

தமிழகத்திலே குறைவான கட்டணத்தில் பேருந்துகளை மிக வசதியுடன் இயக்கிக் கொண்டிருக்கிறோம்.

1986-ஆம் ஆண்டு வரையிலும் ரயிலைக் காட்டிலும் பேருந்துக் கட்டணம் அதிகமாக இருந்தது. ஆனால், இன்று ரயிலைக் காட்டிலும் பேருந்துக் கட்டணம் மிக மிகக் குறைவாக உள்ளது. இதற்குக் காரணம் ஆற்றல்மிக்க முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்தைத் தலைமை யேற்று நடத்துவதுதான்.

தலைவியின் உயரிய குறிக்கோளின்படி குறைந்த கட்டணம் வசூலித்து, நிறைந்த சேவையைத் தமிழ்நாடு அரசின் போக்கு வரத்துக் கழகங்கள் வழங்கி வருகின்றன.

**சீரான செயல்திறனுக்குச் சிறப்புமிகு விருதுகள்**

தமிழ்நாடு அரசின் போக்குவரத்துக் கழகங்களின் சிறப்பான செயல்திறனுக்கு எடுத்துக்காட்டு, அகில இந்திய அமைப்பு களின் விருதுகளைத் தொடர்ந்து பெற்று வருவதே ஆகும். சிறந்த உற்பத்தித் திறன், சீரிய செயல்பாடு, வாகன உற்பத்தி முன்னேற்றம், டீசல் சேமிப்பு போன்ற திறன்மிக்க செயல் களில் முன் அணியாக நின்று, இந்தியப் போக்குவரத்து நிறுவனங்களின் கூட்ட மைப்பு, தேசிய உற்பத்தித் திறன் குழு மற்றும் பெட்ரோலியம் காப்பு ஆய்வுக் கழகம் போன்ற அமைப்புகளின் 27 விருதுகளை மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியின் அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் பெற்றுத் திகழ்கின்றன.

**வாழ்க்கை என்பது அலைபோன்றது. அதன் வடிவமும் எண்ணமும் அடிக்கடி மாறிக்கொண்டேயிருக்கும்.**

**–டிஸ்ரேலி**

### புதிய போக்குவரத்துக் கழகங்கள்

தமிழகத்து மக்கள் அனைவருக்கும் போக்குவரத்து வசதிகளை அளித்திட வேண்டும் என்னும் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் அறிவுறுத்தலுக்கு இணங்க,

☆ எல்லாக் கிராமங்களுக்கும் வாகனப் போக்குவரத்து.

☆ பேருந்துகளின் எண்ணிக்கையை அதிக மாக்கித் தொய்வின்றி இயக்குதல்.

☆ குறைந்த கட்டணத்தில் இயக்குதல்.

ஆகிய அப்பழுக்கற்ற நோக்கத்தினை நிறைவு செய்திட, தமிழ்நாடு அரசின் போக்குவரத்துக் கழகங்கள் நாளும் உழைத்து வருகின்றன. பாட்டாளியின் கூட்டாளியாய்ப் பாடுபடும் இந்தப் பட்டாள வரிசையில் மேலும் நான்கு புதிய போக்குவரத்துக் கழகங்கள் உருவாக்கப்பட்டு, அவை சீரிய முறையில் செயல்பட்டு வருகின்றன.

பேரறிஞர் அண்ணாவை அவனிக்கு அளித்த காஞ்சி மாநகரைத் தலைமை யிடமாகக் கொண்டு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். போக்குவரத்துக் கழகம்......

சென்னைப் பெருநகரில் போக்குவரத்தை முறைப்படுத்தி, வடசென்னைப் பகுதிக்கென டாக்டர் அம்பேத்கர் போக்குவரத்துக் கழகம்....

வெளிமாநிலங்களோடு சிறப்பான போக்கு வரத்துத் தொடர்பை ஏற்படுத்தி, போக்குவரத் தில் புதுமை படைத்துவரும் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா போக்குவரத்துக் கழகம்......

மலைவாழ் மக்களுக்குப் போக்குவரத்து வசதியை முழுமையாக உறுதி செய்திட உதக மண்டலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு மகாகவி பாரதியார் பெயர் தாங்கி, புதிய போக்குவரத்துக் கழகம்.....

புதியதாகத் தோற்றுவிக்கப்பட்ட இந்த நான்கு போக்குவரத்துக் கழகங்களையும் சேர்த்து தமிழ்நாட்டில் மொத்தம் 19 போக்கு வரத்துக் கழகங்கள் 15,209 பேருந்துகளுடன் தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் அறிவுரை களையும், ஆலோசனைகளையும், ஏற்று மக்கள் சேவையில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு, தொடர்ந்து பணியாற்றி வரு கின்றன.

### பயணிகளுக்குப் பலவகை வசதிகள்

பயணிகளின் இனிய பயணத்திற்கு அச் சாரமாக அவர்கள் முன்பதிவு செய்துகொள் வதில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்த்து, சிரமத்தைக் குறைத்திட, முக்கியப்பேருந்து நிலையங்களில் படிப்படியாகக் கம்ப்யூட்டர் வசதி அறிமுகம் செய்யப்பட்டு வருகின்றது.

மேலும், முக்கியப்பேருந்து நிலையங்களில், பயணிகளின் வசதிக்கென நவீன கழிவறை, குளிர்நீர், ஒளி விளக்குகள், சுகாதார வசதிகள், சிறந்த உணவக வசதிகள் ஆகிய வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.

விழாக் காலங்களிலும், கண்காட்சி முதலான பொது விழாக்கள் திருவிழாக் காலங்களிலும், பயணிகள் தங்குதடையின்றி வசதியுடன் பயணம் செய்யக் கூடுதலாகச் சிறப்புப் பேருந்து வசதிகள் செய்து தரப் படுகின்றன.

மாணவ, மாணவியர் பள்ளி செல்ல, கல்வித்துறையில் தமிழகத்தை முதன்மை மாநிலமாகக் கொண்டுவர மனித நேயம் மிக்க டாக்டர் புரட்சித்தலைவி அவர்களால் பல கோடி இழப்பு ஏற்பட்டாலும் பரவாயில்லை என இலவசப் பயணக் கட்டணச் சலுகை வசதி செய்து தரப்படுகிறது.

போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்கள்

சிறுநீரக அறுவைச் சிகிச்சை செய்ய ரூ.1,20,000 வழங்கியவர் புரட்சித்தலைவி.

சமுதாயத்தின் நலிந்த பிரிவினரான உடல் ஊனமுற்றோர்க்கும், விடுதலைப் போராட்டத் தியாகிகள், புற்று நோயாளிகள், பத்திரிகை நிருபர்கள், மாணவர்கள், முன்னாள் இந்நாள் சட்டமன்ற உறுப்பினர்கள், போன்றவர்களுக்கும் கடும் நிதி நெருக்கடியிலும் பல்வேறு பயணச் சலுகைகளை வழங்கி வருகிறது தமிழக அரசு.

கடனைத் திருப்பிச் செலுத்துவதிலேயே கூட, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியின் அரசு சாதனை சகாப்தத்தைப் படைத்திருக்கிறது. 1983-91 ஆகிய எட்டு ஆண்டுகளில் கட்டிய கடன் தொகையோ ரூ.405 கோடி, ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, ஒன்றரை ஆண்டுகளில் கட்டிய கடன் தொகையோ ரூ.455 கோடி.

இந்தியத் துணைக் கண்டத்தின் வரலாற்றில் மேலை நாடுகளைப் போல் பேருந்துகள் இயக்குகிற மாநிலமாகத் தமிழகம் இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டுகிற வகையிலேதான் நம்முடைய மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுடைய புனிதப்பெயரால் இயக்கப்படுகின்ற புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் 25 சபரிமலைக்கு இயக்கப்பட்டபோது, அங்கு உள்ளவர்கள் எல்லாம் வியந்து, இப்படிப்பட்ட பேருந்துகள் இந்தியத் திருநாட்டிலே இருக்கிறதா என்று பாராட்டும்படி திகழ்ந்து கொண்டிருக்கிறது.

டீசல் விலை புரட்சித்தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பின் 83 சத வீதம் விலை உயர்ந்துள்ளது. உதிரிப் பாகங்கள் விலை, பேருந்து அடிச்சட்டங்கள் விலை, டயர் மற்றும் மசகு எண்ணை ஆகியவற்றின் விலை உயர்வு; இவ்வளவு விலை உயர்வுக்கும் மத்தியில் நஷ்டம் நமக்கு வந்தாலும் கஷ்டம் மக்களுக்கு வரக்கூடாது என்று மனிதநேயத்துடன் ஆணையிட்டு, குறைந்த கட்டணத்தில் பேருந்துகளைத் தொடர்ந்து புரட்சித்தலைவி அவர்கள் இயக்கி வருகிறார்கள்.

**மலேரியா, முதலிய நோய்கள் உடலை மட்டுமே பாதிக்கும்; மதுபானங்களும், கஞ்சாவும் உடலோடு ஆன்மாவையும் பாதிக்கும்.**

**—காந்தியடிகள்**

## பணியாளர் நலனுக்குப் பயன்மிகு திட்டங்கள்

பேருந்துகளைச் சீருந்துகளாய் ஆக்குவதோடு மட்டும் நின்றுவிடவில்லை இந்த அரசு. அவற்றைச் சிறப்பாக இயக்க அடித்தளமாக இருக்கும் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட பணியாளர்களின் நல்வாழ்விலும் சிறப்பான அக்கறை கொண்டு செயல்பட்டு வருகின்றது, புரட்சித்தலைவியின் நல்லரசு.

ஓய்வு பெறும் பணியாளர்களுக்கு ஓய்வுக் கால நல்வாழ்வு ஊதியத்திட்டம் மூலம் 1.9.92 முதல் ரூ.50/ அவர்கள் ஊதியத்தில் பிடித்தம் செய்து, ஓய்வு பெற்ற பின் மாதம் ரூ.300/-க்குக் குறையாமல் வாழ்நாள் முழுவதும் ஓய்வூதியமாகப் பெறும் ஒப்பற்ற திட்டம் இந்தியாவிலேயே முதல் முதலாக வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டுள்ளது.

சலுகை விலையில் உணவக வசதி, மருத்துவ வசதி, வீட்டு வசதி, போன்ற அனைத்து அடிப்படைத் தொழிலாளர் நல வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. சொந்த வீடு தொழிலாளர் பெறும் வண்ணம் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வீட்டு வசதி, வீடுகட்ட கடன் உதவி போன்றவைகள் சிறப்பாக வழங்கப்படுகின்றன. இரண்டு கோடி சுழலும் நிதி ஒன்று உருவாக்கப்பட்டு வீட்டு வசதி விரைந்து கிடைத்திட ஆவன செய்யப்பட்டுள்ளது.

தானாக முன்வந்து ஓய்வுபெறும் பணியாளர்களுக்கு, ஒரு ஆண்டுப் பணிக்கு ரூ.8,500/ வீதம் நிதி உதவி அளிக்கப்படுகிறது பொறியியல் கல்லூரி, மருத்துவக் கல்லூரி போன்றவைகளை நடத்தி தொழிலாளர்களின் பிள்ளைகள் கல்வித்துறையில் முன்னேற மிகப்பெரிய வாய்ப்பு உருவாக்கித் தரப்பட்டுள்ளது.

பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் தனது சிறப்பான பணியின் காரணமாக ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து இலாபம் ஈட்டி வருகிறது.

ஓட்டுநர் உரிமங்கள், வண்டிப் பதிவுச் சான்றிதழ்கள், நடத்துநர் உரிமங்கள், ஒரே நாளில் வழங்கும் சாதனையைப் போக்கு வரத்துத்துறை செய்துள்ளது பாராட்டத் தக்கது.

*50* சி.சி.க்குக் குறைவாக உள்ள இரண்டு சக்கர வாகனங்கள் தமிழகத்தில் *7* இலட்சத்து *74* ஆயிரத்து *323* உள்ளன. ஏழை எளிய மக்கள் பயன்படுத்துவதால் இவ்வாகனங் களுக்கு வரிவிலக்கு அளித்து சுமார் *41* கோடி ரூபாய் வரியை இழந்திருக்கிறது. காரணம் ஏழை எளிய மக்கள்பால் புரட்சித்தலைவி அவர்கள் வைத்துள்ள பற்றும் பாசமுமே காரணம் ஆகும்.

## வனத்துறையில் வரலாற்றுச் சாதனைகள்

தமிழ்கூறும் நல்லுலகில், பல்வகை உயிரி னங்களையும் அவற்றுக்கேற்ற பொது இயல் அமைப்பினையும் வேளாண்மைக்குத் தக்க இயற்கைச் சூழ்நிலையைத் தன்னகத்தே கொண்டு அமைந்த இயற்கைச் செல்வத் தையும் பாதுகாத்து, நுண்ணிய உயிரியல் இயற்கைச் சூழலை அழிவிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்பதே இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் தலைமையில் அமைந்துள்ள இந்த அரசின் கோட்பாடாகும்.

> **ஒரு பெண்ணின் கல்விக்கு நாம் செலவிடும் பணம், ஒரு குடும்பத்தின் வளர்ச்சிக்கு முதலீடு செய்வதாகும்.**
>
> **—மூதறிஞர் ராஜாஜி**

தமிழகத்தின் மொத்த நிலப்பரப்பு *1,30,057* ச.கி.மீ. இப்பரப்பில் *22,692* ச.கி.மீ. வனங் களைக் கொண்டு சுமார் *17.45* விழுக்காடுகள் கொண்டதாக அமைந்துள்ளது. தரம் தாழ்ந்து வரும் காடுகளின் நிலைதனைத் தடுத்து நிறுத்துவதற்கு, பல்வேறு திட்டங்களின் அடிப் படையில் மரத் தோட்டங்கள் எழுப்புதல் செய்யப்பட்டு வருகிறது. பல்வேறு திட்டப் பணிகள் மூலமாக ஏழை மக்களுக்கு வேலை வாய்ப்பு அளித்தலும், காடுகளில் அமைந் துள்ள பகுதிகளை ஒட்டியுள்ள பகுதிகளில் வாழும் மக்களுக்குத் தேவையான விறகு, கால்நடைத் தீவனம், போன்றவற்றைத் தரு தற்கு ஏதுவாக அமைந்துள்ளது. அதுமட்டு மன்றிச் சமூக நிலங்களில் சுமார் *3* இலட்சம் எக்டர் பரப்பளவில் மரங்கள் நட்டு மக்களுக் குப் பயன்பட ஏதுவாக, சமூக வனவியல் திட்டம் செயல்பட்டு வருகிறது.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் வன வளர்ச்சிக்கென *136* கோடி ரூபாய் செல விடப்பட்டது.

*1991-92* முதல் *1994-95* வரையிலான காலத்தில் ரூ.*209.22* கோடிகள் செலவிட்டு *2,02,000* எக்டேர் பரப்பில் பல்வேறு வன அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டுள் ளோம்.

*1991-92* முதல் தமிழ்நாடு வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தைத் தொடங்கி, இது வரை ரூ.*2,777* இலட்சங்கள் செலவில் *29,700* எக்டர் பரப்பில் வன அபிருத்திப் பணிகள் மேற்கொண்டுள்ளோம்.

சமூகக்காடுகள் அமைப்பதிலும் ரூ.*8,867* இலட்சங்கள் செலவு செய்து *62,670* எக்டர் பரப்பில் சமூக நிலங்களில் காடுகள் வளர்க்கும் பணி செய்துள்ளோம்.

வான்வழி விதைத் தெளிப்புத் திட்டம் *45,500* எக்டர் பரப்பளவில் செய்து, வனத்தின் உயர்வினைச் செய்யும் பணி மேற்கொண் டோம்.

*1993-94*-ஆம் ஆண்டிலே முதல் முதலாகக்

கையால் விதை தூவும் திட்டம், ஆரம்பிக்கப் பட்டு, குறிப்பாகக் கிராமங்களிலே பெண் களைக் கொண்டு விதை தூவும் திட்டம் 22,000 எக்டர் பரப்பளவில் செய்து முடித் துள்ளோம். 22,000 எக்டர் பரப்பளவில் 11 மூலிகைப் பண்ணைகள் அமைத்துள்ளோம். 621 ஏழைப் பெண்களுக்கு மரப்பட்டாக்கள் வழங்கியுள்ளோம்.

**காடுகளைக் காப்போம்!**
**வனச் செல்வம் போற்றுவோம்!**

காடுகளைப் பாதுகாத்து, வனச் செல்வத் தைப் பேணுவதன் அவசியத்தை உணர்ந்து நம் அரசு பல்வேறு போக்குவரத்து வசதிகள், அடிப்படை வசதிகள் ஆகியவற்றை வனத் துறையினருக்கு அளித்துள்ளது.

1.1991-ஆம் ஆண்டில் 309 வாகனங்கள் இருந்தன, கடந்த நான்கு ஆண்டுகளில் 195 புதிய வாகனங்கள் வாங்கப்பட்டுள்ளன.

2. அதே போலவே 319 துப்பாக்கி வகைகள்தான் இருந்தன, 168 புதிய துப்பாக்கி வகைகள் வழங்கியுள்ளோம்.

3. 156 தொலைபேசிதான் இருந்தன, நம் அரசு 52 புதிய தொலைபேசி அமைக்க ஆணை தந்து அமைத்துள்ளது.

கடந்த நான்கு ஆண்டுகளில் சந்தன மரக் குற்றவாளிகளிடமிருந்து, 2,729 டன் சந்தன மரங்களைக் கைப்பற்றியுள்ளோம். 487 சந்தன மர மற்றும் வனக் குற்றவாளிகளைக் குண் டர்கள் சட்டத்தின் கீழ் காவலில் அடைத்து வைத்துள்ளோம். வனக்குற்றங்களில் ஈடுபட்ட 590 வாகனங்களை அரசு பறிமுதல் செய்துள்ளது. இந்திராகாந்தி வனவிலங்குச் சரணாலயம், கொடைக்கானல், தேனி மற்றும் திண்டுக்கல் கோட்டங்களில் கஞ்சா அழிப்புப் பணியினைச் செயல்படுத்தி அழித்தோம்.

**வனப் பணியாளரின் வளமான வாழ்விற்கு...**

கடந்த நான்கு ஆண்டுகளில் 1,012 வனப் பணியாளர்களுக்குப் பதவி உயர்வு தந்துள்ளோம்.

வனப் பணியாளர்களுக்கு மாதம் ரூ.20 வீதம் தற்காப்புப் படி தந்துள்ளோம்.

வனப் பணியாளர்களுக்குச் சீருடைகள் தருவதற்குப் பதிலாக, சீருடைப் படியாக ரூ.1,500 மற்றும் ரூ.1,000 என்ற விகிதத்தில் சரகர்கள், வனவர்கள், வனக்காப்பாளர்கள், வனக்காவலர் ஆகியோருக்குத் தந்துள்ளோம்.

வனக் குற்றங்களைக் கண்டுபிடிக்கும் வன ஊழியர்களுக்கும், துப்பு தருவோருக்கும் 1991-92ஆம் ஆண்டிலே ஒதுக்கப்பட்ட தொகை ரூ.25,000 மட்டுமே. ஆனால், கடந்த 4 ஆண்டுக் காலத்திலே சுமார் ரூ.47.50 இலட்சங்கள் செலவில் வெகுமதிகள் பலருக்குத் தரப்பட்டுள்ளன.

சுமார் 4 கோடி முதலீடு செய்து, சைதை, பனகல் கட்டடத்தில் வன அலுவலகத்திற்கு என ஒரு கட்டடம் வாங்குவற்கு இவ்வரசு அனுமதி அளித்து, வனத்துறை வாங்கி யுள்ளது.

தமிழகத்தில் மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர் களின் ஊக்குவிப்போடும், சீரிய வழி நடத்துதலோடும், செயல்பாட்டுத் திறன் காரணமாகவும், தரம் தாழ்ந்த காடுகளில் மரம் வளர்ப்புச் செய்தலும், ஏழை மக்களுக்கு, குறிப்பாகப் பெண் இனத்திற்கு வனத் துறையில் வேலை வாய்ப்பு வசதிகளை அதிகரிக்கச் செய்தலும், வனச் செல்வத்தைப் பேணிக்காத்தலும் என்ற கோட்பாடுகளுடன் செயல்பட்டு வருகின்றோம்.

வன அலுவர்களுக்கு இவ்வரசு பல்வேறு சலுகைகள் தந்துள்ளது. எங்கள் அரசின் இலட்சியக் கோட்பாடு, வனத்தைக் கட்டிக் காத்தலும், பேணுதலும்தான். இதற்கு வனத் துறை அலுவலர்களின் ஆற்றலும் ஒத்துழைப் பும் கொண்டு இன்றைய மற்றும் நாளைய சமுதாயத்தின் தேவைக்குப் பாடுபடுவோம் என்ற இலட்சியத்தின் அடிப்படையிலே செயல் படுவோம்.

புரட்சித் தலைவி காட்டுகின்ற செயல் வேகம்—
புவி இதுவரை காணாத புயல் வேகம்! ✻



# சரித்திர நாயகியின்
# தொடரும்
# சாதனைகள்

### மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்
## திரு இ. மதுசூதனன்

**த**மிழகம் நல்லதொரு தலை, வரைப் பெற ஏங்கித் தவங் கிடந்த காலத்தில் வாராது வந்துதித்த மாமணிபோல் வந்து, தமிழக மக்களைக் காத்த அன்னை மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள்.

இந்தியாவிற்கே வழிகாட்டும் அளவில் தன் திட்டங்களை நாட்டுக்கு அர்ப்பணம் செய்து, தமிழகம் எல்லாத் துறையிலும் முன்னோடியாக இருக்க அரும் பாடுபட்டு, தன் ஆட்சிப் பதவி யேற்ற நாளில் இருந்து சாதனை களைப் படைத்துக் கொண்டிருக் கிறார்.

கால்நடைப் பராமரிப்புத் துறை என்பது மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சிக் காலத்திற்கு முன்பு முன்னோடித் துறையாக அல்லது மற்ற துறைகளைச் சார்ந்து இருந்த தன்மையை மாற்றி விவசாயப் பெருங்குடி மக்களும், வாழவழி யின்றி வாடிய தாழ்த்தப்பட்ட மக்களும் வாழ வழிகாட்டிய மனித தேவதை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள்.

**இந்தியாவின் வேறு எந்த மாநிலத்தை விடவும் தமிழகத்தில் மட்டும்தான் 6,587 விவசாயிகளுக்கு மானியத்துடன் 2,260 செம்மறி ஆட்டுப் பிரிவு களும், 4,322 கன்று வளர்ப்புப் பிரிவுகளும், 5 பன்றி வளர்ப்புப் பிரிவு களும் ரூ.188.21 இலட்சம் செலவில் வழங்கப்பட் டுள்ளது.**

**ரூ.150 இலட்சம் செல வில் 386 நடமாடும் கால் நடை மருந்தகம் அமைக் கப்பட்டுள்ளது.**

உலக வங்கியின் நிதி உதவி யுடன் ரூ.2369.15 இலட்சம் செலவில், அதிகப் பால் உற்பத்தி பெற தீவிரக் கால்நடைப் பெருக் கத் திட்டத்தைச் செயலாக்கி, தமிழகத்தில் வெண்புரட்சிக்கு வித்திட்டார்.

ஏழை மக்களுக்கு அட்சயப் பாத்திரமாய் செம்மறி ஆடுகள் பெருக்கத் திட்டத்தில் தமிழகத் தின் ஆறு மாவட்டங்களில் ரூ.1,366 இலட்சம் செலவில் ஐரோப்பியப் பொருளாதாரக் குழுவின் உதவியுடன் ஓர் மாபெரும் திட்டத்தைச் செய லாக்கினார்.

பயிற்சி இல்லாத தொழில் எதுவாயினும் குறைபாடு கொண்டது என்பதை உணர்ந்த மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள், கால்நடைப் பரா மரிப்புத் துறையில் டானிடா உதவியுடன் ரூ.440 இலட்சம் செலவில் புதுக்கோட்டையில்



விவசாயிகளுக்குப் பயிற்சித் திட்டம் ஒன்றைச் செயலாக்கினார்.

இந்தியாவின் வேறு எந்த மாநிலத்தைவிடவும், தமிழகத்தில் மட்டும்தான் 6,587 விவசாயிகளுக்கு மானியத்துடன் 2,260 செம்மறி ஆட்டுப் பிரிவுகளும், 4,322 கன்று வளர்ப்புப் பிரிவுகளும், 5 பன்றி வளர்ப்புப் பிரிவுகளும் ரூ.188.21. இலட்சம் செலவில் வழங்கப்பட்டது.

பழங்குடியினரின் பரம்பரைத் தொழிலாம் கால்நடை வளர்ப்புத் தொழிலை, அவர்கட்கு நன்மை சேர்க்கும் வண்ணம் பழங்குடியினரின் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.87.49 இலட்சம் மானியத்துடன் 1,129 விவசாயிகட்கு 435 கறவை மாடுகள், 514 செம்மறி ஆட்டுப் பிரிவு, 80 கன்று வளர்ப்புப் பிரிவுகள் வழங்கப்பட்டன.

வெளிநாடுகளுக்கு இணையாகத் தமிழகத்தில் கால்நடைப் பராமரிப்புத் துறையின் வளர்ச்சிக்கு அல்லும் பகலும் அயராது பாடுபடும் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள், காங்கேயம் இனத்தின் தரத்தைப் பாதுகாக்கும் பொருட்டு ரூ.10 இலட்சம் செலவில் காங்கேயம் இனவிருத்தித் திட்டத்தைக் கொண்டுவந்தார்.

மத்திய அரசின் நிதி உதவியைத் தமிழகத்தின் ஏழை விவசாய மக்கள் பயன்படுத்தி வாழ்வில் பொருளாதாரத்தில் முன்னேற்றம் பெற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 4,070 விவசாயிகள் பயன்பெறும் பொருட்டு, ரூ. 172.93 இலட்சம் மானியத்துடன் 4,070 செம்மறி ஆட்டுப் பிரிவை அமைத்துச் செயலாக்கினார்.

வாயில்லா ஜீவன்களின் நோயைத் தீர்க்கும் கற்பக மரமாய், மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள், தொலைதூரத்தில் உள்ள மருத்துவமனைக்குக் கொண்டு செல்ல முடியாத கால்நடைகளுக்கு, ரூ.150 இலட்சம் செலவில் 386 நடமாடும் கால்நடை மருந்தகத்தை அமைத்து, கால்நடைகளின் மருத்துவச் சிகிச்சைக்கு வழி அமைத்தார்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆட்சியில்தான் எப்போதும் இல்லா அளவில் பகுதி- 2 திட்டத்தின்கீழ் கிட்டத்தட்ட 41 கால்நடை மருந்தகங்கள் திறக்கப்பட்டன. 30 கால்நடை மருந்தகங்கள் தரம் உயர்த்தப்

பட்டு கால்நடை மருத்துவமனையாக மாற்றம் செய்யப்பட்டது. சைதாப்பேட்டை, கோவை கால்நடை மருத்துவமனைகள் இலட்சக்கணக்கான செலவில் அதிநவீன உபகரணங்கள் கொண்டு **24** மணிநேரமும் இயங்கும் வண்ணம் பல்நோக்கு மருத்துவமனையாக்கப்பட்டு வெற்றிகரமாக இயங்கி வருகின்றன.

வருமுன் காத்து மக்களை வாழ வைக்கும் நம் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் கால்நடைகளுக்கும் வருமுன் காத்து அவற்றின் நோய்களைக் கட்டுப்படுத்த ஈரோட்டில் கால்நடை நோய்ப் புலனாய்வுப் பிரிவைத் துவக்கினார். இதேபோல் சேலத்தில் கோழி நோய் ஆராய்ச்சிக் கூடம் அமைத்தார். கால்நடைமேல் அக்கறைகொண்டு, அவற்றை நன்கு பராமரிக்க வேண்டி, சைதை நாய் வளர்ப்புப் பிரிவை ரூ. **2.11** இலட்சம் செலவில் மேம்படுத்தினார், நம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்.

விவசாய, தாழ்த்தப்பட்ட மக்களின் பொருளாதார மேம்பாட்டில் அக்கறைகொண்ட மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், இலாபம் தரும் பன்றி வளர்ப்புத் திட்டத்தை ரூ.**50** இலட்சம் செலவில் தீவிரப்படுத்தி உள்ளார்.

கால்நடைப் பராமரிப்புத் துறையின் முன்னோடியாக விளங்கும் தமிழகத்தில் இத் துறையின் நூற்றாண்டு விழா மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் சீரும் சிறப்புமாகக் கொண்டாடப்பட்டது.



கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ஆட்சிக் காலத்தில் எண்ணற்ற சாதனைகள் படைக்கப்பட்டன. வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத புதிய, புதிய துறைகள் சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி, நாமக்கல் மருத்துவக் கல்லூரியில் துவங்கப்பட்டது. உயிர்த் தொழில் நுட்பவியல் துறை, வனவிலங்கியல் துறை, கதிரியக்க ஐசோடோப் பிரிவு போன்றவை பெருமை சேர்க்கும் துறையாகும்.

இப்பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சிப் பணிகளை இந்தியத் தேசம் அக்கறையோடு தன் வரலாற்றில் பதித்துக் கொள்வதை மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ஆட்சிக் காலத்தில் கண்கூடாகக் காணலாம்.

சைனஸ் புற்றுநோய் முதற்கொண்டு ஆடுகளின் நீலநாக்கு நோய் வரை எண்ணற்ற ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

விவசாயிகளுக்கு அதிக இலாபம் தரும் வகையில் பல புதிய ஆட்டு இனம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இப்பல் கலைக்கழக விஞ்ஞானிகள் பல்வேறு தேசிய விருதுகளைப் பெற்றுள்ளார்கள். குடியரசுத் தின அணி வகுப்பு விழாவில் இப் பல்கலைக் கழக மாணவர்கள் ஏழு பதக்கங்களைப் பெற்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆட்சிக்குப் புகழ் சேர்த்துள்ளனர்.

மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றது முதல் இன்று வரை கால்நடைப் பராமரிப்புத் துறையின் வளர்ச்சிக்கு அரும் பாடுபட்டு, இத்துறை இந்தியாவிற்கு வழிகாட்டும் அளவிற்குச் சாதனைபடைத்துள்ளார். இவரின் சாதனைகள் தொடரும், **21**-ஆம் நூற்றாண்டிலும் இது தொடரும்.



# போற்றத்தக்க பொதுப்பணித்துறை

### மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்

## திரு எஸ். கண்ணப்பன்

**அ**ன்னைத் தமிழ் பெற்ற அருந்தவப் புதல்வி, தென்னகம் போற்றிடும் தேசியத் தலைவி, 'தமிழர் நலன்களை இமைகொட்டாமல் விழிப்புடன் காக்கும் காவல் தேவதை, உலகம் போற்றும் அறிவும் ஆற்றலும் படைத்த ஒப்பிலா அறிஞர், "கடையர்க்கும் கடைத்தேற்றம்" (unto the Last) காண விழைந்து அன்னை வடிவிலே தோன்றிய அண்ணல், (பெண்ணுருவில் வந்த மகாத்மா) ஈடிலாக் கருணையுடைய எங்கள் இதய தெய்வம், சமூகநீதி வழங்கிடச் சமநீதி காத்துச் சரித்திரம் கண்ட வீராங்கனை, ஒப்பாரும் மிக்காரும் இல்லாத தலைமைச் சிறப்புப் பண்புகளைக் கொண்டு விளங்குகின்ற - பொய்யர் தூற்றுதலில் - கலங்காத, போற்றுதலில் மயங்காத எங்கள் புகழுரைக்குள் அடங்காத - உயர்வெல்லாம் தன்னகத்தே கொண்ட, உண்மைத் தொண்டர்களையெல்லாம் அருள் உள்ளத்தால் ஆட்கொண்ட எங்கள் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், இம்மாநிலத்தின் ஆட்சிப் பொறுப்பேற்ற முதல்வராக அமர்ந்து நான்கு இனிய ஆண்டுகளை நிறைவு செய்திருக்கும் நன்னாள், இது நமக்கெல்லாம் பொன்னாள்!

தமிழக ஆட்சிப் பொறுப்பில் பொற்காலம் படைத்துப் புகழை நிறுவியுள்ள மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் தலைமையில் அமைந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக

**தமிழ்நாட்டில் 96 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 6 மாவட்டங்களில் 8 நடுத்தர நீர்ப்பாசனத் திட்டங்கள் கடந்த நான்கு ஆண்டுகளில் எடுத்துக் கொள்ளப்பட்டு முடிக்கப் பட்டன.**

**பழுதடைந்துள்ள அரசுச் சாலைகளைச் சீர்செய்வதற்கான சிறப்புச் சீரமைப்புத் திட்டத்தின்கீழ் 12,586 கி.மீ. நீளமுள்ள சாலைகள் சீர் செய்யப்பட்டன. இதற்கான ஐந்தாண்டுகள் ஒதுக்கீடு ரூ. 150 கோடி.**

**கிராமச் சாலைகள் திட்டத்தின் கீழ் ஜூன் 1995 வரை ரூ. 36.08 கோடி செலவில் 1,175 கி.மீ. நீளமுள்ள சாலைகள் அமைக்கப் பட்டன.**







அரசின் பொதுப்பணித்துறை, மற்றும் அதன் இணைந்த பகுதிகளான நெடுஞ்சாலை மற்றும் ஊரகப்பணித்துறை, மின்துறை ஆகியவற்றின் நான்காண்டுச் சாதனைகளைக் குறிக்கும் சுருக்க உரையினை உங்கள் முன் வைப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

**பாசனப் பிரிவு**

நாட்டின் வளமைக்கு உணவு உற்பத்திப் பெருக்கம் இன்றியமையாதது. உணவு தானிய உற்பத்திக்கு அடிப்படை வேளாண்மை மேம்பாடு, வேளாண்மை மேம்பாட்டிற்கு வேண்டப்படுவது பாசன வளம் அல்லவா? எனவே, பாசனம் வளம்பெருக்கிட அரசு இயன்ற வழிகளில் எல்லாம் திட்டங்களை வகுத்துச் செயற்படுத்தி வருகின்றது. அவை குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

தமிழ்நாட்டில் *96* கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஆறு மாவட்டங்களில் எட்டு நடுத்தர நீர்ப்பாசனத் திட்டங்கள் கடந்த நான்கு ஆண்டுகளில் எடுத்துக்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டன. மேலும், சுமார் *333* கோடி ரூபாய் மதிப்பீட்டில் எட்டு மாவட்டங்களை உள்ளடக்கி, பதினான்கு நடுத்தர நீர்ப்பாசனத் திட்டங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகின்றன.

தேசீய நீர் மேலாண்மைத் திட்டத்தின் கீழ் உலக வங்கி நிதி ஆதாரத்துடன் ரூ.*74* கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதனால், **1,52,902** எக்டேர் பகுதி ஆயக்கட்டுகள் பயன்பெறும். மேலும், ரூ.**87.62** கோடி ரூபாய் செலவில் சுமார் ***1,79,670*** எக்டேர் பாசனப்பரப்பு பயனடையும் வகையில் மூன்று துணைத்திட்டங்கள் செயலாக்கத்தில் உள்ளன. இவற்றுக்காக டிசம்பர் ***1994*** முடிய ரூ.***9,580*** இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

மேட்டூர் நீர்த் தேக்கத்திலிருந்து தொடர்ந்து *3* ஆண்டுகளுக்கு ஜூலைத் திங்கள் *12*-ஆம் நாள் பாசனத்திற்குத் தண்ணீர் திறந்துவிடப்பட்டது.

அடிப்படைப் பாதுகாப்பு வசதிகளின் தரத்தை மேம்படுத்த **12** அணைகளில் ரூ.**100**

இலட்சம் செலவில் அணுகு சாலை அமைத்தல், கூடுதல் மின் ஜெனரேட்டர்கள் ஆகியவைகளுக்காகப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

பரம்பிக்குளம் ஆழியாறு திட்டத்தில், பாலாறு படிநிலத்தில் 27.4.1994 முதல் 18.9.1994 வரை 98,588 ஏக்கர் நிலத்திற்கும் (முதல் பகுதி) மற்றும் 26.10.1994 முதல் 8.4.1995 வரை சுமார் 98,418 ஏக்கர் நிலத்திற்கும் (இரண்டாம் பகுதி) நீர் வழங்கப்பட்டுள்ளது. ஆழியாறு வடிநிலத்தில் பொள்ளாச்சிக் கால்வாய் 'அ' பிரிவிற்கும் வேட்டைக்காரன் புதூர் கால்வாய் 'ஆ' பிரிவிற்கும் 28.12.1994 முதல் 11.5.1995 முடிய தண்ணீர் வழங்கப் பட்டது.

கீழ்பவானி திட்டக்கால்வாய், அமராவதி நீர்த்தேக்கம், பெரியாறு வைகை பாசனத் திட்டம் ஆகியவற்றின் கீழ் அமைந்துள்ள ஆயக்கட்டுப் பகுதிகளுக்குத் தண்ணீர் வழங்கப்பட்டது.

காவிரி நதிநீர்ப் பிரச்சினை குறித்த மட்டில், வரும் பருவ காலத்தில் கருநாடக அரசு இடைக்கால ஆணையை நிறைவேற்ற வேண்டுமென மத்திய அரசு வலியுறுத்தப் பட்டுள்ளது.

### கிருஷ்ணா குடிநீர்

சென்னைக் கிருஷ்ணா குடிநீர் வழங்கும் திட்டத்தில் மார்ச் 1995 வரை, தமிழ்நாடு அரசு ரூ.362 கோடி ஆந்திர மாநிலத்திற்குக் கொடுத்துள்ளது. 1995 டிசம்பர் மாதத்திற்குள் சென்னைக்குக் கிருஷ்ணா குடிநீர் வழங்கு வதற்கு ஒப்புக்கொள்ளப்பட்டது.

### வடிகால் வசதி

காவிரி கழிமுக நீர்ப்பகுதி மேம்படுத்து தலில் 963 வடிகால் திட்டங்களில் 482 வடிகால் திட்டங்கள் மேம்படுத்தப்பட் டுள்ளன.

சென்னை எண்ணூர் நெடுஞ்சாலை யிலும், மற்றும் கன்னியாகுமரி, சிதம்பரனார் மாவட்டங்களிலும் கடல் அரிப்புத் தடுப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மற்றும் நிரந்தரத் தீர்வு காணும் வகையில், கடல் அரிப்பைத் தடுக்கச் சுவர்கள் கட்டும் பணிக்கு ரூ.50 கோடியில் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

### நெடுஞ்சாலை மற்றும் ஊரகப்பணித்துறை

பொதுப்பணித்துறையின் அடுத்த பெரும்பணி நெடுஞ்சாலைகள் ஊரகப் பணிகள் சார்ந்ததாகும். நாட்டின் வளமைக்கு, உணவு உற்பத்திக்கு அடுத்த நிலையில் தொழில் பெருக்கம் வேண்டப்படுகிறது என்றறிவோம். தொழில் பெருக்கத்திற்கு மிகமிக இன்றியமையாதது கட்டமைப்பு வசதிகள் (Infra – Structure) அவற்றின் இன்றியமையாத அடிப்படையாக இருப்பவை சாலைகளே. சாலைகளின் வளர்ச்சியும் போக்குவரத்து வசதிப் பெருக்கமும்தான் தொழில் முன்னேற்றத்தைக் கொண்டு வரவியலும். தமிழக அரசு இதன் இன்றியமை யாமையை உணர்ந்து, இத்துறையில் மேற்கொண்டுள்ள பெரும்பணிகள் குறித்த விவரங்களைக் காணலாம்.

பழுதடைந்துள்ள அரசு சாலைகளைச் சீர் செய்வதற்கான சிறப்புச் சீரமைப்புத் திட்டத்தின் கீழ் 12,586 கி.மீ. நீளமுள்ள சாலைகள் சீர் செய்யப்பட்டன. இதற்கான ஐந்தாண்டுகள் ஒதுக்கீடு ரூ.150 கோடி. தொழிற்சாலைப் பகுதியைப் பொறுத்தவரை 1,194 கி.மீ. சாலைகள் சீர்செய்யப்பட்டுள்ளன. 331 பாலங்கள் மற்றும் 302.4 கி.மீ. நீளமுள்ள சாலைகள் சீர்செய்தல் என்னும் இலக்கிற்கு 414 பெரிய மற்றும் சிறிய பாலங்களும் 758 கி.மீ. நீளமுள்ள சாலைகளும் மேற்கொள்ளப் பட்டன.

தஞ்சையில் எட்டாம் உலகத் தமிழ் மாநாட்டிற்காக 47 கி.மீ. நீளமுள்ள மாநிலச் சாலைகள் 84.10 கி.மீ. நீளமுள்ள பெரிய மாவட்டச் சாலைகள், 57.30 கி.மீ. நீளமுள்ள

இதர மாவட்டச் சாலைகள் மேம்பாடு செய்வதற்காகவும், 17.40 கி.மீ. நீளமுள்ள தஞ்சை மாநகருக்குப் புறவழிச்சாலை அமைப்பதற்கும் ரூ.2380.70 இலட்சம் அரசால் அளிக்கப்பட்டது.

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ், ரூ.51.70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 11 சாலைப்பணிகள் செய்து முடிக்கப்பட்டன.

தேசீய நெடுஞ்சாலை 45 செயல் திட்டத்தின் கீழ் ஜூன் 1995 வரையில் தாம்பரத்தில் இருந்து புக்ககத்துறை வரை 40 கி.மீ. நீளத்திற்கு 4 புறவழிப்பாதை அமைக்கப் பட்டது.

தமிழ்நாடு வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் இயற்கைச் சீற்றத்தினால் உடைந்த 25 பாலங்களைத் திரும்பக்கட்டவும், 36 கி.மீ. நீளமுள்ள சாலைகளை மேம்பாடு செய்யவும் ரூ.21. கோடி வழங்கப்பட்டுள்ளது. ஜூன் 1995 வரை ரூ.16.59 கோடி செலவிடப் பட்டுள்ளது.

கிழக்குக் கடற்கரைச் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஜூன் 1991 முதல் ஜூன் 1995 வரை ரூ.52.18 கோடி செலவிடப்பட்டுள்ளது.

கிராமச் சாலைகள் திட்டத்தின் கீழ், ஜூன் 1995 வரை ரூ.36.08 கோடி செலவில் 1,175 கி.மீ. நீளமுள்ள சாலைகள் அமைக்கப்பட்டன.

பேருந்துத்தடைச் சாலைகள் மேம்பாடு திட்டத்தின் கீழ் ஜூன் 1995 வரை ரூ.47.19 கோடி செலவில் 1,831 கி.மீ. நீளமுள்ள சாலைகள் மேம்பாடு செய்யப்பட்டன.

தேசீய நெடுஞ்சாலைத்துறை ஜூன் 1991 முதல் ஜூன் 1995 வரை ரூ.26.68 கோடி செலவில் 1,135 கி.மீ. நீளமுள்ள தேசீய நெடுஞ் சாலைகளில் ஓடுதளம் புதுப்பிக்கப்பட்டது.

1993 நவம்பர் மாதம் சென்னை, நெல்லூர், கல்கத்தா, தேசீய நெடுஞ்சாலையில் உடைப்பெடுத்ததனால் தற்காலிகச் சிறப்புச் சீரமைப்புப் பணியாக 51.81 மீட்டர் நீளத்திற்கு ஒரு பெய்லி பாலம் ரூ.196 இலட்சம் செலவில் 50 நாட்களில் அமைக்கப்பட்டது. 3.2.1994 முதல் போக்குவரத்திற்கு இப்பாலம் திறந்து விடப்பட்டது குறிப்பிடத்தக்க சாதனையாகும்.

**மின்சாரத் துறை**

இறுதியாக, ஆனால் எல்லாவற்றைக் காட்டிலும் மேலானதாக, நமது உணவு உற்பத்திப் பெருக்கம், தொழில் மேம்பாடு, போக்குவரத்து வசதி ஆகிய அனைத்துக்கும். மின்வசதி வழங்குவதற்கு மிகப்பெரும் முக்கிவத்துவம் உண்டு என்பதை நாம் அறிவோம். மின்சக்தியே அனைத்து ஆக்கச் சக்திகளுக்கும் தலைமையாக விளங்கும் ஆற்றல் அல்லது சக்தியாகும் மின்சக்தித் துறையில் இயக்கப் பணிகளில் தமிழக அரசு கடந்த நான்கு ஆண்டுகளில் ஆற்றியுள்ள அருஞ்சாதனைகளைக் கீழே காண்போம்:

அரசு எடுத்த பல்வேறு நடவடிக்கைகளின் பயனாக அனல் மின் நிலையங்களின் செயல்பாடு குறிப்பிடத்தகுந்த அளவிற்கு முன்னேற்றம் கண்டது. நீர்த்தேக்கங்களில் பெருமளவில் நீர் இருப்பு பெற்றமையால் உயர் அழுத்த மின்சாரத்தைப் பயன்படுத்தும் தொழிற்சாலைகளுக்கான மின்வெட்டு படிப்படியாகக் குறைக்கப்பட்டு 16.10.1992 முதல் முற்றிலுமாக நீக்கப்பட்டது.

மின் கட்டமைப்பின் அன்றாட மின்சக்தி பயனீட்டளவு 13.4.1995 ஆம் நாள், இதுவரை எப்போதும் இல்லாத உயர் அளவான 98.801 மில்லியன் யூனிட்டு என்ற அளவை எட்டியது. மேட்டூர் சுரங்கம் மற்றும் மேட்டூர் மடைகள் ஆகிய இடங்களில் உள்ள புனல் மின் நிலை யங்கள் 1994-95-ஆம் ஆண்டு 1375 மெகாவாட் மின் உற்பத்தியை எய்தி, இதுவரை பதிவாகி யுள்ள மின் உற்பத்தியில் இதற்கு முன் எப் போதும் இராத உயர் பதிவினை எய்தி யுள்ளது. மின் உற்பத்தித் திறனைப் பெருக்கும் நோக்கத்துடன் கீழ்வரும் புதிய மின் திட்டங்களைத் தமிழ்நாடு மின்சார வாரியம்

நிறைவேற்றிக் கொண்டு வருகிறது.

210 மெகாவாட் திறன்கொண்ட வட சென்னை மின் திட்டம்.

2. 120 மெகாவாட் திறன்கொண்ட பேசின் பாலம் வாயுச் சுழலி மின் திட்டம்.

3. 7.5 மெகாவாட் திறன்கொண்ட சாத்தனூர் புனல் மின் திட்டம்.

4. 8 மெகாவாட் திறன்கொண்ட கீழ்பவானி புனல் மின் திட்டம்.

5. 100 மெகாவாட் திறன்கொண்ட தனியார் துறை உள்ளிட்ட காற்றாலை மின் திட்டங்கள்.

**விருதுகள் விவரம்**

1. தூத்துக்குடி அனல் மின்நிலையம் 1991-ஆம் ஆண்டில் இந்திய அரசின் மேன்மைமிக்க விருதினை ஏழாவது தடவையாகப் பெற்றுள்ளது.

2. 1992-93-ஆம் ஆண்டிற்கான மேன்மை மிகு உற்பத்தி விருதினை, மேட்டூர் அனல் மின் நிலையம் பெற்றது.

3. 1993-94-ஆம் ஆண்டிற்கான மேன்மை மிகு உற்பத்தி விருதினை, மேட்டூர் அனல்மின் நிலையம் 2 வது முறையாகப் பெற்றது.

4. குறைவான எண்ணெய் நுகர்வின் பொருட்டு, இந்திய அரசின் ஊக்கப்பரிசினை, எண்ணூர் மற்றும் மேட்டூர் அனல் மின் நிலை யங்கள் பெற்றன.

5. 1992-ஆம் ஆண்டிற்கான குறைந்த எண்ணெய் நுகர்விற்கான பரிசினைத் தூத்துக்குடி அனல் மின் உற்பத்தி நிலையம் பெற்றது.

1993-94-ஆம் ஆண்டிற்கான காற்று விசை மின் உற்பத்தி அதிக அளவில் உற்பத்தி செய்யப்பட்டதைக் குறித்து தமிழ்நாடு மின்வாரியம் தொடர்ந்து நான்காவது முறை யாகப் பாராட்டு விருதினைப் பெற உள்ளது.

விவசாயிகளுக்குச் சிறப்புச் சுயநிதியுதவித் திட்டத்தின் கீழ், பம்பு செட்டுகளுக்கு முன் னுரிமை இணைப்புப்பெற ரூ.25,000 செலுத்த வேண்டும் என்ற விதியினை அரசு தளர்த்தி ஒரே சீராகச் செலுத்தப்பட வேண்டிய தொகை ரூ.10,000 என்று குறைக்கப்பட்டது.

தமிழ்நாட்டில் புதிய தொழில் கொள் கைக்கு இணங்க கீழ்வரும் சலுகைகள் உயர்மின் அழுத்தத் தொழிற்சாலைகளுக்கு மின்கட்டண வீதத்தில் அளிக்கப்பட்டுள்ளது.

முதல் ஆண்டு 40 சதவிகிதம்.

இரண்டாவது ஆண்டு 30 சதவிகிதம்.

மூன்றாவது ஆண்டு 20 சதவிகிதம்.

விசைத்தறியாளர்கள் செய்து கொண்ட முறையீட்டின் அடிப்படையில் மின்னழுத்தக் கட்டண விகிதம் திங்கள் ஒன்றிற்கு முதல் 250 யூனிட்டுகளுக்கு ரூ.1.10 என்றும், அடுத்த 500 யூனிட்டுகளுக்கு ரூ.1.85 என்றும், 750 யூனிட்டுக்கு மேல் ரூ.2.10 என்றும் கட்டணம் வசூலிக்கப்படும்.

தமிழ்நாட்டில் திரையரங்குகளுக்கான மின்கட்டண விகிதமும் திருத்தி அமைக்கப் பட்டுள்ளது.

பொதுப்பணித்துறையின் கீழ் வரும் பல்வகைப் பிரிவுகளும், பொதுமக்களுக்கு எல்லா வழிகளிலும் அரிய பணிபுரியும் துறைகளாகும். அவற்றின் நான்காண்டுச் சாதனைகளில் மிக முக்கியமானவற்றை மட்டுமே இங்கு எடுத்துக் கூறியுள்ளோம். இவை இவ்வரசின் அருஞ்சாதனைகள். வரலாற்றில் சீரிய இடத்தைப் பெற்றுள்ளன. இந்தியப் பெருநாட்டில், இந்த மாநிலம், வளர்ச்சிப் பாதையில் மிக விரைந்து நடை போடுவதற்கும், அனைத்துத் துறைகளிலும் நமது மாநிலம் முன்னோடியாக விளங்கி முதலிடச் சிறப்பைப் பெறுவதற்கும் பொதுப் பணித்துறையின் கீழ் வரும் பெருந்துறைகள் சிறப்பாக நற்பணியாற்றிவரும்.

# தங்கக் குடத்தில் குங்குமப் பொட்டு!

மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர்

## திரு எஸ். ரகுபதி



"தமிழுண்டு, தமிழ்
மக்களுண்டு - இன்பத்
தமிழுக்கு நாளும் செய்வோம்
நல்ல தொண்டு"

—என்ற பாவேந்தர் பாரதி தாசன் கருத்திற்கேற்ப, தமிழ் மலர, தமிழ் மக்கள் உயர காலம் காலமாகத் தமிழகம் செய்து வந்த தவத்தின் பயனாய், வளர்ச்சிப் பாதையிலிருந்து, வழி தவறிப்போய்விட்ட தமிழகத்தை வாழ்வளிக்க வந்த வள்ளல்தான் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள்.

தமிழ் மண்ணில்- தமது ஆற்றலால் புதிய வரலாறு படைத்து, புது உலகத்தின் தலைவாயிலை நோக்கி, தமிழ் மக்களை நடத்திச் செல்கிற சாதனை முதல்வர் சரித்திர நாயகி இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற தலைவி மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் தலைமையில் உள்ள இவ்வரசு, நாலாயிரம் கோடி ஆண்டுகள், தமிழ்நாட்டில் நடைப்பயணம் உள்ளதில், நான்காம் ஆண்டை முடித்து, ஐந்தாம் ஆண்டில் காலடியை எடுத்து வைக்கின்றது.

**1991-95-ஆம் ஆண்டுகளில் குறைந்த வருவாய், நடுத்தர வருவாய் மற்றும் உயர் வருவாய்ப் பிரிவினர்களுக்கு ரூ.444.11 கோடி செலவில், 29,485 வீடுகள் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்பட்டுள்ளன.**

**1994-95-ஆம் ஆண்டில் புதிய திட்டமாகச் சென்னை கோயம்பேட்டில் சென்னப் புறநகர்ப் பேருந்து நிலையம் ஒன்றை அமைக்க அரசு அனுமதித்துள்ளது.**

இந்த நான்கு ஆண்டுகளில் இதயதெய்வத்தினுடைய அரசு படைத்துள்ள சாதனைகள், இமாலயச் சாதனைகள். டாக்டர் புரட்சித்தலைவி அரசின் சாதனையைப் பார்க்கின்ற பொழுது 'சீனப்பெருஞ்சுவர்' இன்றைக்குச் சின்னதாகத் தெரிகின்றது. இந்தியாவின் ஏனைய மாநிலங்கள் கூட இன்று தமிழகத்தின் தடம் பார்த்து நடக்கத் துடிக்கின்றன. உலகமே இன்று தமிழக அரசின் சாதனையை உவப்போடு பார்க்கின்றது.

இந்திய அரசியல் வானில் எழுந்தது ஒரு பெருஞ்ஜோதி. இந்த ஒளிப் பிழம்பு உலகத்தின் வழி காட்டியாய், ஒளி வீசிக் கொண்டிருக்கின்றது. எங்கெங்கு இருள் இருக்கின்றதோ அங்கெல்லாம் இந்த திராவிட ஜோதியின் திருக்கரம் பட்டு வெளிச்சப் பிரதேசங்களாக விளங்குகின்றன.

சில இருட்டு மனிதர்களின் குருட்டுக் கண்கள் மட்டும் இந்தப் புரட்சி ஒளியைக் கண்கொண்டு பார்க்கக் கூடாது என்று, குருட்டு மதியால் இறுக மூடிக்கொள்கின்றார்கள்.

இதயதெய்வம் மாண்புமிகு

டாக்டர் புரட்சித்தலைவி அவர்களது புனித அரசு, நான் காண்டில், நாள்தோறும் ஆற்றிய அடுக்கடுக்கான சாதனையினை எண்ணி, எண்ணிச் செவியுள்ளோர் இன்புறக் கேட்கிறார்கள் வாய் உள்ளோர் மனதார வாழ்த்துகின்றார்கள். கண் உள்ளோர் கவினுறக் காண்கிறார்கள்.

"உறு பசியும் ஓவாப்
பிணியும், இல்லாத
அரசே நல்லரசு"

என்ற வள்ளுவர் வாக்கிற் கிணங்க, இன்றைக்கு நல்லாட்சி நடத்தும் அரசு, டாக்டர் புரட்சித்தலைவியின் அரசு.

மலர்கள் பல இருக்கலாம் அவை தாமரைக்கு ஈடாவதில்லை!

விண்மீன்கள் எண்ணற்றவை மின்னலாம், அவை முழு நிலவுக்கு ஒப்பாவதில்லை!

அதேபோல், மாநில முதல்வர்கள் பலர் இருக்கலாம்.

அவர்களில் யாரும் எங்கள் புரட்சித்தலைவிக்கு ஈடாக இணையாக எதிர் நிற்க முடிவதில்லை!

புரட்சிப் பெண்ணாக விளங்குபவர் எங்கள் தாய். இத்தனைச் சிறப்புமிக்க எமது பொன்மனச் செல்வி புரட்சித்தலைவியின் ஆட்சியின் சாதனைப் பட்டியல், எதிர் முகாமினருக்கெல்லாம் வேதனைப் பட்டியலாக வளர்ந்து கொண்டிருக்கிறது சோதனைப் பட்டியலாகச் சுட்டெரித்துக் கொண்டிருக்கிறது.

நாளொரு மேனி பொழுதொரு வண்ணம் நலிவுற்ற மக்களுக்கெல்லாம் நலம் சேர்க்க வாடிக் கிடப்போர் இல்லத்தி லெல்லாம் வளம்சேர்க்க எங்கள் புரட்சித்தலைவி அவர்கள் தீட்டிச் செயல்படுத்தும் திட்டங்கள்தான் எத்தனையெத்தனை!

அவர்கள் வழிகாட்டுதலோடு, தமிழ்நாடு வீட்டுவ்சதி வாரியம் இந்த நான்காண்டுக் காலத்தில் எத்தனை வலிவோடும் பொலிவோடும் வளர்ச்சி பெற்றிருக்கிறது தெரியுமா?

எங்கும் புகழ் தங்கும் நாடாம் எங்கள் தமிழ்நாட்டில், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிப் பணிகள் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் வசம்தான் உள்ளது. தனக்குவமை இல்லாத மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் தலைமையினால், தமிழ்நாடு அரசின் வீட்டுவசதித் திட்டங்கள் மூன்று முகமைகளால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அவை:

1. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்.

2. தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்.

3. வீட்டுவசதிக் கூட்டுறவுச் சங்கங்கள்.

இந்த முகமைகள் மூலம், கடந்த நான்காண்டுகளில் ரூ.1267.90 கோடி செலவில் 3,81,243 வீடுகள் கட்டி முடிக்



கப்பட்டுள்ளன.

## தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்

1991-95-ஆம் ஆண்டுகளில், குறைந்த வருவாய், நடுத்தர, வருவாய் மற்றும் உயர் வருவாய்ப் பிரிவினர்களுக்கு ரூ.444.11 கோடி செலவில் 29,485 வீடுகள் இவ்வாரியத்தால் கட்டப்பட்டுள்ளன. இவற்றில் நில எடுப்பு மற்றும் நில மேம்பாட்டுச் செலவும் அடங்கும்.

சிறிய மற்றும் நடுத்தர நகரங்களில் வீட்டு வசதியை ஊக்குவிக்கும் பொருட்டு 1991-ஆம் ஆண்டு முதல் நடப்பு ஐந்தாண்டுகளில், எங்கள் தங்கத் தலைவியின் வழிகாட்டுதலின்படி வீடுகள் கட்டும் திட்டத்தை இந்த அரசு ஏற்படுத்தியுள்ளது. 1991-95-ஆம் ஆண்டுகளில், இத்திட்டத்தின் கீழ், 48 சிறிய மற்றும் நடுத்தர நகரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. அங்கெல்லாம் ரூ.133.71 கோடி செலவில் 13,729 வீடுகள் கட்டுவதற்கு ஏற்கெனவே உடனடியாகப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இதில் 7,051 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியப் பணிகள் முதலாவது கட்டம், இரண்டாவது கட்டமாக, நடப்பாண்டில் (1995-96-இல்), 10,300 வீடுகள் பாங்குற உருவாக்கும் வகையில், ரூ.43 கோடி செலவுகளில், மேலும் 29 நகரங்கள் இத்திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்டு வருகிறது.

## தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்

வீட்டுவசதி வாரியத்தின் நிழல்போல் திகழ்ந்திடும் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ், 1991-95-ஆம் ஆண்டுகளில் 45,088 வீட்டு மனைகள் ரூ.166.17 கோடி செலவில் உருவாக்கப்பட்டுள்ளன.

பெண்ணினத்திற்கே பெருமை சேர்க்கும் அருமை பெருமைமிக்க புரட்சித்தலைவி ஆணைப்படி, மாநில அரசு ஊழியர்களுக்கு வீடுகள் வழங்குவதை முக்கியமாகக் கருத்தில் கொண்டு, 1991-95-ஆம் ஆண்டுகளில் ரூ.50.52 கோடி செலவில் 3,749 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

தஞ்சை விரிவாக்கத் திட்டத்தில், 380 நடுத்தர மற்றும் 83 உயர் வருவாய் வீடுகளும், தமிழ்ப் பல்கலைக்கழக வளாக நிலப்பகுதியில் 100 நடுத்தர வருவாய்க் குடியிருப்புகளும் மற்றும் 304 அரசு ஊழியர் குடியிருப்புகளும், எங்கள் தமிழ்த் தாயின் இணையற்ற தலைமையில், தஞ்சாவூரில் நடந்த எட்டாம் உலகத் தமிழ் மாநாட்டிற்காகக் குறிப்பிட்ட தேதிக்கு முன்கூட்டியே கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இதில் தங்கிய வெளி மாநில, வெளி நாட்டுப் பிரமுகர்கள், இவ்



வீடுகள் நல்ல முறையில் திருப்தியுடன் இருப்பதாகப் பாராட்டிச் சென்றனர். மேற்காணும் இரண்டு திட்டங்களில் மொத்த மதிப்பீடு ரூ.24.47 கோடியாகும். இவ்வாறு தஞ்சையில் கட்டப்பட்டுள்ள வீடுகள் விரைவில் அரசுப் பணியாளர்களுக்கு ஒதுக்கப்படும்.

## தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்

குடிசைவாழ் மக்களின் நலத்தினைக் கருத்தில் கொள்ளுவதே இந்த அரசின் முக்கிய நோக்கமாகும். 1991-95-ஆம் ஆண்டுகளில் எல்லாவித இயற்கைச் சீற்றங்களால் ஏற்படும் இன்னல்களைத் தாங்கும் வகையில் ரூ.40.03 கோடி செலவில், குடிசைவாழ் மக்கள் பயன் பெறும் வகையில் 15,445 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. இது தவிர, 1991-95-ஆம் ஆண்டுகளில் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ், குடிசைப்பகுதி அபிவிருத்தி செய்யப்பட்டு 35,307 குடும்பங்கள் பயன்பெறும் வகையில் ரூ.12.39 கோடி புகழ்மிக்க எங்கள் புரட்சித்தலைவி அரசால் செலவிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களால் ஊக்குவிக்கப்பட்டு வருவது, விரைவுப்படுத்தப்பட்ட குடிசை மேம்பாட்டுத் திட்டமும் ஆகும். அத்திட்டத்தின் கீழ் குடிசைவாழ் மக்களுக்கு அடிப்படை வசதிகள் அளிக்கப்படுகின்றன. அவர்களுடைய அல்லல்கள் துடைக்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ், 1991-95-ஆம் ஆண்டுகளில் ரூ.8.36 கோடி

செலவிடப்பட்டு 53,564 ஏழைக் குடும்பங்கள் பயனடைந்துள் ளன. நடைபாதைவாசிகளுக்கு மறுவாழ்வு அளிக்கும் வகையில் ரூ.3.75 கோடி செலவிடப்பட்டு, 4,201 நலிவே துணையாய் வாழும் நடைபாதைவாசி களுக்கும் வீடுகள் வழங்கப்பட் டுள்ளன.

பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினர்களுக்கான அரிய திட்டத்தின் கீழ், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத் தால் ரூ.12.58 கோடி செலவில் 9,718 புதிய குடியிருப்புகள் பொலிவுறக் கட்டித்தரப்பட்டுள் ளன.

**வீட்டுவசதிக் கூட்டுறவுச் சங்கங்கள்**

டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் நிகரற்ற நிர்வாகத் திறத்தால், எம்மாநிலத்திற்கும் வழிகாட்டும் இம்மாநிலத்தின் கூட்டுறவு வீட்டுவசதிப் பிரிவின் கீழ், தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையம், இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலக் கூட் டுறவு வீட்டுவசதிச் சங்கங் களிலும் முதன்மைபெற்ற நிறு வனமாக இயங்கி வருகிறது.

1991-95-ஆம் ஆண்டுகளில் இந்த இணையம், கிராமப்புற மற்றும் நகர்ப்புற வீட்டுவசதித் திட்டங்களின் கீழ், வீடுகள் கட்டுவதற்கு ரூ.562.75 கோடி கடனாக வழங்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. 1959-ஆம் ஆண்டு முதல் 1991-ஆம் ஆண்டு வரை, இந்த இணையத்தால் வழங்கப்பட்ட கடன்தொகை ரூ.594 கோடியாகும். எனவே, கடந்த நான்காண்டுகளில், அதா வது 1991-95-ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட கடனுதவியானது கடந்த 32 ஆண்டுகளில் 1959-ஆம் ஆண்டு முதல் 1991-ஆம் ஆண்டு வரை இவ்விணையத்தால் வழங்கப்பட்ட கடன் தொகை யில் 94 சதவிகிதம் ஆகும்.

இந்த அரசுதான், இந்தியா விலேயே முதல் முறையாகக் கிராமப்புறங்களில் வீட்டு வசதியை மேம்படுத்துவதற்கு ஒரு பெருமைமிகு திட்டத்தை ஏற் படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் கீழ், 1991-92-ஆம் ஆண்டு முதல் 1995-96 ஜூன் 1995 வரை ரூ.10.32 கோடி செலவில் 40,000 குடும்பங்கள் இதன் மூலம் பயனடைந்துள்ளன.

கடந்த நான்காண்டுகளில், ரூ.588.89 கோடி செலவில் 2,41,999 வீடுகள் கிராமப்புறங் களிலும், நகர்ப்புறங்களிலும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

**சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்**

சென்னை மாநகரின் சீரான வளர்ச்சிக்கு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தனிக்கவனம் செலுத்திவருகிறார்கள்.

ரூ.50. கோடி செலவில் சென்னையில் கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி, ரூ.6 கோடி செலவில் மாதவரம் சரக்கு மற்றும் பேருந்து நிலையம் ரூ.17 கோடி செலவில், சாத்தங் காடு இரும்பு மற்றும் எஃகு அங் காடி ஆகிய திட்டங்களைச் சென்னை நகரத்தின் நெரிசலைக் குறைக்கும் பொருட்டு சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் தொடங்கிச் செயல்படுத்தி வரு கிறது.

**மாபெரும் நகரத் திட்டம்**

தேசிய நகராண்மைக் குழு மம், ஆறு நகரங்களில் சென்னை யையும் "மாபெரும் நகரத்தில்" சேர்த்துள்ளது. மத்திய அரசு, இத்திட்டத்தின் கீழ், 1993-96-ஆம் ஆண்டிற்குள் சென்னைப் பெரு நகர் வளர்ச்சிக் குழுமம் ரூ.170 கோடி மதிப்பீட்டின் முதல் கட்டமாகத் திட்டங்கள் தீட்ட உத்தேசித்துள்ளது.

இத்திட்டத்தைச் செயல் படுத்த "பெருநகர் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகம்" என்ற புதிய அமைப்பு முத் தமிழன்னையாம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ஆணைப்படி ஏற்படுத்தப்பட்டது. அதில் மைய மற்றும் மாநில அரசின் மூலதனப் பங்குத் தொகையாக ரூ.60. கோடி ஒதுக் கீடு செய்யப்பட்டுள்ளது.

**வெள்ளத் தடுப்பு ஏற்பாடுகள்**

1993-94-ஆம் ஆண்டில் புதிய திட்டமாக, வெளி வட்டச்சாலை ஒன்றை உருவாக்கத் தமிழ்நாடு அரசு அனுமதித்துள்ளது. வண்ட லூர் மற்றும் மீஞ்சூருக்கும் இடை யில் உள்ள இந்த 68 கிலோ மீட்டர் முக்கியச் சாலை "கட்டு இயக்கு மற்றும் மாற்றல்" அடிப் படையில் தனியார் முதலீடு மூலம் அமைக்கப்படவுள்ளது. மாதவரம் பேருந்து மற்றும் கனரக வாகனங்கள் நிறுத்து மிடத்தை வெற்றிகரமாக முடித்த பிறகு, மற்றொரு புதுத் திட்ட மான பள்ளிக்கரணையில் பேருந்து மற்றும் கனரக வாக னங்கள் நிறுத்தும் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. சாத்தங்காட்டில் அமைய உள்ள

மரம் மற்றும் இரும்புக் கழிவுகள் மொத்த அங்காடி வளர்ச்சித் திட்டத்தை அரசு அனுமதித்துள்ளது.

மேலும், *1994-95*-ஆம் ஆண்டில் புதிய திட்டமாகச் சென்னை கோயம்பேட்டில் சென்னைப் புறநகர் பேருந்து நிலையம் ஒன்றை அமைக்க நம் பொன்னான அரசு எங்கள் புரட்சித் தலைவி அவர்களின் அரசு அனுமதித்துள்ளது.

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களின் அரிய ஆலோசனைப்படி, சென்னைப் பெருநகர் வெள்ளத் தடுப்புத் தொடர்பான ஒரு கலந்தாய்வு ரூ.*3* கோடி செலவில் சிறந்த அனுபவம் வாய்ந்த 'மொட் மெக் டொனால்ட்' என்கிற இங்கிலாந்து நிறுவனத்தால் செய்து முடிக்கப் பட்டது. இந்த ஆய்வானது, மழைநீர் மற்றும் கழிவு நீர் அகற்றுதல் தொடர்பான வளர்ச்சிப்பணிகள், சென்னைப் பெருநகரின் வட பகுதியில் வெள்ளத் தடுப்புப் பணிகள், பள்ளிக்கரணையில் கழிவுநீர் மேம்பாட்டுத் திட்டம் ஆகியவைகளையும் ஆய்ந்து குறிப்பிட்டுள்ளது.

மிக முக்கியமான போக்குவரத்துச் சாலை தொடர்பான விரிவான ஆய்வானது ரூ.*1* கோடி செலவில் மூன்று ஆய்வு நிறுவனங்ளால் மேற்கொள்ளப் பட்டு ஜூன் *1995*-இல் முடிவு பெறும் தறுவாயில் உள்ளது.

**நகர் ஊரமைப்பு இயக்ககம்**

சிறிய மற்றும் நடுத்தர நகரங்கள் மேம்பாட்டிற்காக மத்திய

**நம்முடைய திட்டத்தின் பயனாக, சின்னச் சின்னக் குக்கிராமங்கள் கூட, இன்று அடிப்படை வசதிகள் அனைத்தையும் பெற முடிந்துள்ளது. இந்தியாவிலேயே, கிராமத் தன்னிறைவுத் திட்டங்களை, சிறப்பாக நிறைவேற்றியுள்ள மாநிலம், தமிழ்நாடு தான் என்று, மைய அரசே பாராட்டி உள்ளது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.**



**இந்நாட்டு மக்கள் யாராக இருந்தாலும், எல்லோரும் எனக்கு ஒன்றுதான். அவர்கள் ஒவ்வொருவரும் என் அன்பிற்குரிய சகோதரர்கள்தான், சகோதரிகள் தான். இதில் எவ்வித மாற்றமும், எப்போதும் இருக்காது.**

**புரட்சித்தலைவியின் முழக்கம் தொகுதி-1 லிருந்து.**

அரசு உதவியுடன் மேற்கொள்ளப்படும் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தினைச் செயல்படுத்துவதில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், மங்காப் புகழ்பெற்ற எங்கள் புரட்சித்தலைவியின் அரசு நகர் ஊரமைப்புத்துறை ஒரு முன்னோடி நிறுவனமாக உள்ளது.

கடந்த நான்காண்டுகளில் இத்திட்டத்தின்கீழ், *41* நகரங்களில் *181* திட்டப்பணிகள் ரூ.*4414.86* இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டது. ரூ.*906* இலட்சம் உள்ளாட்சி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதுவரை அதன்படி *44* திட்டப் பணிகள் நல்வண்ணம் முடிக்கப் பெற்று, உலக அரங்கில் தமிழக அரசின் புகழ் மேலும் பொலிவுற பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. ஆகவேதான், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொன்னான ஆட்சியில், தங்கக் குடத்திலிட்ட குங்குமப் பொட்டாக—

'கோடையிலே இளைப்பாறிக் கொள்ளும்
வகைகிடைத்த குளிர்தருவாக-
தருநிழலாக- நிழல்கனிந்த கனியாக
ஓடையிலே ஊறுகின்ற
தீஞ்சுவைத் தண்ணீராக—
உகந்த தண்ணீரிடை மலர்ந்த
சுகந்த மணமலராக
மேடையிலே வீசுகின்ற
மெல்லிய பூங்காற்றாக
மென்காற்றில் விளைசுகமாக

நமது தமிழ்த்தரணி விளங்கி வருகிறது.

*



# ஊரகத் தொழில் துறையின் ஒப்பற்ற சாதனைகள்!


### மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்
## திரு துரை, இராமசாமி


அரசி எவ்வழி அகிலம் அவ்வழி. இயக்குபவர் அவர்... இயங்குவது அரசு... முற்போக்கு, தொலை நோக்குப் புதுமைக்குப் பூபாளமிசைக்கும் அறிவாற்றல் ... மக்கள் நலமே பெரிதெனக் கருதும் மாட்சிமிகு உள்ளம் ... கொள்கை உறுதி, எண்ணியதை, நினைத்ததை முடிக்கும் ஏற்றமிகு செயல் முறைகள் ... புரட்சித்தலைவியே தமிழகத்தின் "நல்லார் ஒருவர்" அவர் பொருட்டு எல்லார்க்கும் மழை பெய்கிறது. நான்கு ஆண்டுகளிலும் புரட்சித்தலைவியின் செங்கோல் சிறப்பால் மழைவளம் குன்றாமல் மகிழ்ந்தது இந்நாடு. தொழில் வளரத் தூண்டுதல் நம் புரட்சித்தலைவி.

ஊரகத் தொழில் துறையைத் தனித் துறையாக்கி தழைக்க வைத்த பெருமைக்குரியவர் புரட்சித்தலைவி.

"இந்தியாவின் இதயம் கிராமங்களில் இருக்கிறது" என்றார் காந்தியண்ணல். கிராம மக்களும் நகர்ப்புறத்து வசதிகளைப் பெறுவதற்கு அல்லும் பகலும் அயராது திட்டங்களை அளித்தவர் நம் புரட்சித்தலைவி.

ஏழை எளிய கிராம மக்களுக்குக் கல்வி அறிவு, சிறு தொழில், பெருந்தொழில் வாய்ப்புகள், அடிப்படை வாழ்க்கை வசதிகள் எனப் பல்வேறு திட்டங்களால் 85 சதவிகித கிராம மக்கள் பயன்பெறச் செய்தவர் புரட்சித்தலைவி.

கிடைத்தற்கரிய அவருடைய தலைமையின்கீழ்-வழிகாட்டுதலின்படி இயங்கிடும் தமிழ்நாடு அரசு ஊரகத் தொழில் துறை இந்த நான்காண்டுக் காலத்தில் செய்துள்ள பணிகள் சாதனைகள் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தவை.

குறைந்த அளவு முதலீடு, ஆனால் பெரும் அளவில் வேலைவாய்ப்பு அளிப்பது சிறுதொழில் துறையின் சிறப்பு அம்சமாகும். இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 1992-ஆம் ஆண்டுக்கான தொழிற் கொள்கையில் புதிய தனித்தன்மை வாய்ந்த நடவடிக்கைகளை எடுத்ததன் விளைவாகத் தமிழ்நாட்டில் சிறுதொழில் துறையில் மிக வேகமான வளர்ச்சி காணப்பட்டு வருகிறது.

பெருமளவில் பொருட்களை வாங்குகின்ற அரசு நிறுவனங்கள் சிறுதொழில்களுக்குச் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையினை உரிய காலத்தில் செலுத்துவதைக் கண்காணிக்க

**இதுவரை சுமார் 3,355 பெண் தொழில் முனைவோர்களுக்கு ரூ.47 இலட்சத் திட்ட மதிப்பில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.**

**பெருவாரியான ஆற்றல்மிக்க மகளிர் தொழில் தொடங்குவதில் ஈடுபட்டிருப்பதால் அவர்களை ஊக்குவிப்பதற்காகத் திறம்படச் செயலாற்றும் மகளிர் தொழில் அதிபர்களுக்கு விருதுகள் வழங்கும் திட்டம் இப்போது செயலாகி வருகிறது.**

 

அமைக்கப்பட்டக் குழுவின் முன் கொண்டுவரப் பட்ட 196 சிறுதொழில் நிலையங்களுக்குரிய ரூ.1066.60 இலட்சம் வசூலிக்கப்பட்டுவிட்டது.

தமிழ்நாட்டில் பின்தங்கிய வட்டங்கள் 76லிருந்து 85ஆகவும், மிகவும் பின்தங்கிய வட்டங்கள் 31-லிருந்து 32-ஆகவும் உயர்த்தப் பட்டுள்ளன. இதன் விளைவாக 15 சதவிகிதம் மற்றும் 20 சதவிகிதம் மானியம் முறையே பெறப்படும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

குறைந்தழுத்த மின்சாரத்தை நுகர்கின்ற தொழில்களுக்கு உற்பத்தி தொடங்கிய நாளிலிருந்து முதல் மூன்றாண்டுகளுக்கு 40 சதவிகிதம், 30 சதவிகிதம், 20 சதவிகிதம் மின் கட்டணச் சலுகை வழங்கப்படுகிறது அதுமட்டு மல்ல, சிறுதொழில் நிலையத்தின் உபயோகத்திற் கென ஜெனரேட்டர் நிறுவப் பட்ட உயர் அழுத்த - குறைந்தழுத்த மின்சாரத்தைப் பயன்படுத்து கின்ற சிறுதொழில் நிலையங்களுக்கு ஜெனரேட் டர் விலையில் 15 சதவிகிதம் அதிகப்படியாக ரூ.5 இலட்சத்திற்கு மிகாமல் ஜெனரேட்டர் மானியம் அளிக்கப்படுகிறது. புரட்சித்தலைவி அரசு பொறுப்பேற்ற நாளிலிருந்து இதுவரை 8,968 நிறுவனங்களுக்குக் குறைந்தழுத்த மின் கட்டண மானியம் ரூ.402.87 இலட்சமும், ஜெனரேட்டர் மானியம் 443 சிறுதொழில் நிறுவனங்களுக்கு ரூ.99.58 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது. இதுவரை 2,612 சிறுதொழில் நிறுவனங்களுக்கு மாநில மூலதன மானியம் -/ சிறப்பு மூலதன மானியம் ரூ.3253.09 இலட்சம் வழங்கப்பட்டு உள்ளது.

மேலும் வட்டியில்லா விற்பனை வரிக்கடனாக ரூ.231.15 இலட்சம் 213 சிறுதொழில் நிறுவனங்களுக்கும், வட்டியில்லா விற்பனை வரிக்கடன் தள்ளிவைப்புத் திட்டத்தில் 1,139 நிறுவனங்களுக்கும் ரூ.9960.34 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது.

இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அரசு பொறுப்பேற்ற காலத்தி லிருந்து 5 ஆண்டுக் காலத்தில் தொடங்கப்பட வேண்டிய சிறுதொழில்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கான ஒரு இலட்சத்தில், இதுவரை சுமார் 92,000 சிறுதொழில்களுக்கு நிரந்தரச் சான் றிதழ்கள் வழங்கப்பட்டன.

இவற்றில் முதலீடு ரூ.2,002 கோடியெனவும், இவை சுமார் 9 இலட்சம் நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்துள்ளன என்றும் மதிப்பிடப்பட்டு உள்ளது. நாடாளுமன்றத்தில் கடந்த 1994-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் வெளியிடப்பட்ட அறிக்கையின்படி சிறுதொழில்களுக்கு வழங்கப் பட்ட நிரந்தரச் சான்றிதழ்களில் தமிழகம் 5-வது இடத்தையும், இவற்றின் மூலம் உருவாக்கப்பட்ட வேலைவாய்ப்பில் முதலிடத்தையும் வகிப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இதுவரை சுமார் 3,355 பெண் தொழில் முனைவோர்களுக்கு ரூ.47 இலட்ச திட்ட மதிப்பில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் 1,400 நபர்களுக்குப் பயிற்சி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்துறையின் கீழ் 410 தொழிற்கூட்டுறவுச்

சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், ரூ.21,300.48 இலட்சம் மதிப்புள்ள பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டன ரூ.23,766.44 இலட்சம் மதிப்பில் அவை விற்பனை ஆகியுள்ளன.

இந்தியப் பிரதமரின் "ரோஜ்கார் யோசானா" திட்டத்தின் கீழ் 1993-ஆம் ஆண்டு அக்டோபர் முதல் இந்நாள் வரை வங்கிகளுக்குப் பரிந்துரைக்கப்பட்ட 47,827 விண்ணப்பங்களில், 19,293 விண்ணப்பங்களுக்கு ஒப்புதல் அளிக்கப் பட்டு, ரூ.11,317.06 இலட்சம் கடன் வழங்கப் பட்டுள்ளது.

நலிவுற்ற சிறுதொழில்களுக்கு முதல் 5 ஆண்டுகளுக்கு விற்பனை வரி ஒத்திவைப்பு வசதி அளிக்கப்பட்டுள்ளது.

குடிசை குறுந்தொழில் மற்றும் சிறுதொழில் முனைவோருக்கு 5 குதிரைச் சக்தித் திறன் வரை மின் கட்டணச் சலுகையை இந்த ஆண்டு 10 குதிரைச் சக்தித் திறன் வரை என்று இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததன் மூலம் இலட்சோப இலட்சம் குறுந்தொழில் முனை வோர்கள் பயன் அடைந்துள்ளனர்.

பிற்படுத்தப்பட்ட வட்டங்களில் விற்பனை வரி ஒன்பது ஆண்டுகளுக்கு ஒத்திவைப்பு மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வட்டங்களில் விற்பனை வரி ஐந்து ஆண்டுகளுக்குத் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. குறிப்பிட்ட சிறுதொழில் களுக்கு சிறப்புதவித் தொகையாக குறைந்தபட்சம் ரூ.15 இலட்சமாகவும், அதிகப்பட்சம் ரூ.35 இலட்சமாகவும் வழங்கப்படுகிறது.

ரூ.50,000 வரையிலான துணை பிணைப் பத்திர முறையைத் தளர்த்தியது மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்களின் அரசு.

சென்னை நகரில் தொழில் உரிமம் தொடர் பான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண உயர்மட்டக் குழு ஒன்றை அமைத்து, குறுந் தொழில் முனைவோர் சங்கப் பிரதிநிதிகளுக்கும் இடம் அளித்து, பல ஆண்டுகளாகத் தீர்க்கப்படாமல் இருந்த பல பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுள்ளன. புதிதாகத் தொழில் தொடங்கு பவர்களுக்கும், நலிந்த தொழில்களுக்குப் புத்துயிர் ஊட்டவும், அவற்றின் பிரச்சினைகளை ஆராய்ந்து அறிந்து தீர்வு காண மாவட்ட அளவில் ஒருங்கிணைப்புக் குழு அமைத்து, தொழில் முனைவோர் பிரதிநிதிகளுக்கு இடம் அளித்து, சிறுதொழில்களின் இடர்ப்பாடுகளுக்குப் பேருதவி செய்து வருகிறது நமது புரட்சித்தலைவி அரசு.

**காரிருள் அகத்தில் நல்ல
கதிரொளி நீதான் இந்தப்
பாரிடைத் துயில்வோர் கண்ணிற்
பாய்ந்திடும் எழுச்சி நீ தான்
ஊரினை நாட்ட இந்த
உலகினை ஒன்று சேர்க்கப்
பேரறி வாளர் நெஞ்சிற்
பிறந்த பத்திரிகைப் பெண்ணே.**

**–பாவேந்தர் பாரதிதாசன்**

### ஆற்றல்மிகு தொழிலதிபர்களுக்கு மாநில அரசின் விருதுகள்

இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தமிழக அரசு, சிறுதொழில்களுக்கான, மாநில மற்றும் மாவட்ட அளவிலான விருதுகள் மற்றும் சிறந்த ஏற்றுமதியாளர்களுக்கான விருதுகள் ஆகியவற்றை ஏற்கெனவே வழங்கி வருகிறது.

பெருவாரியான ஆற்றல்மிக்க, மகளிர் தொழில் தொடங்குவதில் ஈடுபட்டிருப்பதால் அவர்களை ஊக்குவிப்பதற்காகத் திறப்படச் செயலாற்றும் மகளிர் தொழில் அதிபர்களுக்கு விருதுகள் வழங்கும் திட்டத்தை, இப்போது செயலாற்றி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் முதல் பரிசாக ரூ.25,000 ரொக்கப் பரிசும், ரூ.3,000 மதிப்புள்ள கேடயமும், நற்சான்றிதழும் வழங்கப் படுகின்றன. மேலும் இரண்டாவது, மூன்றாவது பரிசுகளாக முறையே ரூ.15,000, ரூ.10,000, ரொக்கத் தொகையுடன் கூடிய ரூ.3,000 மதிப்புள்ள கேடயமும் நற்சான்றிதழும் அளிக்கப்படுகின்றன.

தரமிக்க பொருட்களைத் தயாரிக்கும் தொழிலதிபர்களை ஊக்குவிப்பதற்காகப் பெரிய நடுத்தர மற்றும் சிறுதொழில் துறையின் கீழ் வருகின்ற திறமை வாய்ந்த தொழிலதிபர்களுக்கு முதல் பரிசு ரூ.25,000 மும், இரண்டாவது பரிசு ரூ.15,000 மும், மூன்றாவது பரிசு ரூ.10,000மும் ரூ.3,000 மதிப்புள்ள கேடயமும் நற்சான்றிதழும் அளிக்கப்படுகின்றன. *



# வேளாண்மையில் சாதனைப் பூக்கள்


மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்

**திரு. கு.ப. கிருஷ்ணன்**


**மா**ண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் அரசு, பொறுப்பு ஏற்றுக்கொண்டதற்கு முன்பு, தமிழ்நாடு வேளாண்மையில், மேலாண்மைச் சிதைவால், கைக்கும் வாய்க்கும் என்ற நிலையே மிஞ்சியிருந்தது. கடந்த நான்கு ஆண்டுகளில் வேளாண்மையில் வியத்தகு சாதனைகள் படைக்கப்பட்டுள்ளன. தாவி ஏறி முன்னேறி வருகிற வேளாண்மை விஞ்ஞானம், அந்த விஞ்ஞானம் விதைத்துள்ள வியத்தகு தொழில் நுட்பங்கள் அவைகளுக்கு இணையாக ஈடு கொடுக்கும் வகையில் புரட்சிகரமான புதிய உத்திகள் புகுத்தப்பட்டு, முன்னேற்றப் பாதையில் வேளாண்மை முனைப்போடு வளர்ந்து வருகிறது.

**உணவு உற்பத்தி**

*1990- 91*-இல் தமிழ்நாட்டில் மொத்த உணவு உற்பத்தி *74.94* இலட்சம் டன்கள்தான். ஆனால் இன்றைக்கு, மொத்த உணவு உற்பத்தி 105 இலட்சம் டன்களை எட்டியுள்ளது. நெஞ்சம் உள்ளவர், நேர்மை உள்ளவர் நிறைவோடு பாராட்டும் சாதனை ஆகும் இது.

> **நான்கு ஆண்டுகளில் அரிசி உற்பத்தி 50 சதவிகிதம் உயர்ந்துள்ளது.**
>
> **ஜே.ஜே. 92 என்ற புதிய வகை வாசனை அரிசி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.**
>
> **அரிசி உற்பத்தித் திறனில் தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது.**

கடந்த நான்கு ஆண்டுகளில் ஆண்டு ஒன்றுக்கு 12.5 சதவிகிதம் என்ற வளர்ச்சி விகிதத்தில், மொத்த உணவு உற்பத்தியை முழுமையாகப் பெருக்கி நான்கு ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததைவிட 50 சதவிகிதம் உயர்த்தப்பட்டுள்ளது. இந்த உயர்வு, இந்தியத் துணைக் கண்டத்தின் சராசரி வளர்ச்சி விகிதத்தைவிட அதிகமானது.

*1990- 91*-இல் இந்தியாவின் உணவு உற்பத்தி *176.39* மில்லியன் டன்களாகும். அது *1994-95*-இல் *185* மில்லியன் டன்கள் என்ற நிலை. அந்த நிலையிலும் கூட, நான்கு ஆண்டுகளில் இந்தியாவில் மொத்த உற்பத்தி 9 மில்லியன் டன்களாக உயர்ந்திருக்கும். வளர்ச்சி விகிதம் ஆண்டு ஒன்றுக்கு 5.5 சதவிகிதமாக இருக்கும். நம் தமிழ்நாட்டு வளர்ச்சி விகிதம் உணவு உற்பத்தியைப் பொறுத்த வரையில், ஆண்டு ஒன்றுக்கு 12.5 சதவிகிதம். இந்தச் சாதனையைத் தனித்துப் பார்த்தாலும், தொடர்புடைய மற்றவற்றோடு தொகுத்தும், பகுத்தும் பார்த்தாலும் இந்தியாவிலுள்ள எந்த மாநிலமும் எட்டமுடியாத ஏற்றமிகு சாதனையாகும்.

**அரிசி உற்பத்தி**

*1990 -91*-இல் தமிழ்நாட்டின் மொத்த அரிசி உற்பத்தி *57.82* இலட்சம் டன்கள்தான். *1994-95*-இல் அது *85* இலட்சம் டன்கள். நான்கு ஆண்டுகளில் அரிசி உற்பத்தி 50 சதவிகிதம் உயர்ந்து, இந்தியாவில் மற்ற மாநிலங்களைக் காட்டிலும்

தமிழ்நாட்டின் உழவர் பெருங்குடி மக்களுக்குத் தக்காரும் இல்லை, மிக்காரும் இல்லை என்ற உன்னதமான உயரிய நிலை உறுதி செய்யப்பட்டுள்ளது.

*1990-91*-இல் மாநிலத்தில், உணவு தேவையை உரிய முறையில் நிறைவு செய்து கொள்வதற்காக, மொத்த நெல் கொள்முதலை அரசே மேற்கொண்டிருந்தது. ஆனால், இன்றைக்கோ, அரசு மொத்த நெல் கொள்முதல் கைவிடப்பட்டுள்ளது. அது மாத்திரமல்ல, இணையான கொள்முதல் திட்டத்தை (Parallel Procurement) அரசு மேற் கொண்டு வருகிறது.



**சிறுதானிய உற்பத்தி**

*1990-91*-ஆம் ஆண்டில் சோளம், ராகி, கம்பு போன்ற சிறுதானியங்கள் உற்பத்தி *13.53* இலட்சம் டன்களாகும். *1994-95*-ஆம் ஆண்டில்- ஐந்தாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் நம் புரட்சித்தலைவி அவர்கள் ஆட்சியில், *15* இலட்சம் டன்களாக உயர்ந்துள்ளது.

அதைப்போலவே பயறு வகைகள் உற்பத்தியிலும், உற்பத்தி உயர்வுக்காக இந்த அரசு செயலாக்கப்படுத்தியுள்ள தனிச் சிறப்புத் திட்டங்களின் காரணமாக, முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. கடந்த நான்கு ஆண்டுகளில் மொத்தம் *42* சதவிகிதம் பயறு உற்பத்தி அதிகரித்திருக்கிறது.

**எண்ணெய் வித்து உற்பத்தி**

பரப்பளவிலும், உற்பத்தியிலும், உற்பத்தித்திறனிலும் எண்ணெய் வித்துக்களைப் பொறுத்தவரை தமிழ்நாட்டின் எல்லா முனைகளிலும் ஏற்றமிகு விளைச்சல், மாற்றமிகு வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. ஆண்டு ஒன்றுக்கு எண்ணெய்வித்துக்கள் பயிரிடப்படும் பரப்பளவு *28.57* சதவிகிதம் உயர்ந்துகொண்டு வருகிறது. அதே நேரத்தில் உற்பத்தி, ஆண்டு ஒன்றுக்கு *68.63* சதவிகிதம் உயர்ந்துகொண்டு வருகிறது.

*1990-91*-இல் எண்ணெய் வித்துக்கள் *11.48* இலட்சம் எக்டர் பரப்பில் பயிரிடப்பட்டு இருந்தன. அது *1994-95*-இல் *15.83* இலட்சம் எக்டர் ஆகும்.

*1990-91*-இல் எண்ணெய் வித்து உற்பத்தி *12.41* இலட்சம் டன்களாகும். அது இப்பொழுது, *19.50* இலட்சம் டன்கள். எண்ணெய்வித்துக்கள் உற்பத்தித் திறனில் எக்டர் ஒன்றுக்கு *1360* கிலோ என்று இந்தியாவிலேயே தமிழ் மாநிலம் முன்னிலையில் உள்ளது.

**கரும்பு உற்பத்தி**

மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் முத்தான, சத்தான கொள்கைகள், திட்டங்கள் காரணமாக, விலை நிர்ணய உத்தியின் காரணமாக, தமிழ் நாட்டில் கரும்பு உற்பத்தியில் முன் எப்பொழுதும் இல்லாத அளவிற்கு, முழுமையாக, நிறைவான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. பரப்பளவிலும், உற்பத்தியிலும், உற்பத்தித்திறனிலும் இனிய, இணையில்லாத முன்னேற்றம் எட்டப்பட்டுள்ளது.

*1990-91*-இல் கரும்பு *2.3* இலட்சம் எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டிருந்தது. *1994-95*-இல் அந்தப் பரப்பளவு *3* இலட்சம் எக்டராக உயர்ந்து விட்டது. *1990* மார்ச் மாதத்தில் ஒரு டன் கரும்பிற்கு ரூ.250/ என்று அரசு வழங்கிய விலை. *1994-95*-இல் இரு மடங்குக்கும் மேலாக, ஒரு டன் கரும்பிற்கு அரசு வழங்கும்

விலை ரூ.525/ என்பது இனிப்பான செய்தி, தானே!

> இயற்கை விதிகளைப் பற்றிய கல்வி கேள்விகளால் பெறக்கூடிய அறிவை நாம் கையகப்படுத்த வேண்டும். இதனால் பெறும் சக்தி, பெரியதோர் சக்தியாகும்.
>
> **–பெர்ட்ராண்டு ரஸ்ஸல்**

**ஜே.ஜே.92**

ஜே.ஜே.92 என்ற புதிய வகை வாசனை அரிசி மக்கள் மனம் மகிழ அறிமுகம் செய்யப்பட்டிருக்கின்றது. இந்த அரிசி ஏற்றுமதியாவதற்கான வாய்ப்புக் கூறுகள் ஏராளமாகவும், தாராளமாகவும் உள்ளது என்பதை இந்த நாட்டு உழவர் பெருமக்கள் உணர்ந்துவருகிறார்கள். எம்.ஜி.ஆர். உயர் விளைச்சல் ரக நெல் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டு உழவர்களின் உள்ளத்தில் எண்ணெய்ப்பனை உற்பத்தி செய்வதற்குரிய எண்ணம் விதைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் சூரியகாந்தி, சோயா பீன்ஸ் ஆகியவற்றைப் பயிரிடும் பரப்பளவு தெரிவு செய்யப்பட்டு, விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

உயர் விளைச்சல் சிறுதானியங்களும், புதிய துவரை வகையும் உழவர்களுக்குத் தரப்பட்டுள்ளன.

விஞ்ஞான வளர்ச்சியின் அங்கமான டிஷ்யூ கல்ச்சர் என்ற உற்பத்தியினைப் பயன்படுத்தி, கரும்பு வளர்ச்சியினைப் பெருக்குவதற்கு உரிய வழிமுறைகள் கண்டறியப்பட்டுள்ளன.

**வேளாண்மைக்கு நிதி ஒதுக்கீடு**

மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வேளாண்மைக்கான நிதி ஒதுக்கீட்டைத் தொடர்ச்சியாக உயர்த்தி, ஊக்கமும் ஆக்கமும் உவந்து அளிப்பதன் காரணமாகத்தான் என்றும், எங்கும், எவரும் ஏற்படுத்த முடியாத சாதனைகள் வேளாண்மையில் இன்று விளைந்துள்ளன. *1990-91*-இல் வேளாண்மைக்கென்று ஒதுக்கப்பட்ட நிதி *438.42* கோடி ரூபாயாகும். அது *1995-96*-இல் *764.88* கோடி ரூபாயாக உயர்ந்திருக்கிறது. இந்த உயர்வு *74.46* சதவிகிதம் ஆகும்.

வேளாண்மைக்கென்று ஒதுக்கப்பட்டுள்ள நிதி நிலையை, மொத்த நிதி நிலையோடு ஒப்பிட்டு நோக்குகையில் வேளாண்மைக்கான நிதி நிலை *9.64* சதவிகிதம் ஆகும்.

**வேளாண்மையில் முதல் நிலையில் தமிழகம்**

வேளாண்மையில் தமிழ்நாடு மற்ற மாநிலங்களுக்கெல்லாம் முன்னோடி மாநிலம், வழிகாட்டும் மாநிலம், எண்ணெய் வித்துக்கள், சிறுதானியங்கள், கரும்பு, தேங்காய் ஆகியவற்றின் உற்பத்தித் திறனில் இந்தியாவிலேயே தமிழ்நாடு தான் முதல் நிலையில் இருக்கிறது.

அரிசி உற்பத்தித் திறனைத் தொடர்ச்சியாக உயர்த்தி, *1993-94*-இல் இந்தியாவிலேயே தமிழ்நாடு *2*-வது இடத்தில் இருந்தது. *1994-95*-இல் நல்ல மிகு விளைச்சல் காரணமாக அரிசி உற்பத்தித் திறனில் பஞ்சாப்பையும் மிஞ்சி முதல் இடத்தை எட்டிப் பிடித்திடும் ஏற்றமிகு நிலையில் தமிழகம் இருக்கின்றது.

வாழை பயிர் செய்யும் பரப்பளவில் (74,080 எக்டர் பரப்பளவில்) தமிழ்நாடு இந்தியாவிலேயே முதல் இடத்தில் இருக்கிறது. அதனால்தான் தேசீய வாழை ஆராய்ச்சி மையத்தைத் தமிழ்நாட்டில் நிறுவிட மத்திய அரசு முடிவு செய்தது.

ஆரஞ்சு உற்பத்தித்திறனில் இந்தியாவிலேயே தமிழ்நாட்டிற்குத்தான் முதலிடம். தமிழ்நாட்டில் எக்டர் ஒன்றுக்கு 20.51 டன் ஆரஞ்சு உற்பத்தியாகிறது.

அன்னாசிப் பழம் உற்பத்தியிலும் தமிழ்நாட்டிற்கு முதலிடம். எக்டர் ஒன்றுக்கு 40.99 டன் அன்னாசிப் பழம் இங்கே உற்பத்தியாகிறது.

முட்டைகோஸ் உற்பத்தியிலும் எக்டர் ஒன்றுக்கு 40 டன் உற்பத்தி செய்து முதல் இடத்தில் உள்ளது.

தக்காளி உற்பத்தித் திறனில் தமிழ்நாட்டிற்குத் தனி இடம், முதல் இடம். எக்டர் ஒன்றுக்கு 25.61 டன் தக்காளி உற்பத்தியாகிறது.

ஏலக்காய் உற்பத்தியில் எக்டர் ஒன்றுக்கு 115 கிலோ உற்பத்தி என்ற விகிதத்தில் தலைமையிடத்தில் தமிழ்நாடு இருக்கிறது.

எண்ணெய்வித்து உற்பத்தி செய்யும் பரப்பளவில் ஒன்பதாம் இடத்தில் இருந்தாலும், அதன் உற்பத்தித் திறனில் தமிழ்நாடு முதல் இடத்தில் இருக்கிறது.

கரும்பு உற்பத்தி செய்யும் பரப்பளவில் தமிழ்நாடு இந்தியாவில் நான்காம் இடத்தில் இருந்தாலும், கரும்பு உற்பத்தித் திறனில் இந்தியத் திருநாட்டில் மாத்திரமல்ல, உலகிலேயே, உலக நாடுகளிலேயே முதல் இடம் தமிழ்நாட்டிற்குத்தான்.

*1991-92, 1992-93* ஆகிய ஆண்டுகளில் விரிவாக்கத்திற்கும், *1992-93*-இல் மானாவாரிச் சாகுபடிக்கும், *1991-92, 1992-93* ஆகிய ஆண்டுகளில் உயிர் உர உற்பத்திக்கும் தமிழ்நாடு, தேசீய உற்பத்தித்திறன் பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற்றிருக்கிறது என்பது நினைவிலிருந்து என்றைக்கும் நீங்காத,நிறைவு மிக்க சாதனை ஆகும்.

தேசீய அளவிலும், சர்வதேச நிலையிலும் புதிதாக ஏற்பட்டு வரும் மாற்றங்கள் வேளாண்மைத் தொழிலிலும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றன. இந்த மாற்றங்கள், இவைகளினால் ஏற்பட்டுள்ள, ஏற்பட வுள்ள புதிய சூழல்கள் இவைகளையெல்லாம் கருத்திலும், கவனத்திலும் கொண்டுதான் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் அறிவுரைகளின் அடிப்படையில், நமது மாநிலத்தின் வளர்ச்சிக்கேற்ற வகையில் தமிழ்நாடு வேளாண்மைக் கொள்கை ஒன்று உருவாக்கப்பட்டு வருகின்றது. அந்தக் கொள்கை உருவாக்கத்தின் ஆதார முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

ஞாலம் புகழ் வேளாண் விஞ்ஞானி டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களுடைய தலைமையில், போதிய வேளாண் விஞ்ஞானிகளை உள்ளடக்கிய அடிப்படைக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

புதிய கொள்கை உருவாக்கத்திற்கெனத் தமிழ்நாடு வேளாண் பெருங்குடி மக்களையெல்லாம் இந்த ஆண்டு சனவரி மாதம் திருச்சி மாநகரில் கூட்டி, அவர்களது எண்ணங்களும் கருத்துக்களும் பெறப்பட்டுள்ளன.

**மகராசி வேளாண்மை 2000 பார்வை, பாதை, பரிமாணம்**

பல்கிப் பெருகிவரும் மக்கள் தொகை, மாற்றங்களைக் குவித்துவரும் அறிவியல் வளர்ச்சி இவை இரண்டிற்கும் ஈடுகொடுக்கும் வண்ணம் இன்றைய வேளாண்மைத் தொழில் புதுப்பிக்கப்பட வேண்டும், புரட்சிமயப்படுத்தப் பட வேண்டும் எனும் தொலைநோக்குச் சிந்தனையில் கருவாகி உருவாகி காலத்தே கனிந்ததுதான் மகராசி வேளாண்மை *2000* பார்வை, பாதை, பரிமாணம் என்னும் தத்துவக் குறிப்பாகும்.




மகராசி என்பது வேளாண்மை வளர்ச்சியின் மிகப் பெரிய குறியீடு ஆகும்.

இது பசுமைப் புரட்சியின் பரிணாம வளர்ச்சி. இரண்டாம் வேளாண்மைப் புரட்சிக்கு இணையிலா வித்து. வேளாண்மை செல்லவேண்டிய வழியின் வியத்தகு திசைகாட்டி, இந்தத் திசைகாட்டியைத் தேசத்திற்குத் தந்துள்ளவர்கள், அன்னையெனும் தத்துவத்தை அம்புலிக்குக் காட்ட வந்த மின்னலாக, விளங்குகிற மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அவர்களாகும்.

புதிய பார்வை கொண்டு, புரட்சிகரமான பாதையில் நடைபோட்டு, புலர்ந்துவரும் பரிமாணங்களைக் கருத்தில் கொண்டு வேளாண்மைத் தொழிலை விண்முட்ட உயர்த்த அன்னை நமக்கு அளித்துள்ள குறிக்கோள்கள்:

- ☆ நீடித்த நிலையான வேளாண்மை.
- ☆ சீர்மிகு நீர் மேலாண்மை.
- ☆ பயிர்த்தொழிலுடன் பலன் தரும் பக்கத் தொழில்கள்.
- ☆ உற்பத்திச் செலவுக்கு உரிய, நெறிய விலை.
- ☆ வெற்றிதரும் வளர்ச்சிக்குச் சுற்றுச்சூழல் பாதுகாப்பு



(8)

☆ ஆக்கம் தரும் வேளாண்மையில் அறிவியல் பொறிகளின் பணி.

☆ வேளாண்மை விளை பொருட்களுக்கு வெளிநாடுகளில் அங்காடி.

☆ காய்கறி விளைச்சலில் கணிசமான பெருக்கம்

☆ விதை உரிமைகளும் வேண்டிய பல்லுயிர்ப் பெருக்கமும்.

இருபத்தோராம் நூற்றாண்டு வேளாண்மைக்கான குறிப்பும், விளக்கமும் மகராசி வேளாண்மை 2000 என்ற தத்துவத்தில் அடங்கியிருக்கிறது என்பதை வேளாண் விஞ்ஞானிகள் விழி உயர்த்தி வியந்து பாராட்டியுள்ளனர்.

**உழவே தொழில்**

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் என்றான் தீப்பந்தப்பாட்டுக்காரன், தென் தமிழ் நாட்டுக்காரன் தேமதுரப் பாரதி. உழவையும் தொழிலையும் தனித்தனியாகப் பிரித்துப் பார்த்த நிலை அன்றைக்கு. ஆனால் இன்றோ, உழவே தொழிலாகும் உள்ளத்தை நம் நாடு கண்டுகொண்டிருக்கிறது.

*1991* நவம்பரில் பயிர் விளைச்சல் போட்டியில் வெற்றி பெறுவோர்க்கான முதல் பரிசு ஐம்பதாயிரம் ரூபாயிலிருந்து ஒரு லட்சம் ரூபாயாகவும், இரண்டாம் பரிசு இருபத்தையாயிரம் ரூபாயிலிருந்து ஐம்பதாயிரம் ரூபாயாகவும் உயர்த்தப்பட்டது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக விஞ்ஞானிகளுக்கு விருது வழங்கும் திட்டம் அமலாக்கப்பட்டு, நான்கு விஞ்ஞானிகளுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டுள்ளன.

எம்.ஜி.ஆர்.உயர் விளைச்சல் ரக நெல்லை மாநிலத்திலேயே அதிகமாக உற்பத்தி செய்வோருக்கு ரூ.10,000/ - மதிப்புள்ள தங்கப் பதக்கம் டாக்டர் புரட்சித் தலைவி விருது என்கிற வகையில் வழங்கப்படுவதற்கான ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

வேளாண் பெருங்குடி மக்களுக்கு விஞ்ஞானத் தொழில் நுட்பங்களைத் திறமையோடும், திட்பத்தோடும் கொண்டு செல்வதை ஊக்குவிப்பதற்காக விரிவாக்க அலுவலர்களுக்கான டாக்டர் புரட்சித் தலைவி விருது ஏற்படுத்தப்பட்டுள்ளது.

எண்ணெய்ப்பனை உற்பத்தியை அறிமுகம் செய்து ஆக்கப் பூர்வமான முறையில் அதிகரிப்பதற்கான நடைமுறைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எண்ணெய் பனையிலிருந்து எண்ணெய் பிழிந்து எடுப்பதற்கான ஆலை ஒன்று அரசு தரும் ஊக்கத்தோடு நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

முதலில் *309* கோடி செலவில் உருவாக்கப்பட்ட வேளாண்மை வளர்ச்சித் திட்டம், *1991-92*ஆம் ஆண்டில் செயலாக்கத்திற்குக் கொண்டு வரப்பட்டு, அந்தத் திட்டத்தின் மொத்தச் செலவு *410* கோடி ரூபாய் ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது.

பயிர் விளைச்சல் போட்டிகளில் வெற்றி பெறும் வேளாண் பெருங்குடி மக்களின் குழந்தைகளுக்குத் தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்தில் அனுமதிக்கெனத் தனி இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

தரிசு நில மேம்பாட்டிற்கான தனித்திட்டம் புதுக்கோட்டை மாவட்டத்தில் நடைமுறைக்கு வந்துள்ளது.

ஜே.ஜே.92 வாசனை அரிசி மற்றும் எம்.ஜி.ஆர். உயர் விளைச்சல் நெல் ஆகியவை அறிமுகம் செய்யப்பட்டு, அவை விரிவான முறையில் சாகுபடி செய்வதற்கான நடவடிக்கைகள் ஊக்குவிக்கப்பட்டு வருகின்றன.

சமவெளிப்பகுதிகளில் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு இலவசமாகத் தென்னங்கன்றுகளும், நீலகிரி மலைப்பகுதியில் வாசனைத் திரவியக்கன்றுகளும் வழங்குவதற்கு ஏற்ற டாக்டர் புரட்சித் தலைவி தென்னை வளர்ச்சித் திட்டம் அமலாக்கம் செய்யப்பட்டுள்ளது.

நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டத்திற்கு ஒன்றும் விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் மாவட்டத்திற்கு ஒன்றும், திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்திற்கு

**பொதுவாகப் பேசுமிடத்து, நாகரிகம் என்பதெல்லாம் ஒரு மனிதனிடம் ஒரு மனிதன் நடந்து கொள்ளும் விதத்திலேயே பெரிதும் அடங்கி இருக்கும்.**

- தந்தை பெரியார்

ஒன்றும் என மூன்று புதிய வேளாண்மை விற்பனைக் குழுக்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

வேளாண் வளர்ச்சியை விஞ்ஞான ரீதியில் விரைவுபடுத்த கடந்த ஆண்டுகளில் தமிழகத்தில் புதிய சில அமைப்புகள் நிறுவப்பட்டுள்ளன.

போதாவூரில் மைய அரசின் தேசிய வாழை ஆராய்ச்சி நிறுவனம்.

சிதம்பரனார் மாவட்டத்தில் தேசிய பனை ஆராய்ச்சி மையம்.

ஆடுதுறையில் தேசீய எண்ணெய்ப் பனை ஆராய்ச்சி மையம்.

பெரும்பலூரில் மானாவாரிப் பயிர்களுக்கான வேளாண்மை ஆராய்ச்சி மையம்.

திருச்சி மாவட்டத்தில் மைய அரசின் வேளாண் பொறியியல் பயிற்சி மற்றும் பரிசோதனை நிறுவனம்.

சேலம், மதுரை, காமராஜர், திருநெல்வேலி கட்டபொம்மன், தர்மபுரி, திருவண்ணாமலை சம்புவராயர் ஆகிய மாவட்டங்களில் கிரிஷி விஞ்ஞான் கேந்திரா எனப்படும் வேளாண் விஞ்ஞான மையங்கள் ஆகியன.

குடுமியான் மலையிலுள்ள வேளாண்மைப்பயிற்சி மையம். 75 இலட்சம் ரூபாய்ச் செலவில் மாநில வேளாண் மேலாண்மை நிறுவனமாக உயர்த்தப்பட்டுள்ளது.

உயிரியல் தொழில் நுட்பங்களை ஊக்குவிக்கும் புரட்சித்

**எங்கள் பாதையும் பயணமும், சத்தியசோதனைகள் பலவற்றை வென்ற அண்ணாவுடையன! புரட்சித் தலைவருடையன! அந்தத் திராவிட தீபங்கள் காட்டும் ஒளி வழியே, வீறுநடை பயின்று, வெற்றி பெறுவோம்!**

**– மாண்புமிகு முதல்வர்**

தலைவி அரசு, தனியார் துறையிலும் டிஷ்யூ கல்ச்சர் பிரிவுகளை ஏற்படுத்த முன்வரும் முனைவோர்க்கு ரூ.5 இலட்சம் மானியம் நல்கி வருகிறது. அரசு சார்பில் உதகமண்டலத்திலும், பெரியகுளத்திலும் டிஷ்யூ கல்ச்சர் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

80 இலட்சம் ரூபாய்ச் செலவில் உயிர் உர உற்பத்தி மையங்கள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. ரூ.99.25 இலட்சம் செலவில் திருச்சியிலும், சாக்கோட்டையிலும் புதிய உர உற்பத்தி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதன் காரணமாக ஆண்டு ஒன்றுக்கு, 1500 டன் உயிர் உரங்கள் உற்பத்தி அதிகரிக்கப்பட்டுள்ளது. வேளாண் கழிவுகளும் உயிர் உரமாகும் யுக்திகள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. ஆலயத் தல விருட்ச மேம்பாட்டிற்கு டிஷ்யூ கல்ச்சர் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மண்ணின் தன்மைகளைப் பகுத்தாய்ந்து, அதனை வளப்படுத்தும் வழிமுறைகளைக் குறிப்பிடும் மண் நல அடங்கல் கணிப்பொறி மூலம் தயாரிக்கப்பட்டு, முன்னோடியாக மூன்று ஒன்றியங்களில் முப்பத்தெட்டாயிரம் நில உடைமையாளர்களுக்கு வழங்கப்பட்டது.

கடந்த நான்கு ஆண்டுகளில் 23.467 குழாய்க்கிணறுகள், 13,614 வடிமுனைக்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் 98,147 ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி கிட்டியுள்ளது. 1,69,467 ஏக்கர் நிலங்களில், பாசனம் நிலைப்படுத்தப்பட்டுள்ளது.

மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியின் அரசு பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு நமது மாநில நீர் வளப் பற்றாக்குறையைக் கருத்திற்கொண்டு தொலைநோக்குப் பார்வையோடு, சிக்கனப் பாசன முறையான சொட்டு நீர்ப்பாசனத்தை அறிமுகப்படுத்த சீரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. கடந்த நான்கு ஆண்டுகளில் ரூ.10.77 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது. இதன் பலனாக 2,22,882 ஏக்கர் பரப்பில் சொட்டு நீர்ப்பாசனம் அமைக்கப்பட்டுள்ளது.

கரும்பு, தென்னை, எணணெய்ப்பனை, தோட்டக்கலைப் பயிர்கள் ஆகியவற்றிற்கான நுண்ணிய பாசன முறைகள் மிகப் பரவலாக விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளன.

இந்திய அளவில், ஏழாம் நிலையிலிருந்து தமிழகம் சொட்டு நீர்ப்பாசன அறிமுகத்தில், இன்று மகாராஷ்டிராவுக்கு அடுத்தபடியாக இரண்டாம் இடத்திற்கு உயர்ந்துள்ளது.

சுழற்சிப் பாசன முறைத் திட்டத்தில், கம்பம் பள்ளத்

தாக்கு, கோதையாறு, சித்தார் பட்டணங்கால் ஆகிய பகுதிகளில், முழுமையான பாசனம் கிடைத்திடவும், பாசன நீர் திறம்பட, சிக்கனமாகவும், சீர்பட நிர்வகிக்கப்படும் வகையிலும் திட்டப் பணிகள் 46.74 கோடி ரூபாய்ச் செலவில் தொடக்கப் பட்டுள்ளன.

1.96 கோடி ரூபாய்ச் செலவில் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு டீசல் என்ஜின்களும், மிகு திறன் நீர்ப்பாசனச் சாதனங்களும் வழங்கப்பட்டுள்ளன.

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களைப் பயன்படுத்திக் கொள்ளும் விவசாயிகள் மரணமடைந்தாலோ, அல்லது விபத்துக் காரணமாக ஊனமடைந்தாலோ, அவர்களுக்கு மொத்தமாக ஒரே தவணையில் 25,000 ரூபாய் கிடைக்கும் இலவச ஈட்டுறுதித் திட்டம்.

மூன்று இலட்சம் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி விவசாயிகள், உதவிகள் பெற்றுப் பொருளாதார உயர்வு பெறுவதற்கு 15.26 கோடி ரூபாய் செலவில் புதிய திட்டங்கள்.

பெரியார், வட ஆர்க்காடு அம்பேத்கர், பசும்பொன் முத்து ராமலிங்கத் தேவர், திருவண்ணாமலை சம்புவராயர் ஆகிய நான்கு மாவட்டங்களில் 40,000 ஏக்கர் பரப்பு தரிசு நிலங்களை மேம்படுத்துவதற்கு, பன்னிரண்டு கோடி ரூபாய்த் திட்டம்.

## தமிழ்நாடு வணிக மலர்ச்சாகுபடிக் கொள்கை

சென்னை மாநகரில் வேளாண்மை விற்பனை இயக்ககத்துக்கும், தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்திற்கும், 6.5 கோடி ரூபாய் செலவில் பன்மாடிக் கட்டட வளாகம்.



தமிழ்நாடு வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் வேளாண்மைத் தொழில் நுட்பங்களை விவசாயிகளுக்கு விரைந்து கொண்டு செல்லுதல், வேளாண்மை விரிவாக்கத்தைப் பரவலாக்கி வலுப்படுத்துதல், ஆகிய முக்கியப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த மிகப் பெரிய திட்டத்தின் கடந்த நான்கு ஆண்டுச் செயலாக்க காலத்தில், 240 இலட்சம் ரூபாய் செலவில் சென்னை வேளாண்மை இயக்குநரகத்திற்குக் கூடுதல் கட்டடங்களும், 112 இலட்சம் ரூபாய் செலவில் திருச்சி மாநகரில் வேளாண்மை மற்றும் அதன் தொடர்புடைய இதர அலுவலகங்களுக்கான கட்டடங்கள் கொண்ட பெரியதொரு வளாகமும், அதைப்போலவே, 114.50 இலட்சம் ரூபாய்ச் செலவில் திண்டுக்கல், கடலூர் ஆகிய இடங்களில் இணை இயக்குநர் மற்றும் உதவி இயக்குநர் அலுவலகங்களுக்கான 2 வளாகங்களும், 80 இலட்சம் ரூபாய் செலவில் 2 இணை இயக்குநர் அலுவலகக் கட்டடங்களும் 362.25 இலட்சம் ரூபாய் செலவில் 21 உதவி இயக்குநர் அலுவலகக் கட்டடங்களும், ஏற்படுத்துவதற்கான அரசு அனுமதி.

1995-96 மற்றும் 1996-97 ஆகிய ஆண்டுகளில் 1970 இலட்சம் ரூபாய் செலவில், 14 இணை இயக்குநர் அலுவலகங்களுக்கான கட்டடங்கள் மற்றும் 33 உதவி இயக்குநர் அலுவலகங்களுக்கான கட்டடங்கள்.

70 இலட்சம் ரூபாய்ச் செலவில் 140 ஒன்றியங்களில் விவசாயிகள் தகவல் மையம்

## சரித்திரம் தொடரும்

தமிழ்நாடு வேளாண்மை முன்னேற்றத்தில் சாதனைகள் சரித்திரமாக உருக்கொண்டு உயர்ந்து வருகிறது.

இது முடிவான சரித்திரம் இல்லை.

தமிழக வேளாண் பெருங்குடி மக்களின் வாழ்க்கை விடியலுக்குக் கட்டியம் கூறும் முன்னோட்டச் சரித்திரம் ஆகும்.



# ஆட்சிக்குப் புகழ் சேர்க்கும் ஆவின்

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்

**திரு. தே. ஜனார்த்தனன்**

எந்த ஒரு நாட்டின் முன்னேற்றமும், அந்த நாட்டின் கிராமப்புறங்களின் பொருளாதார வளர்ச்சியில்தான் அமைந்துள்ளது என்பது காந்தியடிகளாரின் கருத்தாகும், அதன் அடிப்படையில், சமுதாய வளர்ச்சிக்காக நாள்தோறும் பல புதிய புரட்சிகரமான திட்டங்களை வகுத்து, எல்லாத்துறைகளிலும் செவ்வனே நடத்திவரும் தமிழகத்து விடிவெள்ளி, சமூக நீதி காத்த வீராங்கனை, சாதனைகளைச் சரித்திரமாக்கிடும் பொன்மனத் தலைவி, தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், பால் வளத் துறையிலே பற்பல அரிய திட்டங்களை வகுத்துச் செவ்வனே செயலாற்றி, வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ள விவசாயப் பெருமக்களின் வாழ்விலே ஒளிவிளக்காகத் திகழ்ந்து வருகின்றார்.

ஒப்பிலாத் தலைவியின் சீரிய நல்லாட்சியில் பால்வளம் பொங்கிப் பெருகிடும் பாங்கினைக் கண்டுவருகிறோம். தரத்திற்கொரு பெயரென்றால் அது ஆவின் என்று நிலைபெற்றுள்ளது. தரமே தாரக மந்திரமென்று ஆவின் வழங்கும் பாலும், பால் பொருட்களும் மிகுந்த வேட்புடன் மக்களால் மதிக்கப்பெற்று, நல் வரவேற்பை நாளும் பெருக்கிக் கொண்டிருக்கும் நிலையினை நாடெங்கும் காணுகின்றோம்.

**பால் உற்பத்தி**

தமிழகத்தின் பால் உற்பத்தியைப் பெருக்குவதற்குக் கடந்த நான்கு ஆண்டுகளில், மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவியின் ஒப்பற்ற தலைமையில் சமுதாய முன்னேற்றத்திற்காகப் பாடுபடும் இந்த அரசு, பல்வேறு திட்டங்களைச் செயலாற்றி வருகிறது. 1991 -92-ஆம் ஆண்டு, சராசரியாக நாளொன்றுக்குப் பால் உற்பத்தி 11.36 இலட்சம் லிட்டர் என்ற இலக்கிலிருந்து 1994- 95-இல் பால் உற்பத்தி நாளொன்றுக்கு 14.42 இலட்சம் லிட்டராக உயர்ந்துள்ளது. இது சுமார் 27 விழுக்காடு வளர்ச்சியினை எட்டியுள்ளது. பால் உற்பத்தி மேலும் நாளொன்றுக்கு 16.50 இலட்சம் லிட்டர் என்ற இலக்கினை இந்த ஆண்டு ஜூலை மாத இறுதிக்குள் அடைந்துவிடும்.

**பால் விற்பனை**

நல்ல தரமான பால் தங்கு தடையின்றி நுகர்வோருக்குக்

**உலக வங்கியின் நிதியுதவி தேசிய பால்வள வாரியத்தின் மூலமாகப் பெறப்பட்டு, மூன்றாவது பால் பெருக்குத் திட்டம் சுமார் ரூ.88.238 கோடி மூலதனத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.**

**பெரியார் மாவட்டம் ஈரோட்டில் நாளொன்றுக்கு 30 டன் பால்பொடி தயாரிக்கும் ஆலை ஒன்று ரூ.9 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டு சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.**

**1994-95-ஆம் ஆண்டில் இணையம் ஈட்டிய இலாபம் 6.59 கோடி ரூபாய்.**

கிடைக்கும் பொருட்டு, பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு, தமிழகத்தில் உள்ள எல்லா ஊர்களிலும் தரமான பால் தாராளமாகக் கிடைக்க ஏற்பாடு செய்துள்ளது இந்த அரசு. தமிழ கத்தில் தற்பொழுது நாளொன் றுக்குச் சராசரியாக 14.27 இலட்சம் லிட்டர் விற்பனை செய்யப்பட்டுவருகிறது. இதில் சுமார் 8.24 இலட்சம் லிட்டர் சென்னை மாநகர மக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மற்ற மாநிலங்களின் விற்பனை விலையை ஒப்பிடு கையில், மக்களின் நலன் காக்க அல்லும் பகலும் பாடுபடும் புரட்சித்தலைவியின் சீரிய தலை மையில் செவ்வனே செயல் படும் தமிழகத்தில்தான், பாலின் விற்பனை விலை மிகவும் குறைவாக உள்ளது.

**பால் கொள்முதல் விலை**

நுகர்வோர் நலனில் அக்கறை காட்டும் இந்த அரசு, பால் உற்பத்தியாளர்களின் நலனிலும் அக்கறை கொண்டு, பால் கொள்முதல் விலையைப்பால் உற்பத்தியாளர்கள் தேவைக்கு ஏற்ப, அவ்வப்போது உயர்த்தி வருகிறது. இதனால் பால் உற் பத்தியாளர்கள் பால் உற்பத்தி யைப் பெருக்க வழிவகை செய் துள்ளது இந்த அரசு.

பால் கொள்முதல் விலை கடந்த 20.4.95 முதல் உயர்த்தப் பட்டுள்ளது.

அதன் விவரம் பின்வருமாறு:

| | பழைய விலை | உயர்த்தப்பட்ட விலை |
|---|---|---|
| | (லிட்டர் ஒன்றுக்கு) | |
| பசும்பால் | 5.66 | 6.46 |
| எருமைப் பால் | 6.72 | 7.72 |



**பால் பொருட்கள்**

தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சிக்காகவும் பால் உற்பத்தி யாளர்கள் நல்ல விலையைப் பெறுவதற்காகவும் இந்த அரசு உபரியாக உற்பத்தி செய்யப் படும் பாலைப் பால் பொருட் களாக மாற்றி, நல்ல விலைக்கு இந்தியாவின் பல்வேறு மாநிலங் களில் விற்பனை செய்து வருகிறது.

**மூன்றாவது பால் பெருக்குத் திட்டம்**

உலக வங்கியின் நிதி உதவி தேசிய பால்வள வாரியத்தின் மூலமாகப் பெறப்பட்டு, மூன்றா வது பால் பெருக்குத் திட்டம் தமிழகத்தில் 16 மாவட்டங்களில் சுமார் ரூ.88.238 கோடி மூல தனத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் 1995-ஆம் ஆண்டு முடிவடையும்.

இத்திட்டத்தில் புதிய சங்கங் களைத் தொடங்கவும், மேலும் பால் உற்பத்தியாளர்களைச் சங்கங்களில் சேர்க்கவும், பால் குளிரூட்டும் மற்றும் பால் பதப் படுத்தும் நிலையங்களை நிறுவ வும் சென்னை மற்றும் மாவட் டங்களில் பால் விற்பனையை அதிகரிக்கவும் வழிவகை செய் யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ், சென் னையை அடுத்த சோளிங்க நல்லூரில் நாளொன்றுக்கு 4 இலட்சம் லிட்டர் திறன்கொண்ட புதிய பால் பண்ணை ரூ.24.80 கோடி செலவில் கட்டிமுடிக் கப்பட்டு, சோதனை ஓட்டம் நடைபெற்று வருகின்றது. இந்தப் பால் பண்ணை விரைவில் தொடங்கவிருக்கிறது.

பெரியார் மாவட்டம் ஈரோட் டில் நாளொன்றுக்கு 30 டன் பால் பொடி தயாரிக்கும் ஆலை ஒன்று ரூ.9 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டு, சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

மூன்றாம் பால்பெருக்குத் திட்டத்தின் கீழ் திருவண்ணா மலை- சம்புவராயர் மாவட்டத் தில் உள்ள திருவண்ணாமலை பால் குளிரூட்டும் நிலையம் நாளொன்றுக்கு 30,000 லிட்டரி லிருந்து நாளொன்றுக்கு 1,00,000

**உனக்கு உதவி வேண்டுமா ?**
**அப்படியானால் நீ முதலில் மற்றவனுக்கு**
**உதவி செய்ய வேண்டும்.**

**—எமர்சன்**

இலட்சம் லிட்டராகவும் வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள அனக்காவூர் பால் குளிரூட்டும் நிலையம், நாளொன்றுக்கு 30,000 லிட்டரிலிருந்து 60,000 லிட்டராகவும் பெருக்குமளவில் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளன. தர்மபுரி மாவட்டத்தில் உள்ள கிருஷ்ணகிரி பால் பண்ணை, நாளொன்றுக்கு ஒரு இலட்சம் லிட்டரிலிருந்து 1.50 இலட்சம் லிட்டராக விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

திருச்சியில், நாளொன்றுக்கு 1.50 இலட்சம் தயாரிப்புத் திறன் கொண்ட புதிய பால் பண்ணை கட்டி முடிக்கப்பட்டு, அண்மையில் துவக்கப்பட்டுள்ளது.

சென்னை செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டம் சாலூரில், நாளொன்றுக்கு 30 ஆயிரம் லிட்டர் குளிரூட்டும் திறன் கொண்ட ஒரு குளிரூட்டும் நிலையமும், அதே அளவு திறன் கொண்ட ஒரு குளிரூட்டும் நிலையம் வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டத்தில் உள்ள கொடக்கல்லிலும் உருவாகி வருகின்றன.

செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டம், தென்னார்க்காடு, வடார்க்காடு , சேலம், மதுரை, திருச்சி, கோயம்புத்தூர் பெரியார் மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் பால் பண்ணை மற்றும் குளிரூட்டும் நிலையங்களின் விரிவாக்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த ஆண்டு இறுதியில் இப்பணிகள் நிறைவு பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மூன்றாவது பால் பெருக்குத் திட்ட முடிவில், இப்போது இருக்கும் பால் பதப்படுத்தும் வசதி நாளொன்றுக்கு 19.64 இலட்சம் லிட்டரிலிருந்து 28.63 இலட்சம் லிட்டராக உயர்த்தப்படும். அதே பால் குளிரூட்டும் வசதிகள் நாளொன்றுக்கு 9.07 இலட்சம் லிட்டரிலிருந்து 12.29 இலட்சம் லிட்டராக உயர்த்தப்படும்.

இதேபோல் மூன்றாவது பால் பெருக்குத் திட்ட முடிவில், சென்னை நகரில் தற்போது இயங்கி வரும் 184 தானியங்கிப் பால் விற்பனை நிலையங்கள், 250 ஆக உயர்த்தப்படும்.

மூன்றாவது பால் பண்ணை சோளிங்கநல்லூரில் செயல்படத் தொடங்கியதும், அம்பத்தூர் பால் பண்ணையின் திறன் நாளொன்றுக்கு 3 இலட்சம் லிட்டரிலிருந்து 4 இலட்சம் லிட்டராக விரிவாக்கம் செய்யப்பட்ட பின்பு இணையம் சென்னை நகரில் நாளொன்றுக்கு 9.30 இலட்சம் லிட்டர் பால் விற்பனை செய்யத் திட்டமிட்டுள்ளது.

### ஒருங்கிணைந்த பால்வள மேம்பாட்டுத் திட்டங்கள்

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில், ஒருங்கிணைந்த பால் பண்ணை வளர்ச்சித் திட்டமொன்று தேசியக் கூட்டுறவு வளர்ச்சி நிறுவனத்தின் நிதியுதவியுடன் ரூ.7.05 கோடி மொத்தச் செலவில் 1995- 96-இல் முடிக்கப்படும். 1995 -96-இல் ரூ.4.66 கோடி செலவில் காமராஜர் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த புதிய பால் பண்ணை வளர்ச்சித் திட்டம் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தின் கீழ் திருவில்லிப்புத்தூரில் 50,000 லிட்டர் திறன் கொண்ட புதிய பால் பண்ணைத் திட்டமொன்று தொடங்கப்படும். காக்கலூரிலும், திருவில்லிபுத்தூரிலும் உள்ள பால் குளிர்விக்கும் மையங்களைப் பால் பண்ணைகளாக மாற்றியமைத்தால், இம்மாநிலத்தில் மொத்தப் பால் பதப்படுத்தும் திறன், நாளொன்றுக்கு 26.87 இலட்சம் லிட்டர் என்ற அளவை நடப்பு ஆண்டில் எட்டும்.

### கறவை மாடு கடன் உயர்வு

டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்றபொழுது, கறவை மாடு வாங்கக் கடனுதவி ரூ.3,200 என்ற அளவே இருந்தது. மாறிவரும் பொருளாதாரச் சூழ்நிலைக்கு எற்ப, கறவை மாடுகள் வாங்கும் தொகை உயர்த்தப்படவேண்டும் என்பதை உணர்ந்த தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள், 1992-93-ஆம் ஆண்டில் கறவை மாடு வாங்க 4,500

ரூபாய் வழங்குமாறு உத்தர விட்டார். அதில் 50 சதவிகிதம் மானியம், 50 சதவீதம் வங்கிக் கடன் ஆகும்.

பால் வற்றும் நிலை வரும்போது, ஒரு மாடு மட்டும் வைத்திருப்பது இலாபகரமாக இருந்ததில்லை, எனவே, ஒரு கறவை மாட்டுக்குப் பதிலாக இரு கறவை மாடுகள் என்னும் திட்டத்தை முதன் முதலாக தாயிற் சிறந்த தாயாக விளங்கு கின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கொண்டு வந்தார். கறவை மாட்டின் விலை அதிகரித்துள்ளதையும், பொருளாதார ரீதியாக மேலும் உதவி தேவைப்படுவதையும் உணர்ந்த மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், இந்த ஆண்டு முதல் *(1995 -96)* ஒரு கறவை மாட்டுக்கு 4,500 ரூபாய்க்குப் பதிலாக 6,000 ரூபாய் என்று உயர்த்தித் தர ஆணையிட்டுள்ளார்கள்.




### பால்பண்ணைத் தொழில் நுட்பக் கல்வி

தமிழகத்துப் பால்வளப் புரட்சியில் முக்கியமாக ஈடுபடுகிற வர்கள் பெண்கள். அதற்காகப் பயிற்சி பெறவேண்டுமானால் அவர்கள் அடுத்த மாநிலங் களுக்குத் தான் செல்லவேண்டும் என்கின்ற நிலை.

இந்த உண்மையை முதலில் உணர்ந்தவர் தமிழகத்தில் நமது உயிருக்கு நிகரான மாண்புமிகு முதல்வர் மட்டுமே. அதன் விளைவு இன்று நமது தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பால் பண்ணைத் தொழில் நுட்பக் கல்வியினைத் தமிழகத்திலேயே தொடங்க ஆணையிட்டிருக்கிறார்கள்.

### இணையத்தின் இலாபம்

மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப் பேற்ற ஐந்தாம் ஆண்டிலே அடியெடுத்து வைக்கிற நம் முடைய தமிழக அரசு பால் வளத்துறை தற்போது, இதுவரை காணாத ஈடற்ற இலாபத்தில் நடைபெறுகிறது.

இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பங்கயக் கைகள் பைந்தமிழ் வளர்க்கும் கைகள் மட்டுமல்ல, பால்வளம் காக்கும் கைகளு மல்லவா? எனவே, 1993-94-ஆம் ஆண்டில் 6.13 கோடி ரூபாய் ஈட்டியது தமிழ்நாடு கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் இணை யம்.

உள்ளது சிறத்தல் என்பது வாழ்வின் அடிப்படை மந்திர மல்லவா? *1993 -94*-இல் 6.13 கோடி ரூபாய் இலாபம் என்றால் 1994-95-இல் கூடுதல் இலாபம் பெறவேண்டியது அவசியம். அதன்படி *1994 -95*-ஆம் ஆண்டில் இணையம் ஈட்டிய இலாபம் 6.59 கோடி ரூபாய்.

மாண்புமிகு புரட்சித் தலைவியின் சீரிய தலைமையின் கீழ் செயல்பட்டுவரும் இந்த அரசின் வெண்மைப்புரட்சித் திட்டத்தின் மூலம் தமிழ் நாட்டிலே சுமார் 6 இலட்சம் மகளிர், 5 இலட்சம் தாழ்த்தப்பட்டோர், 12,000 பழங் குடியினர் உட்பட - சுமார் 25 இலட்சம் விவசாயக்குடும்பங்கள் பயனடைகின்றனர். ✻



ஆவின்



# வளமார் வணிகவரித் துறை சாதனைகள்

மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர்

**திரு வி. சத்தியமூர்த்தி**

கடந்த நான்காண்டுக்கு முன்னர், பெருவாரியான மக்களின் பேராதரவுடன், ஆட்சிப் பொறுப்பேற்ற மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு, மக்கள் அரசு, பேரறிஞர் அண்ணா மற்றும் பாரதரத்னா டாக்டர் புரட்சித் தலைவர் ஆகியோரின் வழிநின்று செயல்படும் இணையற்ற இவ்வரசு, வணிக வரித்துறை மூலம் செய்துவரும் சாதனைகளைப் பட்டியலிட்டால் அடங்காது. எனினும், மக்களுக்கு நினைவூட்டும் வகையில், சிற்சில சாதனைகளை வெளியிடுவதில் இத்துறை பெரு மகிழ்ச்சி கொள்கிறது.

**கொள்முதல்- வரி நீக்கம்**

1992-93-ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில், குங்குமம், கண்மை, கோதுமை, கணிப்பொறி சாப்ட்வேர், இணைப்புகளுடன் எட்டு கிராமிற்கு மிகாத தங்கத்தாலி போன்ற பொருட்களுக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டது. மேலும், அதே நிதி ஆண்டில், கீழ்க்கண்ட பொருட்களுக்கு வரிக் குறைப்பு செய்யப்பட்டது குறிப்பிடத் தக்கது..

நெய் மற்றும் பால் பொருட்கள் (வாணிபக் குறியீட்டுச் சட்டத்தின் கீழ் பதிவு இடாதது). குச்சிக் கிழங்கு, சிப்சுகள், மாவு, சேமியா, போலி நகைகள், லேமினேட் செய்யப்பட்ட சாக்குப் பைகள், சில மளிகைப் பொருட்கள், வாடகைச் சீருந்து, பதனிடப்பட்ட தோல் உடைமைகள், வெந்தயம், கிராம்பு முதலியன. தமிழ்நாடு ஜாரி நிறுவனத்திலிருந்து விற்கப்படும் ஜாரிகளுக்கும் கொள் முதல் வரி நீக்கமும் செய்யப் பட்டுள்ளது.

**சுயவரி விதிப்பு முறை 68,000 வணிகர்கள் பயன் பெறும் வகையில் விரிவு படுத்தப்பட்டுள்ளது.**

**கேபிள் தொலைக்காட்சி கேளிக்கை மீதான வரியினை 40 சதவிகிதத்திலிருந்து 20 சதவிகிதமாகக் குறைத்து ஆணையிடப்பட்டுள்ளது.**

**வணிகர்களுக்கு உதவி செய்யும் நோக்கத்திற்காக வணிகர் நல வாரியத்தை அரசு அமைத்துள்ளது.**

**வணிகவரி மாவட்டம்**

விருதுநகர் வணிகவரி மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு புதிதாக சிவகாசியைத் தலைமையிடமாகக் கொண்டு உதவி ஆணையரின் தலைமையில் சிவகாசி வணிகவரி மாவட்டம் தோற்றுவிக்கப் பட்டது.

சென்னை செயலாக்கப் பிரிவில் சுற்றும் படைகளைப் பலப்படுத்தும் நோக்குடன் இரண்டு புதிய துணை வணிக வரி அலுவலர் பணியிடங்களும், ஐந்து புதிய உதவி வணிகவரி அலுவலர் பணியிடங்களும் தோற்றுவிக்கப்பட்டன.

கோவை (தெற்கு) மற்றும் கோவை (வடக்கு), வணிகவரி மாவட்டங்கள் பிரிக்கப்பட்டு, புதியதாக உதவி ஆணையரின் தலைமையில் ஒரு வணிகவரி

மாவட்டம் தோற்றுவிக்கப் பட்டது. வணிகவரி மாவட்டங்கள் கோவை சரகம் - 1 (தெற்கு), கோவை சரகம் - 2 (வடக்கு), கோவை - 3 (புதியது) எனப் பெயரிடப்பட்டது.

வரிவிதிப்பு வட்ட அலுவலகங்களைப் பலப்படுத்தும் நோக்குடன் துணை வணிகவரி அலுவலர்களைத் தலைவராகக் கொண்டு செயல்பட்டு வந்த பத்து வரிவிதிப்பு வட்ட அலுவலகங்களுக்கு, பத்து வணிகவரி அலுவலர் பணியிடங்கள் வழங்கப்பட்டு அவைகள் வணிகவரி அலுவலர் அலுவலகங்களாக உயர்த்தப்பட்டன.

மேல்முறையீட்டு உதவி ஆணையர் அலுவலகங்களில் பணிப்பளுவைச் சீர்படுத்தி, மேல்முறையீடுகளை விரைந்து முடிக்கும் நோக்குடன் சென்னையில் கூடுதலாக ஒரு மேல்முறையீட்டு உதவி ஆணையர் பணியிடம் தோற்றுவிக்கப்பட்டது.

**1993-94-ஆம் ஆண்டுச் சாதனைகள்**

*1993-94*-ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை *12.3.1993* அன்று தாக்கல் செய்யப்பட்டதில், விற்பனை வரிவிதிப்பில் கீழ்க்கண்ட வரிக் குறைப்பு — சலுகைகளை அரசு அறிவித்துள்ளது:

முன்னர் அமலில் இருந்த *17* வரி விகிதங்கள், *9* வரிவிகிதங்களாகக் குறைக்கப்பட்டுள்ளன. பெரும்பாலான பொருட்கள் *5* வரிவிகிதங்களில் கொண்டுவரப்பட்டன. வரிவிகித வாரியாகப் பொருட்கள் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பகுப்பின் கீழ் வகைப் படுத்தப்பட்டன.



சாமானிய மக்களால் பயன்படுத்தப்படும் பெரும்பான்மையான பொருட்களின் மீதான வரிவிகிதம் குறைக்கப்பட்டுள்ளது. உதாரணமாகக் காப்பிக் கொட்டை, மண்ணெண்ணெய், தாவர எண்ணெய்கள், மஞ்சள், மிளகாய், தனியா, சிகைக்காய், புளி, மிளகு, வெல்லம், கோதுமைப் பொருட்கள் கையினால் தயாரிக்கப்பட்ட சோப்புகள் ஆகியவற்றின் மீதான வரி விகிதம் குறைக்கப்பட்டுள்ளது.

இதே போன்று மருந்து வகைகள், பிளாஸ்டிக் பொருட்கள், அலுமினியப் பாத்திரங்கள், உலர் மின்கலன்கள் ஆகிய உபயோகப் பொருட்களின் மீதான வரி விகிதம் குறைக்கப்பட்டுள்ளது.

தொழில்துறை பொருட்கள், இயந்திரங்கள், உபகரணங்கள் கச்சா திரைப்படச்சுருள், எலக்ட்ரோட்ஸ், மற்றும் உருளைகள் மீதான விற்பனை வரிவிகிதம் குறைக்கப்பட்டுள்ளது.

ஒரு இலட்சம் ரூபாய்க்குமேல் விற்பனைத் தொகை இல்லாத அனைத்து வணிகர்களுக்கும் வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இதனால் *60,000* வணிகர்களுக்கும் மேலாகப் பயன்பெறுகின்றனர்.

பொதுவாக, ஒரு சில தனியே குறிப்பிட்ட இனங்களைத் தவிர, துணைப் பொருட்கள், உதிரிகள், கூட்டு உறுப்புகள் ஆகியவற்றின் மீதான வரிவிகிதமும், அவற்றின் மூலப் பொருட்களுக்கான வரி விகிதத்திற்கு இணையாக அமைத்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**உற்பத்திச் செலவுக் குறைப்பு**

இம்மாநிலத்தில் தயாரிக்கப்படும் பொருட்களுக்கான உற்பத்திச் செலவை மேலும் குறைக்கும் வகையில் ஒருசில பெட்ரோலியம் சம்பந்தப்பட்ட பொருட்கள் தவிர எரிசாராயம், நாப்தா, மசகு எண்ணெய், கிரீஸ் அனைத்து வாயு (கேஸ்) உற்பத்தி நிறுவனங்களுக்கும் தேவைப்பட்ட அனைத்து மூலப் பொருட்களுக்கும் பிரிவு *3* (*3*-இன் கீழ்) விதிக்கப்படும் *3* சதவிகிதச் சலுகை வரி, விற்பனைப் பொருட்களுக்கான பேக்கிங் பொருட்கள், பெயர் வில்லைகள் மற்றும் பயன்படு பொருட்கள் ஆகியவற்றிற்கும் விரிவுபடுத்தப் பட்டுள்ளன.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி

அடக்கத்தை உறுதிப் பொருளாகக் கொண்டு போற்றிக் காக்க வேண்டும். அந்த அடக்கத்தைவிட மேம்பட்ட ஆக்கம் உயர்வுக்கு இல்லை. –திருவள்ளுவர்

அவர்கள் அரசில், பணி ஒப் பந்தங்கள் மற்றும் குத்தகை மீதான வரிவிதிப்பு தொர்பாக உச்ச நீதிமன்றம் மற்றும் உயர்நீதி மன்றத் தீர்ப்புக்கிணங்க வரி விதிக்கும் முறை மாற்றியமைக் கப்பட்டுள்ளது. ஏற்கெனவே வரிவிதிக்கப்பட்ட பொருட்கள் மீது மீண்டும் வரிவிதிக்கப்பட மாட்டாது. மேலும், கட்டடப்பணி ஒப்பந்ததாரர்களுக்கு இணக்க முறையில் இரண்டு சதவிகித வரி செலுத்தும் முறை அமலாக் கப்பட்டுள்ளது.

சுய வரிவிதிப்பு முறை **68,000** வணிகர்கள் பயன்பெறும் வகை யில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

ரூபாய் **75,000** வரை விற்பனைத் தொகையுள்ள அனைத்து வணிகர்களுக்கும், வணிகராகப் பதிவு செய்து கொள்வதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

**1992-93**-ஆம் நிதியாண்டில் வசூலிக்கப்பட்ட வரித் தொகை யான ரூ.**3,016.89** கோடி ரூபாயை விட, கடந்த **1993-94**-ஆம் நிதி யாண்டில் **382.40** கோடி ரூபாய் அதிகமாக, அதாவது ரூ.**3,399.29** கோடி ரூபாய் வசூல் செய்து இத் துறை சாதனை படைத்துள்ளது.

வணிகவரித்துறையின் பணி யினை மேம்படுத்தும் வகையில் **1993-94**-ஆம் ஆண்டில் கோவை மாவட்டத்தில் ஆவாரம்பாளை யம் மற்றும் சேலம் கோட்டத்தில் அரிசிப்பாளையம் ஆகிய இரண்டு புதிய வரிவிதிப்பு வட்டங்கள் ஏற்படுத்தப்பட்டுள் ளன. மேலும், சென்னையில் புதிய வணிகவரிச் சரகம், அதா வது **11**-வது சரகம் ஏற்படுத்தப் பட்டுள்ளது.

விற்பனைவரிமேல்முறையீட்டு வழக்குகளை முடிக்கும் பணி யினைத் துரிதப்படுத்தும் வகை யில் இரண்டு மேல்முறையீட்டுத் துணை ஆணையர் பதவியினை இவ்வரசு ஏற்படுத்தியுள்ளது.

### சோதனைச் சாவடிகள்

செயலாக்கப்பிரிவின் பணி யினை மேம்படுத்தும் வகையில், **1993-94**-ஆம் ஆண்டில் கணியூர் (கருமத்துப்பட்டி) வெளிவரி மற்றும் பள்ளிப்பாளையம் ஆகிய இரண்டு சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட் டுள்ளன.

தமிழ்நாட்டிலிருந்து பாண்டிச் சேரி மற்றும் காரைக்காலுக்கும், மேலும் அந்த மாநிலத்திலிருந்து தமிழ்நாட்டிற்கும் எடுத்துச் செல்லப்படும் பொருட்களைத் தணிக்கை செய்வதற்காகப் பாண்டிச்சேரியைச் சுற்றி **8** சோதனைச் சாவடிகளும், மற்றும் காரைக்காலைச் சுற்றி **3** சோதனைச் சாவடிகளும் அமைத்திட அரசு சமீபத்தில் உத்தரவிட்டுள்ளது. இது செய லாக்கப் பிரிவின் பணியினைத் துரிதப்படுத்துமென எதிர்பார்க் கப்படுகிறது.

மேலும், **1993-94**-ஆம் ஆண் டில் திருவள்ளூர், பூவிருந்த வல்லி, செங்கை ஆகிய இடங் களைத் தலைமையிடமாகக் கொண்ட கூடுதல் சுழற் படைகள் அமைக்கப்பட்டுள்ளன.

வணிகவரித்துறை அலுவல கங்களை அரசின் சொந்தக் கட்டடங்களில் அமர்த்தி பணி யின் தொடர்ச்சியாக வாணியம் பாடியிலும், ஆரணியிலும் உள்ள வணிகவரி கட்டடங்களைத் தலா ரூ.**20** இலட்சம் மதிப்பீட்டில் கட்டடங்கள் கட்டவும், பன்னாரி யில் உள்ள சோதனைச் சாவ டிக்கு ரூ.**3.70** இலட்சம் மதிப்பீட் டில் நிரந்தரக் கட்டடம் கட்டவும் **1993**-இல் அனுமதி அளிக்கப் பட்டு கட்டடங்கள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

இவ்வரசு வணிகர் நலவாரி யத்தின் மூலம் வணிகர்களுக்குப் பல உதவிகள் செய்துவருவது தெரிந்ததே. கடந்த **1993-94**-ஆம் ஆண்டில் இவ்வாரியம் மேலும் கணிசமான புதிய குறிப்பிடத் தக்க உறுப்பினர்களைச் சேர்த் துள்ளது.

காலந்தள்ளி வரி செலுத்தும் சலுகை உட்படப் பல்வேறு விற்பனை வரிச் சலுகைகள் தொழிலகங்களுக்கு இவ்வரசு வழங்கி வருவது தெரிந்ததே. இவ்வகையில் **1993-94**-ஆம் ஆண்டில் ரூ.**85.76** கோடி வரி யினைக், காலம் தள்ளி வரி செலுத்தும் சலுகையாகத் தொழில கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

காலந்தள்ளி வரி செலுத்தும் திட்டத்தின் கீழ் தொழிலகங்கள் ஒதுக்கி வைக்கும் வரித் தொகை யினைத் தொழிலகங்களின் வருமானமாகக் கணக்கில்

கொண்டு, வருமான வரியினர் வரிவிதிக்க முயற்சித்ததைத் தொடர்ந்து, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் மக்கள் அரசு அவ்வகைத் தொகை வரியாகச் செலுத்தப்பட்டதாகக் கருதி, அதைத் தொழிகங்களுக்குக் கடனாக அளித்தாகக் கொள்ளும் வகையில் ஆணை பிறப்பித்து, மேற்படி தொகையின் மீது வருமான வரி விதிப்பைத் தடுத்து, பல நலிந்த தொழிலகங்களைக் காத்து வருகிறது.

மேலும் **1994-95-**ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் சில பொருட்களுக்கு வரிவிகித்து, மாண்புமிகு சட்டப்பேரவையில் இவ்வரசு அறிவித்திருந்தாலும், மக்களின் வேண்டுகோளுக் கிணங்க, அரசிற்கு வருவாய் இழப்பு ஏற்பட்டாலும் அதைக் கருத்திற் கொள்ளாமல் பல பொருட்களுக்குப் பூரண வரி விலக்கு அறிவித்துள்ளது மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியின் கீழமைந்த மக்களரசு தான்.

உதாரணமாக பாடப்புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள் உள்ளிட்ட பல்வேறு புத்தகங்கள், தென்னங்கீற்று, விறகு போன்ற பொருட்களுக்கு வரிவிலக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

பல்வேறு வணிகர் சங்கங்கள் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் அவர்களை நேரில் சந்தித்து, ஆறாம் அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ள பொருட்களை முதல் அட்டவணைக்குத் திரும்ப பெறுமாறு வேண்டுகோள் விடுத்தனர். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களது கோரிக்கைகளைக் கனிவுடன் பரிசீலித்து, அனைத்து வகைத் தாவர எண்ணெய்கள், ஏலக்காய், முன்பதிவு செய்யப்பட்ட கேசட்டுகள் (ஆடியோ மற்றும் வீடியோ) மற்றும் காம்பேக்ட் டிஸ்க், சூட்கேஸ், பிரீப் கேஸ் போன்ற பல பொருட்களை ஆறாம் அட்டவணையிலிருந்து முதல் அட்டவணைக்கு மாற்றி வணிகர்களின் கோரிக்கையை நிறைவேற்றினார்.

## திரையரங்குகளுக்குச் சலுகைகள்

மேலும், திரையரங்கு உரிமையாளர்களின் நெடுநாளைய கோரிக்கையான காட்சிகளுக்கான அனுமதிக் கட்டணத்தைத் திரையரங்குகளே நிர்ணயிக்கும் உரிமையை – அதிகாரத்தை மாவட்ட ஆட்சியரிடமிருந்து திரையரங்குகளுக்கு மாற்றம் செய்து இவ்வரது ஆணை பிறப்பித்துள்ளது. எனினும், மூன்றாம் வகுப்பு அல்லது கடைசி வகுப்பிற்கான அனுமதிக் கட்டணத்தை உயர்த்தவோ, அவ்விருக்கைகளின் எண்ணிக்கையைக் குறைக்கவோ ஆன அதிகாரத்தை மாவட்ட ஆட்சியரிடமே தொடர்ந்து தக்கவைக்கச் செய்த தன் மூலம் பாமர மக்கள் இவ்வாணையினால் பாதிக்கப்படாமல் செய்திருப்பது இங்கு குறிப்பிடப்பட வேண்டிய ஒன்றாகும்.

இதுபோன்றே, வணிகர்களின் பல முறையீடுகளின் அடிப்படையில் பின்வரும் பொருட்களுக்கு **28.9.94** முதல் மீண்டும் முழு வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

கோரைப்புல், உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட பட்டுப்புழு வளர்ப்புப் பொருட்கள், உலர்த்திய தேங்காய், துடைப்பம், எழுதும் பென்சில்கள், வண்ணப் பென்சில்கள், அழிப்பான்கள், கூர் சீவிகள், பேனாக்கள், உருள் குழை முனைப் பேனாக்கள், மைக்குச்சிகள், எபோனைட் பேனாக்கள், எபோனைட் உருள் குழை முனைப் பேனாக்கள், மை வில்லைகள் உள்ளிட்ட எழுதும் மை, துருப்பிடிக்காத இரும்பு எழுதும் முனைகள், கரும் பலகைகள், துடைப்பான்கள், வடிவியல் பெட்டிகள், பகுத்தாய்வுப் பெட்டிகள், பகுத்தாய்வு பெறுவதற்கான அல்லது வரைவதற்கான பிற கருவிகள், தைக்கப்பட்ட கைத்தறி மற்றும் ஆலையில் தயாரிக்கப்பட்ட கைக்குட்டைகள், பனை வெல்லம், அடுப்புக்கரி, **50** கிராம் எடைக்குட்பட்ட சிப்பம் கட்டப்பட்ட ஊறுகாய்கள் மற்றும் அனைத்து வகையான அப்பளங்களும், வடாம்களும் அடங்கும்.

## 1995-96-ஆம் ஆண்டு சாதனைகள்

நடப்பு நிதியாண்டில் (**1995-96**) புதிய வரிகள் ஏதும் விதிக்காமல், பல்வேறு பொருட்களின்மேல் விதிக்கப்பட்டிருந்த வரியை விலக்கிக் கொண்டும், குறைத்தும் சமர்ப்பிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கை ஏழை எளிய மக்களின் நலம் நாடும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் குறிப்பிடத்தக்க சாதனைகளில் ஒன்றாகும். ஏறத்தாழ பதின்மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர், புதிய வரிகள்

ஏதும் விதிக்கப்படாமல் பட்ஜெட் சமர்ப்பித்த டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் சாதனையை அறிஞர் பெரு மக்களும், வணிகர்களும், பொது மக்களும் வரவேற்றுப் பாராட்டி யுள்ளனர்.

**வரிச் சலுகைகள்**

தொழிலாளர்கள், நடுத்தர மற்றும் பாமர மக்கள் பயன் பெறும் வகையில் இதுவரை செயல்பட்டு வந்த சிற்றுண்டிச் சாலைகள், உணவகங்கள் மற்றும் நட்சத்திர அந்தஸ்து இல்லாத அனைத்து உணவகங்களில் விற்பனை செய்யப்படும் உணவு வகைகளின் மீதான விற்பனை வரி இவ்வாண்டுமுதல் விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளது. இதனால் அரசுக்கு ரூ.20 கோடி நிதியுழப்பு ஏற்படுமென்றாலும், இதனால் சுமார் ஒரு கோடி மக்கள் பயனடைவார்கள் என்பதைக் கருத்திற்கொண்டு அரசு வரி விலக்கு அளித்துள்ளது.

**இதர வரிவிலக்குகள்**

பாமர மக்கள் மற்றும் சிறார் களின் தேவைகளைக் கருத்திற் கொண்டு மெழுகுவர்த்திகள், இரப்பராலான விளையாட்டுப் பந்துகள், எண்ணெயில் எரியும் அரிக்கேன் விளக்குகள், அவற்றின் திரிகள், மற்றும் கண்ணாடிக் கூடுகள், அழுத்த விசையில்லாத மண்ணெண்ணெய் அடுப்புகள், முதலியவற்றிற்கு வரியிலிருந்து முழுவதுமாக விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. மேலும், விவசாயிகள் பயன் பெறும்வகையில் விவசாயச் சமன்படுத்தும் கருவி, களை எடுக்கும் கருவி, விலங்கினால் இழுக்கப்படும் சமன் செய்யும் கருவி ஆகியவற்றிற்கும் வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

மேலும்,கேபிள் தொலைக்காட்சி மீதான கேளிக்கை வரியினை 40 சதவிகித்திலிருந்து 20 சதவிகிதமாக 1.4.95 முதல் குறைத்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதனால் தமிழக அரசுக்கு ரூ.8.50 கோடி ரூபாய் வருவாயிழப்பு ஏற்படும்.

**மின்னணுக் கருவிகள்**

அட்டைத்தாள்களினால் செய்யப்பட்ட பெட்டிகள் மீதான 8 சதவிகித வரி நெளிவுற்ற பெட்டிகள் மீதான 5 சதவிகித வரிக்கு இணையாக, 5 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. விரிவடைந்துவரும் மின்னணுத் துறையில் பயன்படுத்தப்படும் கொள்திறன் கருவிகள் (Capacitors) மற்றும் மின்விசை மாற்றமைவுகள் (Transformers) மீதான 12 சதவிகித வரிவிகிதத்தினை மின்னணுப் பொருட்களுக்கு இணையாக 3 சதவிதிகமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

லாட்டரிச் சீட்டு மீது விதிக்கப்பட்ட வரிவிதிப்பு இனிமேல் இணக்கத் தொகையாக (Compounded amount) வசூலிக்க முடிவு செய்து அமல்படுத்தப்பட உள்ளது. இவ்வகை வரிவிதிப்பு முறை பரிசுச் சீட்டின் மீதான வரி வருவாயை அதிகப்படுத்தும் எனவும், பரிசுச் சீட்டுகளின் மீதான வரிவிதிப்பில் காணப்படும் குறைபாடுகளைக் களையும் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது.

மேலும், புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ் வாங்கப்படும் பருப்புவகைகள், எண்ணெய் மீதான விற்பனை வரிக்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது போல், மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கு வரிவிதிப்பு செய்யப்படும் தாய்ப்பால் அருந்தும் குழந்தைகளுக்கு அளிக்கப்படும் மாற்று உணவு மீதான விற்பனை வரிக்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

**வரிவசூல் தள்ளிவைப்பு**

புதிய தொழில்களை ஊக்குவிக்கவும், நலிவுற்ற தொழில்களுக்குப் புத்துயிர் அளிக்கவும், வரித் தள்ளுபடி மற்றும் வரி வசூல் தள்ளி வைப்பு ஆகிய சலுகைகளை டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் இவ்வரசு அளித்து வருகிறது. இத்திட்டங்களின் கீழ் 1994-95-ஆம் ஆண்டு 28.2.1995 வரை மட்டும் ரூ.143.09 கோடிக்குச் சலுகை அளிக்கப்பட்டுள்ளது.

*1991-92*-லிருந்து இதுவரை மேற்கண்ட திட்டங்களின் கீழ் சலுகை அளிக்கப்படத் தொகை ரூ.362.94 கோடியாகும். இந்த வரி தள்ளிவைப்புத் தொகை வசூலிக்

---

புதிய புதிய நூல்களைப் படிப்பதும், புதிய சிந்தனைகளைத் தூண்டும் வகையில் ஏற்படும் உண்மையான செயலுமே கல்வியின் பயன்.

—டாக்டர் மு. வரதராசனார்.

கப்பட்டதாகக் கருதப்பட்டு, தொழில்களுக்கான முதலீட்டிற்கும், விரிவாக்கத்திற்கும் வட்டியில்லாக் கடனாக வழங்கப்பட்டதாகக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளது.

> **நாணயத்தின் ஒரு பக்கம் கலாச்சாரம் என்றால், மறுபக்கம் மொழி. ஒவ்வொரு கலாச்சாரத்திற்கும் ஓர் எல்லைக்கோடு இருக்கின்றது.**
> **—டாக்டர் எம்.ஜி.ஆர்.**

### வணிகர் நல வாரியம்

வணிகர்களுக்கு உதவி செய்யும் நோக்கத்திற்காக வணிகர் நல வாரியத்தை அரசு அமைத்துள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இவ்வாரியத்தின் தலைவராகவுள்ளார். இவ்வாரியத்தின் மூலம் நலிவுற்ற வணிகர்களின் குடும்பங்களுக்கு இவ்வரசு பல்வேறு உதவிகளைச் செய்துவருகிறது. உதாரணமாக, வருமானவரி செலுத்தும் அளவிற்கு வருமானம் இல்லாத அனைத்து உறுப்பினர்களும் வாரியத்தின் கீழ்க்கண்ட உதவிகள் பெறலாம்:

1. இருதய அறுவைச் சிகிச்சை மற்றும் சிறுநீரக அறுவைச் சிகிச்சை ஆகியவைகளுக்கு மருத்துவச் சான்றின்பேரில் ரூ.20,000.

2. வாரியத்தின் உறுப்பினராக உள்ள பொருளீட்டும் நபர் இறந்தால் அவரது குடும்பத்திற்குக் குடும்ப நலநிதி ரூ.20,000.

3. நலிவுற்ற உறுப்பினர்களின் குழந்தைகள் கல்வியினைத் தொடர்ந்து முடிக்க உதவி.

4. உடல் ஊனமுற்ற வாரிய உறுப்பினர் அல்லது அவர்களின் குடும்பத்தில் ஒருவருக்கு மூன்று சக்கர வண்டி.

இவை தவிர, வாரிய உறுப்பினர்களின் குழந்தைகள் 10 மற்றும் 12-ஆம் வகுப்புகளில் முதல் மதிப்பெண் பெற்றால் ரூ.5,000-, இரண்டாம் மதிப்பெண் பெற்றால் ரூ.3,000 மற்றும் மூன்றாம் மதிப்பெண் பெற்றால் ரூ.2,000 பரிசாக வழங்கப்படுகிறது. அதுமட்டுமல்லாமல், விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றி பெறும் உறுப்பினர்களின் மகன் மகளுக்கு அவர்கள் சர்வதேச அளவில் வெற்றி பெற்றிருப்பின் ரூ.25,000-மும் அகில இந்திய அளவிலெனில் ரூ.10,000 மாநில அளவில் நடைபெறும் போட்டிகளில் வெற்றி பெற்றால் ரூ.5,000 வழங்கி அவர்களை ஊக்குவித்து வருகிறது.

### கணிப்பொறி மையம்

வணிகவரித் துறையின் கொள்கைகளைத் திறம்பட வடிவமைக்கவும், நிர்வாகத் திறமையை மேம்படுத்தவும் தேவையான விவரங்களைச் சேகரித்துத் தொகுத்து, முறைப்படுத்தி, தகவல்கள் பெற்றுக்கொள்ள கணிப்பொறி மையம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. உயர்மட்ட விற்பனைவரிச் சீராய்வுக்குழு தனது அறிக்கையில் அதிவேகமாக வளர்ந்துவரும் வியாபாரத் துறைக்கு ஈடுகொடுக்கவும், பல்வேறு உத்திகளைப் பயன்படுத்தி வரி ஏய்ப்புச் செய்வோரை உறுதியுடன் சமாளிக்கவும், காலதாமதம் செய்யாமல் வணிகவரிகள் பற்றிய தகவல்கள் சேகரிக்கும் முறையைக் கணிப்பொறி மயமாக்குதல் மூலம் செய்யவேண்டுமென்ற பரிந்துரையை ஏற்று தற்போதுள்ள கணிப்பொறி மையத்தின் அமைப்பை மேம்படுத்துவதற்கு ரூ.35 இலட்சங்கள் அனுமதித்து துறையின் வளர்ச்சிக்கு அடிகோடியுள்ளது இவ்வரசு.

புள்ளி விவரத் தொகுப்பு மற்றும் தகவல்கள் வெளிப்படுத்தும் முறையைப் படிப்படியாகப் பரவலாக்கும் பொருட்டு, முதல் கட்டமாக கோவை, திருச்சி மற்றும் மதுரைக் கோட்டங்களில் கணிப்பொறிகள் அமைத்து அவை இயங்கி வருகின்றன.

அரசின் பல்வேறு மக்கள் நலத்திட்டங்கள் மற்றும் பணிகளுக்கு இத்துறை குறைந்த செலவில் பெருமளவு நிதி ஆதாரம் ஈட்டித் தருகிறது. இத்துறையின் மூலம், பொது மக்களைப் பாதிக்காத வண்ணமும், ஏழை, எளிய, நடுத்தர மக்கள் பயன்பெறும் வண்ணமும் வரிவிதிக்கப்பட்டு வருவதை நாட்டு மக்கள் நன்கறிவர்.

மேலும், மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் ஒப்பற்ற தலைமையின் கீழ் தமிழக அரசு பொதுச்சேவையில் ஈடுபட்டு வரும் தொண்டு நிறுவனங்கள், அனாதை விடுதிகள், ஆசிரமங்கள் பலவற்றிற்கு விற்பனைவரி மற்றும் நுழைவு வரிகளிலிருந்து பூரண வரிவிலக்கு அளித்துவருகிறது. இவ்வாறாகக் குறைந்த வரிவிகிதங்களும், ஏராளமான வரிவிலக்குகளும் அளித்துவரும் தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் தன்னலமற்ற சமூகப் பணிகள் இன்றுபோல் என்றும் தொடரும் என்பது திண்ணம்!. ✻



# தொழில் வளர்ச்சியில் முன்னேற்றம்

மாண்புமிகு தொழில்துறை அமைச்சர்
**திரு ம. சின்னசாமி**

இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 1991 ஆம் ஆண்டு ஜூன் திங்களில் தமிழக அரசின் தலைமைப் பொறுப்பை ஏற்றார்கள். தமிழகத்தில் தொழில் வளர்ச்சிக்குப் பல தடைகள் இருந்ததைக் கண்டு அந்தத் தடைகளைக் களைந்து, தமிழகம் தொழில் வளர்ச்சியில் வேகமான முன்னேற்றத்தை அடைய வேண்டுமென்ற நோக்குடன், எல்லா வகைத் தொழில்களைச் சார்ந்த தொழில் அதிபர்களையும் அழைத்து, அவர்களது கருத்துக்களைக் கேட்டறிந்தார்கள். தொழில் வளர்ச்சிக்குத் தடையாக இருந்த கொள்கைகளை மாற்றவும், புதிய தொழில் தொடங்குவதற்குச் சுமுகமான, அமைதியான சூழ்நிலையை உருவாக்குவதற்கும் நலிந்த தொழில்களை உயிர்ப்பிக்கவும் தேவையான ஊக்கச் சலுகைகள், தொழில் அடிப்படை வசதிகள் மேம்பாடு ஆகிய திட்டங்களுடன் 1992 ஜனவரியில் தமிழ்நாட்டின் "புதிய தொழில் கொள்கையை" டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் அறிவித்தார்கள்.

இந்தப் புதிய தொழில் கொள்கை - விற்பனை வரி விலக்கு, விற்பனை வரி வசூலைத் தள்ளி வைத்தல், முதலீட்டு மானிய உதவி, சலுகை மின் கட்டணம் ஆகிய தொழில் ஊக்க உதவிகளை அளிக்க வகை செய்கிறது. மேலும் தொழில் வளர்ச்சிக்குத் தேவையான தடையில்லாத் தண்ணீர் மற்றும் மின்சார விநியோகம், தொலைத் தொடர்பு வசதி, மேம்படுத்தப் பட்ட சாலைகள் இவைகளுடன் கூடிய புதிய தொழில் வளாகங்களை உருவாக்கவும் இந்தப் புதிய தொழில் கொள்கை வகை செய்கிறது.

**சென்னை அருகில், சோழிங்கநல்லூரில் சுமார் 800 ஏக்கர் நிலப்பரப்பில், ரூ.450 கோடி செலவில், நவீன தொழில் அடிப்படை வசதிகள் கொண்ட சென்னைத் தொழில் பூங்காத் திட்டம் உருவாக்கப்பட்டு வருகிறது.**

**இதுவரை மொத்தம் ரூ.15,757.74 கோடி மதிப்புள்ள 54 புதிய தொழில் திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டு, செயல் படுத்தப்பட்டு வருகின்றது.**



# தொழில் துறையில் முன்னணி!

பல்வேறு மாநிலங்களில் உள்ள குழப்பமான சூழ்நிலையை ஒப்பிடும்போது, தமிழ்நாட்டில் உள்ள அமைதியான சட்டம் ஒழுங்கு நிலைமை ஆர்வமுள்ள தொழில் முதலீட்டாளர்களுக்கு ஊக்கம் அளிப்பதாக உள்ளது.

தொழில் உற்பத்தி, தரம், கடன் வசதி போன்ற பல்வேறு இனங்களில் அகில இந்தியாவில் தமிழகம் மற்ற மாநிலங்களை விட முன்னணியில் உள்ளது. குறிப்பாக, சிறு தொழில்களின் ஆண்டு வளர்ச்சி 15.25 சதவிகிதமாக அதிகரித்துள்ளது.

தொழில் துறையில் எங்கள் முன்னேற்றம் மனநிறைவு அளிப்பதாக இருந்தாலும், இப்போதுள்ள நிலையை அப்படியே தக்க வைத்துக் கொள்ள வேண்டுமென்று மட்டும் நினைக்காமல், தொழில் வளர்ச்சியை விரிவுபடுத்தி, தமிழ்நாட்டைத் தொழில் துறையில் இந்தியாவிலேயே முதல் இடத்துக்குக் கொண்டு வரவேண்டும் என்பதில் முனைப்பாக இருக்கிறோம்.

–"புரட்சித்தலைவியின் முழக்கம்"

தொகுதி - 2-லிருந்து

SIPCOT எனப்படும் மாநிலத் தொழில் முன்னேற்ற நிறுவனம் இராணிப்பேட்டை, ஓசூர், கும்மிடிப்பூண்டி, கடலூர், மானாமதுரை, புதுக்கோட்டை, தூத்துக்குடி ஆகிய இடங்களில் ஏற்கெனவே உருவாக்கி வெற்றிகரமாகச் செயல்படுத்தி வருகிறது. தொழிலில் பின்தங்கிய திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தில், செய்யாறு என்னுமிடத்தில் சுமார் 600 ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு நவீன தொழில் வளாகத்தை SIPCOT நிறுவனம் அமைத்து வருகிறது. இந்த நிறுவனம் கும்மிடிப்பூண்டியில், "ஏற்றுமதி வளர்ச்சி தொழில் பூங்கா" ஒன்றை ரூ.20 கோடி செலவில் 211 ஏக்கர் பரப்பில் அமைத்து வருகிறது. புதிய தொழில் கொள்கையின் அடிப்படையில் தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் (TACID) 1992-ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. இந்த நிறுவனம், பெரியார் மாவட்டம் பெருந்துறையிலும், திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் கங்கைகொண்டானிலும், மத்திய மாநில அரசு நிதி உதவியுடன் நவீன தொழில் வளர்ச்சி மையங்களை அமைத்து வருகிறது. TACIDநிறுவனம் தருமபுரி மாவட்டம் பருகூரிலும், திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தில் நிலக்கோட்டையிலும், செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம் ஊத்துக் கோட்டையிலும், இராணிப்பேட்டை மூன்றாம் பகுதி ஆகிய இடங்களில் நவீன தொழில் வளாகங்களை மாநில அரசு நிதி உதவியுடன் உருவாக்கி வருகிறது. பனியன் ஏற்றுமதிக்குப் புகழ் பெற்ற திருப்பூர் நகரத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும், நவீனப்படுத்தவும் ரூ.653.20 கோடி செலவில் ஒரு அடிப்படை வசதிகள் மேம்பாட்டுத் திட்டத்தை நிறைவேற்றும் நோக்குடன், TACID நிறுவனம் திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கத்துடனும், பம்பாயிலுள்ள 'அடிப்படை வசதிகள் வாடகை மற்றும் நிதிச் சேவைகள் நிறுவனத்துடனும்' ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டு உள்ளது. இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காகத் "திருப்பூர் பகுதி மேம்பாடு நிறுவனம்" என்ற பெயரில் ஒரு நிறுவனம் அமைக்கப்பட்டு இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### பெரிய முதலீடுகள்

சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை நிறுவனத்துடனும், SPIC நிறுவனத்துடனும் கூட்டாகச் சேர்ந்து ரூபாய் 2,000 கோடி செலவில் அரோமேடிக் தொழிற்சாலையை அமைக்க மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டு உள்ளது. ஜெயங்கொண்ட சோழபுரத்தில் கிடைக்கும் பழுப்பு நிலக்கரியைக் கொண்டு 1,500 மெகாவாட் மின் உற்பத்தித் திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது. சென்னை அருகில் சோழிங்கநல்லூரில் சுமார் 800 ஏக்கர் நிலப்பரப்பில் ரூபாய் 450 கோடி செலவில், நவீன தொழில் அடிப்படை வசதிகள் கொண்ட சென்னை

தொழில் பூங்காத் திட்டம் உருவாக்கப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தை நிறைவேற்ற SPIC நிறுவனமும், சென்னை பாலாஜி குரூப் நிறுவனமும், தொழில் முனைவோர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இவர்கள் சிங்கப்பூர் மலேசியா நாடுகளிலிருந்து இந்தத் திட்டத்தில் பங்கு பெறத் தகுதியான தொழில் நிறுவனத்தைக் கண்டறிய உள்ளனர். இந்தத் தொழில் பூங்கா ஆசியா பசிபிக் பகுதியில் எல்லா நவீன வசதிகளையும் கொண்ட ஒரு எடுத்துக்காட்டுத் தொழில் பூங்காவாக விளங்கும்.

## புதிய தொழில் முதலீடுகள்

இந்த அரசு பதவியேற்ற காலத்திலிருந்து இதுவரை, மொத்தம் ரூபாய் 15,757.74 கோடி மதிப்புள்ள 54 புதிய தொழில் திட்டங்களுக்கு அனுமதி மாநில அரசால் வழங்கப்பட்டுச் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. தமிழ்நாடு காகித ஆலை நிறுவனத்தின் செயல்திறன் ஆண்டு ஒன்றுக்கு 90,000 மெட்ரிக் டன்னாக இருந்தது. இந்தக் காகித ஆலையின் செயல்திறனை இருமடங்காக்க, ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 1,80,000 மெட்ரிக் டன் காகித்தை உற்பத்திய செய்ய ரூபாய் 525 கோடி செலவில் திட்டம் செயல்படுத்தப்பட்டு முடியும் தருவாயில் உள்ளது. இந்தக் காகித ஆலை நிறுவனம் ரூபாய் 50 கோடி செலவில் திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில தேவர்குளம் மற்றும் பெருங்குடி கிராமங்களில் 15 மெகாவாட் காற்றாலைத் திட்டம் ஒன்றை அமைத்துள்ளது.

## நேரடி நிதியுதவி

1991 ஆம் ஆண்டு முதல் இதுவரை SIPCOT நிறுவனம் 276 தொழில் நிறுவனங்களுக்கு ரூபாய் 280.28 கோடி காலக் கடன்கள் வழங்கியுள்ளது. 1995-96-இல் ரூபாய் 65 கோடி கடன்கள் வழங்கப்பட உள்ளது. இவைகள் மூலம் தொழில் முதலீடுகள் அதிகரித்து வேலைவாய்ப்பும் பெருகி உள்ளது. SIPCOT நிறுவனம் நீண்ட காலக் கடன்களை வரையறுக்கப்பட்ட நிறுவனங்களுக்கு அதிகபட்சமாக 300 இலட்சங்கள் வரையிலும், வழங்கவும், கூட்டு நிறுவனங்களைப் பொறுத்த வரையில் ரூபாய் 90 இலட்சங்கள் வரை வழங்கவும் திட்டமிட்டுள்ளது.

## தமிழ்நாடு தொழில் வழிகாட்டி மற்றும் ஏற்றுமதி முன்னேற்ற மையம்

தொழில் தொடங்குபவருக்குத் தேவையான எல்லாத் தகவல்களையும் அளிக்க தமிழ்நாடு தொழில் வழிகாட்டி மற்றும் ஏற்றுமதி வளர்ச்சி மையம் (Guidance) ஒன்றை இவ்வரசு அமைத்துள்ளது. அரசின் தொழில் கொள்கைகள், நடைமுறைகள், ஊக்கச் சலுகைகள், ஏற்றுமதி விவரங்கள் ஆகியவை அடங்கிய பல்வேறு வெளியீடுகளை இம்மையம் தயாரித்துள்ளது. வெளிநாடு வாழ் இந்தியர்கள் மற்றும் நேரடி வெளிநாட்டு முதலீடுகளுக்கு இம்மையம் ஒரு பாலமாகச் செயல்படுகிறது. மேலும், உலகின் பல்வேறு நாடுகளின் ஏற்றுமதி மற்றும் மார்க்கெட் ஏற்றுமதியாளர்களுக்குத் 'தகவல் தொடர்பு வசதி' ஒன்றை (Guidance)மையம் ஏற்படுத்தியுள்ளது. இந்த மையம் நாட்டின் பல பகுதிகளிலும், வளைகுடா நாடுகளிலும் தமிழகத்தில் தொழில் வாய்ப்புகள் குறித்துப் பல கருத்தரங்குகள் நடத்தியுள்ளது. ஏற்றுமதி குறித்த உயர்மட்டக் குழுவின் கூட்டங்களுக்கு ஒருங்கிணைப்பாளராக இம்மையம் செயல்பட்டு ஏற்றுமதியாளர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கிறது.

## சர்க்கரைத் தொழில்

திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்திலுள்ள போளூரிலும், செங்கல்பட்டு எம்.ஜி.ஆர் மாவட்டம் வாலாஜாபாத்திலும் புதிய சர்க்கரை ஆலைகள் தனியார் துறையில் அமைக்கப்பட்டு வருகின்றன. இணை மின் உற்பத்தித் திட்டத்தின்கீழ் இரண்டு கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் மின் உற்பத்தியைத் தொடங்கி, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வழங்கி வருகிறது. இரண்டு தனியார் சர்க்கரை ஆலைகளும் மூன்று கூட்டுறவு சர்க்கரை ஆலைகளும் இணை மின் உற்பத்தித் திட்டத்தைச் செயல்படுத்தி வருகின்றன.

## மின்னணுத் தொழில்

தமிழக அரசின் ELCOT நிறுவனம் பொதுத்துறையில் ஒரு தொழிற்சாலையையும், இணைத் துறை, கூட்டுத்துறை, மற்றும் வழிகாட்டுத் துறையில் 23 தொழிற்சாலைகளையும் நிறுவி வணிக ரீதியிலான உற்பத்தி தொடங்கப்பட்டுள்ளது. மின்னணு தொழில்நுட்பப் பூங்கா ஒன்று அமைக்கப்பட்டு, அதில் ஏற்றுமதிக்கான மின்னணுப்

பொருட்களைத் தயாரிக்கும் 11 தொழிற்சாலைகளை அமைக்க மத்திய அரசின் அனுமதி பெறப் பட்டு, 3 தொழிற்சாலைகள் வணிக ரீதியிலான உற்பத்தி யைத் தொடங்கி விட்டது. மீதமுள்ள 8 தொழிற்சாலைகள் விரைவில் செயல்பாட்டுக்குக் கொண்டுவரப்படும்.

**சுரங்கம் மற்றும் கனிமப் பொருட்கள்**

தமிழ்நாடு கனிம நிறுவனம் தருமபுரி மாவட்டம் மாதப்பள்ளி யில் கிரானைட் ஓடுகள் தயாரிக்கும் தொழிற்சாலையை யும், பசும்பொன் முத்துராமலிங் கத் தேவர் மாவட்டம் சிவகங்கை யில் கிராபைட் மேம்படுத்துதல் தொழிற்சாலையையும் அமைத்து உள்ளது. தமிழ்நாடு கனிம நிறுவனம் (TAMIN) கடந்த 5 ஆண்டுகளாகத் தொடர்ந்து ஏற்றுமதிக்கான சிறப்புப் பரி சைப் பெற்று வருகிறது. ரூபாய் 50 கோடிக்கு மேல் முதலீடு செய் யப்படும் பெரிய தொழிற் சாலைகளை அமைப்பதற்குத் தேவைப்படும் பல்வேறு துறை களின் அனுமதிகளை ஒரே இடத்தில் வழங்குவதற்கு உயர் அதிகாரக் குழு ஒன்று ஜனவரி 1995-இல் மாண்புமிகு முதல மைச்சர் அவர்களின் தலைமை யில் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த உயர்மட்டக் குழு சமீபத் தில் கூடி ரூ.5974.35 கோடிகள் முதலீட்டுடன் 22 தொழில் திட்டங்களுக்கு அனுமதியளிக் கப்பட்டுள்ளது.

**தனியார் துறை தொழில்கள்**

நேரடி வெளிநாட்டு முதலீடு களை ஈர்ப்பதில் தமிழகம் முன்னணியில் உள்ளது. 170 வெளிநாட்டு மூலதனங்களுக்கு ஒப்புதல் பெற்று அகில இந்திய அளவில் மூன்றாவது இடத்தை யும், ரூ.1,160 கோடி அளவு வெளிநாட்டு நேரடி முதலீடு களைப் பெற்று நான்காவது இடத்தையும் தமிழகம் பெற்று உள்ளது.

ஆகஸ்டு 1991 முதல் மார்ச் 1995 வரையிலான காலத்தில் தமிழகத்தில் 1,454 தொழில் முனைவோர் மனுக்கள் ரூ.20,807 கோடி மூலதனத்தில் 2,42,176 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் 1,454 தொழில் திட்டங்கள் பதிவு பெற்றுள்ளன. இவைகளில் 506 தொழிற்சாலைகள் செயல்படுத்தப்பட்டு விட்டன. DCM, McNally Bhavar, Duncan Agro Industries, JK Corporation, WIMCO, Surlej Cotton Mills, Pennar, Natco, Enkay Petro Chemicals, Jenson and Nicholson, Skyline Anantapur Spinning Mills, Tapar Dupont, Sterlite போன்ற பெரிய தொழில் நிறுவனத்தார் தமிழ் நாட்டில் தொழில் தொடங்க முன்வந்துள்ளனர். பம்பாயைச் சேர்ந்த ஸ்டெர்லைட் நிறுவனம் தூத்துக்குடியில் ரூ.1,300 கோடி மதிப்பில் ஒரு காப்பர் தொழிற் சாலையை, நிறுவி வருகிறது.

> **கல்வி கற்பிப்பது என்பது வெறும் அறிவைப் பெற்று ஆங்காங்கே காணப்படும் செய்திகளை, தகவல்களைச் சேகரிப்பது என்ற எல்லையில் வெறுமனே முடிந்து விடுவது அல்ல. வாழ்க்கையின் முதன் மையை, முழுமையை, முழுவதுமாக உணர்ந்து கொண்டு, சிறந்த மனிதனாக மாறுவதற்கு நல்ல பயிற்சியை வழங்குவது தான் கல்வி**
>
> **-மாண்புமிகு முதல்வர்**

மேட்டூரில் கடந்த 12 ஆண்டுகளாக மூடிக்கிடந்த Madras Aluminium Co. Ltd., தொழிற்சாலையை இந்த Sterlite நிறுவனம் ஏற்று 1,500 தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பளித்து நடத்தி வருகிறது. Tappar Dupont என்ற இந்திய நிறுவனம் அமெரிக்காவின் Dupont என்ற பிரபல தொழில் நிறுவனத்துடன் இணைந்து ரூ.1,600 கோடி செலவில் நைலான் 6.6 என்ற இழை தயாரிக்கும் தொழிற்சாலையை சென்னை அருகே கும்மிடிப் பூண்டி SIPCOT தொழில் வளாகத்தில் நிறுவி வருகிறது. எனவே கடந்த நான்கு ஆண்டுகளில் புரட்சித் தலைவி யின் புதிய தொழில் கொள்கை யின் அடிப்படையில் எடுக்கப் பட்ட நடவடிக்கைகளின் பய னாகத் தமிழ்நாடு தொழில் வளர்ச்சியில் பெருமைப்படத் தக்க முன்னேற்றத்தை அடைந்து உள்ளது என்பதை எவரும் மறுக்க இயலாது.

தொழில் வளர்ச்சியில் தொடர்ந்து முன்னேற்றம் கண்டு இந்தியாவின் மாநிலங்களில் தமிழகம் முதல் நிலையை எட்ட எல்லா முயற்சிகளையும் புரட்சித் தலைவியின் அரசு எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்து கொள்கிறேன். *

# சமூக நலத்துறையின் சாதனைச் சரித்திரம்

### மாண்புமிகு கைத்தறி மற்றும் சமூக நலத்துறை அமைச்சர்

## புலவர் திருமதி இந்திரகுமாரி



"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு"

என்றார் வள்ளுவர், இந்த வள்ளுவர் குறளுக்கு இலக்கணமாகத் திகழ்கின்றவர் தமிழக முதல்வர் நம் அன்புத்தாய் புரட்சித் தலைவி அவர்கள்.

அவர்களின் ஆற்றல், அறிவு, ஞானம் இவை அனைத்தும் இளைய தலைமுறையினருக்கு ஓர் எடுத்துக்காட்டு. சில தலைவர்களின் சாதனைகள் சரித்திரத்திலே இடம் பெறுகின்றன. ஆனால் புரட்சித்தலைவி அவர்களோ சரித்திரங்களையே சாதனைகள் ஆக்கியவர். பெண்களின் முன்னேற்றம், குழந்தைகள் நலம் ஆகியவற்றிற்குத் திட்டங்கள் பல தீட்டியதில் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் சாதனைக்கு ஈடேது இணையேது?

'அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே
உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும்'

—என்ற பாரதியாரின் கவிதைக்கு வடிவம் கொடுத்தவர் தான் நம் புரட்சித்தலைவி அவர்கள்.

எத்தனை , துன்பங்கள் துயரங்கள் அவரைச் சூழ வந்தபோதும் அவையெல்லாம் புரட்சித் தலைவி அவர்களைப் பார்த்து ஓடி ஒளிந்திருக்கிறதே ஒழிய புரட்சித்தலைவி அவர்கள் ஒரு நாளும் அவைகளைக் கண்டு அஞ்சியதில்லை. மாறாக அவைகளை விரட்டி அடித்து நாளும் வெற்றி மீது வெற்றி குவித்துக்கொண்டே இருக்கிறார். அவரின் சாதனைகளை, சரித்திரம் என்றும் நினைவு கொள்ளும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் தலைமையிலான தமிழ்நாடு அரசின் சமூகநலத் துறையின் நான்காண்டுக் காலச் சாதனைகள் எண்ணற்றவை, எண்ணி யெண்ணிப் பூரிக்கத் தக்கவை.

அவற்றுள், குறிப்பிடத்தக்க சில இங்கே அழகுற அணிவகுக்கின்றன.

### பெண் குழந்தைகள் பாதுகாப்பு

உடல் ஊனமுற்றோரின் நலனுக்காகத் தனித்துறை ஏற்படுத்தப்பட்டது.

இந்தியாவிலேயே முதன் முறையாக உடல் ஊனமுற்றோருக்கான கொள்கை, பெண்களுக்கான கொள்கை, குழந்தைகளின் நலனுக்காக டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் 15 அம்சத் திட்டம் மூலம் உருவாக்கப்பட்டது.

**கைத்தறித்துறையும், சமூகநலத் துறையும் இந்த நான்காண்டுக் காலத்தில் ஆற்றியுள்ள அரும் பணிகள் புரட்சித்தலைவி அவர்களின் சாதனைச் சரித்திரத்தில் முத்தாய்ப்பாக விளங்குபவையாகும்!**

மாநிலத்தில் பெண்களுக்கு இழைக்கப் பட்டு வந்த வரதட்சணைக் கொடுமைகளை விசாரிப்பதற்காக மாநிலப்பெண்கள் நலக் குழுமம் அமைக்கப்பட்டது.

பெண் குழந்தைகளைப் பிறந்த உடன் கொல்வதைத் தடுப்பதற்காக டாக்டர் புரட்சித் தலைவி பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் உருவாக்கப்பட்டது. இந்தக் குழந்தை களை அரசே வளர்க்கும் என்று, உலக அளவிலேயே முதன் முதலாகத் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தான் இந்தத் திட்டத்தை கொண்டு வந்தார்.

ஒருங்கிணைந்த ஊட்டச் சத்துத் திட்டம் கன்னியாகுமரி, நாகை காயிதேமில்லத், தஞ்சாவூர் மாவட்டங்களில் விரிவுபடுத்தி யுள்ளோம்.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் மூலமாக ஒரு இலட்சம் பெண்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டது.

பெண்கள் சிறு சேமிப்புத் திட்டத்தில் இந்தியாவிலேயே முதல் மாநிலமாகத் தமிழகம் தேர்ந்தெடுக்கப்பட்டு, மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களின் கையால் 11 பரிசுகளும், 3.50 இலட்சம் ரூபாய் பண வெகு மதிகளும் வழங்கப்பட்டன.

கர்ப்பிணிப் பெண்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை ரூ.200-இல் இருந்து ரூ.300 ஆக உயர்த்தப்பட்டது.

முதியோர் உதவித்தொகை ரூ.75ல் இருந்து ரூ.100-ஆக உயர்த்தப்பட்டது, பொன்மனத் தலைவி எங்கள் புரட்சித்தலைவி அவர்கள் தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பேற்ற பின் னாலேதான்.

திருமண உதவித் தொகை ரூ.1000-த்தில் இருந்து ரூ.2000 ஆக உயர்த்தப்பட்டது.

உடல் ஊனமுற்றோருக்கான உபகர ணங்கள் கேட்டவர்க்கெல்லாம் இல்லை என்று சொல்லாமல் கொடுக்கப்பட்டது.

பார்வையற்றோருக்குக் கொடுக்கப்படும்



உதவித் தொகை ரூ.50 அதிகம் உயர்த்தப் பட்டது.

மத்திய அரசு அநாதை இல்லங்களுக்குக் கொடுத்து வந்த மான்யத்தை நிறுத்திய போதிலும், மாநில அரசு புரட்சித் தலைவி யின் ஆட்சியில் அதிகமாக மானியத்தைக் கொடுத்தது.

சத்துணவுத் திட்டத்திற்குத் தனித்துறை ஏற் படுத்தப்பட்டுள்ளது.

பெண்களுக்கான கொள்கையை மாநில அரசு வகுத்தது; டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் தலைமையில் அன்னை தெரசா அவர்கள் அதனை வெளியிட்டார்.

உடல் ஊனமுற்றோர் நெய்த துணியை சீனாவில் உள்ள பெருஞ்சுவரை அலங்கரிப் பதற்கு நமது இணையற்ற முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் தமிழக அரசு, சீன நாட்டிற்கு அனுப்பியுள்ளது குறிப்பிடத் தக்கது.

குழந்தைகளின் இறப்பு விகிதத்தைத் தமிழக அரசு தன்னுடைய அரும்பெரும் திட் டத்தினால் குறைத்துள்ளது.

**கைத்தறி மற்றும் துணிநூல்**

பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு வேலை வாய்ப்பு நல்கிவரும் பழம்பெருமையான கைத்தறித்தொழில் கிராமிய மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்குப் பெரும் பங்காற்றி வருகின்றது. பாரம்பரியம் வாய்ந்த கைத்தறித் தொழில், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்

களின் பொற்கால ஆட்சியில் கடந்த நான்கு ஆண்டுகளில் சிறப்போடு வளர்ந்து நெசவாளர்களின் வாழ்விற்குப் புதிய உத்வேகத்தை உண்டாக்கியுள்ளது.

புரட்சித் தலைவியின் சீரிய முயற்சியினால் இன்று *1,477* நெசவார் கூட்டுறவுச் சங்கங்களில் *4.22* இலட்சம் நெசவாளர்கள் கொண்டுவரப்பட்டு, பயனடைந்து வருகின்றனர். இவ்வாறு *4.22* இலட்சம் நெசவாளர்களைக் கூட்டுறவு அமைப்பின் கீழ் கொணர்ந்ததன் மூலமாக *4* ஆண்டுகளுக்கு முன் ரூ.*220* கோடியாக இருந்த கைத்தறித் துணிகளின் உற்பத்தி, படிப்படியாக உயர்ந்து இவ்வாண்டு ரூ.*347.39* கோடியாக அதிகரித்துள்ளது பெருமைப்படத்தக்க சாதனையாகும்.

இதனைத் தொடர்ந்து விற்பனையினை அதிகரிக்க மேற்கொண்ட தீவிர நடிவடிக்கையின் காரணமாக ரூ.*247* கோடியாக இருந்த விற்பனை மதிப்பு *4* ஆண்டுக் காலத்தில் ரூ.*400.71* கோடியாக உயர்ந்துள்ளது. தற்போது இயங்கிவரும் *1477* கூட்டுறவுச் சங்கங்களில் *51%* சங்கங்கள் இலாபத்தில் இயங்கும் திறனை எய்தியுள்ளன. இதற்கு, இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இத்துறைக்கெனச் சிறப்பாக அளித்த ஊக்கமும் சிறந்த கவனமுமே காரணமாகும்.

நெசவாளர்களுக்குத் தறிக் கூடத்துடன் இணைந்த வீடுகள் கட்டி வழங்கிவருகிறது இவ்வரசு. வீடுகட்டும் திட்டத்திற்கு வழங்கப் பட்டு வந்த நிதியுதவி தற்போதைய தேவைக் கேற்ப வீடு ஒன்றுக்கு ரூ.*36,400*-ஆக உயர்த் தப்பட்டுள்ளது. *1995-96*-ஆம் ஆண்டில் *1000* வீடுகள் கட்டி வழங்கப்பட்ட உள்ளன.

## இலவச வேட்டி சேலை

இருக்க இடம், உடுக்க உடை ஆகிய அடிப்படை மற்றும் அத்தியாவசியத் தேவைகள் அனைவருக்கும் கிடைக்க வழிவகை காணுவதே உயிர்நோக்கமாகக் கொண்டு செயல்படும் இதய தெய்வம் புரட்சித்தலைவி அவர்களின் தலைமையின் கீழ் இவ்வரசு நிலமற்ற ஏழை விவசாயிகள் மற்றும் நகர்ப்புற ஏழைகளுக்கு இலவசச் சேலை மற்றும் வேட்டிகள் வழங்கும் திட்டத்தினைக் கொண்டு வந்து, இதன்மூலமாக ஏழை நெசவாளர்களுக்கு ஆண்டு முழுவதும் தங்குதடையின்றி வேலையும், வருவாயும் கிடைக்க வழிவகை கண்டார் நமது முதல்வர்.

இந்தச் சிறப்பு வாய்ந்த திட்டத்திற்கென அரசு ரூ.*57.00* கோடி செலவிட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் பயனடைவோர்களாக *61,72,383* ஆண்கள் மற்றும் *62,25,745* பெண்கள் என நிர்ணயம் செய்யப்பட்டு, இத்திட்டத்திற்குத் தேவையான *62,25,745* சேலைகள் மற்றும் *61,72,383* வேட்டிகளைத் தமிழகத்திலுள்ள பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுவுச் சங்கங்கள் வாயிலாக உற்பத்தி செய்து, தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக வழங்கிட ஆணை பிறப்பிக்கப்பட்டது; அதன்படி *62,25,745* சேலைகள் மற்றும் *61,72,383* வேட்டிகள் இவ்வாண்டு உற்பத்தி செய்து வழங்கப் பட்டுள்ளது. இதனைத் தவிர முதலாம் வகுப்பு முதல், எட்டாம் வகுப்பு வரை கல்வி பயிலும் மாணாக்கர்களுக்கு இலவசச் சீருடை வழங்குவதற்காக இவ்வரசு ஆண்டுதோறும் ரூ.*29* கோடி செலவிடுகிறது.

நெசவாளர்களின் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்திற்கு அரசின் பங்காக நெசவாளர் பெறும் கூலியில் ரூபாய்க்கு *12* பைசாவாக இருந்ததனை ரூபாய்க்கு *16* பைசாவாக உயர்த்தி நமது நல்லரசு வழங்கியுள்ளது. இதனால் நெசவாளர் ஓய்வு பெறும்போது பெறும் தொகையும் அதிகரித்து உள்ளது. இத்திட்டத்தின் மூலம் வழங்கப்படும் ஆயுள் காப்பீட்டுத் தொகை ரூ.*12,000*-த்திலிருந்து ரூ.*18,000* ஆக (அரசு ரூ.*15,000* +கோ-ஆப்டெக்ஸ் ரூ.*3000*) தற்போது உயர்த்தி வழங்கியுள்ளது. சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தில் *1.04* இலட்சம் நெசவாளர்கள் பயனடைந்து வருகின்றனர்.

இந்தியாவிலேயே முதன் முதலாக நெசவாளர்களின் குடும்பத்திற்கு ஓய்வு ஊதியம்

வழங்கும் முத்தான திட்டத்தினை இவ்வரசு 1.1.92 முதல் செயல்படுத்தி வருகின்றது.

இத்திட்டத்தில் உறுப்பினராக உள்ள நெசவாளர் திடீரென இறந்துவிட்டால் அவரின் குடும்பத்திற்கு 10 ஆண்டுகளுக்கு மாதம் ரூ.250 ஓய்வூதியம் வழங்கப்படுகின்றது. இத்திட்டம் நெசவாளர்களின் நீண்டநாள் கனவினை நனவாக்கியுள்ளது. இதுவரை 152 நெசவாளர் குடும்பங்கள் பயன் பெற்று உள்ளன.

நெசவாளர்களின் வருவாயையும் வாழ்க்கைத் தரத்தினையும் மேம்படுத்தும் முகத்தான் ஒருங்கிணைந்த கிராம மேம்பாட்டுத் திட்டம் கீழ்க்காணும் கிராமங்களில் தீவிரமாகச் செயல்படுத்தப்படுகின்றன.

செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டத்திலுள்ள விளாகம் கிராமம்; தென்னார்க்காடு- வள்ளலார் மாவட்டத்திலுள்ள புதுப்பேட்டை கிராமம்; திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தில் அம்மாபாளையம் கிராமம்; பெரியார் மாவட்டத்தில் கருக்குபாளையம் கிராமம்; சேலம் மாவட்டத்தில் இடங்கஞ்சாலை கிராமம்; திருச்சி மாவட்டத்தில் கே.பிச்சம்பட்டி கிராமம்; மதுரை மாவட்டத்தில் கொப்பயம் பட்டி கிராமம்; விழுப்புரம் ராமசாமி மாவட்டத்தில் பண்டாரக்கோட்டை கிராமம்; தஞ்சாவூர் மாவட்டத்தில் துகிலி கிராமம் ஆகியவைகளே அவை.

தொழில் வளர்ச்சியில் நீண்டகால நோக்கத்துடன் செயல்படும் புரட்சித் தலைவியின் அரசு, கைத்தறி வடிவமைப்புகளை உருவாக்குவதற்கெனக் கம்யூட்டர் வடிவமைப்பு மையத்தினை ரூ.20 இலட்சம் செலவில் நிறுவியுள்ளது. இதன்மூலம் உருவாக்கப்படும் புத்தம்புதிய வடிவமைப்புகள் நெசவாளர்கள் மத்தியில் நல்ல வரவேற்பினைப் பெற்று வருகின்றன.

நெசவாளர் சமூகத்தினரிடையே நிலவி வரும் அறியாமையை நீக்கி, கல்வித் திறனை வளர்க்க ஏதுவாக நெசவாளர்களின் பிள்ளைகள் உயர் கல்வி பெற அறக்கட்டளை நிறுவி அதன் மூலமாக ஆண்டுதோறும் 16 மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்காக ரூ.1000 முதல் ரூ.2000 வரை நிதி உதவி வழங்கிவருகின்றது.

நெசவாளர்களுக்கு நெசவு தொடர்பான நோய்களான ஆஸ்த்மா, டி.பி., உணவுக் குழாய் வீக்கம் போன்றவற்றுக்குச் சிகிச்சை பெறுவதற்கும், கண்கள் பரிசோதனை மற்றும் கண்ணாடிக்கும் நிதியுதவி வழங்குவதற்காக உடல் நலத்தொகுப்புத் திட்டம் அறிமுகப் படுத்தப்பட்டு, குடிநீர் வழங்கல் போன்ற அடிப்படை வசதிகள், பெண் நெசவாளர்களுக்குப் பேறுகாலப் பலன்கள், நிரந்தர குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டங்களுக்குக் கூடுதல் இழப்பீடு மற்றும் ஆரம்ப உடல்நலக் கவனிப்பிற்கான அடிப்படைக் கூட்டமைப்பு உருவாக்கம் ஆகியவற்றையும் உட்படுத்துகிறது. இத்திட்டத்தின் கீழ் 1994-95-ஆம் ஆண்டில் மாநில அரசு மூலம் ரூ.99.70 இலட்சத்தை மைய அரசு வழங்கியுள்ளது.

## கைத்தறி வளர்ச்சி மையங்கள்

மத்திய அரசு கைத்தறித் தொழில் பகுதிகளில் 3000 கைத்தறி வளர்ச்சி மையங்களையும், 500 தரமான சாயச்சாலைப் பிரிவுகளையும் ஏற்படுத்தும் திட்டத்தை அண்மையில் அறிவித்துள்ளது. இது, இந்நாட்டில் முதல் முறையாகக் கைத்தறி நெசவாளர்களுக்கென ரூ.849.19 கோடி மொத்த நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப் படும் மாபெரும் திட்டமாகும். இந்நிதி ஒதுக்கீட்டில் ரூ.321.815 கோடி மத்திய அரசு உதவியாகும்.மற்றும் ரூ.527.375 கோடி நபார்டின் வாயிலாகக் கிடைக்கும் சலுகைக் கடன் உதவியாகும்.

இத்திட்டம் 4 ஆண்டுக்காலத்தில் இந்நாட்டிலுள்ள மொத்த நெசவாளர்களில் 1/3 பங்கினருக்குப் பலனளிக்கிற திட்டம். இது கூட்டுறவு அமைப்புகளின் கைத்தறி நெசவாளர்கள் இடம் பெற்றுள்ள அளவை தற்பொழுதுள்ள 20-சதவிகிதத்திலிருந்து 50-சதவிகிதம் கூடுதலாக அதிகரிக்க வேண்டுமென விழைகிறது. இதனால் இத்துறையின் கூட்டுறவு இயக்கத்திற்குப் பெரும் ஊக்குவிப்புக் கிடைக்கும்.

இந்தக் கைத்தறி வளர்ச்சி மையங்களும் தரமான சாயச்சாலைகளும் நெசவாளர்களின் அடிப்படை இடர்ப்பாடுகளைக் களையும் பொருட்டும், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் பொருட்டும் மத்திய அரசால் *1993-94-ஆம்* நிதியாண்டிலிருந்து *1996-97* நிதியாண்டு வரை நாடு முழுவதிலும் *3000* கைத்தறி வளர்ச்சி மையங்களும் *500* தரமான சாயச்சாலைகளும் நிறுவும் திட்டத்தின் கீழ், தமிழகத்தில் *303* கைத்தறி வளர்ச்சி மையங்களும் *58* தரமான சாயச்சாலைகளும், நிறுவக் குறியீடு நிர்ணயம் செய்து ஒதுக்கீடு செய்துள்ளது.

ஒரு கைத்தறி வளர்ச்சி மையம் நிறுவ திட்ட மதிப்பீடாக ரூ.*27.00* இலட்சமும், ஒரு தரமான சாயச்சாலை நிறுவ திட்ட மதிப்பீடாக ரூ.*7.83* இலட்சமும் எனத் தெரிவித்து, அதில் ஒரு கைத்தறி வளர்ச்சி மையத்திற்கு மத்திய அரசு ரூ.*10.00* இலட்சம் மானியமும், ஒரு தரமான சாயச்சாலைக்கு ரூ.*4.265* இலட்சம் மானியமும் மீதித் தொகைகள் தேசீய விவசாய மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (NABARD)-ன் மறு நிதியுதவித் திட்டத்தின் கீழ் கடன் வசதியும் அளிக்க அறிவித்துள்ளது.

*1993-94-ஆம்* நிதியாண்டிற்கு, இத்திட்டத்திற்காக மத்திய அரசுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணைகளுக்கிணங்க, தமிழ்நாட்டில் முதற்கட்டமான *30* கைத்தறி வளர்ச்சி மையங்கள் நிறுவவும் *6* தரமான சாயச்சாலைகள் நிறுவவும், ரூ.*124.85* இலட்சம் விளிம்புத் தொகை மான்யம் அனுமதித்துள்ளது. அத்தொகையை மாநில அரசால் சம்பந்தப்பட்ட நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு *2.12.94* அன்று தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கிமூலம் விடுவிக்கப்பட்டுள்ளது.

*1994-95-ஆம்* ஆண்டிற்கு *152* நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் கைத்தறி வளர்ச்சி மையங்களும், *27* நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் தரமான சாயச்சாலைகளையும் நிறுவத் தேர்வுசெய்து பிரேரணைகள் மத்திய அரசுக்கு அளிக்கப்பட்டுள்ளன. மத்திய அரசு இத்திட்டத்திற்காக நடப்பு நிதியாண்டில் ரூ.*50.00* கோடி வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்துள்ளது. இதற்கான மத்திய அரசின் பங்கு மான்யமாக ரூ.*15.20* இலட்சம் மற்றும் ரூ.*123.255* இலட்சங்களும் ஆகும். மீதித்தொகையான ரூ.*2584* இலட்சம் மற்றும் ரூ.*116.285* லட்சம் நபார்டு வங்கியின் மூலம் பெறப்படவேண்டும்.

செய்யும் தொழிலனைத்தும் சீர்தூக்கிப் பார்க்குங்கால், நெய்யும் தொழிலுக்கு நிகரில்லை என்பதற்கேற்ப சிறந்து விளங்கும் நெசவாளர்களின் துயரினைக் களைவதில் இதய தெய்வம் புரட்சித்தலைவி அவர்களின் அரசின் சாதனைகள் மேன்மேலும் அடுக்கடுக்காய்த் தொடர்கின்றன.

## தமிழ்நாடு கூட்டுறவு நூற்பாலைகள் இணையம்

*1994-ஆம்* ஆண்டு டிசம்பர்த் திங்களில் தமிழ்நாடு கூட்டுறவு நூற்பாலைகள் இணையம் என்ற நிறுவனத்தினை ரூ.*25.00* கோடி பங்கு மூலதனத்துடன் தமிழக அரசு புதிதாக அமைத்துள்ளது.

இவ்விணையம் *29.12.94* முதல் செயல்படத் துவங்கியது. பல்வேறு கூட்டுறவு பஞ்சு விற்பனை இணையங்களிடமிருந்து *28.02.95* வரை ரூபாய் *3032* கோடி மதிப்பிற்கு *26,050* பேல்கள் பஞ்சு கொள்முதல் செய்து தமிழகத்தில் கூட்டுறவு நூற்பாலைகளுக்கு நூல் உற்பத்தி செய்ய வழங்கியுள்ளது. ✻



# பிற்படுத்தப்பட்டோரின் பொற்கால ஆட்சி!

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர்

## திரு கு. லாரன்ஸ்

**மா**ண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தமிழ்நாட்டில் ஆட்சிப் பொறுப்பேற்றதிலிருந்து இன்று வரை, தமிழகத்தில் வாழும் பிற்படுத்தப்பட்டோரைப் பாதுகாப்பதில் எடுத்து வரும் நடவடிக்கைகள் ஏராளம், ஏராளம். சுருங்கச் சொன்னால் பிற்படுத்தப்பட்டோருக்கு இது ஓர் பொற்காலம். இந்தியாவில் பிற்படுத்தப்பட்டோரைப் பாதுகாப்பதில் தமிழகம் முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது.

தமிழ்நாட்டில் 69 சதவிகித இட ஒதுக்கீடு- பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் இனத்தவருக்கும், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கும் முறையே 30, 20, 18, 1 சதவிகிதம் என ஏற்படுத்தப்பட்டுச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காகத் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலமாகக் குறைந்த வட்டியில் கடனுதவி தகுதியுடையவர்களுக்கு அளிக்கப்படுகிறது.



**கடந்த நான்காண்டுகளில் 64 புதிய மாணவர் விடுதிகள் திறக்கப்பட்டன. தற்போது மொத்தம் 820 விடுதிகள் மாநிலம் முழுவதும் உள்ளன.**

**16 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 3 உயர்நிலைப் பள்ளிகள் மேனிலைப் பள்ளிகளாகவும் உயர்த்தப்பட்டுள்ளன.**

கடந்த நான்காண்டுகளில் 64 புதிய மாணவர் விடுதிகள் திறக்கப்பட்டன. தற்போது மொத்தம் 820 விடுதிகள் மாநிலம் முழுவதும் உள்ளன. தனியார் கட்டடங்களில் இயங்கும் வாடகை விடுதிக் கட்டடங்களுக்கு ரூ.15.38 இலட்சம் செலவில், அடிப்படை வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.

இந்த ஆண்டில் 12 விடுதிகளுக்கும் சொந்தக் கட்டடங்கள் கட்ட மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் தலைமையிலான அரசு அனுமதி வழங்கியுள்ளது. மாணவர்கள் பொது அறிவினை வளர்த்துக் கொள்ளும் வகையில் ரூ. 18.61 இலட்சம் செலவில் ஒவ்வொரு விடுதியிலும் சிறு நூலகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

ஒவ்வொரு விடுதிக்கும், துறையின் உயர்நிலைப் பள்ளிகளுக்கும் ஒரு ஆங்கிலம், ஒரு தமிழ் நாளேடு வழங்கப்படுகிறது. கல்லூரி மாணவர்களுக்கு உணவுக் கட்டணம் மாதம் ஒருவருக்கு ரூ.180 ஆகவும், பள்ளி விடுதி மாணவர்களுக்கு மாதம் ஒருவருக்கு ரூ.120 ஆகவும் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. அனைத்து விடுதிகளுக்கும்

மாவரைக்கும் இயந்திரம் வாங்கி வழங்கப்பட்டுள்ளது. மூன்றாண்டுப் பட்டப்படிப்பு வரை பயிலும் மாணவ மாணவியருக்கு இலவசக் கல்விச் சலுகை அளிக்கப்படுகிறது.

இத்திட்டத்தினால் 1,10,329 பிற்படுத்தப்பட்ட வகுப்பின மாணவ மாணவியர்களும், 7,25,208 மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபின மாணவ மாணவியர்களும் பயனடைந்துள்ளனர்.

ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., தேர்வுகளில் பங்குபெறும் மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் நிலையத்தில் சேர ஆண்டு வருமான வரம்பு நீக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு 36 மாணவர்கள் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ள டெல்லி சென்றனர். அவர்களுக்குத் தமிழ்நாடு இல்லத்தில் தங்குவதற்கும், உணவிற்கும் ஏற்பாடுகள் அரசால் செய்யப்பட்டுள்ளன.

முதுநிலை வழக்கறிஞரிடம் பயிற்சி பெறும் மாணவருக்காக, வழக்கறிஞருக்கு ரூ.750 உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

16 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 3 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் உயர்த்தப்பட்டுள்ளன. துறைப் பள்ளிகளுக்கு 24 வகுப்பறைகள் கூடுதலாகக் கட்டித் தரப்பட்டுள்ளன. முக்கியமாக வேலைவாய்ப்பு அளிப்பதற்காகவே வேலைவாய்ப்புப் பயிற்சித் திட்டங்களான கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி, தட்டச்சு, சுருக்கெழுத்து, கணிப்பொறி, தொலைபேசி மற்றும் தொலையச்சுப் பயிற்சிகள் இலவசமாக அளிக்கப்பட்டுவருகின்றது. இத்துடன், இலவசத் தொழிற் கருவிகளும் வழங்கப்படுகின்றன.

புரட்சித்தலைவி அவர்களின் பொன்னான ஆட்சியில், கடந்த நான்கு ஆண்டுகளில் 16,000 சலவையாளர்களுக்கும், 2000 கல்லுடைப்போர்களுக்கும், 2000 முடிதிருத்துவோருக்கும், இலவசமாகத் தொழிற்கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் மாவட்டத்தில் பையூர் பிள்ளைவயல் என்னும் கிராமத்தில் நரிக்குறவர்களுக்கு இலவசமாக 150 வீடுகள் ரூ.30.90 இலட்சம் செலவில் கட்டித்தர அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலும் ஏற்கெனவே இலவச வீட்டு மனைகள் வழங்கப்பட்டுள்ள 1,533 நரிக்குறவர்களுக்கு இலவச வீடுகள் கட்டித்தர, தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது. ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டும் பணி மேற்கொள்ளப்படும்.

முடி திருத்தகம், சலவையகம், நடமாடும் சலவையகம் அமைக்க அரசு மானியமும் வங்கிக் கடனும் வழங்கப்படுகிறது. எஸ்.எஸ்.எல்.சி. அல்லது அதற்குக் குறைவாக வரையறுக்கப்பட்ட பதவிகளுக்கு நியமனம் செய்யும் வயது வரமபு மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபின இனத்தவருக்கு 30 லிருந்து 32 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. மாநிலம் மற்றும் மாவட்டங்களில் அதிக மதிப்பெண்கள் பெறும் மாணவ மாணவியருக்கு ஊக்கப் பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன. இலவசப் புத்தகங்கள், குறிப்பேடுகள் மற்றும் எழுது பலகைகளும் ஆண்டு தோறும் வழங்கப்படுகின்றன. நுழைவுத் தேர்விலும் பங்கேற்றுப் பயனடைய மாவட்டங்களில் பயிற்சி மையங்கள் நடத்தப்படுகின்றன.



15,700 பேருக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க ஆண்டுதோறும் ரூ.1 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுச் செலவிடப்படுகிறது.

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் இனத்தவருக்குத் தொழிற்கடன் அளிக்க வசதியாகத் தேசிய பிற்படுத்தப்பட்டோர் மற்றும் நிதி வளர்ச்சிக் கழகம் ரூ.12.33 கோடியும், மற்றும் தேசிய சிறுபான்மையினர் நிதி வளர்ச்சிக் கழகம் ரூ.4.64 கோடியும் ஆக மொத்தம் ரூ.16.97 கோடி தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்திற்குக் கடன் வழங்கப்பட்டு அதில் ரூ.4.37 கோடி இக்கழகத்தால் தொழிற்கடன் தகுதி உள்ளவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மத்திய அரசுப் பணியிடங்களில் 27 சதவிகித இட ஒதுக்கீட்டின் கீழ் விண்ணப்பிக்க விரும்பும் மற்ற பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்குச் சாதிச் சான்றிதழ் வழங்க அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு இவ்வரசால் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

பிற்படுத்தப்பட்டோர் நலம் குறித்து மத்திய அரசின் கொள்கைகளைத் தமிழ்நாட்டு மக்கள் அறியும் வகையில் தமிழ்நாடு அரசு உடனுக்குடன் அறிவிப்புகள் செய்து தமிழக மக்கள் அனுபவிக்கும் வகையில் செயல்பட்டுவருகிறது. பிற்படுத்தப்பட்டோர் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபின வகுப்பினரின் சமூக, கல்வி, பொருளாதார வளர்ச்சியினைக் கண்டுகொள்ள ஏதுவாகவும், ஒரு வகுப்பு பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் தொடர்ந்து இருக்கவேண்டிய அவசியம் குறித்து முடிவு செய்வதற்கு உதவியாகவும் இருக்கும் பொருட்டு விஞ்ஞான ரீதியிலான அணுகுமுறையுடன் கூடிய ஒருமாதிரிக்கணக்கெடுப்பினைத் தமிழ்நாட்டில் மேற்கொள்ள மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

**நம்பிக்கை என்பது சிறு காற்றின் வேகத்தையும் தாங்காமல் துவண்டுவிழும் மெல்லிய மலரல்ல, அது அடிபெயரா இமயம் போன்றது !**

**—காந்தியடிகள்**

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மை சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்குச் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் அடிப்படையில் 5 கோடி ரூபாய் செலவில் ஆட்டோ வழங்குவதற்கான ஆணையினை மாண்புமிகு முதல்வர் அவர்கள் பிறப்பித்துள்ளார்கள். இப்படி ஆட்டோ வழங்கும்போது படித்த, ஓட்டுநர் உரிமம் பெறுவதற்குத் தகுதியுடைய 100 மகளிரைத் தேர்வு செய்து ஆட்டோ வழங்கவும் ஆணை பிறப்பித்துள்ளார்கள்.

18 வயது முதல் 24 வயது வரை உள்ள +2 படித்த 200 பெண்களுக்கு, செக்ரடேரியல் சர்வீஸ் பயிற்சியினைத் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் அளிக்கவும் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நடப்பு ஆண்டில் ரூ.13.81 கோடி செலவில் 6,577 பேருக்கு வீடுகள் கட்டித்தர இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்கள்.

100 குலாலர் வகுப்பினருக்கு மின் விசைக் கருவிகள் ரூ.7 இலட்சம் செலவில் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் ஆகியோரின் பிரச்சினைகளைத் தெரிந்துகொள்ளவும், அவர்களுக்குச் சமூகப் பொருளாதாரத்தில் முன்னேற்றத்தை ஏற்படுத்தவும் பிற்படுத்தப்பட்டோர் நல ஆலோசனைக் குழு ஒன்றினை ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

சலவையாளர்கள் சுகாதார முறையில் தங்கள் தொழிலைச் செய்திட ஏதுவாக, சென்னையில் இயந்திரச் சலவையகம் ஒன்று ஏற்படுத்தப்படவுள்ளது.

எளியோரை இகழ்ந்தும் வலியோரை வாழ்த்தியும் பாராட்டும் இவ்வுலகில், சமூக மற்றும் கல்வி ரீதியாகப் பின்தங்கிய நிலையில் உள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மக்களின் முன்னேற்றத்திற்கு, மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணைப்படி, நான் பொறுப்பு வகிக்கும் பிற்படுத்தப்பட்டோர்

மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை பெரும் பங்கு வகிக்கிறது என்றால் அது மிகையாகாது.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் மூவரும் உருவாக்கித் தந்த இட ஒதுக்கீட்டுக் கொள்கையை எத்தகைய இடர் வந்தாலும் அவற்றை எதிர்கொண்டு அவர்கள் காட்டிய வழியில் வெற்றி நடை போடும் டாக்டர் புரட்சித் தலைவி மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 69 சதவிகித இட ஒதுக்கீட்டைத் தனிச் சட்டத்தின் மூலம் பாதுகாத்துத் தந்த தன் வாயிலாக, இந்தியாவிலேயே இணையற்ற முதலமைச்சராக- ஒப்பாரும் மிக்காரும் இல்லாத முதலமைச்சராகத் திகழ்கிறார்.

சமூகநீதி காத்த வீராங்கனையாக, தமிழ் கூறும் நல்லுலகம் அவரைப் பாராட்டுவது அனைவரும் அறிந்த ஒன்றாகும். 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்பேன்' என்றார் மறைந்த மாமேதை அறிஞர் அண்ணா. இதனைக் கருத்தில் கொண்டு பன்னெடுங்காலமாக ஒடுக்கப்பட்ட சமுதாயமாகிய பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கு அவர்களின் வாழ்வில் மறுமலர்ச்சியைக் கொணர்வதும், கல்வி ஆர்வத்தினை மேம்படுத்துவதும், பொருளாதார முன்னேற்றத்தினை விரைவுபடுத்துவதும் முக்கிய குறிக்கோளாகக் கொண்டு இத்துறை செயல்படுகிறது என்பதை நான் பெருமிதத்தோடு தெரிவித்துக்கொள்ளுவேன். *



சமூக நீதியைக் காத்திட சமுதாய நிலையிலும், கல்வித் துறையிலும் பிற்படுத்தப்பட்டோரைக் கைதூக்கி உயர்த்தி முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்வதற்காகக் கல்விச் சலுகைகள், கல்வி நிறுவனங்களிலும், அரசுத் துறை மற்றும் அரசு நிறுவனங்களிலும் உரிய ஒதுக்கீடு வழங்குதல், பொருளாதார முன்னேற்றத்திற்கான திட்டங்களை வகுத்துச் செயல்படுத்துதல் போன்ற இன்னோரன்ன நடவடிக்கைகளை மேற்கொள்வதில் தமிழ்நாடு மற்ற எல்லா மாநிலங்களைக் காட்டிலும் முன்னணியில் இருந்து வருகிறது. பிற்படுத்தப்பட்ட இனத்தவர்க்குக் கல்வி நிறுவனங்களிலும், வேலைவாய்ப்புகளிலும் தனி ஒதுக்கீடு தரப்படுதல் வேண்டும் என்ற இலட்சியத்திற்கு ஒரு நீண்ட நெடிய வரலாறே உண்டு என்பதை அனைவரும் அறிவர். _மாண்புமிகு முதல்வர்



# செய்தித்துறையில் எய்திய வளர்ச்சி செந்தமிழ் முதல்வரின் சிந்தனைப் புரட்சி!

மாண்புமிகு செய்தி விளம்பரத்துறை அமைச்சர்
**திரு மு. தென்னவன்**

ஏழை எளிய மக்கள் ஏற்றிப் போற்றவும், இதயம் உள்ளவர்கள் யாவரும் வாழ்த்திப் பாடவும், தமிழகத்தின் தன்னிகரில்லாத முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் நல்லாட்சி நான்காண்டுகள் கடந்து ஐந்தாம் ஆண்டில் அடியெடுத்து வைத்திருக்கிறது.

தீயினுள் தெறலாக, பூவினுள் வாசமாக,
கல்லினுள் மணியாக,
சொல்லினுள் வாய்மையாக,
அறத்தினுள் அன்பாக, மறத்தினுள் மைந்தாக,
வேதத்து மறையாக, பூதத்து முதலாக,
வெஞ்சுடர் ஒளியாக, திங்களுள் அளியாக,
அனைத்துமாக,
அந்த அனைத்தின் உட் பொருளுமாக இயங்கி, அன்னைத் தமிழகத்தையும் இயக்கிக் கொண்டிருக்கும் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், வலுவான தமிழகத்தை - வளமான தமிழகத்தை உருவாக்க அரிய பெரிய திட்டங்களைத் தீட்டி அரும் பாடுபட்டுச் செயலாற்றிவருகின்றார்.

**வழிகாட்டும் ஒளி விளக்கு**

தமிழகத்தின் முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஒரு சாதாரணத் தலைவர் அல்லர்; ஏனைய தலைவர்களுக்கெல்லாம் அவர் ஒரு வழிகாட்டி; பிற மாநில முதல்வர்களுக்கெல்லாம் அவர் ஒரு முன்னோடி; தடுமாறித் தத்தளிப்போர் தடம் மாறிப் போகாது காக்க வழிகாட்டும் கலங்கரை ஒளிகாட்டி!

திருத்தத்தில் வெற்றி பெற்றான் ஒட்டக்கூத்தன்
தீர்ப்பளித்து வெற்றிபெற்றான் கரிகாற்சோழன்
வருத்தத்தில் வெற்றி பெற்றான் இராமலிங்க வள்ளல்
விருத்தத்தில் வெற்றி பெற்றான் கம்பன்
கனி கொடுத்து வெற்றி பெற்றான் அதியன்
கலிங்கம் தந்து வெற்றி பெற்றான் பேகன்
நிதியளித்து வெற்றி பெற்றான் பாரி - புதிய
விதியெழுதி வெற்றி பெற்றான் பாரதி

**தமிழக அரசின் மக்கள் நலத் திட்டங்களைப் படமாக்கிச் செய்தி மலர்களாகத் தொகுத்து, திரையரங்குகள் மூலமாகவும் வீடியோ மூலமாகவும் மக்களிடம் எடுத்துச் சென்று தெரிவிக்கும் சீரிய பணியைத் தமிழ்நாடு திரைப்படப் பிரிவு செயலாற்றி வருகிறது.**

**திரைப்படத் தொழிலாளர்கள் வீடு கட்டிக் கொள்வதற்காகச் சென்னை அருகே வேளச்சேரி பள்ளிக்கரணையில் ரூ.10 கோடி மதிப்புள்ள 85 ஏக்கர் நிலத்தினை, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இலவசமாக வழங்கியுள்ளார்.**

வாளேந்தி வெற்றி பெற்றான் சேரலாதன்
பாவேந்தி வெற்றி பெற்றான் பாரதிதாசன்!
ஆனால்,
தனது இதயத்துடிப்பிலே ஏழைகளின் நலம்
உயிர் மூச்சிலே எளியவர் வளம்
உயரிய பேச்சிலே தமிழர்தம் ஏற்றம்
செயல்திறத்திலே தமிழக முன்னேற்றம்

- என்று பாடுபடும் தன்மையால், படைத்து வரும் புதுமைமிகு சாதனைகளால், அல்லும் பகலும் உழைக்கும் அற்புதச் செயல்திறனால், நாளும் வெற்றியைக் கண்டு கொண்டிருப் பவர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆவார். புரட்சித் தலைவி அவர்களின் அரிய ஆலோசனைகளும் ஆற்றல்மிகு வழிகாட்டுத லும், தமிழக அரசின் துறைகள் யாவற்றிலும் ஒரு புதிய மின்னோட்டத்தைப் பாய்ச்சி, திட்டங்கள் ஒளி வெள்ளப் பெருக்குடன் செயல்படவும், அவை மக்களைச் சென்ற டையவும் வைத்துள்ளது என்றால் அது மிகை யாகாது. அதே வகையில்தான் ஆற்றல்மிகு திட்டங்களால், செய்தி - மக்கள் தொடர்புத் துறை இன்று வலிவும் பொலிவும் மிக்க துறையாக மாறி இருக்கிறது.

**நட்புறவை நாடி வளர்ப்போம்**
**மக்களுக்குச் செய்தி படைப்போம்**

செய்தித் துறை என்பது மக்களுக்கும் அரசுக்கும் ஒரு பாலமாக அமைந்து நல் லெண்ணத்தையும் நட்புறவையும் வளர்க்கிற துறையாகும். அரசின் கொள்கைகளை, அதன் செயற்பாடுகளை, ஆற்றிவரும் பல்வேறு நலத்திட்டங்கள் பற்றிய விளக்கங்களை, மக்களுக்கு எடுத்துக்கூறி அவர்களுக்கு விழிப் புணர்வையும், ஈடுபாட்டையும் ஏற்படுத்து கின்ற கடமையைச் செய்தி மக்கள் தொடர்புத் துறை செய்து வருகிறது.

கடந்த நான்காண்டுகளில் புதிய புதிய திட்டங்களை வகுத்துத் தந்ததன் மூலம் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் இந்தச் செயலாற்றலை முறைப்படுத்தி, ஆற்றுகிற கடமையை நெறிப்படுத்தி, மக்கள் தொடர்புத் துறையை மக்கள் துறையாக்கிய பெருமை, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களையே சாரும்.



**திரைப்படத்துறை என்பது, பல்வேறு கலை களைப் பரிவுடன் வளர்க்கும் ஒரு தாய். ஒரு புறம் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பையும், மற்றொரு புறம் இலட்சக் கணக்கான மக்களுக்கு மகிழ்ச்சியையும், ஒரே நேரத்தில் வழங்கிடும் ஓர் அமுதசுரபிதான், திரைப்படத்துறை.**

*- மாநிலத் திரைப்பட விருதுகள் வழங்கும் விழாவில் மாண்புமிகு முதலமைச்சர்.*

**தென்னிந்திய ஹாலிவுட்**
**'ஜெ. ஜெயலலிதா திரைப்பட நகர்'**

உலகத் திரைப்பட வரைபடத்தில் சென்னைக்குச் சிறப்பிடம் பெற்றுத்தரும் கலைச்சோலை; மேலை நாட்டுத் திரைப்பட நகரான ஹாலிவுட்டையே இடம் பெயர்த்துச் சென்னைக்குக் கொண்டு வந்துவிட்டாரோ நமது புரட்சித் தலைவி என்று வியக்கும் அளவுக்குத் திரை உலகின் அனைத்துத் தேவைகளையும் ஒரே இடத்தில் நிறை வேற்றிக்கொள்ள நவீன வசதிகளுடன் அமைக்கப்பட்ட கலைக்கோட்டம்; அதுவே தமிழக அரசு 86 ஏக்கர் நிலப்பரப்பில் சென்னைத் தரமணியில் உருவாக்கியுள்ள ஜெ.ஜெயலலிதா திரைப்பட நகர்.

ஜெ. ஜெயலலிதா திரைப்பட நகரில் உட்புறப்படப்பிடிப்புக்கென - குளிர்சாதன வசதியுடன் படப்பிடிப்புக் கூடம், நீதிமன்றம், வகுப்பறை, அறுவைச் சிகிச்சைக்கூடத்துடன் கூடிய மருத்துவமனை, காவல் நிலையம், சிறைச்சாலை, தீயணைப்பு நிலையம்.

வெளிப்புறப் படப்பிடிப்புக்கென - கிராமியச் சூழல், நகர்புறம், வயல்வெளிகள், கடைத்தெருக்கள், பள்ளிக்கூடம், குளக்கரை,

பஞ்சாயத்து ஆகியவை அமைக்கப்பட்டு உள்ளன.

அதுமட்டுமின்றி, இங்கிலாந்துப் புல்வெளி களும், மொகலாயத் தோட்டங்களும், ஜப்பானியக் கோயில் வீடுகளுடன் கூடிய ஜப்பானியத் தோட்டமும், இத்தாலி நாட்டு அழகுக் கலைக்கூடத்துடன் இத்தாலியத் தோட்டமும் இங்கே உருவாக்கப்பட்டுள்ளன.

நீருக்கடியிலும் படப்பிடிப்பு நடத்தும் வசதிகளுடன் நீச்சல் குளமும் இங்கே அமைக் கப்பட்டுள்ளது.

மேலும் சிறப்பான படப்பிடிப்பு ஆவணக் காப்பகமும், நூல் நிலையமும் அமைக்கப் பட்டுள்ளன.

மொத்தத்தில் படத் தயாரிப்பாளர் தமது படப்பிடிப்புக்கு வேண்டிய பணம், கதை வசனத்துடன் திரைப்பட நகருக்கு வந்து தங்கி, குறைந்த செலவில் படத்தைத் தயாரித்து, முழுத் திரைப்படமாகக் கொண்டு போகலாம்.

**நவீனத் தொழில் நுட்பங்களுடன்**
**தமிழ்நாடு திரைப்பட நிறுவனம்**

கலையும், தொழில் நுட்பமும் இணைந்து படைக்கப்பட்ட இணையிலாச் சாதனமான திரைப்படம் மற்றும் தொலைக்காட்சியின் தொழில் நுட்ப வளர்ச்சியினை மாணவர் களுக்குக் கற்பித்து, அதன் தயாரிப்புக் களத்தில், செயல்திறன் கொண்டவர்களாக அவர்களை உருவாக்குவது தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிலையம்.

திரைப்படத் தொழிலில் ஈடுபட்டிருப் போரின் பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி, டிப்ளமோ மற்றும் நடிப்புப் பயிற்சி களில் இட ஒதுக்கீடு செய்துகொடுத்திருக் கிறார் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்.

விஞ்ஞான வளர்ச்சி மேம்பட்டுவரும் இக்காலத்தில், அதற்கு ஈடுகொடுக்கும் வகையில் நவீன கருவிகள் வாங்கும் முயற்சிகள் ஆண்டுதோறும் தொடரப்பட்டு வருகின்றன. **1994-95**-ஆம் ஆண்டு, பகுதி இரண்டு திட்டத்தின் கீழ், தமிழ்நாடு திரைப் படம் மற்றும் தொலைக்காட்சி நிறுவன முன்னேற்றத்திற்காக ரூ.**11** இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. **1995-96**-ஆம் ஆண்டு முதல், வண்ண நெகட்டிவ் படச்சுருள் பதனிடும் இயந்திரம் அதன் பணியைத் தொடங்க உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்க அம்சமாகும். மேலும் திரைப்படக் கல்லூரியி லுள்ள நூலகத்தை மேம்படுத்துவதற்கென ரூ.5 இலட்சம் ஒப்பளிப்புச் செய்யப்பட்டது.

**செயற்கைக்கோள் மூலம்**
**செய்தி ஒளிபரப்பு**

தமிழக அரசின் மக்கள் நலத் திட்டங் களைப் படமாக்கிச் செய்தி மலர்களாகத் தொகுத்து, திரையரங்குகள் மூலமாகவும், வீடியோ மூலமாகவும் மக்களிடம் எடுத்துச் சென்று தெரிவிக்கும் சீரிய பணியைத் தமிழ்நாடு திரைப்படப் பிரிவு செயலாற்றி வருகிறது.

உலகெங்கிலும் செயற்கைக்கோள் மூலம் ஒளிநாடா நிகழ்ச்சிகள் 24 மணி நேரமும் கண்டு ரசிக்கப்படுவதைக் கருத்தில் கொண்டு, செயற்கைக்கோள் மூலம் ஒளிபரப்பு செய்யப்படுவதற்கான தமிழ் நிகழ்ச்சிகளைத் தமிழ்நாடு திரைப்படப் பிரிவு தயாரித்து வழங்கலாம் என்று கருதப்படுகிறது. **1990-91, 1991-92**-ஆம் ஆண்டுகளுக்கான மாநிலத் திரைப்பட விருதுகள் வழங்கும் விழாக் களைப் படமெடுத்து விளம்பரதாரர்கள் வழங்கும் நிகழ்ச்சியாக, திரைப்படப் பிரிவு ஏற்கெனவே நிகழ்ச்சியினைத் தயார் செய்தது. இந்நிகழ்ச்சி விளம்பரதாரர்கள் மூலம் சென்னைத் தொலைக்காட்சியில் காண்பிக் கப்பட்டு, கணிசமான வருவாயை அரசுக்கு ஈட்டித்தந்தது. அதேபோலத் தமிழகத்திலுள்ள சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் குறித்தும், அரசின் வளர்ச்சிப் பணிகள் குறித்தும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் தயார் செய்யப்பட்டு விளம்பரதாரர் வழங்கும் தொடர் நிகழ்ச்சியாகத் தொலைக்காட்சியில் ஒலிபரப்பப்படும்.

**வித்தகர்க்கு விருதளிப்போம்!**
**பாராட்டிப் பரிசளிப்போம்!**

திரைப்படத் துறையில் சாதனை புரி வோருக்கும், சரித்திரம் படைப்போருக்கும்

விருதுகள் வழங்கியும் பரிசுகள் அளித்தும், பாராட்டுகள் அளித்தும் கௌரவித்திட வேண்டும் என்னும் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அறிவுறுத் தலுக்கு இணங்க, சிறந்த திரைப்படங்களுக்கு முதற்பரிசாக ரூ.1,25,000, இரண்டாவது பரிசாக ரூ.75,000, மூன்றாவது பரிசாக ரூ.50,000, சிறப்புப் பரிசாக ரூ.50,000 வழங் கப்படுவதுடன் பரிசுக் கேடயமும் வழங் கப்படுகிறது.

குறைந்த முதலீட்டில் தயாரிக்கப்படும் சமுதாய நோக்குப் படங்களுக்கான ஆதரவு உதவித் தொகை ரூ.2 இலட்சத்திலிருந்து ரூ.3 இலட்சமாக உயர்த்தப்பட்டதுடன், ஆதரவு உதவித் தொகை பெறும் படங்களின் எண்ணிக்கை 50 லிருந்து 75 ஆக உயர்த் தப்பட்டு, ரூ.2.25 கோடி ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது.

1994-ஆம் ஆண்டில் திரைப்படத் தொழிலே முடங்கிப் போகுமோ என்ற அளவுக்குச் சிக்கலான பிரச்சினை எழுந்தபோது, மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், இப்பிரச்சினையில் தலையிட்டு, பேச்சுவார்த்தை நடத்தி திரைப்படத் தொழிலை மீண்டும் தொடங்குவதற்கும், திரைப்படத் தொழிலாளர்கள் தங்கள் தொழிலைத் தொடர்ந்து செய்வதற்கும் உறு துணையாகத் திகழ்ந்தார்.

**சிறந்த கலைத்தொண்டுக்கு ஜெயலலிதா விருது**

திரைப்படத்துறைக்கு ஊக்கமளித்து, கலை, இலக்கியம், பண்பாட்டின் மேன்மைக்கும், திரைப்படத்துறையின் மேம்பாட்டுக்கும் பாடு பட்டுவரும் மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களது பெயராலே 'ஜெயலலிதா விருது' என்னும் சிறப்பு விருது, திரைப்படத்துறையில் நீண்ட காலம் சிறந்த தொண்டாற்றிய கலை வித்தகர்களுக்கு வழங்கப்படுகிறது. மேலும் அறிஞர் அண்ணா, பாவேந்தர் பாரதிதாசன், கலைவாணர், இராஜா சாண்டோ, டாக்டர் எம்.ஜி.ஆர் ஆகியோரது பெயரால் விருதுகள்

**தமிழ் வளர்ப்போம்!**

**தமிழ் - தமிழ் - தமிழ் என எப்போதும் தமிழை வளர்ப்பதையே தங்கள் கடமை யாகக் கொள்ளுங்கள்.**

**—தமிழ்த் தென்றல் திரு.வி.க.**

வழங்கப்பட்டு வருகின்றன.

'ஜெ.ஜெயலலிதா திரைப்பட நகர்' திறப்புவிழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததற்கிணங்க இவ்வாண்டி லிருந்து சிறந்த திரைப்பட ஒப்பனைக் கலைஞர், சிறந்த திரைப்படத் தையற்கலைஞர் ஆகியோருக்கும் விருது வழங்கப்படும். அதே போல நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களின் பெயரில் 'சிவாஜி கணேசன் விருது' வழங்கப்படும் எனவும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்துள்ளார்கள். இவ்விருதும் இவ் வாண்டு முதல் வழங்கப்பட உள்ளது.

அரசுக்குச் சொந்தமான இடங்களில் படப்பிடிப்பு நடத்த ஒரு இடத்திற்கு ஒரு நாளைக்குக் கட்டணம் ரூ.5,000 என்றும், காப்புத் தொகை ரூ.5,000 என்றும் இருந்தது. இக்கட்டண விகிதத்தைப் புராதனச் சின்னம் மற்றும் அதுபோன்ற இடங்களுக்கு ஒரு நாளைக்கு ரூ.5,000 ஆகவும், ஏனைய இடங்களுக்கு ஒரு நாளைக்கு ரூ.2,500 ஆகவும் குறைத்துப் புரட்சித் தலைவி அவர்கள் சலுகை வழங்கியுள்ளார்.

**கலையுலகத் தொழிலாளர் நிலையுயர...**

திரைப்படத் தொழிலாளர்களின் நலனின் தனி அக்கறை கொண்டு, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் திரைப் படத் தொழிலாளர்கள் வீடு கட்டிக் கொள் வதற்காகச் சென்னை அருகே வேளச்சேரி பள்ளிக்கரணையில் ரூ.10 கோடி மதிப்புள்ள 85 ஏக்கர் நிலத்தினை, தென்னிந்தியத் திரைப் படத் தொழிலாளர் சம்மேளனத்திற்கு 20.4.95 அன்று இலவசமாக வழங்கியுள்ளார்.

60 வயது முடிந்த திரைப்படத் தொழிலா

மனிதனை நல்ல வாழ்க்கையை நோக்கி அழைத்துச் செல்வதோடு, அவனை மனிதாபிமானம் மிக்கவனாகவும், பண்புடையவனாகவும் மாற்றுவது தான் கல்வியின் நோக்கம். - மாண்புமிகு முதல்வர்

ளர்களுக்கு மாதம் ரூ.300 ஒய்வூதியம் வழங்க மாண்புமிகு முதல்வர் ஆணையிட்டுள்ளார். இத்திட்டத்தால் உடனடியாக 1000 பேர் பயன்பெறுவர்.

திரைப்படத் தொழிலாளர்களுக்கு நன்மை யளிக்கும் விபத்துக் காப்புறுதித் திட்டம் ஒன்றைச் செயல்படுத்த டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டுள்ளார். இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு தொழிலா ளரும் ரூ.50,000-க்குக் காப்புறுதி செய்யப் படுவர். விபத்தில் இறந்தால் இந்தத் தொகை குடும்பத்துக்கு வழங்கப்படும். விபத்தில் உடல் ஊனமுற்றால் அதற்குரிய காப்பீடு வழங்கப் படும்.

மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணைப்படி, 'திரைப்படத் தொழிலாளர் நலநிதி' ஒன்றை அரசு ஏற்படுத்தி உள்ளது. இதன்படி ஒவ்வொரு திரைப்படத் தொழிலாளரும் மாதம் ரூ.25 அல்லது ஆண்டுக்கு ரூ.300 இந்நலநிதிக்குச் சந்தாவாகச் செலுத்தவேண்டும். நிலுவை யின்றிச் சந்தா செலுத்தும் திரைப்படத் தொழிலாளர்கள் ஒய்வூதியத் திட்டத்திலும், விபத்துக் காப்புறுதித் திட்டத்திலும் சேர்க் கப்படுவர்.

### கலைவிருந்தாம் பொருட்காட்சி

கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தளித்து, காணுகின்ற மக்களுக்கு மகிழ்வூட்டுவது மட்டுமல்லாமல் அறிவூட்டவும் பயன்படும் வண்ணம், மாநிலத்தில் பல்வேறு மாவட்டத் தலைநகரங்களில் செய்தி மக்கள் தொடர்புத் துறை பொருட்காட்சிகளை நடத்திவருகின் றது.

மேலும் பெருநகரங்களில் வாழ்வோர் மட்டுமல்லாது, பிறமக்களும் பயன்பெறும் வண்ணம், சென்ற ஆண்டில் காரைக்குடி, தருமபுரி ஆகிய இடங்களில் சிறு பொருட் காட்சிகள் நடத்தப்பட்டன. வரும் 1995-96 நிதி ஆண்டில் கூடுதலாக வேலூரிலும், கடலூரிலும் பெரிய அளவிலான பொருட் காட்சிகள் நடத்தப்பட உள்ளன.

### காலத்தை வென்ற காவிய நாயகர் டாக்டர் எம்.ஜி.ஆர். ஒலி - ஒளிக் காட்சி

மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், காலத்தை வென்ற காவிய நாயகராய், மறைந் தும் மறையாமல், இறந்தும் இறவாத புகழோடு விளங்குகின்ற புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் வாழ்க்கை வரலாறு, அவரது சீரிய கருத்துக்கள் மற்றும் சாதனை களை விளக்கும் ஒலி-ஒளிக் காட்சிகள் நடத்தவேண்டும் என்று ஆணையிட்டார். அதன்படி மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தலைமையில் 21 உறுப்பினர் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டது. இக் குழு வழங்கிய பரிந்துரைப்படி பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். ஒலிஒளிக் காட்சி நடத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### வரலாற்று நாயகர்களை வாழ்த்தி விழா எடுப்போம்!

இளைய தலைமுறைக்கு, மகத்தான தலைவர்கள் பற்றியும், மாபெரும் வரலாற்று நிகழ்ச்சிகள் பற்றியும் உணர்த்தவேண்டும் என்பதில் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பேரார்வம் கொண்டு அந்தப் பொறுப்பைச் செய்தி மக்கள் தொடர் புத் துறையிடம் ஒப்படைத்து இருக்கிறார்கள். அந்தப் பொறுப்பை மகிழ்வோடு ஏற்று, டாக்டர் அம்பேத்கர், சர்.பிட்டி திராகராயர், பாவேந்தர் பாரதிதாசன், கண்ணியத்தோன்றல் காயிதே மில்லத், கவியரசு கண்ணதாசன், பெருந்தலைவர் காமராஜர், கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி., பேரறிஞர் அண்ணா, தந்தை பெரியார், அண்ணல் காந்தியடிகள், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், மூதறிஞர் இராஜாஜி, மகாகவி பாரதியார், பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர்., நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் முதலான அரும்பெரும்

தலைவர்களின் பிறந்த நாள் விழாக்களை அனைத்து மாவட்டங்களிலும் அழகுற நடத்திக் கொண்டிருக்கிறது செய்தி மக்கள் தொடர்புத் துறை. அதுமட்டுமின்றி, விடுதலை நாள், தேசிய மறு சமர்ப்பண நாள், தேசிய ஒருமைப்பாட்டு வாரம், மனித உரிமை நாள் ஆகிய விழாக்களையும் செவ்வனே நடத்தி வருகின்றது.

கடந்த ஆண்டு சட்டமன்றத்தில், பூலித் தேவர், ரிபெல் முத்துராமலிங்க சேதுபதி, தீரன் சின்னமலை, அழகு முத்துக்கோன் ஆகிய சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு விழா நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டது. இவ்விழாக்கள் சிறப்புற நடத்தப்பெற்றன.

கண்ணியத் தோன்றல் காயிதே மில்லத் அவர்களின் நூற்றாண்டு விழா கடந்த ஜூன் **5-**ஆம் நாளன்று இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தலைமையிலே சென்னை மாநகரில் மிகவும் சீரோடும் சிறப்போடும் நடத்தப்பட்டது. மேலும் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களது ஆணைப்படி, தொடர்ந்து அனைத்து மாவட்டங்களிலும், காயிதே மில்லத் நூற்றாண்டு விழா மற்றும் குமரி மாவட்டத்தில் நேசமணி நூற்றாண்டு விழா ஆகியவை சிறப்புடன் கொண்டாடப் பட உள்ளன.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, பாரத ரத்னா எம்.ஜி.ஆர். ஆகியோரது வாழ்க்கை வரலாறுகளை மிகச் சிறப்பாக நூல் வடிவாக்கி அரசே வெளியிட உள்ளது.

**வாழ்வாங்கு வாழ்ந்தவரை வணங்கிச் சிலை வடிப்போம்!**

காலத்தின் தூதுவனாய், அறிவு என்னும் கண் கொடுத்த நாயகனாய், மடமை வேரின் மூலத்தைக் கண்டறிந்து தகர்த்து வீசிட மூண்டெழுந்த பேரிடியாய், தமிழன் இந்த ஞாலத்தில் தலைநிமிர்ந்து வாழ்வதற்குப் பாடுபட்ட பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் நடத்திய வைக்கம் போராட்டத்தின் நினைவாக, கேரள மாநிலம் வைக்கத்தில் நினைவுச்சின்னம் அமைக்க வேண்டும் என்ற இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆணையை ஏற்று, ரூ.**15** இலட்சம் செலவில் நினைவகம் எழுப்பப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது. மேலும் இந்நினை வகத்தில் நூலகம், தந்தை பெரியார் வாழ்க்கை வரலாற்றை விளக்கும் நிழற்படக் கண்காட்சி, பெரியாரின் திருவுருவச் சிலை, திறந்தவெளிக் கலையரங்கம் ஆகியவையும் நிறுவப்பட்டுள்ளன.

**மகாகவி பாரதி**

பட்டினிப் பற்கள் வயிற்றைக் கடித்த போதும், பசி குடலையே சாப்பிடக் கூப்பிட்ட போதும், எட்டையபுரத்தில் கட்டையாய்க் கிடக்காமல் இந்திய தேசத்து நெருப்புப் பந்தமாய் நின்றவன்; பாரதத்திலே, பா ரதத்திலே, பாரதிரப் பாடியவன்; அடையாத சுதந்திரம் ஆயிரம் இருந்தும் ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோம் என்று ஆனந்த ராகம் பாடியவன்; காலுக்குக் கீழே நின்று கவிஞர்கள் சிந்தித்தபோது, தோளுக்கு மேலே நின்று அண்ட சராசரங்களையும் கவியாலே அளந்து பார்த்த சிந்தனைக் கவிஞன், புதுமைக் கவிஞன் பாரதி, சென்னை திருவல்லிக்கேணியில் வாழ்ந்த இல்லத்தை ரூ.**5.70** இலட்சம் செலவில் அரசு கையகப்படுத்தி ரூ.**6.75** இலட்சம் செலவில் அதைப் புதுப்பித்தது. இந்நினைவில்லத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் திறந்து வைத்தார்கள். பாரதியாரின் மார்பளவு வெண்கலச் சிலையும், அவரது வாழ்க்கை வரலாற்றைச் சித்திரிக்கும் புகைப்படக் கண்காட்சியும் இவ்வில்லத்தில் இடம் பெற்றுள்ளன. கல்வித் துறை மூலமாக நூலகம் ஒன்றை அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

**மருது சகோதரர்**

உரிமைப்போரில் முன்னின்று தமிழகத் தின் மானம் காத்து, தாயகத்தின் விடுதலைக் காகத் தம்மையே ஈந்த மருது சகோதரர்கள் நினைவாக ரூ.**5.46** இலட்சம் செலவில் நினைவு வளாகம் கட்டப்பட்டு, டாக்டர் புரட்சித் தலைவி அவர்களால் திறந்துவைக்கப்பட்டது.



சிங்கநிகர் மருது சகோதரர் சிலைகளும் ஆங்கு நிறுவப்பட்டுள்ளன.

**புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் நிலைத்த புகழுக்கோர் நினைவகம்**

மக்களின் இதய சிம்மாசனத்தில் அமர்ந் திருக்கும் மகத்தான வள்ளலாம் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நினைவகம், அவரது அரிய பெயருக்கும் உயரிய பெருமைக்கும் ஏற்ப மிகச் சிறப்பாக அமைந்திட வேண்டும் என்னும் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆணைப்படி, டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நினைவகம் ரூ.2.265 கோடி செலவில் மாற்றியமைக் கப்பட்டு டாக்டர் புரட்சித் தலைவி அவர் களது கரங்களாலேயே திறந்துவைக்கப் பட்டது. மேலும் இந்நினைவக வளாகத்தில், எம்.ஜி.ஆர். அருங்காட்சியகம் ஒன்றும் அமைக் கப்பட உள்ளது.

**வள்ளுவர் சிலை**

உலகின் பொதுமறை - தமிழரின் திருமறை திருக்குறளைத் தந்த வான்புகழ் வள்ளுவப் பெருந்தகைக்கு, கன்னியாகுமரியில் விவேகா னந்தர் பாறையை அடுத்துள்ள சிறிய பாறை மீது 133 அடி உயரச் சிலை நிறுவ இதுவரை ரூ. 2.315 கோடி நிதி விடுவிக்கப்பட்டுள்ளது. சிலை அமையும் அடிப்பீடத்தில் தேர்ந்தெடுக் கப்பட்ட 266 குறட்பாக்கள் பொறிக்கவும், சிலையைச் சுற்றி ஒளி விளக்குகள் அமைக்க வும் ரூ.15.50 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப் பட்டுள்ளது.

**கவியரசு கண்ணதாசன்**

சிறுகூடல் பட்டியில் பிறந்த செட்டி நாட்டுக் கவிஞன்; பொற்பதமும், சொற் பதமும் நிறைந்த கவிஞன்; வாழ்த்துப்பா இசைத்த போதும், வசவுப்பா உதிர்த்த போதும், வளமான கவிதையின் வடிவத்தைச் சிதைக்காது தந்த கவிஞன்; வண்ணத் தமிழ் மகளை வாழ வைப்பதற்கு எண்ணச் சிறகடித்து எண்ணற்ற கவிதைகளை வண்ணமுறத் தந்த கவிஞன்; காலம் என்னும் மாளிகையிலும், காற்று மழை ஊழியிலும், கனல் நெருப்பிலும் அழிக்க முடியாத கவிதைகளைத் தந்த கவிஞன் - கவியரசு கண்ணதாசனுக்கு ரூ.55 இலட்சம் செலவில், காரைக்குடியில் மணிமண்டபம் அமைத்து மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களே திறந்து வைத்தார். மேலும் இம் மணிமண்டபத்தில் கண்ணதாசனின் மார்பளவு வெண்கலச் சிலையும் நிறுவப்பட்டுள்ளது.

தாழ்த்தப்பட்ட இன மக்களின் மேம் பாட்டுக்குப் பாடுபட்டவரும், சென்னையின் முன்னாள் மேயருமான சிவராஜ் அவர்களின் சிலை, மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களால் திறந்துவைக்கப்பட்டது.



தான் பிறந்த மண்ணுக்குத் தமிழ்நாடு என்று பெயர்சூட்ட வேண்டுமென்று போராடி, உண்ணா நோன்பிருந்து உயிர்விட்ட தியாகி சங்கரலிங்கனார் அவர்களின் சிலை அமைக்க முடிவு செய்யப்பட்டு, சிலை செய்யும் பணி முடிவுபெறும் நிலையில் உள்ளது. அதே போலத் தமிழ்த்தென்றல் திரு.வி.க. சிலையும், விடுதலைப் போராட்ட வீரர் செண்பகராமன் சிலையும் பணி முடிவடையும் தருவாயில் உள்ளன. விரைவில் சிலை நிறுவப்படும்.

**நிறைகுடமாம் சான்றோர்க்கு நினைவகங்கள்**

"தமிழன் என்பதை மறக்காதே, தாய் மொழிப் பெருமையை துறக்காதே" என்று பாடிய நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை அவர்களது நினைவகத்தை நாமக்கல்லிலும், சமுதாயக் கேட்டைத் தகர்ப்பதற்காகப் பாட்டுக் கோட்டை கட்டிய பட்டுக்கோட்டையின் கவிஞன் கல்யாண சுந்தரத்தின் நினைவகத்தைப் பட்டுக் கோட்டையிலும், நீதிக் கட்சிப் பெரியார் சர்.பிட்டி. . . தியாகராயரின் நினைவிடத்தை வண்ணாரப்பேட்டையிலும், மானுடம் போற்றிய மாமனிதர் ஜீவானந்தம் நினைவகத்தைக் கன்னியாகுமரியிலும், பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பேசிய திருமுருக கிருபானந்த வாரியார் நினைவகத்தைக் காங்கேயநல்லூரிலும், தீரத்தின் திருவுருவம் பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் நினைவகத்தைப் பசும்பொன்னிலும் அமைக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆணைப்படி கொங்குச் செல்வி, குடமலையாட்டி கண்ணகித் தெய்வத்திற்கு சிறப்புச் செய்திட, திருச்செங்கோட்டில் 'கண்ணகிக் கோட்டம்' அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பழம்பெருமை வாய்ந்த இராஜாஜி மண்டபத்தில் ரூ.17.97 இலட்சம் செலவிலும் வள்ளுவர் கோட்டத்தில் ரூ.26.61 இலட்சம் செலவிலும் பழுது நீக்கிச் சீரமைக்கும் பணிகள் நடைபெற்றுவருகின்றன. மேலும் மாவட்டங்களிலுள்ள பிற நினைவகங்களைப் பழுது நீக்கிட ரூ.5 இலட்சம் ஒதுக்கீடு ஆண்டு தோறும் செய்யப்பட்டுள்ளது. **1994-95-ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட தொகையில் தில்லையாடி வள்ளியம்மை நினைவகம், எட்டயபுரம்** பாரதி இல்லம், வேலூர் முத்து மண்டபம் ஆகிய நினைவகங்களில் மராமத்து மற்றும் பழுது பார்ப்புப் பணிகள் நடைபெற உள்ளன.

**வாழ்வியல் தகவல் களஞ்சியம் வண்ணத்தமிழ் மிளிரும் 'தமிழரசு'**

அரசின் சாதனைச் செய்திகளைப் பிச்சிப்பூ மணம் கமழும் அச்சுப் பூக்களாக ஏந்தி-அரசின் கொள்கைகள், கோட்பாடுகள், திட்டங்கள், வளர்ச்சிப் பணிகள், ஆகியவற்றைத் தாங்கி எழுத்துத் தூதுவனாக மக்களை அடைந்து மணம் பரப்பி வருகிறது 'தமிழரசு'. அறிஞர்தம் இதயஓடை ஆழத்திலிருந்து மொண்டுதரும் அரிய கருத்தோவியங்களும், வாழ்வாங்கு வாழ்ந்தோரின் வரலாறுகளும் வண்ணத் தமிழில் இடம்பெறும் வாழ்வியல் தகவல் களஞ்சியமாய் வனப்போடு வெளிவருகிறது 'தமிழரசு'. சந்தாதாரர் முகவரிகளை அச்சடிக்கும் பழைய 'பிராட்மா' முறையிலிருந்து கணினி மூலம் அச்சடிக்க ரூ.1.10 இலட்சம் செலவில் 'தமிழரசு' அலுவலகத்திற்குப் புதிய கணினி வாங்கப்பட்டு உள்ளது. 'தமிழரசு' இதழில் அச்சுத்திறனை

மேம்படுத்தவும், துரிதமாக அச்சிடவும் இரு வண்ண ஆப்செட் இயந்திரம் ரூ.30 இலட்சம் செலவில் இவ்வாண்டு வாங்கப்பட உள்ளது.

## புரட்சி முழக்கம் எங்கள் புரட்சித்தலைவியின் முழக்கம்

காலங்கள் பல கடந்தாலும், களங்கள் பல மாறினாலும், என்றென்றும் பாராட்டுகின்ற வகையில், பல்வேறு நிகழ்ச்சிகளில் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆற்றிய புரட்சிகரமான உரைகளைத் தொகுத்து "புரட்சித்தலைவியின் முழக்கம்" எனத் தமிழிலும் 'Jayalalitha Speaks' என ஆங்கிலத்திலும் மூன்று தொகுப்புகள் வெளியிடப்பட்டுள்ளன. இந்த அரிய தொகுப்புகள், புரட்சித் தலைவி அவர்களின் ஆற்றல்மிகு சிந்தனைகளையும், அரும்பெரும் செயல்களையும் காட்டுகின்ற கண்ணாடியாக விளங்கிக்கொண்டிருக்கின்றன.

## பத்திரிகையாளர் நலனுக்கு பாடுபடும் நல்லரசு

செய்தித்துறையின் ஓர் அங்கமாகச் செயல்படுகின்ற பத்திரிகையாளர்களின் நலன் காக்கும் நல்லரசாக டாக்டர் புரட்சித் தலைவியின் அரசு செயல்பட்டுவருகிறது.

சென்னை மற்றும் மாவட்டங்களிலுள்ள 250-க்கும் மேற்பட்ட பத்திரிகையாளர்கள், இலவச பஸ் பாஸ், 50 சதவிகித இரயில்வே கட்டணச் சலுகை, வீட்டுவசதி வாரியக் குடியிருப்புப் பெறுவதில் முன்னுரிமை, தொலைபேசி இணைப்புப் பெறுவதில் முன்னுரிமை, ஆகியவை பெறும் வகையில் அரசு அங்கீகார அட்டை வழங்கியுள்ளது.

அதுமட்டுமின்றி, சென்னைப் பத்திரிகையாளர்களுக்குச் சொந்த வீடு கட்டிக் கொள்ள திருவான்மியூரை அடுத்துள்ள கொட்டிவாக்கத்தில 5.5 ஏக்கர் நிலமும் ரூ.20 இலட்சம் மானியமும் அரசு வழங்கியுள்ளது. பத்திரிகையாளர்கள் வீடு கட்டிக் கொள்வதற்காக வீடொன்றுக்கு ரூ.40,000 வீதம் மானியமாக ரூ.50 இலட்சம் வரை வழங்க இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

பத்திரிகைத் துறையிலிருந்து ஓய்வுபெற்ற ஏழ்மை நிலையிலுள்ள பத்திரிகையாளர்களுக்கு மாதந்தோறும் ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. மாதம் ரூ.400 ஆகப் பெற்றுவந்த பத்திரிகையாளர் ஓய்வூதியத்தை இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ரூ.500 ஆக உயர்த்தி வழங்குமாறு ஆணையிட்டார்கள். அதன்படி 1992-ஆம் ஆண்டு முதல் ரூ.500 வழங்கப்பட்டுவருகிறது.

## எண்திசையும் போற்றிட நடந்த எட்டாவது உலகத் தமிழ் மாநாடு

எண் திசைத் தமிழர்களும் தஞ்சைத் திசை நோக்கித் தமிழ் உலா வந்த எட்டாம் உலகத் தமிழ் மாநாடு நடந்த ஐந்து நாட்களிலும் அற்புதங்கள் அரங்கேற்றமாயின. உள்ளத்தைக் கொள்ளைகொள்ளும் இலக்கியக் காட்சிகள் நிறைந்த ஊர்வலம், 1,200 அறிஞர்கள் அகிலமெங்கிலும் இருந்து திரண்டுவந்து தமிழாய்வு நடத்திய ஆய்வரங்கம், 'நெல் விளைகின்ற தஞ்சையில் இனி சொல் விளையும்' என்று பார்த்தோர் பாராட்டும் வகையில் நடைபெற்ற கருத்தரங்கங்கள், கவியரங்கங்கள், கலைமகள் குடிகொள்வது இங்குதானோ என்று கருதும் வண்ணம் இடம்பெற்ற கலைநிகழ்ச்சிகள், குடியரசுத் துணைத் தலைவர் கலந்து கொண்ட தொடக்கவிழா, பாரதப் பிரதமர் பங்கேற்ற நிறைவு விழா இவையெல்லாம் வரலாற்றின் வைரமணிப் பக்கங்களில் இடம் பெற்றுவிட்ட அற்புதங்களாகும்.

"தொண்டு செய்வோம் தமிழுக்குத் துறைதோறும் துறைதோறும் துடித் தெழுந்தே" என்று உணர்ச்சிப் பிழம்பாய்ப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் முழங்கிய முழக்கம் செயலிலே சிலிர்த்தெழுந்த மாநாடுதான் உலகமே வியந்து பாராட்டும் வகையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் படைத்த எட்டாம் உலகத் தமிழ் மாநாடு.

தமிழ் நிலம், தமிழ் மொழி, தமிழர் திறம், ஆகியவற்றின் அருஞ்சிறப்பினைச் செப்பும் விதமாக வரலாறு காணாத வகையில் 54

அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பு... தமிழகத்தின் பழம்பெருமை பேசும் கலைகளான கரகாட்டம், காவடி ஆட்டம், பொய்க்கால் குதிரையாட்டம், புலியாட்டம், மயிலாட்டம், நையாண்டி மேளம், தாரை தப்பட்டை, கும்மி, கோலாட்டம், கொக்கலிக் கட்டை, ஓதுவார் பண்ணிசை, குதிரை வீரர்களின் அணிவகுப்பு என 27 கலை நிகழ்ச்சிகள்... கலை நிகழ்ச்சிகள் ஒவ்வொன் றிற்கும் இனிய இசையில் கருத்துமிக்க பாடல்கள்... என இன்சுவை யாவும் கலந்து சிந்தனைக்கு விருந்தளித்த கலைக்காட்சிப் பேரணி! தமிழகம், பிற மாநிலங்கள், மற்றும் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் கண்டு, கேட்டு, களிக்கும் வண்ணம் ஐந்து நாட்களிலும் சிறப்புமிகு இயல், இசை, நாடகக் கலைஞர்கள் பங்குபெற்ற நடனம், பாட்டு மற்றும் நாடக நிகழ்ச்சிகள்... குறிப்பாகத் தமிழக நாட்டுப் புறக் கலை நிகழ்ச்சிகள், தஞ்சை நகரின் பல்வேறு பகுதிகளிலும் தெருமுனைக் கலை நிகழ்ச்சிகளாக சிறப்புடன் நடத்தப்பட்டன.

தமிழர் தம் வீரம், காதல், ஈகை, மொழிப் பற்று ஆகியவற்றை விளக்கும் விதமாகத் தமிழகத்தின் முன்னணி நடிகர், நடிகைகள் பங்குபெற்ற, இளம் இயக்குநர் உதயகுமார் இயக்கத்தில் உருவான 'இலக்கியச் சோலை' என்னும் வண்ணத் திரைப்படத்தினை இத் துறை தயாரித்து வெளியிட்டது.

உலகத் தமிழ் மாநாட்டின் நிகழ்ச்சிகளை செய்திகள், புகைப்படங்கள், தொலைக்காட்சி வாயிலாக உலக மக்களுக்குத் தெரிவிக்கும் பணியை இத்துறை திறம்படச் செய்தது. பத்திரிகைகள் மற்றும் செய்தி நிறுவனங் களுக்குச் செய்திகளை அனுப்ப அனைத்து நிகழ்ச்சிகளையும் சீராகப் பதிவு செய்து உடனுக்குடன் தொலைக்காட்சி மூலம் நேரடியாகவும் ஒளிபரப்ப ஏற்பாடு செய்து மாநாட்டிற்கு வராத மக்களும் நிகழ்ச்சிகளைக் காண சிறப்பாக வகை செய்யப்பட்டது.

உலகத் தமிழ் மாநாட்டின் தொடக்கநாள் நிகழ்ச்சி முதல், நிறைவுநாள் நிகழ்ச்சி வரை அனைத்து நிகழ்ச்சிகளையும் திறமை வாய்ந்த பேச்சாளர்கள், புலவர்களைக் கொண்டு பாங்குறத் தொகுத்து வழங்கும் பணியையும் இத்துறை மேற்கொண்டது.

### அரசின் பணிகளை மக்களுக்கு அறிவிப்போம்

அரசின் பல்வேறு வளர்ச்சிப் பணிகளை, சாதனைகளைக் கிராம மக்களும் அறிந்து பயனடையும் வகையில், பல்வேறு மக்கள் தொடர்புச் சாதனங்கள் துணையுடன் பல் துறைப் பணி விளக்க முகாம்கள் நடத்தப்படு கின்றன. மக்கள் தொடர்புச் சாதனங்களின் பல்வேறு விளம்பர முறைகள், மரபு வழி பண்பாட்டுக் கலைநிகழ்ச்சிகள், முன்னேறிய தொழில்நுட்ப ஊடகங்கள் வாயிலாக அரசின் நலத்திட்டங்கள் விளக்கப்படுவதுடன் மக்கள் வசிக்கும் இடங்களிலேயே ஒரே நேரத்தில் பல்வேறு நலத்திட்டங்களின் கீழ் உதவிகளும் வழங்க ஏற்பாடு செய்யப்படுகின்றன. இத் தகைய பல்துறைப் பணி விளக்க முகாம்கள் சிதம்பரனார், இராமநாதபுரம், திருவண்ணா மலை சம்புவராயர், திண்டுக்கல் அண்ணா, விழுப்புரம் இராமசாமிப் படையாட்சியார், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் ஆகிய மாவட்டங்களில் மிகவும் சிறப்பாக நடத்தப் பட்டன.

மாநில அரசின் துறைகள், அரசு சார்பு நிறுவனங்கள் ஆகியவற்றின் விளம்பரங்கள், அரசின் மைய விளம்பர வெளியீட்டுக் கொள்கையின் கீழ், சிறிய மற்றும் நடுத்தரப் பத்திரிகைகளுக்கு அளிக்கப்பட்டு அவை ஊக்குவிக்கப்படுகின்றன.

### திரையரங்கு செல்வோரின் வசதிக்கு உறுதி

திரையரங்குகளுக்குப் படம் பார்க்கச் செல்லுகின்ற பொதுமக்களுக்குக் கிடைக்க வேண்டிய வசதிகள் பாதுகாப்பு ஆகிய வற்றுக்கு உறுதி செய்யும்வகையில், சட்ட விதிகளில் காணப்படும் ஏற்பாடுகளைக் கண்டிப்பாகப் பின்பற்றவேண்டும் என்பதில் அரசு மிகுந்த கவனம் செலுத்தி வருகின்றது.

திரையரங்குகளில் நுழைவுச் சீட்டு விற்பனையை முறைப்படுத்த கடைசி வகுப்பு தவிர, பிற வகுப்புகள் அனைத்துக்கும் நுழைவுக் கட்டணத்தை அதிகரித்தோ, குறைத்தோ, தேவையான வகையில் நிர்ண யித்துக்கொள்ள அரசு அனுமதி அளித்து உள்ளது.

# எந்நாட்டவரும் போற்றும் நம்நாட்டுக் கலைகள்!



நடனக் கலை தமிழ்நாட்டின் பழங்கலைகளில் ஒன்றாகும். சங்க காலம் முதற்கொண்டு, தமிழர்களின் வாழ்க்கையில் நடனம் அல்லது கூத்து, மக்களின் உள்ளங்களிலே ஆன்மீக வேட்கையை உருவாக்குவதற்குப் பயன்பட்டுள்ளது. நமது தொல்காப்பியம், ஆடலுக்கு இலக்கணம் கூறும் நூல். சிலப்பதிகாரம், பயிற்றுவிக்கப்பட வேண்டிய நடனக் கலையின் இலக்கணத்தையும், நுட்பத்தையும், பெருமையையும், விளக்குகிற காவியம். சுருக்கமாகச் சொன்னால், பல்லவ, சோழ, சேர, பாண்டிய மன்னர்கள் காலத்தில், நடனக் கலை மன்னர்களால் போற்றப்பட்டு, மக்களால் வரவேற்கப்பட்டு, அன்றாட வாழ்க்கையின் இன்றியமையாத ஒரு அம்சமாகக் கருதப்பட்டது. இன்றும் தமிழக நடனக் கலைகளில், தலைசிறந்த படைப்பாகப் பரத நாட்டியம் விளங்குகிறது.

"அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்" என்று, இறைவனையே பரதக் கலையின் கண்கண்ட வடிவமாக, தமிழ் மக்கள் கருதுகின்றனர். இறைவனுடைய நடனமே உலகத்தின் ஆதாரமென, நம்முடைய பழம்பெரும் இலக்கியங்கள் போற்றுகின்றன. பல்வேறு மனித உணர்வுகளின் பிரதி பலிப்பாகவும் பரதம் திகழ்கின்றது.

அன்றுபோல் இன்றும், பரதக் கலை, ஆடுவோர் உள்ளத்தில் இறையுணர்வு நிரம்பி நிற்கும் வகையிலும், காண்போர் உள்ளத்தில் உயர்ந்த இன்பம், ஆழ்ந்த அமைதி போன்றவற்றை உருவாக்கும் வகையிலும், எப்பொழுதும் மக்கள் மனதை ஈர்க்கும் ஓர் ஒப்பிலாக் கலையாக இருந்து வருகின்றது.

**புரட்சித்தலைவியின் முழக்கம் தொகுதி - 2-லிருந்து**

மேலும் வீடியோ திருட்டைத் தடை செய்வதற்கும், வீடியோ கேசட் மூலம் தொலைக்காட்சிப் பெட்டியில் திரைப் படங்கள் ஒளிபரப்பப்படுவதை முறைப் படுத்துவதற்கும் உரிய சட்டங்கள் இயற்றப் பட்டுள்ளன. அதேபோல, கேபிள் டி.வி. மூலம் திரைப்படங்கள் திரையிடுவதை முறைப்படுத்தவும் உரிய சட்டங்கள் இயற்றப் பட்டுள்ளன.

இப்படி, செய்தி மக்கள் தொடர்புத் துறையில் தமிழக அரசின் சாதனைகளை இன்னும் அடுக்கடுக்காகச் சொல்லிக் கொண்டே போகலாம்.

எளிய தொண்டர்கள் தினம் பாடும் திருப்புகழ், தேவாரம், திருவாசகம்; புலிகளை அடக்கிய புறநானூறு; எதிர்ப்போருக்குக் கலிங்கத்துப் பரணி; தித்திக்கும் தமிழை எத்துறையிலும் பரப்பிவரும் முத்தமிழ் அன்னை; மூன்று கடல் சூழ்ந்திருக்கும் தென்னகத்தில், மூன்று தமிழ் சிறந்திருக்கும் தமிழகத்தில், நான்காம் தமிழென அறிவியல் தமிழ் கண்டு, முத்தான தமிழ் வளர்க்கும் எங்கள் இதயதெய்வம்... மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் சாதனையின் சிகரமாக, சரித்திரத்தின் சின்னமாக, மக்கள் வேதனை தீர்க்கும் வெற்றி மகளாக, கடும் சோதனைகளையும் பொடிப் பொடியாக்கும் புனித அன்னையாக இன்னும் நூறாண்டு காலம் தமிழகத்தை ஆண்டு, சாதனைகளை மிஞ்சும் சாதனை படைப்பார் என்பதில் என்ன ஐயம்? ✻

# கடலலை போல் பெருகும் கல்வித்துறையின் சாதனைகள்

மாண்புமிகு கல்வியமைச்சர்

## பேராசிரியர் திரு க. பொன்னுசாமி

**பு**லவர் பெருமக்கள் எல்லாம் புகழ்ந்து பாடும் பெருமையைக் கடந்த நான்காண்டு காலப் பொற்கால ஆட்சியில் புரிந்துள்ள சாதனைகள் மூலம் இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் பெற்றிருக்கிறார்கள்.

"தொண்டு செய்வாய்
தமிழுக்குத்
துறைதோறும் துறைதோறும்
துடித்தெழுந்தே!"

என்று பாடினார் புரட்சிக் கவிஞர்

இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களோ, தமிழக மக்களின் வாழ்க்கைத் தரம் உயர, தமிழ்நாட்டு அரசின் துறைதோறும் துறைதோறும் இந்தியாவின் இதர மாநிலங்களுக்கெல்லாம் வழிகாட்டும் வகையில், முன்னோடித் திட்டங்கள் பலவற்றை முனைப்புடன் செயல்படுத்திப் புகழ் கொண்டுள்ளார்கள்.



இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சி இம்மண்ணில் உதயமான 1991 சூன் திங்கள் தொடங்கி இன்றுவரை நான்காண்டுக் காலத்தில் தமிழகக் கல்வித்துறை புரிந்துள்ள சாதனைகள் தமிழகத்தை இமயமாய் நிமிரச் செய்துள்ளன.

### நிதி ஒதுக்கீடு

ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் கல்வித்துறை வளர்ச்சிக்கும் ஒதுக்கப்படும் நிதியை 4 ஆண்டுக் காலத்தில் இருமடங்காக உயர்த்திய பெருமை இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களையே சாரும்.

கி.பி.2000-இல் அனைவர்க்கும் தொடக்கக்கல்வி, என்பது நடுவண் அரசின் குறிக்கோள்.

எனினும் உலகம் புகழும் 15 அம்சக் குழந்தைகள் நலத்திட்டம் கண்ட இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு, தமிழகத்தில் 1998 -லேயே அனைவர்க்கும் தொடக்கக்

**500 மக்கள் தொகை கொண்ட ஒவ்வொரு குக்கிராமத்திலும் ஒரு தொடக்கப் பள்ளி.**

**14 வயது வரையுள்ள குழந்தைகள் அனைவர்க்கும் கட்டாயத் தொடக்கக் கல்வி எனச் சட்டம் இயற்றிச் சாதனை.**

**தொடக்கப் பள்ளிகள் அனைத்திலும் பெண்களே ஆசிரியர்களாக நியமனம்.**

**தமிழக அறிவொளி இயக்கம் அகில இந்திய அளவில் மிகப்பெரிய சாதனையை நிகழ்த்தி உள்ளது.**

கல்வியை அளித்திட உறுதி பூண்டுள்ளது.

500 மக்கள் தொகை கொண்ட ஒவ்வொரு குக்கிராமத்திலும் ஒரு தொடக்கப்பள்ளி ஒரு கி.மீ.இடைவெளியில் ஒரு தொடக்கப் பள்ளி - எனக் கொள்கை வகுத்துள்ளது. 14 வயது வரையுள்ள குழந்தைகள் அனைவர்க்கும் கட்டாயத் தொடக்கக் கல்வி எனச் சட்டமியற்றிச் சாதனை புரிந்து இந்தியாவுக்கே வழிகாட்டியுள்ளது.

இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசின் ஒருங்கிணைந்த கூட்டு முயற்சிகளின் விளைவாகத் தொடக்க/நடுநிலைப்பள்ளிகளில் மாணவர் சேர்க்கை குறிப்பிடத் தக்க அளவில் பெருகியுள்ளது.

மேலும், தொடக்கப்பள்ளிகளில் இடையில் படிப்பை விடும் குழந்தைகள் சதவீதம் 23.14 சதவீதம் ஆக இருந்தது. 1994-95-இல் 16.54 சதவீதமாகக் குறைந்து விட்டது. நடுநிலைப் பள்ளிகளில் 58.75 சதவீதமாயிருந்தது, 34.74 சதவீதமாய் குறைந்து, சாதனை படைத்திருக்கிறது.

பள்ளி வயதுக் குழந்தைகளின் 100 சதவீத சேர்க்கைக்கும் சேர்ந்த குழந்தைகளின் தொடர்ச்சியான கல்வி வளர்ச்சிக்கும் உதவி செய்யும் வகையில், இந்த ஆண்டில் கூடுதலாக 100 தொடக்கப் பள்ளிகள் திறக்கப் படுகின்றன. 25 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 40 நடுநிலைப் பள்ளிகள் அரசு உயர்நிலைப் பள்ளிகளாகவும், 30 அரசு உயர்நிலைப் பள்ளிகள் மேல் நிலைப் பள்ளிகளாகவும் உயர்த்தப்படுகின்றன.



**அறிவியல் கல்வியில் சாதனை**

இதயதெய்வம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவியல் கல்வி வளர்ச்சிக்கு அளித்து வரும் ஊக்கம் காரணமாய், தென்னிந்திய அறிவியல் பொருட்காட்சியில் பங்குபெறும் நம் தமிழகப் பள்ளிகள் கடந்த மூன்றாண்டுகளாய்த் தொடர்ந்து வென்று சுழல் கேடயத்தைத் தக்க வைத்துக்கொண்டுள்ள சாதனை இங்குக் குறிப்பிடத் தக்கது.

இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் சீரிய முயற்சிகள் காரணமாகத் தமிழகத்தில் மொத்தமுள்ள 1757 மேல்நிலைப் பள்ளிகளுள், 1313 பள்ளிகளில் தொழிற்கல்விப் பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. 18.28 சத மாணவர்கள் தொழிற் கல்விப் பாடங்களைக் கற்றுவருவதால் அகில இந்திய அளவில் தமிழகம் பாராட்டப்பட்டுள்ளது.

**கட்டட வசதிகள்**

கட்டட வசதி இல்லாத தொடக்கப் பள்ளிகளுக்குக் குறைந்தபட்சம் இரண்டு அறைகள் கொண்ட கட்டடங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசினால் கட்டிக் கொடுக்கப்படுகின்றன.

**பெண் கல்வியை ஊக்கப்படுத்திட....**

தமிழகப் பெண் குழந்தைகளின் கல்வி வளர்ச்சிக்கு ஊக்கம் தந்து வரும் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களால்,

8-ஆம் வகுப்பு வரை படிக்கும் பெண்களுக்குத் திருமண நிதி உதவி அளிக்கப் படுகிறது.

பள்ளிகளில் அதிக அளவில் ஆதி திராவிட மாணவியரைச் சேர்க்கும் தலைமையாசிரியர்களுக்கு ஊக்கப் பரிசுகள் வழங்கப்படுகின்றன.

அனைத்துப் பெண்கள்

பள்ளிகளுக்கும் கழிப்பிட வசதிகள் படிப்படியாகச் செய்து கொடுக்கப்படுகின்றன.

கி.பி.2000-க்குள் 100 விழுக்காடு பெண்கள் கல்வியை எய்திட முதல்வரின் 15 அம்சத் திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தொடக்கப் பள்ளிகள் அனைத்திலும் பெண்களே ஆசிரியர்களாக நியமனம் செய்யப்படுகின்றனர்.

**மாவட்டத் தொடக்கக் கல்வி திட்டம்**

இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் சீரிய முயற்சிகள் காரணமாக, உலக வங்கி உதவியுடன், ரூ.126 கோடி மதிப்பீட்டில், தருமபுரி, விழுப்புரம் இராமசாமிப் படையாட்சியார், திருவண்ணாமலை சம்புவராயர், தென்னார்க்காடு வள்ளலார் ஆகிய 4 மாவட்டங்களில் தீவிரத் தொடக்கக் கல்வித் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் கிராமப் பகுதிகளில் வாழும் ஏழைக் குழந்தைகளும் தரமான கல்வியைப் பெற வழி வகுக்கப்பட்டுள்ளது.

**ஆசிரியர் நியமனம்**

கல்வித்தரம் உயர, தகுதி வாய்ந்த ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படுதல் அவசியம்.

தொடக்க நடுநிலைப்பள்ளிகளில் காலியாயுள்ள பணியிடங்களில் இடைநிலை ஆசிரியர்களை நியமனம் செய்திட, இதய தெய்வம் அவர்களின் அரசு, எழுத்துத் தேர்வு எழுதிய 56,000 பேரில் வெற்றி பெற்ற 13,148 பேருக்கு நேர்முகத் தேர்வு நடத்தியுள்ளது. இவர்களின் தகுதியும், திறமையும் வாய்ந்த 8000 பேர் மிக விரைவில் ஆசிரியர்களாய் நியமனம் செய்யப் படுவர்.

இம் மாபெரும் பணியைச் செய்துவரும் தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு வாரியம், பட்டதாரி, முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களையும் அவ்வப்போது தேர்வு செய்து வருகிறது.

கல்லூரிகளில் பல ஆண்டுகளாய் காலியாயுள்ள ஆசிரியர் பணி இடங்களையும் நிரப்பிட நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது.

**அறிவொளி இயக்கம்**

தமிழகத்தில் வாழும் 15/ 35 வயதுடைய மக்களிடையே உள்ள கல்லாமையை நீக்கும் முயற்சியில் தமிழக அறிவொளி இயக்கம் அகில அளவில் மிகப் பெரிய சாதனையை நிகழ்த்தி, இந்தியாவிலேயே மிகச் சிறந்த மாநிலம் தமிழகம் என்னும் பெருமையை ஏற்படுத்தியுள்ளது.

**புதிய பாட நூல்கள்**

வளர்ந்து வரும் அறிவியல் புதுமைகளுக்கேற்பப் பள்ளிப் பாடத் திட்டங்களை மாற்றியமைத்திட, இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வழங்கிய அறிவுரைகள்படி வல்லுநர் குழுவின் மூலம் பாடத் திட்டங்கள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன. அவற்றின் அடிப்படையில் பாடநூல்கள் புதிதாக உருவாக்கப்படுகின்றன. இந்த ஆண்டில் 1, 6, 11-ஆம் வகுப்புகளுக்குப் புதிய பாடநூல்கள் அறிமுகம் செய்யப்படுகின்றன. படிப்படியாக மற்ற வகுப்புகளுக்கும் புதிய பாடநூல்கள் தயாரித்து வழங்கப்படும்.

சீரிய இப்பணியைத் தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம் சிறப்பாகச் செய்துவருகிறது.

காகிதவிலை கட்டுப்பாடின்றி ஏறிவிட்ட நிலையிலும், ஏழைக் குழந்தைகளின் கல்வி நலன் ஒன்றையே பெரிதாய்க் கருதும் இதயதெய்வம் அவர்களின் அரசு, புத்தகங்கள்/குறிப்பேடுகள் ஆகியவற்றின் விலைகளை ஏற்றாமல் கடந்த ஆண்



டின் விலையிலேயே வழங்கிட ஆணையிட்டுள்ளது போற்றத் தக்க சாதனையாகும்.

**ஆசிரியர்களுக்குச் சிறப்புப் பயிற்சிகள்**

இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் நல்லாசியுடன் உருவாக்கப் பட்டுள்ள ஆசிரியர் கல்வி ஆராய்ச்சிப்பயிற்சி இயக்கம், ஆசிரியர்களுக்குப் புத்தறிவுப் பயிற்சிகளை அளித்து வருகிறது.

தொடக்கக் கல்வியின் தரத்தை உயர்த்திடும் நோக்கில் ஒவ்வொரு வகுப்பிலும் குழந் தைகள் அடையவேண்டிய குறைந்தபட்ச இலக்குகளை வரையறுத்து, அவைகளை அவர்கள் எளிதில் பெறுவதற்கு வழிகாட்டும் வகையில் கற்பித் திட 3,24,000 ஆசிரியர்களுக்குச் சிறப்புப் பயிற்சிகள் அளிக்கப் பட்டுவருகின்றன.

புரட்சித்தலைவி அவர்கள் அறிவுரைகள்படி புதிய பாடத் திட்டம் அறிமுகப்படுத்தப் பட்டுள்ள வேளையில், ஆசிரியர் களுக்கு அளிக்கப்படும் பயிற் சிகள் தமிழகக் கல்வித்துறைக்குச் சிறந்த பயனை அளிக்கும்.

**நூலகங்கள்**

இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ஆணையின்படி நூலகம் இல் லாத 5000 மக்கள் தொகை கொண்ட 625 கிராமங்களில் நூலகங்கள் அமைக்கப்படு கின்றன.

புதிய நூல்கள் பல உருவா தலை ஊக்குவிக்கும் நோக்கில் சிறந்த நூலாசிரியர் ஒவருக்குப் பேரறிஞர் அண்ணா பெயரில் ஆண்டுதோறும் விருது வழங்கும் திட்டம் அறிமுகம் செய்யப்பட் டுள்ளது.

**உயர்கல்வி கல்லூரிக்கல்வி**

மாநில உயர்கல்வி மன்றம் அமைத்து, இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தந்துவரும் ஊக்கம் காரணமாக தமிழகம் உயர்கல்வி வழங்கு வதில் உன்னத நிலை அடைந் துள்ளது.

வேலை வாய்ப்புகளுக்கு வழிகாட்டும் கணினி அறிவியல், மின்னணுவியல், மக்கள் தொடர்பு, வணிக மேலாண்மை போன்ற புதிய பாடங்களைக் கல்லூரிகளில் அறிமுகப்படுத்தி யுள்ளது.

பெண்கல்வி வளர்ச்சியைப் பெரிதும் விரும்பும் முதல்வர் அவர்கள், பெண்கள் கல்லூரி இல்லாப் பகுதிகளில், உள்ள ஆண்கள் கல்லூரிகளில் 30 விழுக்காடு இடங்களில் பெண் களைச் சேர்க்க ஆணை வழங்கி யுள்ளார்கள்.

தேசிய கடனுதவித் திட் டத்தை நடுவண் அரசு நிறுத்தி விட்டதால், கல்லூரிக் கல்வி வளர்ச்சிக்குக் கவலை கொண்ட மாணவ சமுதாயத்தின் மனக் கவலை போக்கிட, மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மாநில அரசின் சார்பில் அத்திட்டம் தொடர்ந்து நடைபெறும் என ஆணை வழங்கி, ஆண்டுதோறும் ரூ.25 இலட்சம் அனுமதிக் கிறார்கள்.

**விளையாட்டு வளர்ச்சி**

இதயதெய்வம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்நாளைய இளைஞர் சமுதாயத்தின் எழுச்சி கீதமாய் விளங்குகிறார்கள். தமிழக விளையாட்டுத்துறை வளர்ச்சியை நினைப்பவர்கள் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ஆட்சியின் மாட்சியைப் புக ழாமல் இருக்க முடியாது.

ஏழரை மாதக் கால அளவில் ஈடும் இணையுமில்லா வண்ணம் ஜவகர்லால் நேரு விளையாட்ட ரங்கத்தை எடுப்பித்து, விளை யாட்டுத் துறை வளர்ச்சிக்கு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆற்றிவரும் அளப்பரிய சாதனைகளுக்காக உலக நாடுகளின் ஒலிம்பிக் குழுவினர் நேரில் வந்து விருது தந்து பாராட்டியுள்ளனர்.

இதயதெய்வம் அவர்கள் 1995 டிசம்பரில் சென்னையில் நிகழ விருக்கும் 7-வது தெற்காசிய நாடுகள் கூட்டமைப்பின் விளை யாட்டுப் போட்டிகளுக்காகப் பல்நோக்கு உள்ளரங்கம், டென் னிஸ் அரங்கம், ஹாக்கி அரங் கம், நீச்சல் குளம் ஆகியவை களைப் பன்னாட்டுத் தரநிலை களுக்கேற்ப அமைத்து வரு கிறார்கள்.

**விளையாட்டுக் கிராமம்**

வெளிநாட்டு வீரர்கள் வந்து தங்குதற்கு வசதியாகக் கோயம் பேட்டில் ரூ.70 கோடி செலவில் விளையாட்டுக் கிராமம் ஒன்றை யும் அமைத்துவருகிறார்கள்.

**விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கப் பரிசுகள்**

விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கம் தருவதில் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி

அவர்களின் அரசுக்கு இணையே கிடையாது.

உலக, தேசிய, மாநில நிலைகளில் சாதனைகள் புரிவோர்க்குப் பணமாகவும், வீடுகளாகவும், மனைகளாகவும் பரிசுகள் வழங்குகிறார்கள்.

கின்னஸ் சாதனை படைத்த வீரச் சிறுவன் குற்றாலீசுவரன், டிரையதான் சாதனை வீராங்கனை அமுதா போன்றோர்க்கும், பிறர்க்கும் தேவைப்படும் நிதியுதவிகளைச் செய்து சாதனைகளைத் தொடர்ந்து படைத்திட ஊக்கம் தந்து வருகிறார்கள்.

**தொழில் நுட்பக்கல்வி வளர்ச்சி**

இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியில் அறிவியல் தொழில்நுட்பக் கல்வி மிகப் பெரிய முன்னேற்றத்தினை அடைந்து வருகிறது.

பர்கூரில் ஓர் அரசுப் பொறியியல் கல்லூரி உட்பட 11 புதிய பொறியியல் கல்லூரிகள் அனுமதிக்கப்பட்டு இயங்கி வருகின்றன. இவற்றால் பொறியியல் கல்லூரிகளின் மாணவர் சேர்க்கை ஏறத்தாழ 36 சதவிதம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

8.5 மில்லியன் கனடா டாலர் தொகையுடன் கனடா சமுதாயக் கல்லூரிகள் குழு, கனடா இந்திய பயிலகக் கூட்டுறவுத்திட்டம் இதயதெய்வம் அவர்களின் அரசால் தமிழகத்தில் தொடங்கப்பட்டுள்ளது.

உலக வங்கி உதவியுடன் இரண்டாம் பொறியியல் கல்வித் திட்டம் தமிழகத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

தொழில் மற்றும் சமுதாயத்தின் மாறிவரும் தேவைகளுக்கு ஏற்ப நெகிழ்வாகவும் பயனுடையதாகவும் ஈடுகொடுக்கும் வகையில் பல்தொழில் நுட்பக் கல்வி முறையில் கொள்கைகளைப் புதுப்பிக்கவும் சீராக்கம் செய்யவும் இத்திட்டம் உறுதுணையாயுள்ளது.

தமிழ்நாட்டின் இரண்டாம் பொறியியற் கல்வித்திட்டம் ரூ.76 கோடி செலவில் 21 அரசினர் தொழிற் நுட்பப் பயிலகங்களையும், 34 அரசு மானியம் பெறும் தொழில் நுட்பப் பயிலகங்களையும் உள்ளடக்கி உள்ளது.

**தமிழ் வளர்ச்சி**

அனைத்து நிலைகளிலும் தமிழ் ஆட்சி மொழி என்பதைக் கொள்கையாகக் கொண்டுள்ள டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசின் சாதனைகளுக்கெல்லாம் மகுடம் வைத்தது போன்ற சாதனை, புரட்சித் தலைவி அவர்களால் நடத்தப்பட்ட எட்டாம் உலகத் தமிழ் மாநாடாகும்.

உலகெங்கிலுமிருந்து 28 நாடுகளைச் சேர்ந்த 1101 அறிஞர் பெருமக்கள் பங்குகொண்ட எட்டாம் உலகத் தமிழ் மாநாடு, இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் புகழை உலகுக்கு உணர்த்தியது.

எட்டாம் உலகத் தமிழ் மாநாட்டில் துணைக் குடியரசுத் தலைவரும் பிரதமர் அவர்களும் பங்குகொண்டு தமிழும், தமிழகமும் இந்தியப்பண்பாட்டில் ஏற்படுத்தியுள்ள வலிமை வாய்ந்த செல்வாக்கினைப் புகழ்ந்து பாராட்டியமை, தமிழகத்தின் மதிப்பை உயர்த்துவனவாகும்.

மாநாட்டில், இன்றும் தமிழ் என்றும் தமிழ் என்னும் புதிய முழக்கத்தைத் தந்த டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், நான்காம் தமிழாய் அறிவியல் தமிழ் வளர்க்க அறிஞர் பெருமக்களை அறைகூவி அழைத்துப் புதிய சிந்தனையை ஏற்படுத்தினார்கள். இது எதிர்காலத் தமிழினத்தால் நினைந்து நினைந்து மகிழத் தக்க சாதனையாய் மலரும்.

இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் இத்தகைய தன்னலமற்ற தியாகச் சிந்தனைகள் ஏழை எளியோர் நலம் காக்க எடுத்துவைக்கும் இலட்சியத் திட்டங்கள், அவைகளை நிறைவேற்றுவதில் கொண்டுள்ள அசைவிலா உறுதிப்பாடுகள் ஆகியவை மூலம், தமிழகக் கல்வித்துறை அலையலையாய்ச் சாதனைகளைப் படைத்துக்கொண்டேயிருக்கும். அந்த அலைகளின் ஓசைபோல் இதயதெய்வத்தின் புகழ் உலகம் எங்கும் இசைத்துக் கொண்டேயிருக்கும்.

வாழ்க புரட்சித்தலைவி! *

கற்கத் தகுந்த நூல்களைக் குற்றமறக் கற்றவேண்டும் அவ்வாறு கற்ற பிறகு, கற்ற கல்விக்குத் தக்கவாறு நெறியில் நிற்க வேண்டும்.

–திருவள்ளுவர்



# தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் சாதனைகள்


மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்

## திரு மேலூர் அ.மா. பரமசிவன்


**மா**ண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவியின் தலைமையில் அமைந்த இந்த அரசு 1995-ஆம் ஆண்டு ஜூன் 24ந் தேதி நான்காண்டுகளை முடித்து, ஐந்தாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது.

வெற்றிக் கோமகள் முழுமதித் திருமகள் ஏற்றிடும் பொறுப்பில் ஏற்றமே எனப் போற்றிடும் புகழ்மிகு மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி ஆட்சியில்-

நான்கு ஆண்டுக் காலத்தில் தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை ஆற்றிய அரும் பணிகளில் சிலவற்றைச் சாற்றிட முனைகிறேன்.

தொட்டதெல்லாம் துலங்கும் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சியில் தொழில் வளர்வதையும், தொழிலாளர் நலன் மேலோங்கி நிற்பதையும் இந்நானிலமே போற்றுகின்றது. மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியின் நான்கு ஆண்டுக் கால ஆட்சியில் 3,902 தொழிற்சாலைகள் புதிதாக வந்துள்ளன. அவற்றில் ஒரு இலட்சத்து ஏழாயிரத்து ஐந்நூற்று எண்பத்து மூன்று தொழிலாளர்கள் புதியதாக வேலை நியமனம் பெற்றுள்ளனர்.

தொழிலாளர்களும் நிர்வாகத்தினரும் இணைந்து செயல்படவேண்டும் என்ற தொழிலுறவுக் கொள்கையால் தொழிலாளர் துறைக்கு வரும் தொழில் தகராறுகளின் எண்ணிக்கை படிப்படியாகக் குறைந்து வருகிறது.

**1010 குழந்தைத் தொழிலாளர்கள் விடுவிக்கப்பட்டு, பள்ளியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.**

**இதுவரை 14 வேலை வாய்ப்பு அலுவலகங்கள் கணினி மயமாக்கப் பட்டுள்ளன.**

### கட்டடத் தொழிலாளர் நல வாரியம்

கலைமிகு கட்டடங்களைக் கண்டபோதெல்லாம் அதனைக் கட்டிய தொழிலாளர்களின் துயரை நினைத்து, கருணையுள்ளம் கொண்ட மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி ஆட்சி பாங்காய் வடித்த திட்டமே கட்டடத் தொழிலாளர்கள் நலத் திட்டம். கட்டடத் தொழிலாளர்கள் துயர்துடைக்க "கட்டடத் தொழிலாளர் நல வாரியம்" அமைக்கப்பட்டு சென்னை, கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய மாநகர்களில் உள்ள கட்டடத் தொழிலாளர்களை முதலில் பதிவு செய்ய நடவடிக்கை தொடங்கப்பட்டு விட்டது.

### குறைந்த அளவு ஊதியச் சட்டம்

"ஆக்கம் அதர்வினாய்ச்
செல்லும் அசைவு இலா

ஊக்கம் உடையான் உழை"

என்றார் வள்ளுவர்.

குறைந்தபட்ச ஊதியவிகிதம் நாள் ஒன்றுக்கு ரூ.20க்குக் குறையாமல் இருக்க வேண்டும் என்பதை மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியின் அரசு கொள்கையாகக் கொண்டுள்ளது. 12 தொழில்களுக்கு முதன் முதலாகக் குறைந்தபட்சக் கூலி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. 30 தொழில்களுக்கு மறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.



## பீடித் தொழிலாளர்கள்

பீடித் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச சம்பளம் 1.5.1995 முதல் ரூ.24.70 லிருந்து ரூ.30.70 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. முதன்முதலாக அவர்கள் போனஸ் சட்டத்தின் கீழ் குறைந்த பட்ச போனஸ் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

"ஏழை எளிய மக்களின் சிரிப்பில் வாழ்வின் அர்த்தத்தையே காண்கிறேன்'' என்றார் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி. திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், முக்கூடல் மற்றும் மேலப்பாளையம் ஆகிய இடங்களில் 1000 வீடுகள் ரூ.2.20 கோடி திட்டத்தில் கட்டிக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பீடித் தொழிலாளர்கள் அதிக அளவில் வசிக்கும் வட ஆர்க்காடு அம்பேத்கர், திருச்சி, பெரியார், சேலம் மற்றும் சென்னை ஆகிய மாவட்டங்களில் வீடு கட்டித்தரத் தேவையான நிலம் கையகம் செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## பனியன் தொழிலாளர்கள்

திருப்பூரிலுள்ள பனியன் தொழிற்சாலைகளில் பணி புரியும் சுமார் 1,00,000 பனியன் தொழிலாளர்ளின் சம்பளம் உள்ளிட்ட இதரப் பிரச்சினைகள் 9.8.93 அன்று மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் அரசின் முயற்சியால் சுமூகமாகத் தீர்த்து வைக்கப்பட்டது.

## திரைப்படத் தொழிலாளர்கள் நலத்திட்டம்

திரைப்படத் தொழிலில் ஈடுபட்டுள்ள பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களின் நலனுக்காக விபத்துக் காப்பீட்டுத் திட்டம் மற்றும் ஓய்வூதியத் திட்டம் ஆகிய இரு திட்டங்களை 1995-ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அரசு கொண்டு வந்துள்ளது. பணியில் இருக்கும்போது விபத்தில் இறந்தால் அவரின் குடும்பத்திற்கு ரூ.50,000-ம் 60 வயது நிறைவான பணியாளர்களுக்கு ஓய்வூதியமாக மாதம்ரூ.300-ம் வழங்க அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது.

## முதலமைச்சர் நிவாரண நிதி

மூடப்பட்ட தொழிற்சாலைகளில் பணிபுரிந்து வந்த தொழிலாளர்களுக்கு நிவாரணம் அளித்து தொழில் அமைதியைப் பேணிக்காக்கும் வகையில் "முதலமைச்சர் நிவாரண நிதி" யிலிருந்து 1991-ஆம் ஆண்டு முதல் 1994-ஆம் ஆண்டு முடிய 52,994 தொழிலாளர்களுக்கு ரூ.2,10,39,800 நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

## தொழிலாளர் துயர் துடைப்பு நிதி மற்றும் தொழிலாளர் மறுவாழ்வு நிதி

வேலையாள் இழப்பீடு சட்டத்தின் கீழ் தீர்ப்பளிக்கப்பட்ட நஷ்ட ஈட்டுத் தொகை பெற இயலாத சூழ்நிலையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்க அரசு இந்த நிதியை ஏற்படுத்தியுள்ளது. தொழிற்சாலைகளை நவீனப் படுத்துவதனாலோ அல்லது தொழில்நுட்ப மேம்பாட்டினாலோ அல்லது நலிவடைந்த மூடப்பட்ட நிலையினாலோ வேலையிழந்து பாதிக்கப்படும் தொழிலாளர்களுக்குப் புனர்

கல்வியின் நோக்கம்

வாழ்க்கையில் வெற்றி பெறுவதே கல்வியின் நோக்கம் என்று கருதுவது தவறு. வாழ்க்கையை வளமடையச் செய்வதே கல்வியின் நோக்கம். –டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன்

வாழ்வு அளிக்கும் பொருட்டு அரசு "புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா தொழிலாளர் நல நிதி" என்னும் ஒரு தொழிலாளர் மறுவாழ்வு நிதியை ஏற்படுத்தி ரூ.1 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

### பெண் தொழிலாளர்களுக்குப் பேறுகால விடுப்பினை அதிகரித்தல்

அகிலம் போற்றும் அன்னை தெரசாவால் பாராட்டப்பட்ட, மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள், தொழிற்சாலைகளில் பணியாற்றும் பெண் தொழிலாளர்களின் பேறுகால விடுப்புக் காலத்தை 12 வாரங்களிலிருந்து 24 வாரங்களுக்கு அதிகரிக்கவும், முழுப் பணிக் காலத்தில் பேறுகால விடுப்பாக 48 வாரங்கள் வரை அளிக்கும் வகையில் சட்டத் திட்டம் கொண்டுவர ஆணையிட்டுள்ளார்கள்.

### குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பு

குழந்தைத் தொழிலாளர் முறையினை முதலில் ஆபத்தான தொழில்களில் நீக்கப் பல நடவடிக்கைகளை அரசு எடுத்துள்ளது. ரூ.244.19 கோடி திட்டம் தயாரிக்கப்பட்டு மைய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. 1010 குழந்தைத் தொழிலாளர்கள் விடுவிக்கப்பட்டு, பள்ளியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

### வேலைவாய்ப்பகங்கள் கணினிமயமாக்குதல்

வேலைவாய்ப்பகங்கள் புகார் இல்லாமல் பணியாற்றிடக் கணினி மயமாக்கும் திட்டம் 1991-இல் கொண்டுவரப்பட்டு, இதுவரை 14 வேலைவாய்ப்பு அலுவலகங்கள் கணினிமயமாக்கப்பட்டுள்ளன.

### பயிற்சி வகுப்புகள்

படித்த ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினத்தைச் சேர்ந்த இளைஞர்கள் போட்டித் தேர்வுகள் நல்லமுறையில் எழுதுவதற்குப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. நான்கு ஆண்டுகளில் 31,777 ஆதி திராவிட மற்றும் பழங்குடி இளைஞர்களுக்கு ரூ.97.81 இலட்சங்கள் செலவில் பயிற்சி அளிக்கப்பட்டது.

### கிராமப்புறப் பள்ளிகளைத் தத்தெடுக்கும் திட்டம்

கிராமப்புறப் பள்ளியைத் தத்து எடுத்துக்கொண்டு அம் மாணவர்களுக்குத் தீவிரமான முறையில் வழிகாட்டல் உதவிகளை மேற்கொள்ளும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் மேலும் 25 மேல் நிலைப் பள்ளிகளில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

### தேசிய வாழ்வியல் பயிற்சித் திட்டம்

சிறு தொழில் நிறுவனங்களுக்குப் போதுமான பயிற்சியும், தகுதியும் உள்ள தொழிலாளர்கள் கிடைப்பதற்கு ஏதுவாக, இந்த ஆண்டிலேயே 15 குறுகிய காலத் தொழிற் பிரிவுகள் ஏற்படுத்த மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

### மகளிருக்கான வேலைவாய்ப்பு வசதியினை மேம்படுத்துதல்

மகளிருக்கான வேலை வாய்ப்பு வசதியினை மேம் படுத்தும் வகையில் புதிய தொழிற் பிரிவுகளான ஸ்கிரீன் பிரிண்டிங், எக்ஸ்போர்ட் கார்மெண்ட், டெய்லரிங் மற்றும் டெஸ்க் டாப் பப்ளிஷிங் ஆபரேட்டர் ஆகிய குறுகிய காலத் தொழிற் பயிற்சிப் பிரிவுகள் முறையே ஈரோடு, மற்றும் கிண்டி மகளிர் அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் ரூ.14.9 இலட்சம் செலவில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

### கிராமங்களைத் தத்தெடுத்தல்

அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெறும் பயிற்சியாளர்களைச் சமூகத் தொண்டில் ஈடுபடுத்தும் நோக்கத்துடன் மாவட்டத்திற்கு ஒரு தொழிற் பயிற்சி நிலையம் அருகிலுள்ள கிராமம் ஒன்றினைத் தத்தெடுத்து தொழிற் பயிற்சி நிலையத்திலுள்ள பயிற்றுநர் மற்றும் பயிற்சியாளர்களைக் கொண்டு இத்திட்டம் செயல் படுத்தப்பட்டு வருகிறது. இத் திட்டம் கிராம மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. ✻

# நாட்டுயர்வுக்கு வழிகோலும் கூட்டுறவு

மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர்

## திரு கா.ப. பட்டாபிராமன்

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் நான்காண்டுப் பொற்கால ஆட்சியின் கூட்டுறவின் மூலம், வரலாற்றில் நின்று நிலவும், தமிழகத்தின் வளத்தையும், புகழையும் சேர்க்கக் கூடிய மாபெரும் புகழ்ச்சிகரச் சாதனைகள் ஆற்றப்பட்டுள்ளன.

விவசாயிகள், ஏழை எளியவர்கள், வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழுகின்ற இலட்சக்கணக்கான மக்கள் ஆதிதிராவிடப் பெருங்குடி மக்கள், மகளிர் ஆகியோர் கூட்டுறவின் பெரும் பயனைப் பெற்று மகிழ்கிறார்கள். வணிக வங்கிகளை நாடிப் பலமுறை சென்று பெறமுடியாத கடன் வசதிகளை, கேட்ட மாத்திரத்தில் தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவு வங்கிகள், மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் ஆணைக்கேற்ப வழங்கி வருகின்றன.

விவசாயிகள், ஆதிதிராவிடப் பெருங்குடி மக்கள், மகளிர் ஆகியோர் கடன் பெற்றுத் தங்களது தொழில்களை வளர்த்துக்கொள்ள ஏற்புடைய வகையில் தமிழகத்திலே உள்ள 4,655 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள், 22 மாவட்ட



**இந்தியாவிலேயே முதன் முதலாக டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில்தான் நிலவள வங்கிகள் மூலமாக நகைக்கடன் வழங்கப்பட்டு வருகின்றது.**

மத்தியக் கூட்டுறவு வங்கிகள், அதன் 622 கிளைகள், 181 பிரதம நிலவள வங்கிகள் ஆகியவை மகத்தான பணிகளை ஆற்றிக் கொண்டுள்ளன. நகர்ப்புறங்களில் வாழ்கின்ற மக்களுக்கு 125 நகரக் கூட்டுறவு வங்கிகள் மாபெரும் பணிகளை ஆற்றி, நகர்ப்புற மக்களின் வாழ்வில் மேம்பாட்டினை உருவாக்கிக் கொண்டிருக்கின்றன.

### குறுகிய காலக் கடன்

விவசாயிப் பெருங்குடி மக்களுக்கு 1991-92-இல் குறுகிய காலக் கடனாக ரூ.278.52 கோடியும், 1992-93-இல் குறுகிய காலக் கடன் ரூ.340.86 கோடியும், 1993-94-இல் குறுகிய காலக் கடன் ரூ.439.54 கோடியும், 1994-95-இல் ரூ.561.74 கோடியும், ஆக மொத்தம் ரூ.1620.66 கோடி வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பல இலட்சம் விவசாயப் பெருங்குடி மக்கள் பயனடைந்துள்ளார்கள்.

நடப்பு நிதியாண்டில் 1994-95-இல் குறுகிய காலக் கடன் ரூ.470 கோடி வழங்க இலக்கு, நிர்ணயிக்கப்பட்டிருந்த போதும் இந்தத் தொகை பன்மடங்கு உயர இருக்கிறது.

### மத்திய காலக் கடன்

புரட்சித்தலைவியின் பொன்னான ஆட்சியில், விவசாயப் பெருங்குடி மக்களுக்கு மத்திய காலக் கடனாக 1991-92-இல் ரூ.44.71 கோடியும், 1992-93-இல் ரூ.45.75 கோடியும், 1993-94-இல் ரூ.52.65 கோடியும், 1994-95-இல் ரூ.61.99 கோடியும் ஆகமொத்தம் ரூ.205.10 கோடி வழங்கப்பட்டுள்ளது.

நடப்பு நிதியாண்டில் ரூ.60.

கோடி அளவுக்கு மத்தியக் காலக் கடன் வழங்க இலக்கு நிர்ண யிக்கப்பட்டிருந்தபோதும், இந்த இலக்கைவிட அதிகமான அள வுக்கு மத்தியக் காலக் கடன்கள் வழங்கப்பட இருக்கின்றன.

**நீண்டகாலக் கடன்**

பண்ணை சார்ந்த தொழில்கள், பண்ணை சாராத்தொழில்கள் இவற்றை வளர்ப்பதற்காக இவற் றில் ஈடுபாடு கொண்டுள்ள விவசாயிகளை, வாழ்வில் உயர்த் துவதற்காக நீண்டகாலக் கடன் வங்கிகள் மூலமாக வழங்கப் பட்டு வருகின்றன.

ஆகமொத்தம் ரூ.368.64 கோடி கடந்த நான்கு ஆண்டுகளில் நீண்டகாலக் கடனாக வழங்கப் பட்டிருக்கிறது. நடப்பு நிதியாண் டில் 1994-95-இல் ரூ.150. கோடி நீண்டகாலக் கடன் வழங்கு வதற்காக இலக்கு நிர்ணயிக்கப் பட்டிருந்தபோதும், சாதனை இதைவிட மிக அதிகமாக மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவியின் புனித ஆட்சியில் அமைய இருக்கிறது.

**நகைக் கடன்**

விவசாயிகள் தனியாரிடம் சென்று நகைக் கடன் பெறுவதற் குப் பல இடர்ப்பாடுகளும், இன் னல்களும் ஏற்படுவதை இந்த நாடு மிக நன்றாக அறியும். கூட் டுறவு வங்கிகள் நகைக் கடன்கள் வழங்குவதில் எளிய முறை களைக் கடைப்பிடித்து விவ சாயிகளுக்கு நகைக் கடன்களை வழங்கிக் கொண்டிருக்கின்றன. ஒரு சவரன் நகைக்கு ரூ.2,400 என்கிற விகிதத்திலே கடன் வழங்கப் படுவதோடு, தனி நபர்க்கு அதிக பட்சமாக ரூ.40 ஆயிரம் வரை கடன் வழங்க சமூகநீதி காத்த வீராங்கனை டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆணைக் கேற்ப வழங்கப்பட்டு வருகிறது.

நகைக் கடனாக 1991-92-இல் ரூ.843.70 கோடியும், 1992-93-இல் ரூ.1080.28 கோடியும், 1993-94-இல் ரூ.1,363 கோடியும், 1994-95-இல் ரூ.1,805.50 கோடி யும், ஆகமொத்தம் ரூ.5092.48 கோடி நகைக் கடன் வழங்கப்பட்டு உள்ளது. இதன்மூலம் பல இலட்சக்கணக்கான விவசாயப் பெருங்குடி மக்களும் நகர்ப்புற மக்களும் பயன்பெற்றுள்ளார்கள்.

**வாழ்வில் நலிவுற்றோர் மேம்பாட்டிற்காக**

தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் வழி காட்டுதலோடு வழங்கப்படு கின்ற மொத்த குறுகிய காலக் கடன்களில் 25 சதவிகிதம் நலிந்த பிரிவினர்க்கு வழங்கப்பட வேண்டும் என்கின்ற திட்டத்தின் அடிப்படையில், தமிழக முதல மைச்சர் ஏழை, எளியோரின் இரட்சகர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், வாழ்வில் நலிவுற்றோர்க்கு வாழ்வளித்து வருகிறார்கள்.

அந்த வகையில், வாழ்வில் நலிவுற்றோர் மாபெரும் வளர்ச் சியைப் பெற்றுத் திகழ்கிறார்கள். 1992-93-இல் வாழ்வில் கூட்டுற வுக்குக் குறுகில கால மற்றும் மத்தியக் காலக் கடனாக ரூ.251.91 கோடியும், 1993-94-இல் ரூ.320.50 கோடியும், 1994-95-இல் ரூ.423.48 கோடியும் வழங்கப்பட்டிருக் கிறது. 1994-95-ஆம் ஆண்டில் குறுகியக் காலக் கடன் பெற்ற தில் 65.3 சதவிகித நலிந்த பிரி வினராக இருப்பதும், அதைப் போலவே மத்தியக் காலக் கடன் பெற்றவர்களில் 91 சதவிகிதமாக இருப்பதும் மாபெரும் சாத னைக்கு ஒரு எடுத்துக்காட் டாகும்.

**ஆதிதிராவிடர் வாழ்வின் மேம்பாட்டிற்கு**

ஆதிதிராவிட வகுப்பைச் சார்ந்த குடும்பத்தில் ஒருவரைத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் உறுப்பின ராக்கும் திட்டம் மாண்புமிகு முதல்வர் அவர்களின் புரட்சித் திட்டங்களில் ஒன்றாகும். இதற் காக ரூ.100 பங்குத் தொகைக் காக அரசு மானியம் வழங்கு கிறது.

கடந்த மூன்றாண்டுகளில் 8,532 ஆதிதிராவிடப் பெருங்குடி மக்கள் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினராகச் சேர்ந்திருக் கிறார்கள்.

1991 முதல் 1994 வரை அரசு மானியமாக ரூ.80 இலட்சம் அளவிற்கு வழங்கப்பட்டிருக் கிறது. அதோடு மாத்திரமல் லாமல், ரூ.250 வட்டியில்லாக் கடன் வழங்கி அவர்களது பங்குத் தொகையைப் பெருக்கி, அதன்மூலம் அவர்கள் மேலும் கடன் வசதி பெறுவதற்கு மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் வழி வகுத்துள்ளார்கள். ஆதிதிரா விடர் பெருங்குடி மக்களுக்கு 1992-93-இல் குறுகிய காலக் கடன் ரூ.34.54 கோடியும், மத்தியக் காலக் கடன் ரூ.11.26 கோடியும், 1993-94-இல் குறுகிய காலக் கடன் ரூ.44.54 கோடியும்,

மத்தியக் காலக் கடன் ரூ.13. கோடியும், 94-95-இல் குறுகிய காலக் கடன் 69.78 கோடியும், மத்தியக் காலக் கடன் ரூ.20.61 கோடியும் வழங்கப்பட்டிருக் கிறது.

இதைப்போலவே நீண்ட காலக் கடன் 1994-95-இல் ரூ.54.5 கோடி கடன் வழங்கி சாதனை படைக்கப்பட்டிருக்கிறது. 1994-95-இல் மட்டும் 1,43,370 ஆதிதிராவிடப் பெருங்குடி மக்கள் கூட்டுறவு வங்கிகள் மூலம் கடன் பெற்றிருக் கிறார்கள் என்பது பெரும் மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும்.

நடப்பு நிதியாண்டில் 1994-95-இல் 16 ஆயிரம் ஆதிதிராவிட உறுப்பினர்களுக்கு நபர் ஒருவருக்கு வட்டியில்லாக் கடனாக ரூ.750 வழங்குவதற்காக ரூ.40 இலட்சம், கருணைமிகு மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களால் வழங்கப்பட்டிருக்கிறது. இதைப் போலவே நகரக் கூட்டுறவு வங்கிகளில் 4 ஆயிரம் ஆதி திராவிட உறுப்பினர்கள் வட்டி யில்லாக் கடன் பெறும் வகை யில், ரூ.20 இலட்சம் நிதியினை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒதுக்கியிருக்கிறார்கள்.

**உடனடிக்கடன் வழங்கும் திட்டம்**

கூட்டுறவு வங்கிகள் மூலம் கடன் வழங்குவதை எளிதாக்கவும், விரிவாக்கவும் ஏற்கெனவே பெற்றிருந்த கடனைத் திரும்பச் செலுத்திய உறுப்பினர் களுக்கு முன்னுரிமை வழங்கி, கடன் வழங்கவும், பச்சை வண்ண அட்டை வழங்கப்பட்டு உடனடியாகக் கடன் வழங்கு கின்ற திட்டத்தை, வெற்றியின் வீராங்கனை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 1991-ஆம் ஆண்டு முதல் செயல்படுத்திக் கொண்டுள்ளார்கள்.

4,655 தொடக்க வேளாண் மைக் கூட்டுறவு வங்கியின் மூலம் இத்திட்டம் செயல்படுத் தப்பட்டு வருகிறது.

1992-93-இல் 1,24,607 நபர்களுக்கு ரூ.57.75 கோடியும், 1993-94-இல் 2,95,426 பேர் களுக்கு ரூ.167.74 கோடியும், 1994 95-ஆம் ஆண்டில் 3,47,601 பேர்களுக்கு ரூ.266.10 கோடியும் வாரி வழங்கிய வள்ளலின் வாரிசு ஆட்சியில் வழங்கப்பட்டி ருக்கிறது. நடப்பு நிதியாண்டில் சென்றாண்டைவிட 20 சத விகிதம் கூடுதலாகச் செயல் படுத்த நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டிருக்கிறது என் பது மிகவும் பாராட்டக்கூடிய ஒன்றாகும்.

இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் மகத்தான மக்கள் சக்தியால் கூட்டுறவு வங்கிகள் தங்கள் உறுப்பினர்களின் தவணை தவறிய கடன் நிலுவைகளை முழுமையாக வசூல் செய்து மாபெரும் சாதனை படைத் திருக்கின்றன.

நிலவள வங்கிகள் நீண்ட காலக் கடன் வழங்கியதிலும், திரும்பப் பெறுவதிலும் மாபெ ரும் சாதனைகளைப் படைத் துள்ளன.

விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டத்தில் உள்ள சங்கராபுரம் கூட்டுறவு நிலவள வங்கி 99 சதவிகிதம் கடன் வசூல் செய்து பெரும் சாதனையைப் படைத்திருக்கிறது.

**நிலவள வங்கிகள் மூலம் நகைக் கடன்**

இந்தியாவிலேயே முதன் முதலாக டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில்



தான் நிலவள வங்கிகள் மூல மாக நகைக் கடன் வழங்கப்பட்டு வருகின்றது. 17.8.94 முதல் 31.3.95 வரை நிலவள வங்கிகள் நகைக் கடனாக ரூ.22.4 கோடி வழங்கி இருப்பது மிகப் பெரும் சாதனை என்றால் மிகையாகாது.

**சொத்துரிமை ஆவண ஒப்படைப்பு அடமானம்**

பிரதம நிலவள வங்கிகள் மூலமாகக் கடன் வழங்கும் முறையை எளிதாக்க சொத் துரிமை ஆவண ஒப்படைப்பு அடமானம் நடப்பாண்டுமுதல் அறிமுகப்படுத்தப்படுகிறது. இதனால் கடன் வழங்கும்முறை எளிதாக்கப்படுவதோடு, ஏற் கெனவே இருந்த நடைமுறையில் வருமான வரிச் சான்றிதழ் பெறுதல், அடமானப் பத்திரம் பதிவு செய்தல் போன்றவை தவிர்க்கப்படும்.

**ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம்**

ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டப் பணிகள் காமராசர் மாவட்டத்தில் ரூ.8.46 கோடி மதிப்பீட்டில் செயல்படுத் தப்பட்டுள்ளது. தென்னார்க்காடு வள்ளலார் மற்றும் விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டங்களில் ரூ.15.08 கோடி மதிப்பீட்டில் இத்திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

**கூட்டுறவு வங்கிகள்**

நகர்ப்புற மக்களின் வாழ்வில் ஒளிவிளக்கு ஏற்றவேண்டும் என்ற இலட்சியத்தோடு 125 நகரக் கூட்டுறவு வங்கிகள் பாங் காகப் பணியாற்றிக் கொண் டுள்ளன. இந்த நகரக் கூட்டுறவு வங்கிகளால் நடுத்தர மக்கள், கைவினைஞர்கள் பல வழிகளில் பயன் பெறுகிறார்கள். 1991-92-ஆம் ஆண்டில் ரூ.410.86 கோடி அளவில் பல்வேறு கடன்களையும், ரூ.284.15 கோடி நகைக் கடன்களையும், 1992-93-இல் ரூ.451.81 கோடி பல்வேறு கடன்களையும், ரூ.317.58 கோடி நகைக் கடனை யும், 1993-94-இல் ரூ.480.97 கோடி பல்வேறு கடன்களையும், ரூ.367.17 கோடி நகைக் கடனை யும், 1994-95-ஆம் ஆண்டில் ரூ.598.12 கோடியும் கடன் வழங்கியுள்ளது.

> **இரண்டாவது அட்டையில்...**
>
> **கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் முகமது இஸ்மாயில் சாகிப் அவர்கள் பிறந்தநாள் நூற்றாண்டு விழா 5.6.95 அன்று சென்னையில் சிறப்புற நடைபெற்றது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பங்கேற்றார். விழா நிகழ்ச்சித் தொகுப்பு விவரங்கள் அடுத்த இதழில் இடம்பெறும்.**

1989-90-இல் நகரக் கூட்டுறவு வங்கிகள் மூலம் வழங்கப்பட்ட கடன் தொகை ரூ.339.21 கோடி யாக இருந்தது. 1994 95 இல் ரூ.581.12 கோடியாக உயர்ந் திருப்பது மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அரசின் மாபெரும் சாதனை ஆகும். அதைப்போலவே நகரக் கூட்டுறவு வங்கிகள் திரட்டிய வைப்புத் தொகை 1989-90-இல் ரூ.373.80 கோடியாக இருந்தது. 1994-95-இல் ரூ.672.52 கோடி யாக உயர்ந்திருக்கிறது.

1989-90-இல் நகரக் கூட்டுறவு வங்கிகளின் கிளைகள் 46 ஆக இருந்தது. 1995-96-இல் 76 ஆக உயர்ந்திருப்பது மிகவும் சிறப்புக் குரிய ஒன்றாகும்.

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி ஜெ.ஜெயலலிதா சிறுதொழில் கடன் திட்டம்**

வாழ்வில் நலிவுற்ற பிரிவைச் சார்ந்தவர்கள் குறிப்பாக மகளிர்களுக்குச் சிறுதொழில்கள் தொடங்க ஏதுவாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி ஜெ.ஜெயலலிதா சிறுதொழில் கடன் திட்டம் 1992-ஆம் ஆண்டு முதல் நகரக் கூட்டுறவு வங்கிகள் மூலம் நகர்ப் புறங்களில் செயல்படுத் தப்பட்டு வருகிறது.

1992-93-இல் 1,41,447 பேருக்கு ரூ.68.23 கோடியும், 1993-94-இல் 1,89,482 பேருக்கு ரூ.83.72 கோடியும், கடன் தொகை வழங் கப்பட்டது. 1994-95-ஆம் ஆண் டில் 2,36,164 பேருக்கு ரூ.108.24 கோடி கடன் தொகையும் வழங் கப்பட்டது. கடந்த மூன்றாண்டு களில் இத்திட்டத்தின் மூலம்

2,87,039 மகளிர் பயன் பெற்றுள்ளார்கள்.

**மத்தியக் கூட்டுறவு வங்கியில் மகளிர் கிளை**

தமிழ்நாட்டில் உள்ள 22 மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் 22 மகளிர் கிளைகள் மிகச் சிறப்பாக நடத்தப்பட்டுவருகின்றன. நடப்பாண்டில் மேலு 9 மகளிர் கிளைகள் தொடங்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணைபிறப்பித்துள்ளார்கள். தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி, சென்னையில் மகளிர் கிளை ஒன்று தொடங்கி நடத்திக் கொண்டிருக்கிறது.

**மலைவாழ் பழங்குடியினர் மேம்பாடு**

தமிழ்நாட்டில் 18 பெரும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் 68,252 மலைவாழ் மக்களை உறுப்பினராகக் கொண்டு மிகச் சிறப்பாக இயங்கிக் கொண்டுள்ளன. மலைவாழுநரின் பொருளாதார மேம்பாட்டினை உயர்த்துகின்ற வகையில் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இச் சங்கங்களுக்கு நிதி உதவியினைத் தாராளமாக வழங்கி வருகின்றனர். இச்சங்கங்களுக்கு வட்டியில்லாக் கடனும் வழங்கப்பட்டு வருகின்றது.

1994-95-ஆம் ஆண்டில் ரூ.641.23 இலட்சம் கடன் வழங்கப்பட்டதோடு இதற்காக ரூ.76.96 இலட்சம் மானியமும் வழங்குவதற்காக நிதி உதவி செய்யப்பட்டுள்ளது. இதற்கு ஈடான கடன் தொகையும் வழங்கப்பட இருக்கிறது.

மலைப் பகுதியிலே வாழ்கின்ற மக்களுக்கு நடமாடும் நியாயவிலைக் கடைகள் மூலம் உணவுப் பொருட்கள் வழங்கப்படுகிறது. நுகர்பொருட்களை 26 கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்குவதற்காக 27 கூண்டு வண்டிகள் வாங்குவதற்காக ரூ.91.50 இலட்சம் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஒப்பற்ற அரசு வழங்கி இருக்கிறது.

**பண்ணை சாராக் கடன்கள்**

சிறு தொழில்களை வளர்க்க ஏதுவாகக் கிராமப்புறங்களில் வாழ்கின்ற கிராமப்புறக் கைவினைஞர்களுக்குப் பண்ணை சாராக் கடன்கள், நிலைத்த புகழ்கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அரசால் வழங்கப்பட்டு வருகிறது. 1994-95-ஆம் ஆண்டில் மட்டும் பண்ணை சாராக் கடன்களாக மத்தியக் கூட்டுறவு வங்கிகள் ரூ.20.16 கோடி, நகரக் கூட்டுறவு வங்கிகள் ரூ.31.71 கோடி, நிலவள வங்கிகள் ரூ.51.32 கோடி ஆக மொத்தம் ரூ.105.66 கோடியை 46,807 நபர்களுக்கு வழங்கியிருக்கின்றன. நடப்பு நிதியாண்டில் ரூ.100. கோடி அளவிற்குப் பண்ணை சாராக் கடன்கள் வழங்கப்படவுள்ளன.

**சிறு தொழில்களுக்குக் கடன் வழங்குதல்**

ஏழை, எளியோர் மீதும் ஈவும் இரக்கமும் கொண்ட டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் சிறு வியாபாரம் செய்கின்றவர்களுக்கு அதிகபட்சத் தொகையாக ரூ.750 வழங்குவதை ரூ.1500 வழங்க ஆணைபிறப்பித்து, நடப்பாண்டில் தனி நபர், ஒருவர்க்கு அதிகபட்சம் ரூ.1,500 வரை கடன் வழங்கப்பட இருக்கிறது. இந்தத் திட்டத்தின் கீழ் 1994-95-ஆம் ஆண்டில் 3,791 மகளிர் உட்பட 6,520 நபர்களுக்கு ரூ.43.7 இலட்சம் கடன் வழங்கப்பட்டது.

**பயிர் ஈட்டுறுதித் திட்டம்**

1993-94-ஆம் ஆண்டில் ராபி பருவத்தில் புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு, பயிர் ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ், ரூ.7.59 கோடி வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் 52,700 விவசாயிகள் பயனடைந்திருக்கிறார்கள்.

**பங்கு மூலதன உதவி**

மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கும் சொந்த நிதி ஆதாரங்களைப் பெருக்கிக் கொள்ள அரசு பங்கு மூலதன உதவியை வழங்கி வருகிறது. இந்த நிதி உதவி 1989-90-ஆம் ஆண்டில் ரூ.98.87 இலட்சமாகவும், 1993-94-ஆம் ஆண்டில் ரூ.175 இலட்சமாகவும், 1994-95-ஆம் ஆண்டில் ரூ.947.84 இலட்சமாகவும் உயர்த்தப்பட்டிருப்பது, ஒப்பற்ற மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவியின் அரசால்தான் என்பது உலகறிந்த உண்மையாகும்.

**நீண்டகாலக் கடன்**

விவசாயிகளுக்கு நீண்ட காலக் கடனை வழங்கி வருவது நிலவள வங்கிகள் ஆகும்.

இவ்வாறு நீண்டகாலக் கடன்களை வழங்குவதில் 1994-95-ஆம் ஆண்டில் இந்திய உபகண்டத்தில் உள்ள நிலவள வங்கிகளைவிட, தமிழ்நாடு மாநிலத்தில் உள்ள கூட்டுறவு நிலவள வங்கி மிகப் பெரிய சாதனையைப் படைத்து, கடன் வழங்குவதில், பரிசினைப் பெற்றுத் திகழ்கிறது என்பது, நிர்வாகத் திறன் மிகுந்த முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் சாதனை என்பதில் வேறு கருத்துக்கு இடமில்லை.

தமிழ்நாட்டில் தமிழ்நாடு கூட்டுறவு நுகர்பொருள் இணையமும், மாவட்ட அளவில் 29 மொத்தக் கூட்டுறவு விற்பனை பண்டகசாலைகளும், 3,712 தொடக்கநிலைப் பண்டகசாலைகளும் இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஆறு மாவட்டங்களில் மகளிரைக் கொண்டு 13 தொடக்க நிலைப் பண்டகசாலைகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இவற்றின் மூலம் நுகர்பொருட்கள் விற்பனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

1991-92-இல் ரூ.1267.35 கோடி, 1992-93-இல் ரூ.1236.10 கோடி, 1993-94-இல் ரூ.1408.10 கோடி, 1994-95 ரூ.1539. கோடி மதிப்புள்ள நுகர்பொருள்கள் விற்பனை செய்யப்பட்டன. 1995-96-இல் ரூ.1700. கோடி அளவிற்கு விற்பனை செய்ய உள்ளன.

1994-ஆம் ஆண்டு தீபாவளியை ஒட்டி குறைந்த விலையில் சேலை, ரவிக்கை, வேட்டி, சட்டை, முழுக்கால் சட்டை, 27 வகையான அத்தியாவசியப் பொருட்கள், பட்டாசுகள், இனிப்பு வகைகள், குறைந்த விலையில் அனைவரும் தீபாவளி கொண்டாடும் வகையில் கூட்டுறவுச் சிறப்பங்காடி மூலம் விற்பனை செய்யப்பட்டது. இந்தப் பொருட்கள் ஏறத்தாழ ரூ.6.39 கோடி அளவுக்கு விற்பனையாகியுள்ளன.

## பொது விநியாகத் திட்டம்

இந்தியாவிலேயே பொது விநியாகத் திட்டப் பணிகள் கூட்டுறவால் நிர்வகிக்கப்படுவது தமிழகத்தில்தான் என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். தமிழகத்தில் 20,912 நியாய விலைக் கடைகள் 137 இலட்சம் அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பண்டங்களை வழங்கிக்கொண்டுள்ளது.

1992-93-ஆம் ஆண்டில் ரூ.901.43 கோடி, 1993-94-இல் ரூ.902.23 கோடி, 1994-95-இல் ரூ.1,034 கோடி மதிப்புள்ள அத்தியாவசியப் பொருட்கள் குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகிக்கப்பட்டது என்பது மிகப் பெரிய சாதனையாகும். அதோடு மக்களின் நலன் கருதி 1,719 பகுதி நேர நியாயவிலைக் கடைகளும் தமிழகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறன்றன. கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படும் நியாயவிலைக் கடைகளின் நட்டத்தை ஈடுகட்டும் வகையில் 1994-95-ஆம் ஆண்டில் ரூ.2.5 கோடி மானியம் தமிழக அரசு சார்பில் வழங்கப்பட்டுள்ளது.

## சிறப்பாகச் செயல்படும் நியாயவிலைக் கடைகள்

மாநில அளவில் செயல்படும் பொது விநியாகத் திட்டம் குறித்து திங்கள்தோறும் கூட்டுறவுச் செயலாளர் அவர்கள் ஆய்வினை மேற்கொள்கிறார். மாவட்ட அளவில், சிறப்பு பறக்கும் படை ஒன்று சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டுள்ளது.

## கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள்

தமிழகத்தில் 113 கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் அதனுடைய உறுப்பினர்களுக்கு விவசாய விளைபொருட்களை இலாபகரமாக விற்பனை செய்கின்ற பணியையும், நுகர்வோருக்கு அத்தியாவசியப் பொருட்களை நியாயமான விலையில் கிடைக்கச் செய்யும் பணிகளையும் ஆற்றிக் கொண்டுள்ளது.

1991-92 ஆண்டில் ரூ.325.39 கோடி, 1992-93-இல் ரூ.389.4 கோடி, 1993-94-இல் ரூ.428.32 கோடி, 1994-95-இல் ரூ.610.22 கோடி, வேளாண் விளைபொருட்கள் விற்பனை செய்யப்பட்டன. நடப்பு நிதியாண்டில் ரூ.400 கோடி அளவிற்கு விளைபொருட்கள் விற்பனை செய்வதற்காக இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த இலக்கையும் விஞ்சி நுகர்பொருட்கள் விற்பனையில் நடப்பு நிதியாண்டில் மாபெரும் சாதனை படைக்கப்படும்.

## விவசாய இடுபொருள் விநியோகம்

விவசாயிகளுக்குத் தேவையான இடுபொருட்களை வழங்குவதில் மாபெரும் சாதனையைத் தமிழகம் படைத்துக்கொண்டிருக்கிறது.

1991-92-இல் ரூ.168.04 கோடி, 1992-93 ரூ.194.64 கோடி,

1993-94-இல் ரூ.169.63 கோடி, 1994-95 ரூ.211 கோடி மதிப்புள்ள வேளாண் இடுபொருட்கள் வழங்கப்பட்டுள்ளன. நடப்பு நிதியாண்டில் இதைவிட அதிக அளவில் வேளாண் இடு பொருட்கள் விவசாயிகளின் தேவைக்கு ஏற்ப வாரி வழங்கப் பட உள்ளன.

### கூட்டுறவுக் கல்வி, பயிற்சி மற்றும் விளம்பரம்

கூட்டுறவுச் சங்கங்களின் பணிகள், கூட்டுறவு இயக்கத் தினுடைய கொள்கைகளைப் பரப்புகின்ற பணியை, தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் மிகச் சிறப்பாக நிறைவேற்றிக் கொண் டிருக்கிறது. 9 பயிற்சி நிலையங் களில் கூட்டுறவுப் பட்டயப் பயிற்சிகள் நடத்தப்பட்டு வரு கின்றன.

### வானொலி மூலம் கூட்டுறவுக் கல்வி

வருங்காலச் சந்ததியினராகத் திகழும் மாணவ, மாணவியர் களுக்குக் கூட்டுறவுக் கல்வியைக் கற்பிக்கின்ற வகையில், 1993-94-ஆம் ஆண்டில் திருச்சி வானொலி மூலமாகக் கூட் டுறவுக் கல்வி ஒலிபரப்பப்பட்டு, ஏறத்தாழ, 15,000 பேர் பயன டைந்தார்கள். இதைப்போல, 1995-ஆம் ஆண்டில், சென்னை, கோவை, மதுரை, நெல்லை, நாகர்கோவில், உதகை, பாண்டிச் சேரி ஆகிய வானொலி நிலை யங்கள் மூலமாகக் கூட்டுறவுக் கல்வி ஒலிபரப்பாகியது. பல்லா யிரக்கணக்கான, மாணவர்கள் இதில் கலந்துகொண்டு, கூட்டுற வின் தன்மை, மகிமை, சாதனை களை வெகுவாகப் புரிந்து

> கல்வி வெறும் ஏட்டுச்சுரைக்காயாக இருந்த காலம் மாறி இப்போது சமுதாய மாற்றத்திற்கு உதவும் மாபெரும் சக்தியாக விளங்கிவருகிறது.
> - மாண்புமிகு முதல்வர்

கொண்டார்கள்.

### கூட்டுறவு விளையாட்டுப் போட்டி

கூட்டுறவுப் பணியாளர் களுக்காக, மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் கூட்டுறவு விளையாட்டுப் போட்டிகள் 1994-95-ஆம் ஆண்டில் நடத்தப் பட்டு வெற்றி பெற்றவர் களுக்குப் பரிசுகள் வழங்கப் பட்டன. விளையாட்டுப் போட்டி களில் அதிகப் புள்ளிகளை எடுத்த மதுரை மாவட்டத்திற்கு, மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவியின் பெயரில் சுழற்கோப்பை வழங் கப்பட்டது.

### கூட்டுறவு இயக்க வளர்ச்சிக்கு நிதியுதவி

கடந்த 4 ஆண்டுகளில் கூட் டுறவு வளர்ச்சி நிதியிலிருந்து ரூ.2.72 கோடியும், கூட்டுறவுக் கல்வி நிதியிலிருந்து ரூ.1.46 கோடியும் மானியமாகச் செயல் பதிவாளர்கள் கூட்டுறவுச் சங்கக் களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

பர்கூரிலும், பட்டுக்கோட்டை யிலும் இரண்டு தொழிற் பயிற்சி நிலையங்கள் கூட்டுறவால் நடத்தப்படுகின்றன.

பர்கூர் தொழிற் பயிற்சி நிலையத்திற்கு மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் நல்லாசி யுடன் ஒரு கோடி ரூபாய் மதிப் பீட்டில் கட்டடம் கட்டப்பட் டுள்ளது. பட்டுக்கோட்டை தொழிற் பயிற்சி நிலையத்திற்கு விரைவில் ஒரு கட்டடம் கட்டப் பட உள்ளது. இது, தஞ்சை மாவட்ட மக்களுக்கு மகிழ்ச்சிக் குரிய செய்தியாகும்.

எந்தத் துறைக்கும் இல்லாத ஒரு பெருமை கூட்டுறவுத் துறைக்கு உண்டென்பதை இந் நாடு மிகவும் நன்றாக அறியும். குறிப்பாக, மக்களாட்சி தர்மத் தைப் பேணுகின்ற மகத்தான அமைப்பு, கூட்டுறவு இயக்கம் என்பதோடு, மக்களின் இன்ப மான வாழ்விற்கு, இணை பிரியாத ஒட்டு மொத்த உழைப் பினையும், உயர்வையும், வழங் குவது கூட்டுறவுதான் என்பதில், ஐயமில்லை. அதனால்தான் கூட்டுறவு இயக்கத்திற்கென்று இணைந்த கைச்சின்னமும், ஏழு வண்ணக் கொடியும் பளிச்சிட்டு விளங்குவதோடு அவை வெற்றிக் கொடியாகவும், வெற்றிச் சின்னமாகவும், பரிமளித்துக் கொண்டிருக்கிறது.

இந்த நான்காண்டில், நம் முடைய மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர் களின் பொற்கால ஆட்சியில், கூட்டுறவுத் துறையில் மலர்ந்து மணம் பரப்பும் சாதனை மலர்களை நினைந்து போற்று வோம். ✻

# தமிழகத்தின் ஒளிவிளக்கால் சுடர்விடும் உள்ளாட்சித் துறை

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்

## திரு. டி.எம். செல்வகணபதி



**க**ல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன் தோன்றி மூத்த நமது உயர்தனிச் செந்தமிழுக்குத் தஞ்சைத்தரணியில் எட்டாவது உலகத்தமிழ் மாநாடு கண்ட தமிழகத்தின் நிரந்தர முதல்வர், பல்கோடித் தமிழ் நெஞ்சங் களின் இதய தெய்வம்- நமது அன்னை- டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் சீரிய தலை மையின் கீழ் இயங்கும் தமிழக அரசு, இந்த நான்காண்டுக்காலம் நிகழ்த்திய சாதனைகள் எண்ணி லடங்கா.

கடந்து சென்ற இந்த நான்-காண்டுகள், நிமிடங்களாய்க் கழிந்து சென்றுவிட்டதாக ஒரு பிரமையை உணரமுடிகிறது. ஆனாலும் இதில் துறை வாரியாக இந்த நான்காண்டு களில் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் இந்த அரசு மக்களின் நலமே தன் நலம் என்ற முனைப்போடு செயல் பட்ட விதத்தினைத் தக்காரும், மிக்காரும் போற்றிய வண்ணம் உள்ளனர்.

தனிப்பட்ட துறைகள் பற்றிக் குறிப்பிட்டுக் கூற முனையும் இந்த வேளையில் எனக்குக் கட்டளையிட்டு மேற்பார்வையிட

**இதுவரை குடிநீர் வசதி பெறாத பகுதிகளுக்கு ரூ.5.5 கோடி செலவில் 260 கிலோமீட்டர் நீள முள்ள புதிய குடிநீர்க் குழாய்கள் அமைக்கப்பட் டுள்ளன.**

**கடந்த நான்காண்டு களில் வீடுகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ள புதிய குடிநீர் இணைப்புகளின் எண்ணிக்கை 23,200 ஆகும். புதிதாகக் கொடுக் கப்பட்டுள்ள கழிவு நீர் இணைப்புகளின் மொத்த எண்ணிக்கை 37,900.**

அன்னை அவர்கள் அளித்திட்ட துறைகள் இரண்டும், கீழ்த்தட்டு மக்களையும் வறுமையில் வாடும் ஏழை மக்களையும் சென்றடை யும் திட்டங்களைச் செயல் படுத்தும் துறைகளான ஊரக வளர்ச்சித்துறையும், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங் கல் துறையும் ஆகும். சென்னை நகரைச் சுற்றிவிட்டுச் செல்லும் ஒவ்வொரு வெளிநாட்டினரும் எழில் கொஞ்சும் சென்னை நகரின் இன்றைய அழகினை வர்ணிக்காமல் சென்றதே கிடை யாது. நான்காண்டுகளில் தாழ்த் தப்பட்ட மக்களுக்கும் மீனவர் சமுதாய மக்களுக்கும் அடிப் படை வசதிகள் செய்து கொடுக் கப்படவேண்டும் என்று உத்தர விட்டு அதைத் தீவிரமாகச் செயல்படுத்த அமைச்சர் பெரு மக்களை ஊக்குவித்த விதத்திலா கட்டும்- மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் தனித் திறமை குன்றின் மேலிட்ட விளக் காய் ஒளிர்கிறது.

குடிநீர் வசதிகள்
குடிநீர் விநியோகக் குழாய்கள்

பழுதடைந்த நிலையிலுள்ள குடிநீர் விநியோகக் குழாய்களை

மாற்றிப் புதுப்பிக்கும் திட்டம் 1991-ஆம் ஆண்டிலிருந்து படிப் படியாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ரூ.10 கோடி செலவில் 150 கிலோ மீட்டர் நீளமுள்ள குடிநீர்க்குழாய்கள் புதுப்பிக்கப் பட்டுள்ளன. இதன் மூலம் பயன் பெற்றுள்ள தெருக்களின் எண் ணிக்கை 800.

இதுவரை குடிநீர் வசதி பெறாத பகுதிகளுக்கு ரூ.5.5 கோடி செலவில் 260 கிலோ மீட்டர் நீளமுள்ள புதிய குடிநீர்க் குழாய்கள் அமைக்கப்பட்டுள் ளன. இதனால் பயன் பெற் றுள்ள தெருக்களின் எண் ணிக்கை 650.

கடந்த நான்கு ஆண்டுகளில் வீடுகளுக்குக் கொடுக்கப் பட்டுள்ள புதிய குடிநீர் இணைப் புகளின் எண்ணிக்கை 23,200 ஆகும்.

### கழிவுநீர்க் குழாய்கள்

குளத்தூர், விருகம்பாக்கம், வேளச்சேரி, ஜி.கே.எம்.காலனி, வில்லிவாக்கம், வியாசர்பாடி, அயனாவரம், தண்டையார்ப் பேட்டை, பெரம்பூர், சாலி கிராமம், என்.எஸ்.கே. நகர். ஜகந்நாத நகர் மற்றும் கோயம் பேடு ஆகிய இடங்களில் புதிய கழிவுநீர்க் குழாய்கள் ரூ.50 கோடி செலவில் 2,734 தெருக் களில் 374 கிலோ மீட்டர் நீளத் திற்கு அமைக்கப்பட்டன.

கானகம் -தரமணி, கொடுங் கையூர் ஆகிய இடங்களில் ரூபாய் 6.7 கோடி மதிப்பீட்டில் கழிவுநீர் அகற்றும் பணிகள் மேற் கொள்ளப்பட உள்ளன.

கோட்டூர்புரம், வில்லி




வாக்கம், எம்.ஜி.ஆர் நகர், மாதவரம், ஈக்காட்டுத்தாங்கல், என்.எஸ்.கே.நகர், பத்மநாப நகர், சத்தியமூர்த்தி பிளாக், கென்னடி ஸ்கொயர், சாலிகிராமம் மற்றும் காரணீஸ்வரர் பகோடா தெரு ஆகிய இடங்களில் ரூ4.1 கோடி செலவில் கழிவு நீரேற்று நிலை யங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

வியாசர்பாடி, ஏகாங்கிபுரம், அண்ணாநகர் மேற்கு ஆகிய இடங்களில் ரூ1.2 கோடி செல வில் கழிவு நீரேற்று நிலையங்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

டி.பி.கே. செட்டித் தெரு, விருகம்பாக்கம், வேளச்சேரி, கொளத்தூர் ஆகிய இடங்களில் 1.7 கோடி செலவில் புதிய கழிவுநீரேற்று நிலையங்கள் அமைக்கும் பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன.

நான்கு ஆண்டுகளில் வீடு களுக்குப் புதிதாகக் கொடுக்கப் பட்டுள்ள கழிவுநீர் இணைப்புக் களின் மொத்த எண்ணிக்கை 37,900.

20 கிலோ மீட்டர் நீளமுள்ள இராட்சதக் கழிவுநீர்க் கால்வாய் களிலும், 95 கி.மீ. நீளமுள்ள பாதாளக் கழிவுநீர்க் குழாய்களி லிருந்தும் மணல் மற்றும் வண்டல் முதலியவைகளை ஆளே நுழைந்து பணி செய் யாமல் எந்திரங்களைக் கொண்டு தூர் நீக்கப்பட்டுள்ளது.

### கழிவுநீர் சுத்திகரிப்பு

நேசப்பாக்கம், கோயம்பேடு மற்றும் கொடுங்கையூர் ஆகிய இடங்களிலுள்ள கழிவுநீர் சுத்தி கரிப்பு நிலையங்கள் ரூ19.10 கோடி செலவில் சீரமைக்கப் பட்டு தற்போது இந்தியா விலேயே முன்னணியில் உள்ள வகையில் செயல்படுகின்றன.

கொடுங்கையூர் கழிவுநீர் நிலையத்தில் பெறப்படும் சுத்தி கரிக்கப்பட்ட கழிவுநீர் மேலும் தூய்மையாக்கப்பட்டு, மணலி தொழிற்சாலைகளில் பயன் படுத்தப்படுகிறது. இதனால் சுற்றுப்புறச்சூழல் பாதுகாக்கப்

# எழில்மிகு சென்னை 2000

**எ**ழில்மிகு சென்னை 2000 திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ரூ.135 கோடி அளவில் உருவாக்கி, ரூ.435 கோடி அளவில் மக்களின் தேவையைப் பொறுத்தும், நிதிப் பெருக்கத்தின் காரணமாகவும் உயர்த்தினார்கள்.

இத்திட்டத்தின் கீழ் தெரு விளக்குகள் அமைத்தல், சாலைகள் அமைத்தல், மழை நீர் வடிகால்கள் அமைத்தல், பாலங்கள், பள்ளிக் கட்டடங்கள், பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள், குடிசைப் பகுதி மேம்பாடு முதலிய பல்வேறு பணிகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டது. எழில்மிகு சென்னை 2000 திட்டத்தின் கீழ், கடந்த நான்கு ஆண்டுகளில் பல்வேறு வளர்ச்சிப் பணிகளுக்காகச் செலவழிக்கப்பட்ட மொத்தத் தொகை ரூ272.58 கோடியாகும்.

**கட்டடங்கள்**

மாநகராட்சியின் பல கட்டடங்களின் வளர்ச்சிக்காக மற்றும் மக்களின் பணிக்காகப் பல புதிய கட்டடங்கள் மற்றும் பழைய கட்டடங்கள் நவீப்படுத்தும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன. அவற்றுள் பள்ளிக் கட்டடங்கள், வணிகக் கூடங்கள், விளையாட்டு மைதானங்கள், பூங்காக்கள், ஐந்தாவது இந்திய மக்கள் தொகை திட்டக் கட்டடங்கள் போன்றவைகளும் மேற்கொள்ளப்பட்டன. இதற்காக ரூ38.05 கோடி செலவழிக்கப்பட்டுள்ளது.

**பூங்காக்கள் - விளையாட்டு மைதானங்கள்**

பூங்காக்களின் வளர்ச்சிக்காகவும், விளையாட்டு மைதானங்கள் மேம்பாட்டிற்கும் எழில்மிகு சென்னை 2000 திட்டத்தின் கீழ் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மரம் நடும் விழா மேற்கொள்ளப்பட்டு 70,000 மரங்கள் புதியதாகச் சாலைகளின் ஓரங்கள், பூங்காக்கள், விளையாட்டுத் திடல்களும் மேம்படுத்தப்பட்டுள்ளன. மெரினா மற்றும் எல்லியட்ஸ் கடற்கரையில் உயர் மின் விளக்குகள் மற்றும் குழந்தைகள் விளையாடுவதற்காக விளையாட்டு உபகரணங்களும் பொருத்தப்பட்டுள்ளன. மற்றும் நடைபாதைகள் சலவைக்கல் பொருத்தி அழகுபடுத்தப் பட்டுள்ளன.

சாலைகள் மேம்பாடு, தெரு விளக்கு மழைநீர் வடிகால், பாலம் , கட்டட மேம்பாடு, பூங்கா, விளையாட்டு மைதானம் போன்ற பலவகைகளில் சென்னை மாநகராட்சி தேவையான நடவடிக்கைகள் எடுத்துள்ளது. துப்புரவுப் பணியை மேம்படுத்தப் புதிய லாரிகள் வாங்கப்பட்டுள்ளன. மாட்டு வண்டிகளுக்குப் பதிலாக சிறிய லாரிகள் வாங்கப்பட்டுள்ளன. தூய்மைப் பகுதிகள் அறிவிக்கப்பட்டு துப்புரவுப் பணி மேற்கொள்ளப்படுகிறது. குறிப்பிட்ட பகுதிகளில் தொடர் துப்புரவுப் பணி மேற்கொள்ளப்படுகிறது. எழில்மிகு சென்னை, மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவியின் புகழ் மகுடத்தில் புதுமுத்தாய் ஒளிவீசும் என்பது திண்ணம்!

படுவதுடன் குடிநீரும் சேமிக்கப் படுகிறது. தண்டையார்ப் பேட்டை, இராயபுரம், தங்க சாலை, கோடம்பாக்கம், பெரம்பூர், எருக்கஞ்சேரி, சைதாப் பேட்டை, ஆகிய இடங்களில் தற்போதைய 14 கழிவுநீர் இணைப்பு நிலையங்களின் திறன் பற்றாக் குறையாக உள்ளது. இவைகளைப் புனரமைப்பதற்காக ரூ.35 கோடி செலவில் தயாரிக்கப்பட்ட சென்னைக் குடிநீர்த் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

சென்னை நகரின் ஜன நெருக்கம் மிகுந்த இடங்களான காத்பாடா, இராம்நகர், தெற்குக் கேசவப் பெருமாள்புரம், கோவிந்தசாமி நகர், காரணீஸ்வரர் பகோடா ஆகிய இடங்களில் தெருவின் மட்டம் வீட்டின் வாசற்படி மட்டத்தினைவிட உயர்ந்துவிட்டதால், இந்த இடங்களுக்காகத் தனித் தனியே சிறிய அளவுள்ள கழிவு நீர் இறைக்கும் நிலையங்கள் அமைக்கப்பட்டு மக்களின் கழிவுநீர்ப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுள்ளன.

**சுற்றுப்புறச் சூழல் மேம்பாடு**

மாண்புமிகு முதலமைச்சர்

டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் அடிக்கடி வலியுறுத்தி வரும் சுற்றுப்புறச்சூழல் மேம்பாட்டுத் திட்டங்களின் ஓர் முக்கிய அங்கமாக இந்தியாவிலேயே முதல் முறையாகச் சென்னையில் கழிவுநீரினைச் சுத்திகரித்து 1991-ஆம் ஆண்டுமுதல் நாளொன்றுக்கு 12 மில்லியன் லிட்டர் என்ற அளவில் தொழிற்சாலைகளுக்கு உகந்த நீராகப் பயன்படுத்தப்பட்டது.

இதன் தொழில் திறனை ஜப்பானிய நிபுணர்கள் நேரில் கண்டறிந்து இத்துறையில் ரூ.572 கோடி கடன் உதவி செய்வதற்கான ஒப்பந்தம் 28.2.95 அன்று கையெழுத்தாகியுள்ளது.

சுற்றுப்புறச் சூழலின் மற்றொரு முக்கிய அங்கமாகக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை ஒட்டி நேசப்பாக்கம், கோயம்பேடு, ஆகிய பகுதிகளில் 50 ஏக்கர் பரப்பளவில் சுத்திகரித்த கழிவுநீரைக் கொண்டு தேக்கு, மகாகனி, ரோஸ்உட், மூங்கில் ஆகிய மரங்கள் இரண்டு ஆண்டுகளாக வளர்க்கப்படுகின்றன.

விரைவில் இது 200 ஏக்கர் பரப்பில் விஸ்தரிக்கப்படும்.

### நீர்த்தேக்கத் தொட்டிகள்

சென்னை நகரின் குடிநீர் விநியோகத்தினைச் சீரமைப்பதற்காக, கிருஷ்ணா நதிநீர்த் திட்டத்தின்கீழ் திருவல்லிக்கேணி, மயிலாப்பூர், வேளச்சேரி, ஈக்காடுதாங்கல், கோயம்பேடு, குளத்தூர், வியாசர்பாடி, பட்டேல் நகர் கண்ணப்பர் திடல் வள்ளுவர் கோட்டம், நந்தனம் ஆகிய இடங்களில் சென்னை கீழ்ப்பாக்கத்தில் உள்ளதுபோல் பிரம்மாண்ட நீர்த்தேக்கத் தொட்டிகளும், மேல்நிலைத் தொட்டிகளும் அமைக்கப்படும். வள்ளுவர் கோட்டத்தில் இதற்கான பணிகள் ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ளன.

**தூய உள்ளமே கோயில். நலிந்தோரைத் தேற்றுவதே தோத்திரம், மக்கட் பணியே மகேசனுக்கு உகந்த பூசை. ஏழை இதயத்திலே களிப்பூட்டலே, பகவானுக்குத் தேர்த் திருவிழா. —பேரறிஞர் அண்ணா**

### கிருஷ்ணா நதிநீர்த்திட்டம்

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ஆந்திர மாநில முதல்வர் அவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தி, பல ஆண்டுகள் தேக்கத்தில் இருந்த சென்னைக்குக் கிருஷ்ணா நதியிலிந்து நீர் கொண்டுவரும் திட்டத்தை விரைவுபடுத்தினார். அது தொடர்பான வேலைகள் துரிதமாக நடைபெறுகின்றன. முதல் கட்டமாக இத்திட்டத்தினால் 5 டி.எம்.சி.குடிநீர் கூடுதலாகச் சென்னை நகர மக்களுக்கும், நகரைச் சுற்றியுள்ள 20 உள்ளாட்சி அமைப்பின் மக்களுக்கும் கிடைக்கும்.

1995-ஆம் ஆண்டு எதிர்பார்க்கப்படும் கிருஷ்ணாநதி நீரினை உடனடியாகச் சென்னை நகருக்கு விநியோகம் செய்வதற்கு முக்கியமான குழாய்கள் அமைக்கும் பணிகளுக்காக மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆணைப்படி செயல்படுத்துவதற்கு ரூபாய் 25 கோடியில் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 1993-ஆம் ஆண்டு நிலவிய வரலாறு காணாத வறட்சியை வென்ற போர்க்கால நிவாரணப் பணிகள்:

புதிதாக நிறுவப்பட்ட இந்தியா மார்க் 2 பம்புகள் 2,620

தெருக்களில் புதிதாக அமைக்கப்பட்ட குடிநீர்த் தொட்டிகள் 4,391.

370 லாரிகள், 486 டிராக்டர்கள் மூலம் நாள்தோறும் குடிநீர் வழங்கப்பட்டது. இதற்கான செலவு ரூ. 1,5.03 கோடி.

நெய்வேலி, ஈரோடு போன்ற தொலைதூர இடங்களிலிருந்து இரயில் மற்றும் லாரிகள் மூலம் குடிநீர் கொண்டுவரப்பட்டு சுத்திகரித்து விநியோகிக்கப்பட்டது.

இதற்கான செலவு ரூ.1,8.54 கோடியாகும்.

1991 ஆம் ஆண்டில் சென்னை நகரில் பாதாள சாக்கடை பெற்ற தெருக்கள் 86% ஆகும்.

1994 ஆம் ஆண்டில் பாதாள சாக்கடை பெற்ற தெருக்கள் 95%.

1995 -ஆம் ஆண்டு இறுதிக்குள் முடிக்க உத்தேசித்துள்ள இலக்கு 100%.

சென்னை நகரின் வசதி மற்றும் கழிவுநீரகற்றும் வசதி ஆகிய பணிகளுக்காக, சென்னைக்



குடிநீர் வாரியத்தினால் 1978 முதல் 1991- ஆம் ஆண்டு வரை 13 ஆண்டுகளில் செய்யப்பட்ட முதலீடு ரூ.165 கோடி.

1991 முதல் 1995 வரை 4 ஆண்டுகளில் முதலீடு ரூ.203 கோடியாகும்.

1995 முதல் 2000 வரை அடுத்த 5 ஆண்டுகளில் திட்ட மிடப்பட்டுள்ள முதலீடு ரூ.2219 கோடி.

1991-92-ஆம் நிதியாண்டில் 5,369 ஊரகக் குடியிருப்புகளுக்கு ரூ.78.34 கோடி செலவில் 26.25 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட 5369 ஊரகக் குடியிருப்புகளில் 3,284 குடியிருப்புகள் கையிறைப்பான் திட்டங்களின் கீழும், 1,408 குடியிருப்புகள் விசையிறைப்பான்கள் திட்டங்களின் கீழும், 446 குடியிருப்புகள் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின் கீழும், மற்றும் 231 குடியிருப்புகள் இதர திட்டங்களின் கீழும் (குழாய் விஸ்தரிப்புத் திட்டம், திறந்த வெளிக் கிணறு, ஈர்ப்புக் குழாய் (Gravity Main) முதலியன) அடங்கும்.

மேற்குறிப்பிட்ட 5,369 குடியிருப்புகளுள் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் 2,445 முழுமையான குடிநீர் வசதி செய்து தரப்பட்ட குடியிருப்புகள் அடங்கும். ஊரகக் குடியிருப்புகளுக்காக 1991-92-இல் செலவிடப்பட்ட மேற்குறிப்பிட்டுள்ள தொகையான ரூ.78.34 கோடியில் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகளுக்காக செலவிடப்பட்ட தொகையான ரூ.12.25 கோடியும் உள்ளடங்கும்.

டாக்டர் அம்பேத்கர் நூற்றாண்டு நினைவு ஆண்டுத் திட்டத்தின் கீழ், நீராதாரமற்ற 92 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு ரூ.0.70 கோடி செலவில் 1991-92-ஆம் ஆண்டில் குடிநீர்த் திட்டங்களின் மூலம் குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது.

மற்றும் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 3 பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு ரூ.0.0016 கோடி செலவில் 1991-92-ஆம் ஆண்டில் குடிநீர்த் திட்டங்களின் மூலம் குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது.

### 1992-93-இல் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள்

1992-93-ஆம் நிதியாண்டில், 2,559 ஊரகக் குடியிருப்புகளுக்கு 23.96 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் குடிநீர்த் திட்டங்களின் மூலம் முழுமையாகக் குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட 2559 குடியிருப்புகளுள், தாழ்த்தப்பட்டோர், மற்றும் பழங்குடியினர் வசிக்கும் 1,358 முழுமையாகக் குடிநீர் வசதி செய்து தரப்பட்ட குடியிருப்புகள் அடங்கும்.

1992-93-ஆம் ஆண்டில் மாற்று நீராதாரத் திட்டத்தின் கீழ் 804 எண்ணிக்கை ஒதுக்கப்பட்டு, 636 மாற்று நீராதாரங்கள் முடிக்கப்பட்டு மக்களின் பயனுக்குக் கொண்டு வரப்பட்டது.

டாக்டர் அம்பேத்கார் நூற்றாண்டு நினைவு ஆண்டுத் திட்டத்தின் கீழ் நீராதாரமற்ற 244 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு ரூ.2.30 கோடி செலவில் 1992-93-ஆம் ஆண்டில் குடிநீர்த் திட்டங்களின் மூலம் குடிநீர் வசதி செய்துதரப்பட்டுள்ளது.

மற்றும் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 34 பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு ரூ.0.10 கோடி செலவில் 1992-93-ஆம் ஆண்டில் குடிநீர்த் திட்டங்களின் மூலம் குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது.

### 1993-94-ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள்

1993-94-ஆம் நிதியாண்டில் 3751 ஊரகக் குடியிருப்புகளுக்கு 24.57 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் குடிநீர்த் திட்டங்களின் மூலம் முழுமையான குடிநீர் வசதி செய்துதரப்பட்டது. 1993-94-ஆம் நிதி ஆண்டில் ஊரகக் குடியிருப்புகளின் குடிநீர்த் திட்டங்களுக்காகச் செலவிடப்பட்ட தொகை ரூ.82.13 கோடி ஆகும். ஊரகக் குடியிருப்புகளுக்காக 1993-94-ஆம்

ஆண்டில் செலவிடப்பட்ட மேற்குறிப்பிடப்பட்டுள்ள தொகையான ரூ82.13 கோடியில் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகளுக்காகச் செலவிடப்பட்ட தொகையான ரூ14.24 கோடி உள்ளடங்கும்.

மத்திய அரசு 20 அம்சத் திட்டத்தின் கீழ் 7-வது அம்சமான குடிநீர் வழங்குவதற்காக 1993-94-ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கு 3500 குடியிருப்புகளாகும். தமிழக அரசின் பெருமுயற்சியின் காரணமாக, மேற்கூறிய 3751 ஊரகக் குடியிருப்புகளுக்குத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. இது நிர்ணயிக்கப்பட்ட இலக்கைக் காட்டிலும் 7 விழுக்காடு கூடுதலாகும். இதனைக் கருத்திற்கொண்டு, மத்திய அரசு, தமிழக அரசிற்கு விரைவுபடுத்தப்பட்ட ஊரகக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் 1993-94-ஆம் ஆண்டிற்கு ஏற்கெனவே நிர்ணயிக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டினைக் காட்டிலும் ரூ2.02 கோடி கூடுதல் நிதியுதவி அளித்துள்ளது.

ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 63 பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு ரூ.0.32 கோடி செலவில் 1993-94-ஆம் ஆண்டில் குடிநீர்த் திட்டங்களின் மூலம் குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது.

### 1994-95-இல் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள்

1994-95-ஆம் நிதியாண்டில், 3,808 ஊரகக் குடியிருப்புகளுக்கு 24.24 இலட்சம் மக்கள் பயன்



பெறும் வகையில் குடிநீர்த் திட்டங்களின் மூலம் முழுமையான குடிநீர் வசதி செய்து தரப்பட்டது. 1994-1995-ஆம் நிதி ஆண்டில் ஊரகக் குடியிருப்புகளின் குடிநீர்த் திட்டங்களுக்காகச் செலவிடப்பட்ட தொகை ரூ.72.60 கோடி ஆகும்.

மேலே குறிப்பிட்ட 3,808 குடியிருப்புகளுள் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் 1941 முழுமையான குடிநீர் வசதி செய்து தரப்பட்ட குடியிருப்புகளும் அடங்கும்.

இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள நரிப்பையூரில் நாள் ஒன்றுக்கு 1 மில்லியன் லிட்டர் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்காக உவர் நீரைக் குடிநீராக்கும் இயந்திரம் ஒன்றை நிறுவ மத்திய அரசு ரூ.10.75 கோடிக்கான நிதி ஒப்புதல் வழங்கியுள்ளது. மேற்குறிப்பிட்ட உவர் நீரைக் குடிநீராக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 1995-96-ஆம் ஆண்டிற்கான திட்டங்கள்

1995-96-ஆம் நிதியாண்டில், 2500 ஊரகக் குடியிருப்புகளுக்கு ரூ88.90 கோடி நிதி ஒதுக்கீட்டில், குடிநீர் திட்டங்களின் மூலம் வசதி செய்துதர திட்டமிடப்பட்டுள்ளது. இதில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் 1000 குடியிருப்புகளுக்கு ரூ22.25 கோடி நிதி ஒதுக்கீட்டில் சிறப்புக் கூறு திட்டத்தின் கீழ் குடிநீர் வசதி செய்து தரும் பணியும் உள்ளடங்கும்.

1991-92-ஆம் ஆண்டு, 74 ஊரகப் பேரூராட்சிகளில் ரூ.9.06 கோடி நிதி ஒதுக்கீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

1992-93-ஆம் ஆண்டு, 88 ஊரகப் பேரூராட்சிகளில் ரூ10.42 கோடி நிதி ஒதுக்கீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

1993-94-ஆம் ஆண்டு 81 ஊரகப் பேரூராட்சிகளில் ரூ12.00 கோடி நிதி ஒதுக்கீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

1994-95-ஆம் ஆண்டு 66 ஊரகப் பேரூராட்சிகளில் ரூ.16.00 கோடி நிதி ஒதுக்கீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

### நகர்ப்புறக் குடிநீர் வழங்கல் பாதாள வடிகால் வசதி

1991-92-ஆம் ஆண்டில் 30 நகரங்களில் குடிநீர் திட்டப் பணிகளை மேற்கொள்ள ரூ.34.46 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 5 நகராட்சிகளிலும், 7 பேரூராட்சிகளிலும் குடிநீர் திட்டப்பணிகள் முடிக்கப்பட்டு பயனுக்குக் கொண்டுவரப்பட்டது. இதனால் 3,62,000 மக்கள் பயன் அடைந்துள்ளனர்.

1992-93-ஆம் ஆண்டில் 21 நகராட்சிகள் மற்றும் 49 பேரூராட்சிகள் ஆகிய 70 நகரங்களில் குடிநீர் வழங்க பணிகள் ஏற்கப்பட்டன. இதற்காக ரூ.25.57 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்

பட்டு 4 நகராட்சிகள் மற்றும் 4 பேரூராட்சிகளில் குடிநீர்த் திட்டப்பணிகள் முடிக்கப்பட்டு பயனுக்குக் கொணரப்பட்டது. இதனால் 4,28,000 மக்கள் பயனடைந்துள்ளனர்.

*1993-94*-ஆம் ஆண்டில் 66 நகரங்களில் குடிநீர் மற்றும் வடிகால் திட்டப் பணிகள் மேற்கொள்ள ரூ26.60 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 3 நகராட்சிகள் மற்றும் 13 பேரூராட்சிகளில் குடிநீர் திட்டப்பணிகள் முடிந்து பயனுக்கு கொண்டு வரப்பட்டது. இதனால் 5,41,000 மக்கள் பயனடைந்துள்ளனர்.

*1994-95*-ஆம் ஆண்டில் 50 நகரங்களில் குடிநீர்த் திட்டப் பணிகள் மேற்கொள்ள ரூ26.35 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த இடைப்பட்ட 94-95-ஆம் ஆண்டில் 6 நகராட்சிகள் மற்றும் 6 பேரூராட்சிகளின் குடிநீர்த் திட்டப்பணிகள் முடிவுற்று பயனுக்குக் கொண்டுவரப் பட்டது.

*1994-95*-ஆம் ஆண்டில் கீழ்க்காணும் குடிநீர்த் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக அரசு, ரூ.22.22 கோடி செலவில், நிர்வாக ஒப்புதல் வழங்கி உள்ளது.

**1991-92 முதல் 1994-95 வரை**

உலக வங்கித் திட்டத்தில், 3 பெரிய நகரங்களுக்கும், 6 நகராட்சிகளுக்கும், 4 நகரப் பஞ்சாயத்துகளுக்கும், 39 சிறிய/நடுத்தர நகரங்களுக்கும், 899 ஊரகக் குடியிருப்புகளுக்கும் குடிநீர் வழங்கும் திட்ட வேலைகள் செயல்படுத்தப் பட்டுள்ளது. மேலும் குறைந்த செலவிலான கழிப்பிடம் (நிலை 2 கட்டும் திட்டம்) 91 நகரங்களும் (54 நகரங்களுக்கு த.கு.வ. வாரியம் மூலமாகவும், 37 நகரங்களுக்குப் பேரூராட்சி இயக்குநர் மூலமாகவும்) செயல்படுத்தப்பட்டுள்ளது.

இந்தக் காலங்களில் செலவிடப்பட்ட தொகை சுமார் ரூ269 கோடி ஆகும்.

உலக வங்கி உதவியுடன் கூடிய குடிநீர் மற்றும் துப்புரவுத் திட்டத்தினால் சுமார் 60 இலட்சம் மக்கள் பயன் பெறுவார்கள்.

**புதிய வீராணம் திட்டம்**

சென்னைப் பெருநகருக்கு நாள் ஒன்றுக்கு 280 மில்லியன் லிட்டர் கூடுதல் குடிநீர் வழங்க, புதிய வீராணம் திட்டத்தைச் செயல்படுத்த தமிழக அரசு முடிவு செய்துள்ளது. தென்னார்க்காடு- வள்ளலார் மாவட்டத்தில் சேத்தியாதோப்பில் அமைந்துள்ள வீராணம் ஏரியிலிருந்து குடிநீர் கொண்டுவர இத்திட்டம் வழிவகை செய்யும். இத்திட்டத்திற்கு உலக வங்கி நிதியுதவி செய்யும்.

இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ.16380.38 மில்லியன், பொதுப் பணித்துறை மூலம் வீராணம் ஏரி மேம்பாட்டுப்பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**சென்னையைச் சுற்றியுள்ள நகரப் பகுதிகளுக்கான குடிநீர்த் திட்டம்.**

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சென்னையைச் சுற்றியுள்ள 20 நகரப் பகுதிகளுக்கான குடிநீர்த் திட்டத்திற்கான மதிப்பீடுகளைத் தயாரித்துள்ளது. புதிய வீராணம் திட்டம் மற்றும் கிருஷ்ணா குடிநீர்த் திட்டப் பிரதான குழாயிலிருந்து நீரை எடுத்து இந்த 20 நகரங்களுக்குக் குடிநீர் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**1994-95-ஆம் ஆண்டில் 3,808 ஊரகக் குடியிருப்புகளுக்கு, 24.24 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில், குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது.**

இத்திட்டத்திற்கான உத்தேச மதிப்பீடு ரூ.1593 மில்லியன். இத்திட்டத்திற்கு உலக வங்கியிடம் நிதியுதவி பெற நடவடிக்கை எடுக்கப்படும்.

அரசு கடந்த நான்கு ஆண்டுகளில் பேரூராட்சி சாலைகள் மேம்பாட்டுக்காக ரூ40.00 இலட்சம் வழங்கியுள் ளது. இதன் மூலம் பேரூராட்சியில் *1991-92*-ஆம் ஆண்டு 50 கி.மீ.*1992-93*-ஆம் ஆண்டு 782 கி.மீ. *1993-94*-ம் ஆண்டு 2988 கி.மீ.*1994-95*-ஆம் ஆண்டு 15.75 கி.மீ.சாலைகள் பராமரிக்கப் பட்டுள்ளன.

தூசிபடியாச் சாலைகள் அமைக்கப் பேரூராட்சிகளுக்கு 50% மான்யம்- பேரூராட்சியின் சாலைகளை தார்ச் சாலைகளாக மாற்ற 50% மான்யமாக ரூ.50.00 இலட்சம் ஆண்டு ஒன்றுக்கு அரசு மானியம் வழங்கப்பட்டுள்ளது.

நம் இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி ஆட்சியின் இந்த நான்காண்டில் நமது துறைச் சாதனைகள் இப்படி இன்னும் பல மடங்காகும். மற்றவை அடுத்தடுத்த இதழ்களில் தொடரும் ✻



# ஆதிதிராவிட நலத்துறையின் அரிய பணிகள்!

## மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர்
## திரு எம். ஆனந்தன்

தமிழக வரலாற்றின் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படும், புரட்சிகரமான திட்டங்களால், புரட்சிக்கு இலக்கணம் வகுத்து, உலக அரங்கில் புகழ் பெற்றுவரும் மாண்புமிகு தமிழக முதல்வர் சமூக நீதிகாத்த வீராங்கனை இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் பொற்கால ஆட்சி நான்காண்டுகள் வெற்றி வாகை சூடி, ஐந்தாம் ஆண்டு நோக்கி வீர நடை வெற்றிநடை போடுகிறது. இதைக் கண்டு இந்தியத் துணைக் கண்டமே மகிழ்ச்சியடைகிறது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களின் ஒரே பாதுகாவலராக விளங்கிக் கொண்டிருப்பவர், நமது மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் சீரிய திட்டங்களின் செயலாக்கத்தின் பயனாக, இன்று அம்மக்களின் வாழ்க்கைத் தரத்தில், சமூக அந்தஸ்த்தில், கல்வி வளர்ச்சியில், பொருளாதார மேம்பாட்டில் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர் மக்கள் மற்றும் பழங்குடியின மக்களின் மேம்பாட்டுக்குப் பல்வேறு திட்டங்கள் உருவாக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வந்தாலும் அம் மக்கள் வாழ்வில் சீரிய முன்னேற்றம் காண கல்விதான் அடிப்படைத் தேவை என்பதை இந்த அரசு உணர்ந்து அம்மக்களின் கல்வி மேம்பாட்டில் சிறப்புக் கவனம் செலுத்தி அதன்மூலம் அவர்களின் பொருளாதார மேம்பாட்டில் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளது.

சமுதாயத்தில் அனைவரும் சம அந்தஸ்து பெறும் பொருட்டு இவ்வரசு சிறப்புடன் செயல்பட்டு வருகிறது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் 1,232 பள்ளிகளும் 972 மாணவ, மாணவியர் விடுதிகளும் இயங்கி வருகின்றன. இப்பள்ளிகளில் ரூ.2.36 இலட்சம் மாணவ, மாணவியர்கள் பயின்று வருகின்றனர். இவர்களில் 86,471 மாணவ, மாணவியர்கள் விடுதிகளில் தங்கிக் கல்வி பயின்று வருகின்றனர். மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு 14 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 8 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 8 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் நிலை உயர்த்தப்பட்டுள்ளன.

மாணவ, மாணவியரின் பொது அறிவை வளர்த்துக் கொள்ளும் வகையில் அனைத்து

**கடந்த நான்கு ஆண்டுகளில் ஆதிதிராவிடர்களுக்கு இலவசமாக 1.26 இலட்சம் வீடுகள் கட்டித் தரப் பட்டுள்ளன.**

**கடந்த நான்கு ஆண்டுக் காலத்தில் 1,22,111 ஆதிதிராவிடக் குடும்பங்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டி வழங்கப்பட்டுள்ளன.**

விடுதிகளிலும் நூலக வசதிகள் ரூ.12.33 இலட்சம் செலவில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

விடுதிகளில் தங்கிக் கல்வி பயிலும் மாணவ, மாணவியர்களுக்குச் சோப்பு, எண்ணெய் முதலியவை வாங்கிக் கொள்ள, தற்போது மாதம் ரூ.5 வழங்கப்பட்டுவருகிறது. இந்தக் கல்வி ஆண்டிலிருந்து மாதம் ரூ.10 வழங்க மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். அதன்படி அரசுக்கு ஆண்டொன்றுக்கு 43.37 இலட்சம் ரூபாய் கூடுதலாகச் செலவாகும்.

அரசு பொதுத் தேர்வு எழுதும் மாணவ, மாணவியர்களுக்குச் சிறப்புக் கையேடுகள் தயாரித்துக் கொடுத்தும், சிறப்புப் பயிற்சிகள் கொடுத்ததன் பலனாகவும் பொதுத் தேர்வுகளில் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினப் பள்ளி மாணவ, மாணவியர்கள் கடந்த ஆண்டுகளைவிட நல்ல தேர்ச்சி விகிதத்தைப் பெற்றுள்ளார்கள்.

இவ்வரசு பொறுப்பேற்ற பிறகு, ரூ.5.43 கோடி செலவில் 35 புதிய பள்ளிக் கட்டடங்கள் கட்டுவதற்கு ஆணையிடப்பட்டு இப்பணிகள் நடைபெற்று வருகின்றன. 1995-96-ஆம் நிதியாண்டில் ரூ.1.73 கோடி செலவில் 8 பள்ளிக் கட்டடங்கள் கட்டுவதற்கு வகைசெய்யப் பட்டுள்ளது.

கல்வித் துறையின் கீழ் இயங்கி வருகின்ற நிறுவனங்களில் பயிலும், மாணவ, மாணவியருக்கு 1991-92-ஆம் ஆண்டு ரூ.14.00 கோடியும், 1992-93-ஆம் ஆண்டு ரூ.15.31 கோடியும் உதவித்தொகையாக வழங்கப்பட்டுள்ளது. 1993-94-ஆம் ஆண்டில் ரூ.18.07 கோடி உதவித்தொகையாக வழங்கப்பட்டுள்ளது. 1994-95-ஆம் ஆண்டு ரூ.18.55 கோடி உதவித் தொகையாக வழங்கப் பட்டது. 1995-96-ஆம் ஆண்டு ரூ.21.00 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆண்டுதோறும் ரூ.8.50 இலட்சம் மாணவர்கள் பயன்பெறுகின்றனர்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் இம் மாணவர்களின் நலன் கருதி, சிறப்புமிகு ‘சிறப்பு உதவித்தொகை’த் திட்டம் ஒன்றை அறிவித்துள்ளார்கள். இத்திட்டத்தின் கீழ் பெற்றோர் ஆண்டு வருமானம் ரூ.50,000 வரை உள்ள ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினர் மாணவர்



களுக்குப் பராமரிப்பு மற்றும் கல்லூரிக்குச் செலுத்தவேண்டிய அனைத்துக் கட்டணங்களும் வழங்கப்படும்.

ஆதிதிராவிடர் பெண்களிடையே படிப்பை இடையில் நிறுத்திவிடும் பெண்களின் எண்ணிக்கை மிகவும் கணிசமாகும். இதன் காரணமாக இவர்களில் படித்தவர்கள் எண்ணிக்கை மிகவும் குறைவாக உள்ளது. எனவே இவ்வரசு தர்மபுரி, காமராசர், திருவண்ணாமலை சம்புவராயர், விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மற்றும் தென்னார்க்காடு வள்ளலார் மாவட்டங்களில், 3,4,5 வகுப்புகள் பயிலும் 30,000 பெண்களுக்கு ரூ.500 ஆண்டொன்றுக்கு வழங்கவும், 6 ஆம் வகுப்பில் சேர்ந்து கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100 வழங்கவும் ஆணையிட்டுள்ளது. இதனால் 60,000 பெண் குழந்தைகள் பயனடைவர். இத் திட்டம் செங்கை எம்.ஜி.ஆர், வட ஆர்க்காடு அம்பேத்கர், சேலம், திருச்சி மற்றும் நாகை காயிதே மில்லத் ஆகிய மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப் பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் இதற்காக ரூ.6 கோடி செலவிடப்படும்.

மறைந்த பெரியவர் மேயர் சிவராஜ் அவர்களின் சமுதாயப் பணியினைப் போற்றும் வகையில் தொடங்கவிருக்கும் சட்டப் பல்கலைக் கழகத்தில் பயிலும் ஆதிதிராவிட மாணவ, மாணவியருக்கும் கல்வி உதவித்தொகை வழங்க அவர் பெயரில் அறக்கட்டளை ஒன்று துவக்கப்பட

**மனிதனுக்குள்ள இழிவு சமுதாயத்திற்குள்ள இழிவாகும் சமுதாயத்திற்குள்ள இழிவு நாட்டுக்குள்ள இழிவாகும்.**

**—தந்தை பெரியார்**

உள்ளது. இதற்கென ரூ.10 இலட்சம் நடப்பு நிதியாண்டில் ஒதுக்கப்பட்டுள்ளது.

## அடிப்படை வசதி

ஆதிதிராவிடர்கள் சமூக மேம்பாடு அடைய வேண்டுமென்றால், அவர்கள் வாழும் குடியிருப்பு களுக்குத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் செய்து தரப்படவேண்டும் என்பதை உணர்ந்து, மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எல்லா ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகளில் ஓர் ஆய்வு செய்து, அதன் தேவைகளை ஒரு குறிப்பிட்ட கால கட்டத்திற்குள் செய்துதர ஆணையிட்டுள்ளார்கள். இந்த ஆணையின் அடிப்படையில் ஒரு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அதன் மூலம் சேகரிக்கப் பட்ட விவரங்களை அடிப்படையாகக் கொண்டு அடிப்படை வசதிகளைச் செய்துதர ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு இலவசமாக வீடு கட்டித் தரும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் சென்ற 4 ஆண்டு களில் 1.26 இலட்சம் வீடுகள் கட்டித் தரப் பட்டுள்ளன.

1995- 96-ஆம் ஆண்டு 50,000 குடும்பங்களுக்கு ரூ.105 கோடி செலவில் வீடுகள் கட்டித்தரப்பட உள்ளன. ஆதிதிராவிடர்கள் தங்களுடைய வீடு களை மேம்படுத்திக் கொள்ளும் வகையில் அதா வது கூரை, தரை ஆகியவற்றை மேம்படுத்திக் கொள்ள ஒரு வீட்டிற்கு ரூ.5000/ வீதம் 30,000 வீடு களுக்கு ரூ.15/ கோடி மானியமான வழங்கப்படும்.

சமுதாயக் கூடங்கள் கட்டித் தரும் திட்டத்தின் கீழ் 1000 குடியிருப்புகளுக்கு வண்ணத் தொலைக் காட்சிப்பெட்டிகள் ரூ.3/ கோடி செலவில் வழங்கப்படும். ஆதிதிராவிடர்களுக்குச் சிறந்த சேவை செய்வோரைப் பாராட்டிக் கௌரவிக்கும் வகையில், அண்ணல் அம்பேத்கர் அவர்கள் பெயரில் விருது வழங்க ரூ.1.00 இலட்சம் பரிசாக வழங்கப்படும்.

## பயிற்சி மற்றும் வேலை வாய்ப்பு

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இளைஞர்களின் வேலை வாய்ப்பினை அதிகரிக் கும் பொருட்டு கணிப்பொறி பயிற்சி, ஆகாய விமானம் பராமரிப்புப் பயிற்சி, இராணுவம் மற்றும் காவல்துறையில் சேர பயிற்சி, தொலை பேசி, டெலக்ஸ் இயக்கப்பயிற்சி, தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்துப் பயிற்சி போன்ற பல்வேறு பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

இந்திய ஆட்சிப்பணி, இந்தியக் காவல்பணி போன்ற பணிகளில் சேர இவர்களுக்கென ஒரு பயிற்சி நிலையம் இயங்கி வருகின்றது. இப்பயிற்சி நிலையத்தில் 60 இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதுவரை இந்த நிலையத்தில் பயிற்சிபெற்ற 65 நபர்கள் இப்பணிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

ஆதிதிராவிடர் தொழில் முனைவர்களை ஊக்குவிக்கும் வகையில், தற்பொழுது தாட்கோ மூலம் அதிகபட்சமாக ரூ.15,000/ மானியமாகவும், ரூ.85,000/ ஊக்கப்பங்குத் தொகையாகவும் வழங்கப்படுகிறது. இவை முறையே ரூ.25,000/ மாகவும் ரூ.1,25,000/ ஆகவும் உயர்த்தி வழங்கப் படும்.

சுய வேலைவாய்ப்பு அதிகப்படுத்தப்படும் நோக்குடன், தாட்கோ நிறுவனத்தின் மூலம் லாரிகள் வாங்க ரூ.50.00 கோடி செலவிடப்படும். பயனாளிகள் ஒவ்வொருவருக்கும் ரூ.1.25 இலட்சம் மானியமாகவும், ஊக்கப் பங்குத் தொகையாகவும் வழங்கப்படும்.

ஆதிதிராவிடர் மகளிர் பொருளாதார மேம் பாட்டிற்கென ஆண்டுதோறும் 10,000 பெண்கள் பயனடையும் வகையில் ரூ.10.00 கோடி செலவிடப் படும். இதில் ரூ.5.00 கோடி மானியமாகத் தரப் படும்.

ஒன்று முதல் ஐந்து கிராமங்களுக்கு ஒரு செவிலியர் என்ற அடிப்படையில், 5000 ஆதி திராவிடர் பெண்கள் செவிலித் தாய் பயிற்சி அளித்துப் பணியமர்த்தப்படுவர்.

மேலும் 30,000 ஆதிதிராவிடர் பெண்களுக்கு முதலுதவிப் பயிற்சி அளிக்கப்படும்.

## வீட்டுமனைப் பட்டாக்கள்

மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம்

டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற கடந்த நான்கு ஆண்டுகளில், ஆதி திராவிடர் நலத்துறை மூலமாகவும்,வருவாய்த்துறை மூலமாகவும் ரூ.22.00 கோடி செலவில 7,57,500 ஆதிதிராவிட குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

## தொகுப்பு வீடுகள்

கடந்த நான்காண்டுக் காலங்களில் 1,22,111 ஆதிதிராவிட குடும்பங்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டி வழங்கப்பட்டுள்ளன.

## முப்பெரும் பொருளாதாரத் திட்டங்கள்

மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் ஆணையின் படி, ஆதிதிராவிட மக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்காக முப்பெரும் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் தீட்டப்பட்டு தாட்கோ நிறுவனத்தின் வாயிலாகச் செயல்படத்தப்பட்டு வருகின்றன. அவை, பின்னலாடை, இறால் வளர்ப்பு, பட்டுப்புழு வளர்ப்புத்திட்டம்.

### பின்னலாடை

பின்னலாடைத்திட்டத்துக்கெனகோயம்புத்தூர் மாவட்டம், திருப்பூர் அருகே உள்ள முதலிப் பாளையம் மற்றும் பெரியார் மாவட்டம், பெருந் துறைக்கு அருகில் உள்ள இங்கூர் ஆகிய இடங் கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

முதலிப்பாளையத்தில் எதிர்காலத்தில் 160 அலகுகள் வரை விரிவுபடுத்துவதற்காக முதலில் 100 அலகுகள் முடிவெடுக்கப்பட்டுள்ளது. நிலம் கையகப்படுத்தப்பட்டு சாலைகள் போடப் பட்டுள்ளன. மேலும், மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி, ஆழ்துளைக்கிணறுகள் அமைக்கும் வேலை முடிந்துவிட்டது. 100 அலகுகள் தொழிற் கூடங்கள் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

### இங்கூர்

இங்கூரில் 200 அலகு கொண்ட மிகப்பெரிய தொழிற்பேட்டை அமைக்க சுமார் 105.35 ஏக்கர் நிலத்தை (TACID) நிறுவனத்திடமிருந்து வாங்க திட்டமிடப்பட்டுள்ளது. அங்கே 17.83 கோடி செலவில் 200 தொழிற்கூடங்கள் கொண்ட தொழிற்பேட்டைகள் கட்ட ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

## இறால் பண்ணை வளர்க்கும் திட்டம்

தமிழ்நாட்டிலுள்ள கரையோர மாவட்டங் களில் வாழும் ஆதிதிராவிட மக்களின் மேம்பாட் டிற்காக ஒவ்வொரு ஆதிதிராவிடகுடும்பத்திற்கும் 1.2. ஏக்கர் நிலம் வீதம் 1000 எக்டேர் நிலத்தில் இறால் மீன்பண்ணை அமைக்க முடிவெடுக்கப் பட்டுள்ளது. இத்திட்டத்திற்காகக் காயிதேமில்லத் மாவட்டத்தில் ரூ.8,46,475 மதிப்பில் 51.34 ஏக்கர் தனியார் நிலம் வாங்கப்பட்டுள்ளது. இது தவிர, இந்து அறநிலையத்துறை நிறுவனத்திடமிருந்து 47.20 ஏக்கர் கோயில் நிலம் குத்தகையின் அடிப்படையில் பெறப்பட்டுள்ளது. ரூ.1.66 கோடி செலவில் 80 இறால் பண்ணைகள் அமைக்க ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

## பட்டுப்புழு வளர்க்கும் திட்டம்

இத்திட்டம், சென்னை, நீலகிரி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்கள் நீங்கலாக ஏனைய மாவட்டங்களில் செயல்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை 2000 நபர்கள் பயன் பெற்றுள் ளார்கள். இதற்காக தாட்கோ மூலம் ரூ.111.39 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர் மற்றம் பழங்குடியினர் நல மக்களின் முன்னேற்றத்திற்காக, மிகுந்த அக்கறை கொண்டுள்ள தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் அரசு, ஆண்டுக்கு ஆண்டு அதிக நிதி ஒதுக்கீடுகள் செய்து, பல்வேறு நலத்திட்டங்களை நிறைவேற்றி வருகிறது.

மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவின் சீரிய ஆட்சியில் இத்துறைக்கு 1995 -96-இல் ஒதுக்கப்பட்ட நிதி ரூ.204.53 கோடி.கிட்டத்தட்ட 1990- 91-ஆம் ஆண்டை விட ரூ.139.53 கோடி அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறாக,மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அரசு புகழ்மிக்க ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களின் வாழ்வில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தி, இந்தியத் துணைக் கண்டத்திற்கே ஒரு முன்னோடி மாநிலமாக விளங்கி வருவதை எல்லோரும் போற்றிப் பாராட்டி வரவேற்கிறார்கள்.

## ஆதி திராவிடர் மேம்பாடு கருதி அறிவிக்கப்பட்ட மாண்புமிகு முதல்வர் அவர்களின் 10 அம்சத் திட்டம்

| திட்டம் | 1991-92-முதல் 1994-95 வரை அடையப் பெற்ற இலக்கு | 1995-96-க்கான இலக்கு |
|---|---|---|
| 3.5 இலட்சம் ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு பொருளாதார மேம்பாட்டு உதவி. | 288679 | 40,000 |
| 10,000 ஏழை ஆதிதிராவிடர் குடும்பங்களுக்குப் பாசனக் கிணறுகள் அமைக்க உதவி. | 11803 | இலக்கு எட்டப்பட்டு விட்டது. |
| தனிநபர் தொழில் முனைவோர் திட்டத்தின் கீழ் 5 ஆயிரம் ஆதிதிராவிடர்களுக்குத் தொழில் தொடங்க நிதி உதவி. | 5270 | 500 |
| 5000 ஆதிதிராவிடகளுக்குத் தொழிற் பயிற்சியுடன் வேலைவாய்ப்பு அளித்தல் | வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையினால் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. | 500 |
| 4 இலட்சம் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குதல் | 7.20 இலட்சம் | இலக்கு எட்டப்பட்டு விட்டது. |
| 3 இலட்சம் கான்கிரீட் வீடுகள் கட்டித் தருதல் | 1.16 இலட்சம் | 43,400 |
| அனைத்து ஆதிதிராவிடர் குடியிருப்புக்கும் குடிநீர் வசதி | 6536 | 1500 |
| இணைப்புச் சாலை இல்லாத 1063 ஆதிதிராவிட குடியிருப்புகளுக்கு இணைப்புச் சாலை வசதி | 1073 | |
| அனைத்து ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கும் சாலை விளக்கு வசதி. | தமிழ்நாடு மின்சார வாரியத்தினரால் அனைத்து ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கும் சாலை விளக்கு வசதி ஏற்படுத்தித் தர ஆணை வழங்கப்பட்டுள்ளது. | |
| ஒரு வீட்டுக்கு ஒரு விளக்குத் திட்டத்தின் கீழ் 1.5 இலட்சம் வீடுகளுக்கு மின்வசதி | 1.64 இலட்சம் | 30,000 |

# இந்து அறநிலையத் துறையின் இணையற்ற சாதனைகள்!

### மாண்புமிகு இந்து அறநிலையத் துறை அமைச்சர்

## திரு வெ. நடேசன் பால்ராஜ்

மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியின் நான்காண்டுச்சாதனைகள் அளவிடற்கரியவை.

'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்றோர் பழமொழி உண்டு.

நமது முன்னோர்கள் நமக்கு விட்டுச் சென்ற ஆன்மீக நெறிகளுக்கும் தொன்மை வாய்ந்த கலாச்சாரத்திற்கும் நமது திருக்கோயில்களே சான்றாகும். இந்தத் திருக்கோயில்கள் அனைத்தும் சீரோடும் சிறப்போடும் பராமரிக்கப்பட வேண்டும் என மாண்புமிகு தமிழக முதல்வர் நம் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

தமிழ்நாடு திருக்கோயில்களின் நிர்வாக மேம்பாட்டைக் கருதி, திருக்கோயில் நிர்வாக வாரியம் ஒன்று அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. மேற்படி நிர்வாக வாரியத்தால், மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவியால் ரூபாய் ஒரு இலட்சத்திற்குக் குறைவான வருமானமுள்ள திருக்கோயில்களுக்கு அறங்காவலர்கள் நியமித்தல் மற்றும் இதரப் பணிகளைச்



**கடந்த நான்கு ஆண்டுகளில், 303 கிராமப்புறத் திருக்கோயில்களுக்குத் தலா ரூ. 25,000 வீதம் நிதி வழங்கப்பட்டுள்ளது.**

**ரூ.40 இலட்சம் செலவில் வாங்கப்பட்டுள்ள 'உலாரதம்' தஞ்சை, மதுரை, மாவட்டங்களில் உலா வரும்.**

**40 திருக்கோயில்கள் சார்பில், சிந்தை குளிர்விக்கும் நந்தவனங்கள் அமைக்கப்பட்டுள்ளன.**

**திருக்கோயில் பணியாளர்கள் அனைவருக்கும் மருத்துவப்படி வழங்கப்படும்.**

செம்மையுற நடத்த 19 மாவட்டங்களிலும் மாவட்டக் குழுக்கள் நியமிக்கப்பட்டன. அதன்படி இதுவரை 19,478 திருக்கோயில்களில் 38,642 அறங்காவலர்கள் நியமிக்கப்பட்டு விட்டனர்.

20 ஆண்டுகளுக்கு முன்பாகக் களவு போன புகழ்பெற்ற பத்தூர், அருள்மிகு நடராஜர் திருவுருவச்சிலை தமிழ்நாட்டிற்கு மீட்டுத் திரும்பிக்கொண்டு வரப்பட்டது. மேற்படி திருக்கோயிலை ரூ.7 இலட்சம் செலவில் புதுப்பித்து 3.9.1993-ல் குடமுழக்கு விழா சீரும் சிறப்புமாக நடத்தப்பட்டது. மற்றும் நித்திய பூஜை நடத்த ரூ.3 இலட்சம் வைப்புநிதி ஏற்படுத்தி, அதன் வட்டியைக் கொண்டு நித்திய பூஜைகள்- பராமரிப்புச் செலவுகள் செய்யவும் ஏற்பாடு செய்யப்பட்டது.

திருக்கோயில்களில் உள்ள உலோகத்திருமேனிகள் சரியானபடி பாதுகாக்கப்பட வேண்டும் என மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். எனவே, நாகை காயிதேமில்லத் மாவட்டம்-திருவாரூரில் உள்ள உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையம் ரூ.9 இலட்சம் செலவில்

குளிர் சாதன வசதி செய்யப்பட்டது. மேலும், ரூ.5 இலட்சம் செலவில் 'ஜெனரேட்டர்' ஒன்றும் அங்கே அமைக்க அனுமதிக்கப்பட்டது. ரூ.1.60 இலட்சம் வைப்புநிதி ஏற்படுத்தி, முறைப்படி பூஜையும் செய்யப்பட்டு வருகிறது.

வேத ஆகமங்கள் முறையாகப் பயிற்றுவிக்கப்பட வேண்டும் என்றும் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். தமிழகத்தில் முதன்முறையாக வேத ஆகமங்களைக் கற்றுச் சிறப்புறும் பொருட்டு, வேத ஆகமக்கல்லூரி நிறுவிட அறிவிக்கப்பட்டு, திருச்சிராப்பள்ளி நகர், கம்பரசம்பேட்டையில் 9.48 எக்டேர் நிலம் அறநிலையத்துறைக்கு அளிக்கப்பட்டு உள்ளது. அர்ச்சகர்களுக்குப் புத்தொளிப்பயிற்சித்திட்டம் அறிவிக்கப்பட்டது. உபரி நிதியுள்ள திருக்கோயில்களிலிருந்து, நிதிமாற்றம் செய்து, ரூ.8 இலட்சம் நிதி ஏற்படுத்தி மாநிலத்தில் 10 இடங்களில் அர்ச்சகர்களுக்குப் புத்தொளிப்பயிற்சித் திட்டம் வழங்கும் திட்டம் நடைபெற்று வருகிறது.

இத்திட்டத்தின் முதற்கட்டத்தில் 346 அர்ச்சகர்கள் பயன் பெற்றுள்ளனர். 15.12.1993-ஆம் தேதி முதல் 2-ஆம் கட்டமாக 380 அர்ச்சகர்கள் பயிற்சி பெற்றனர்.

ஒரு காலப் பூசை கூட நடத்திட வசதியற்ற நலிந்த பல திருக் கோயில்களில், ஒரு கால பூசைத் திட்டம் தொடர்ந்து நடைபெற, மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் ஒருகாலப்பூசைத் தொடர் திட்டம் ஏற்படுத்தப்பட்டது.

இத்திட்டத்தின்படி, நலிவுற்ற திருக்கோயில்கள் ஒவ்வொன்றுக்கும் வைப்பு நிதி ரூ.25,000-ஐ அரசே முதலீடு செய்யும். இந்த முதலீட்டிலிருந்து வரும் வட்டியைக் கொண்டு மாதந்தோறும் ஒரு கால பூஜை நடத்தப்பெறும். இத்திட்டத்தின் கீழ் பயன்பெறப் பொதுமக்கள், வைப்புநிதியில் 10-இல் ஒரு பாகமான ரூ.2,500ஐ நன்கொடையாகச் செலுத்தினால், அரசு, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் திருக்கோயில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதி வட்டியிலிருந்து ரூ.22,500 வழங்கும் என அறிவிக்கப்பட்டு, நன்கு விளம்பரம் செய்யப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் மொத்தம் 6,231 திருக்கோயில்கள் பயனடைய வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதுகாறும் 5,055 திருக்கோயில்கள் பயன்பெற்றுள்ளன.

திருக்கோயில்களில் திருப்பணிகள் முறையாக நடைபெற வேண்டுமென மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். அதன்படி, கடந்த நான்கு ஆண்டுகளில் 303 கிராமப்புறத் திருக்கோயில்களுக்குத் தலா ரூ.25,000 வீதம் நிதி வழங்கப்பட்டுள்ளது.

பொது நல நிதியிலிருந்து 149 திருக்கோயில்களுக்கு 65.74 இலட்சமும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் திருக்கோயில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதியிலிருந்து ரூ.163.98 இலட்சமும் என்ற வகையில் 57 திருக்கோயில்களுக்கு நிதி அளிக்கப்பட்டுள்ளது.

சென்னை, மயிலாப்பூரில் உள்ள அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில் திருக்குளத்தில், 1988-ஆம் ஆண்டிலிருந்து போதிய நீர் இன்மையால் தெப்பத் திருவிழா நடத்த இயலாத நிலை இருந்தது. அங்கே தெப்பத் திருவிழாவினை நடத்துவதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின்



ஆணையின்படி திட்டம் தீட்டி ரூ.35 இலட்சம் செலவில் திருக் குளத் திருப்பணி வேலைகள் செய்து, குளத்திற்கும் தண்ணீர் தேக்கி ஐந்து ஆண்டுகளுக் குப்பின் 1994-ஆம் ஆண்டில் முதன்முதல் தெப்பத் திருவிழா நடத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து தெப்பத் திருவிழா ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகிறது.

புகழ்பெற்ற இராமேஸ்வரம், அருள்மிகு இராமநாத சுவாமி திருக்கோயில் அமைந்துள்ள தீவினை அழகுபடுத்தவும், அங்கு வருகை தரும் பக்தர்களுக்கு அனைத்து வசதிகளை ஏற்படுத் தித்தரவும் ஒருங்கிணைந்த திட்டம் ஒன்று செயல்படுத்தப் பட்டு வருகிறது.

திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தில் உள்ள பழநி. அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழநி குன்றின்மீது அமைந்துள்ளது. இத்திருக்கோயிலைச் சுற்றி அமைந்துள்ள மலைப்பகுதி, மலை அடிவாரம் மற்றும் அதன் சுற்றுப்புறங்கள் ஆகியவற்றை அழகுபடுத்தவும், அங்கு வருகை தரும் பக்தர்களுக்குத் தேவை யான வசதிகளை ஏற்படுத்தவும், ஒருங்கிணைந்த திட்டம் ஒன்று செயல்படுத்தப் பட்டு வருகிறது.

இந்த அரசு பொறுப்பேற்றது முதல், 303 திருக்கோயில்களில் குடமுழுக்கு விழாக்கள் நடை பெற்றுள்ளன.

சென்னை, நேஷனல் தியேட் டர் நிறுவனத்தின் சார்பாக நடிகர் திரு ஆர்.எஸ். மனோகர், சைவ மதத்தைச் சார்ந்த 63 நாயன்மார்களில் ஒருவரான திருநாவுக்கரசர் வாழ்க்கையை விளக்கிக்காட்டும் நாடகத் தினைத் தயாரிக்க நிதி வசதி யுள்ள திருக்கோயில்களிலிருந்து ரூ.5 இலட்சம் நிதி வழங்கப் பட்டது.

தஞ்சை மதுரை மாவட்டத் திருக்கோயில்களை இணைத்து "உலா ரதம்" எனப்படும் இரண்டு பேருந்துகள் சுமார் ரூ.40 இலட்சம் செலவில் மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி வாங்கப்பட்டு, சுற்றுலாத்துறை யிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த உலா ரதம் விரைவில் அம் மாவட்டங்களில் பக்தி உலா வரும்.

மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்றபிறகு, 40 திருக் கோயில்கள் சார்பாக சிந்தை குளிர்விக்கும் நந்தவனம் அமைக் கப்பட்டது.

மதுரை, அருள்மிகு மீனாட்சி யம்மன் திருக்கோயில் ஆயிரங்



# தமிழகத்தின் பண்பாட்டு மையங்கள்!



தமிழகத்தின் பண்பாட்டு மையங்களான ஆலயங்களின் புனிதத்தன்மை காக்கப்பட வேண்டும்; மரபுகள் கெடாத வகையில் திருக்கோயில்களின் நிர்வாகங்கள் சரியான முறையில் அமைத்துச் செயல்பட வேண்டும். பல்லாயிரக்கணக்கில், பராமரிப்பு இன்றி, பாதிக்கப்பட்டுள்ள புராதனக் கோயில்கள் சிறப்பான முறையில் பராமரிக்கப்பட வேண்டும். அவற்றின் அன்றாடத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்ற எங்களுடைய எண்ணம், நாங்கள் அமைக்க இருக்கின்ற ஆலய நிர்வாக வாரியத்தின் மூலம் நிறைவேற்றப்படும் என்பதில் நம்பிக்கை கொண்டு உள்ளோம்.

திருக்கோயில் பணியாளர் பணியில் இருக்கும்போது இறக்க நேரிட்டால் இந்து சமய அறநிலைய குடும்ப நலத்திட்டத்தின் கீழ், அவர்களின் குடும்பங்களுக்கு ரூ.10,000 உதவியாக வழங்கும் திட்டம் தற்போது அமலில் இருந்து வருகிறது. இத்திட்டத்தின் கீழ் மாத வருமானம் ரூ.100-க்கு மேல்பெறும் திருக்கோயில் பணியாளர்களிடமிருந்து மாதம் ஒன்றுக்கு ரூ.2 சந்தாவாகப் பெறப் படுகிறது. மாத வருமானம் ரூ.100-க்குக் குறைவாகப் பெறும் திருக்கோயில் பணி யாளர்களிடமிருந்து சந்தாத் தொகை பெறப்படுவதில்லை. ஆனால், அவர் களுக்கும் குடும்ப நலத்திட்டம் விரிவுபடுத் தப்பட்டுள்ளது.

திருக்கோயில்களில் திருட்டுக்களைத் தடுக்க காவலர்கள் நியமிக்கப்படுகின்றனர். முக்கியத் திருக்கோயில்களில் திருடர்கள் எச்சரிக்கை மணியும் (Burglar Alarm) மற்றும் விழிப்புப் பதிவுக் கடிகாரங்களும் பொருத் தப்பட்டுள்ளன.

---

கால் மண்டபம் ரூ.10 இலட்சம் செலவில் புதுப்பிக்க மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆணையின்படி முடிக் கப்பட்டது.

ஆழ்வார்களால் பாடல் பெற்று, அன்று நம்மக்கள் வழிபட்ட திருத்தலங்கள் நம் முடைய காலத்தில் அழியும் நிலைக்கு வந்தன. எனவே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தாமிரபரணி தீரத்தில் உள்ள நவதிருப்பதிகளிலும் ரூ.2.4 கோடி செலவில் திருப்பணி செய்து கும்பாபிஷேகம் செய்ய ஆணையிட்டுள்ளார்கள்.

இதன் முதற்கட்டமாகத் தென் திருப்பேரையில் உள்ள அருள் மிகு மகரநெடுங்குழைக்காதர் திருக்கோயிலில் திருப்பணிகள் முடிக்கப்பட்டு கும்பாபிஷேகம் கண்டது. பிற திருத்தலங்களிலும் திருப்பணிகள் வேகமாக நடை பெறுகின்றன. இங்ஙனம் ஒன்பது திருத்தலங்களும் ஒருங் கிணைந்திருப்பது நாட்டில் வேறெங்கும் இல்லாத சிறப் பாகும்.

திருக்கோயில்களில் அனைத் துப் பணி நிலைகளிலும் கூடுதல் இடங்கள் வழங்க மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட் டுள்ளார்கள்.

இதேபோன்று திருக்கோயில் களில் பணியாற்றும் அனைத்துப் பணியாளர்களுக்கும் மருத்துவப் படி வழங்க மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா அவர் கள் ஆணையிட்டுள்ளார்கள்.

வருங்காலச் சந்ததியினருக்கு இந்த மண்ணின் பண்பாடு, கலை மற்றும் கலாச்சாரம், இதிகாசம், புராணங்கள் ஆகிய வற்றில் பயிற்சி அளிக்கும் பொருட்டு, மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா அவர் களால் "ஆன்மீகக் கல்வித் திட்டம்" ஒன்று அறிவிக்கப்பட்டு, மேற்படி ஆன்மீகக் கல்வித் திட்டம் **14.4.1995**-இல் இம் மாநிலத்தில் **153** திருக்கோயில் களில் தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் பயிற்சி பெற, **2,415** சிறுவர் களும், **1,611** சிறுமியர் களும் அனுமதிக்கப்பட்டுள்ளனர் ✻



# மீன்வளத் துறையின் மேலான சாதனைகள்

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்

## திரு டி. ஜெயக்குமார்

**த**மிழக மக்களின் நெஞ்சங்களில் நிறைந்து, அவர்களது இல்லங்களில் ஒருவராக இருந்துவருபவர் நமது இதய தெய்வம் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி ஆவார். அவர்களின் மாட்சிமை பொருந்திய மக்களாட்சி திக்கெட்டிலும் புகழ் மணம் பரப்பி அளப்பரிய சாதனைகளைக் கடந்த நான்காண்டுகளில் அரசின் அனைத்துத் துறைகளிலும் குவித்து இன்றைக்கு ஐந்தாம் ஆண்டின் தொடக்கமாக அடியெடுத்து வைக்கிறது.

மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் திராவிடர் திருவிளக்காகவே திகழ்ந்துவருகிறார்..

அவரது இராஜ தந்திரத்தால் அரசியல் உலகம் புதிய மாற்றத்தைக் கண்டுள்ளது. இதனை அண்டை மாநிலங்களும் மத்திய அரசும் தெரிந்து கொண்டுள்ளன. அனைத்து உலக நாடுகளும் இதனை உணர்ந்து அவரது ஆற்றலையும் செயல் வேகத்தையும் புகழ்ந்து வருகின்றன.

மீன்வளத் துறையில் மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் முனைப்பான திட்டங்கள் மூலம் அடைந்துள்ள சாதனைகளைக் கோடிட்டுக் காட்டிட நான் கடமைப்பட்டுள்ளேன். அவைகளின் விவரங்கள் பின்வருமாறு:

*1991*-ஆம் ஆண்டில், தஞ்சாவூர், சிதம்பரனார் மற்றும் தென்னார்க்காடு வள்ளலார் மாவட்டங்களிலும் *1992* இல் செங்கை எம்.ஜி.ஆர் மாவட்டத்திலும் *1993*-இல் இராமநாதபுரம் மாவட்டத்திலும் ஐந்து உவர்நீர் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் அமைக்கப்பட்டன.

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக்கழகத்தால் சிதம்பரனார் மாவட்டத்தில் தருவைக்

**சென்னை மீன்பிடி துறைமுகத்தில் ரூ.2 இலட்சம் செலவில் ஒரு வலை பழுதுபார்க்கும் கூடம் அமைக்கப்பட்டுள்ளது.**

**மீனவர்களுக்கு ரூ.1,274 இலட்சம் செலவில் 4,903 வீடுகள் இலவசமாகக் கட்டித்தர அரசு ஒப்புதல் தந்துள்ளது.**

குளத்தில் நீர் வாழ் உயிரின வளர்ப்புத் தொழிற்பேட்டை அமைக்க 7.20 கோடி ரூபாய் அரசால் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

பாக் ஜலசந்தி கடற்பகுதியில் பாதிக்கப் பட்ட மீனவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் நோக்கில் இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒரு உவர் நீர் இறால் தொழிற்பேட்டை ரூ.12.75 கோடி செலவில் அமைக்கத் திட்ட முதலீட்டுக் குழுவால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

64 மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங் களுக்கு 30,000 மூங்கில் கூடைகள் வழங்கப் பட்டுள்ளன. மேலும் 10,000 மீனவ மகளிர் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு அலு மினியப் பாத்திரங்கள் வழங்கப்படவுள்ளன.

மீனை அங்காடிக்கு எடுத்துச்சென்று விற் பனை செய்ய ஏதுவாக 2.5 டன் அளவுடைய சிறிய ஊர்தி ஒன்று சிகப்பதுலாமனை மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கத்திற்கு வழங்கப் பட்டுள்ளது.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சீரிய தலைமையில் செயல்படுத்தப்பட்டுவரும் இன்னும் பல திட்டங்களின் விவரங்களின் வருமாறு:

மீனவர் கூட்டுறவுச் சங்கத்திற்கெனப் பங்கு மூலதன உதவியாக ரூ.30 இலட்சம் 90 மீனவக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப் பட்டுள்ளது.

முகத்துவாரத்தின் அருகில் உள்ள 29 உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் கடல் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களாக மாற்றப்பட்டுள்ளன. இதனால் 6,711 மீன வர்கள் பயன் அடைந்துள்ளனர்.

சென்னை அருகிலுள்ள இராயபுரத்தில் ரூ.5 இலட்சத்தில் ஒரு சமுதாயக்கூடமும் தென்னார்க்காடு வள்ளலார் மாவட்டத்தில் பெரியகுப்பம் மற்றும் தேவனாம்பட்டினத்தில் இரு சமுதாயக் கூடமும் ரூ.12 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

சென்னை மீன்பிடி துறைமுகத்தில் ரூ.2



இலட்சம் செலவில் ஒரு வலை பழுது பார்க்கும் கூடம் அமைக்கப்பட்டுள்ளது.

சென்னை மீன்பிடி துறைமுகத்தில் இரண்டாம் நிலை விரிவாக்கப் பணி ரூ.8.50 கோடி செலவில் அமைக்கப்படும்.

தூத்துக்குடி மீன்பிடி துறைமுகத்திலும், கோட்டைப்பட்டினம் பூம்புகார், வெள்ளப் பள்ளம், கோடிமுனை மற்றும் வள்ளவிளை கிராமங்களிலும் உள்ளமைப்பு வசதிகள் அமைக்க ரூ.71.01 இலட்சம் செலவினத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள கோட்டைப்பட்டினத்தில் ஓர் 'டி'ஜெட்டி ரூ.54 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப் பட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் சின்ன முட்டம் மீன்பிடி துறைமுகத்தில் முக்கியப் பணிகள் முடிக்கப்பட்டன. தற்போது சுமார் 150 படகுகள் இத் துறைமுகத்தைப் பயன் படுத்தி வருகின்றன.

உள்நாட்டு மீன் விற்பனைத் திட்டத்திற்கு அரசு ரூ.48.24 இலட்சம் ஒப்புதல் அளித் துள்ளது.

மீனவர் பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெறும் மீனவ மாணவர்களுக்கு அளிக்கப் படும் மாத உதவித்தொகையும், கடல் பயணப் படியும் முறையே ரூ.100 லிருந்து ரூ.150 ஆகவும் ரூ.0.75 பைசாவிலிருந்து ரூ.1.25 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் மீனவர்களுக்கு வழங்கப்பட்ட கடன் மற்றும் அரசு மூலம் வழங்கப்பட்ட மீன்பிடி படகு களுக்குரிய நிலுவைத்தொகை ஆக மொத்தம் ரூ.735.42 இலட்சம் ரூபாயை அரசு தள்ளுபடி செய்துள்ளது.

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக்கழகம் வங்கிகள் மூலமாக மீன்பிடி படகுகள் வாங்க மீனவர்களுக்குக் கடனாக வழங்கப்பட்ட ரூ.492.88 இலட்சம் ரூபாயை அரசு தள்ளுபடி செய்துள்ளது.

இலங்கைக் கடற்படையின் தாக்குதலுக் குட்பட்டு அல்லலுற்ற, ஆனால் விபத்துக் காப் புறுதித் திட்டத்தின் கீழ் வராத மீனவர்களுக்கு

**எதையும்விட உயர்ந்தது...**

**கருத்து, எதையும் விட உயர்ந் தது. உள்ளத்தின் ஆழத்தில் உணர்ந்து எழும் கருத்துக்கள், உண்மையும் ஆழ்ந்த உணர்வும் கூடிப் பிறந்த கருத்துக்கள், உல கத்தின் போக்கையே மாற்றி யமைக்கக் கூடியவை.**

_ டாக்டர் மு.வ.

மாண்புமிகு முதலமைச்சரின் நிவாரண நிதியிலிருந்து 1991 சனவரி முதல் 1995 சனவரி முடிய ரூ.40,37,500 வழங்கப்பட்டுள்ளது.

மகளிர்குல திலகமாம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழிகாட்டுதலோடு நிறைவேற்றப்பட்டுள்ள மேலும் பல மீன்வளத் துறைச் சாதனைகள் வருமாறு:

தமிழ்நாடு மற்றும் ஆந்திர மீனவர் களிடையே தாக்குதல்கள் தொடர்ந்து நடை பெறுவதைத் தவிர்க்கும் பொருட்டு, தமிழ கத்திலும் ஆந்திரப்பிரதேசத்திலும் இரண்ட டுக்குக் குழுக்கள் மாவட்ட அளவிலும் மாநில அளவிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதனால் தற்போது மீனவர்களிடையே தாக்குதல்கள் குறைந்துள்ளதைக் காணலாம்.

ஆழ்கடல் மீன்பிடிப்பினை ஊக்குவிக்கும் பொருட்டு அரசு 15 நடுத்தர வகைப் படகுகள் வாங்க, மானியமாக ரூ.30 இலட்சத்திற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.

100 பிளைவுட்டினாலான கரையேறும் படகுகளுக்கு மானியமாக ரூ.22 இலட்சத்திற்கு ஒப்புதல் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பாரம்பரிய மீனவர்களுக்கு 100 கண்ணாடியிழைக் கட்டுமரங்கள் வாங்கிடப் படகின் மொத்த விலையில் 50 சதவிகிதம் மானியத் தொகையாக ரூ.25 இலட்சம் வழங்கிட அரசு உத்தேசித்துள்ளது.

ரூ.4.50 கோடி செலவில் 5 ரோந்துப் படகுகள் வாங்குவதற்கு ஒப்புதல் அளித்திட அரசு இசைந்துள்ளது.

பாரம்பரிய மீனவர்கள் தங்கள் நாட்டுப் படகுகளில் 3,893 உட்பொருத்தும்-வெளிப் பொருத்தும் இயந்திரங்கள் வாங்க மானிய மாக ரூ.389.38 இலட்சம் அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இந்த நிதியாண்டின் இறுதிக் குள் 5000 உட்பொருத்தும்-வெளிப் பொருத் தும் இயந்திரங்கள் வழங்கப்படும். 1000 மீனவர்களுக்கு ரூ.60 இலட்சம் செலவில் மீன்பிடி சாதனங்கள் 50 சதவிகித மானிய விலையில் வழங்கப்படும்.

தமிழ்நாடு பிற்பட்டோர் சமூக மேம் பாட்டுக் கழகத்தின் மூலம் மீன் விற்பனைக் குத் தேவையான மூலதனத்தை 18,898 மகளிர் உறுப்பினர்களுக்குத் தலா ரூ.1,000 வீதம் ரூபாய் 56.65 இலட்சம் கடனாக வழங்கப் பட்டது.

செங்கை எம்.ஜி.ஆர் மாவட்டத்திலுள்ள திருச்சினாங்குப்பத்தில் 492 தொகுப்பு வீடுகள் ரூ.2.37 கோடி செலவில் கட்டி முடிக் கப்பட்டு, பயனாளர்களிடம் ஒப்புவிக்கப் பட்டுள்ளன.

மீனவர்களுக்கு ரூ.1,274·78 இலட்சம் செலவில் 4,903 வீடுகள் இலவசமாகக் கட்டித்தர அரசு ஒப்புதல் தந்துள்ளது. ஒரு வீடு கட்டித் தருவதற்கான செலவினத்தை வீடு ஒன்றுக்கு ரூ.17,000 லிருந்து ரூ.26,000 ஆக அரசு உயர்த்தியுள்ளது.

டாக்டர் புரட்சித்தலைவி ஜெ.ஜெயலலிதா மாதிரி மீனவர் கிராம அமைப்புத் திட்டத்தின் கீழ் 1,050 வீடுகளும் 95 ஆழ்கிணறு குழாய்கள் 20 சமுதாயக் கூடங்களும் அமைக்க அரசு ஒப்புதல் தந்துள்ளது.

கடலில் மீன் பிடிக்கச் செல்லும் ஒவ்வொரு மீனவரின் உயிருக்கும் பாதுகாப்பு அளிக்க ரூபாய் ஒரு இலட்சம் காப்பீட்டுத் தொகையாக வழங்கப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இராமேஸ்வரம் மற்றும் சென்னை ஆகிய இடங்களில் தொடர்பு முனை Nodal Points மையங்களை ரூ.2.26 இலட்சத்தில் அமைக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

நாகப்பட்டினம் மற்றும் தூத்துக்குடியில் இரு கரையோர நிலையங்கள் மிக உயர்ந்த அலை வரிசை ரேடியோ தொலைபேசி ரூ.31.75 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது. இரு நிலையங்களுக்கும் வாக்கி டாக்கி சாதனங்கள் வழங்கப்பட்டுள்ளன. அதே போன்று சென்னையிலும் ஒரு நிலையம் அமைத்திட மைய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

கடல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தில் 1991-ஆம் ஆண்டு முடிய ஒவ்வொரு மீனவரிடமும் மாதம் ரூ.10 வீதம் 9 மாதங்கள் வசூலிக்கப்பட்டு அதற்கு இணையாக மாநில அரசின் பங்குத்தொகை ரூ.90-ம் சேர்த்து மொத்தம் ரூ.180 ஐ மாதம் ரூ.60 வீதம் 3 மாதங்களுக்குத் திருப்பித் தரப்பட்டது. இதுவரை 76,610 மீனவர்கள் இத்திட்டத்தில் சேர்ந்து பயனடைந்துள்ளனர். இதுவரையில் மாநிலம் முழுவதும் அரசின் பங்காக ரூ.23.89 கோடி வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு ரூ.11.88 கோடி வழங்கப்படும். 1992 முதல் மாதம் மீனவர் ஒருவருக்கு ரூ.45 , வீதம் மீனவரிடமிருந்து 8 மாதங்கள் வசூலிக்கப்பட்டு இதற்கு ஈடாக மத்திய மற்றும் மாநில அரசுகளால் ஈடான தொகை வழங்கப்படுகிறது. மொத்தம் ரூ.1,080-ஐ மீன்பிடி இல்லாத 4 மாதங்களில் ரூ.270 வீதம் ஒரு மீனவருக்கு வழங்கப்படுகிறது. இதுவரை இத்திட்டத்தில் 1,35,284 மீனவர்கள் பயனடைந்துள்ளனர்.

மீனவர் விபத்துக் காப்புறுதித் திட்டத்தில் கடலுக்குச் செல்லும் மீனவர் விபத்தினால் மரணம் அல்லது நிரந்தர ஊனம் ஏற்பட்டால் முதலில் ரூ.21,000 காப்புறுதித் தொகையாக வழங்கப்பட்டது. அதன்பின் இத்தொகை ரூ.25,000 ஆக உயர்த்தப்பட்டது. மேலும் இதனை ரூ.50,000 ஆக உயர்த்த தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் 2,48,404 கடல் மற்றும் உள்நாட்டு மீனவர்கள் பயனடைந்துள்ளனர். இதுவரை 1,353 மீனவக் குடும்பங்களுக்கு ரூ.2.05 கோடி காப்பீட்டுத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

20 மீட்டர் நீளத்திற்கும் குறைவாக உள்ள மீன்பிடி விசைப்படகுகள் பயன்படுத்தும் டீசல் எரி எண்ணெய் மீதான மத்திய ஆயத் தீர்வையைத் திரும்பப் பெற்று ஈடு செய்து கொள்ள ரூ.52 இலட்சம் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதில் 1,683 படகுதாரர்கள் பயனடைந்துள்ளனர். 71,96,791 லிட்டர் டீசல் விநியோகிக்கப்பட்டுள்ளது.

1994-95-ஆம் ஆண்டு தென்னர்க்காடு வள்ளலார் மாவட்டத்திலுள்ள தாண்டவராய சோழகன்பேட்டை மற்றும் கிள்ளை மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நியாய விலைக்கடைகள் திறக்கப்பட்டுள்ளன.

பள்ளி இறுதித் தேர்விலும் 10 ஆம் வகுப்பு ப்ளஸ் 2 தேர்விலும் 12 ஆம் வகுப்பு கூடுதல் மதிப்பெண்களைப் பெறுகின்ற மீனவ சமுதாயத்தைச் சார்ந்த மாணவர் மாணவியருக்குத் தலா ரூ.500 வீதம் 1985-86-ஆம் ஆண்டிலிருந்து வழங்கப்பட்டு வந்தது. தற்போதைய அரசு அத்திட்டத்தை மறு பரிசீலனை செய்து மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி ஜெ. ஜெயலலிதா மீனவ மாணவ மாணவிகளின் கல்வி சிறப்புப் பரிசுத் திட்டத்தின் கீழ், பள்ளி இறுதித் தேர்வில் 10 ஆம் வகுப்பு கூடுதல் மதிப்பெண்கள் பெற்று வெற்றி பெறும் மாணவர் மாணவிகளுக்குத் தலா ரூ.3000 வீதமும், ப்ளஸ் 2, (12) ஆம் வகுப்புத் தேர்வில்

வெற்றி பெறும் மாணவர் மாணவிகளுக்குத் தலா ரூ.5,000 வீதமும் ஆண்டுதோறும் பரிசு வழங்கப்படுகிறது.

எங்கள் முதல்வர் புரட்சித்தலைவி அவர்களின் இணையற்ற திட்டங்களின் பட்டியல் இன்னும் தொடர்கிறது.

16 கோடி செலவில் உருவாக்கப்பட்ட ஒருங்கிணைந்த கடல் மீன்வள அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இதுவரை செங்கை எம்.ஜி.ஆர்., நாகை காயிதேமில்லத், இராமநாதபுரம், சிதம்பரனார் மற்றும் கன்னியா குமரி மாவட்டங்களைச் சார்ந்த 32 கூட்டுறவுச் சங்கங்களைச் சேர்ந்த மீன்பிடி உபகரணங்கள் இல்லாத 1,903 மீன்பிடி தொழிலாளர்களுக்கு 446 கட்டுமரம், 168 வள்ளம், 614 இயந்திரங்கள் மற்றும் மீன்பிடி வலைகள் வாங்க 25 சதவிகித மானியத்துடன் 403 இலட்சம் ரூபாய் இதுவரை கடனாக வழங்கப்பட்டுள்ளது.

இலங்கைக் கடற்படையின் தாக்குதல் களுக்கு உட்பட்டு இதனால் அந்நாட்டில் பிணைவைக்கப்பட்ட இராமேஸ்வரம், நாகப்பட்டினம் மீனவர்களை இயந்திரப் பழுதின் காரணமாக அந்நாட்டுக் கடற் கரையில் ஒதுங்கிய மீன்பிடி விசைப் படகுகளையும், இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவரின் மூலம் படகுகளையும் மீனவர் களையும் தொடர் நடவடிக்கை எடுத்து தாயகம் திரும்ப ஏற்பாடு செய்யப்பட் டுள்ளது.

மீன் உற்பத்தியில் தனியார் பங்கேற்பதை ஊக்குவிக்கும் முகத்தான் பட்டா நிலங்களில் புதிய மீன் பண்ணைகளைக் கட்டுவதற்காக ஒரு எக்டேருக்கு ரூ.20,000 மானியமாக அரசு வழங்குகிறது. மீன் வளர்ப்போருக்கு ரூ.10.34 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

கடலோர மாவட்ட மீனவர் கிராமங்களில் மீனவர்கள் கோரிக்கையின் அடிப்படையில் மீன்துறை அலுவலர்கள் சம்பந்தப்பட்ட பிற துறை அலுவலர்களை அணுகி, தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் செய்து தரப்படுகின்றன.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் 160 கடலோர மீனவ கிராமங்களில் 6.60 கோடி ரூபாய் செலவில் குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் இராமநாதபுரம் காரங்காட்டில் இறால் வளர்ப்புக்குப் பயிற்சியளிக்கப்படுகிறது.

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் மீனவர்கள் மற்றும் மீன்பிடி விசைப்படகுகளை இயக்குவோர் நலன் கருதி, மீன்பிடி வளாகம் மற்றும் இறங்கு தளங்களில் 15 டீசல் சில்லரை விற்பனை நிலையங்கள் இயங்கிவருகின்றன.

மீனவ சமுதாயத்துக்குத் தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித்தர ஆறு மாவட்டங்களில் மாவட்டக் கருத்தரங்குகள் நடத்தி மீனவர்களுக்குப் பேருதவியாக வழி வகை செய்யப்பட்டது.

கடலோர ஒருங்கிணைந்த பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், கடலோர பகுதி சார்ந்த தொழில்கள், போக்குவரத்து, விபத்துக்கள் தடுப்பு, சுற்றுலா மீனவர் கிராமங்களில் அடிப்படை வசதிகள் போன்றவை ரூ.100 கோடி செலவில் பத்தாண்டுகளில் செயல் படுத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வரு கிறது.

மீனவர்களுக்குப் பாதுகாப்பாகத் தொழில் செய்வதற்கு 1,69,944 மீனவர்களுக்கு அடை யாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்தியத் திருநாட்டிலேயே முதன் முதலாகக் கடல்நீர் வாழ் உயிரின முறைப் படுத்தும் சட்டம் 1995-ஐ இயற்றி, விவசாயிகள், விளை நிலங்கள், சுற்றுப் புறம், நிலத்தடிநீர், மீனவர் நலன் ஆகியவைகளைப் பாதுகாத்திட முன்னோடியாகத் திகழ்கிறது.

டேனிடா உதவியுடன் கடலோர மாவட் டங்களில் மீனவர்கள் கல்வியறிவு பெற ரூ.55.50 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

இச்சாதனைகள் யாவும் இந்த நான் காண்டுக் காலங்களில் எய்தியவைகள் ஆகும் *



# சுற்றுலாத்துறையின் சிறப்பான சேவைகள்– அன்னையின் ஆட்சியில் சிறுபான்மை மக்களின் நலம்

மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர்
**திரு எஸ். நாகூர் மீரான்**

**மா**ண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் புகழ்மிக்க அரசு, தமிழ்நாட்டில் உள்ள எல்லா மாவட்டங்களிலும், மாவட்டத்திற்கு இரண்டு அல்லது மூன்று உலாத் தலங்கள் தேர்ந்தெடுத்து, அங்கு பொது மக்களிடையே சுற்றுலா பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்தவும், பயண ஆர்வத்தைப் பெருக்கவும், அந்தப் பகுதியில் குடிநீர், கழிவறை, உடைகள் மாற்றும் அறைகள், பேருந்து நிறுத்துவதற்கு வசதியை ஏற்படுத்துதல், தேனீர் விடுதி ஆகிய அடிப்படை வசதிகள் செய்யச் சுற்றுலாத் துறை நடவடிக்கை எடுத்து வருகிறது.

இதுவரை 43 மையங்கள் மாவட்ட உலாத் தலங்களாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளன. 1994-95-ஆம் ஆண்டு வரை இதற்கு ரூ.67.50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. 1994-95-ஆம் ஆண்டு 6 புதிய திட்டங்களுக்கு ஒரு கோடியே 37 இலட்சம் ரூபாய் வழங்கியுள்ளது. விழுப்புரம், திருவண்ணாமலை, தரங்கம்பாடி, தஞ்சாவூர், புதுக்கோட்டை ஆகிய ஊர்களில் சுற்றுலா விடுதி மற்றும் வரவேற்பு மையம் கட்டவும், மற்றும் விளம்பரம் செய்வதற்கும் இடம் ஒதுக்கியுள்ளது. மேலும் ஏற்கெனவே, ஒதுக்கப்பட்ட திட்டங்களான 1. குற்றாலம், 2. திருநெல்வேலி, 3. கிருஷ்ணகிரி, 4. நாமக்கல், 5. சமயபுரம், 6. பெரம்பலூர், 7. விருதுநகர் ஆகிய திட்டங்களுக்கு மகளிர் குலத் திலகமாம் தமிழக முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், மாநில அரசின் பங்குத் தொகையாக ரூ.42.40 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளார்கள்.

### வெளிநாட்டு- உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் திட்டம்

உள்நாட்டு, வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 1993-ஆம் ஆண்டைக் காட்டிலும் 1994-இல் 12.80ஆம், 14.4 சதவிகிதமும் முறையாக அதிகரித்துள்ளது. இவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய நமது அன்னை மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் உத்தரவின் பேரில் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

தமிழ்நாடு அரசு 1994-95-ஆம் ஆண்டு சிறப்புச் சுற்றுலாப் பகுதிகளில் குடிநீர் வசதி, கழிப்பிட வசதி, மற்றும் தெரு விளக்குகள் பொருத்துவதற்கு

**இதுவரை 43 மையங்கள் மாவட்ட உலாத் தலங்களாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளன. 1994-95-ஆம் ஆண்டு வரை இதற்கு ரூ.67.50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.**

**1994-95-ஆம் ஆண்டு சிறப்புச் சுற்றுலாப் பகுதிகளில் குடிநீர் வசதி, கழிப்பிட வசதி மற்றும் தெருவிளக்குகள் பொருத்துவதற்கு ரூ.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

ரூ.50 இலட்சம் ஒதுக்கீடு செய் துள்ளது.

1. காஞ்சிபுரம் ரூ.15.00 இலட்சம்.

2. மாமல்லபுரம் ரூ.25.00 இலட்சம்.

3. தரங்கம்பாடி ரூ.4.00 இலட்சம்.

4. பூம்புகார் ரூ.6.00 இலட்சம்.



நமது நாட்டில் உள்ள இயற்கை அளித்த நன்கொடைகள் ஆன மலைவாழ் இடங்கள், நீண்ட கடற்கரை, நீர்வீழ்ச்சிகள், சரணாலயங்கள், ஆலயங்கள், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தும் விடுதிகள் கட்டி, விளம்பரப்படுத்துவதற்கு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தலைமையில் ஐந்தாம் ஆண்டிலே அடி யெடுத்து வைக்கும் அருமை பெருமைமிக்க தமிழக அரசால் ரூ.65 இலட்சம் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

தர்மபுரி மாவட்டம், ஒகேனக் கலில் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக, செய்யப்படவுள்ள மேம்பாட்டுப் பணிக்காக பகுதி இரண்டு திட்டத்தின் கீழ் ரூ.10.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. இணையற்ற எங்கள் தலைவி மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டத்தில் உள்ள வீடூர் அணைப்பகுதி சுற்றுலா வளர்ச் சிக்காக அடிப்படை வசதி செய்ய, பகுதி 2 திட்டத்தின் கீழ் ரூ.7.00 இலட்சம் வழங்கியுள் ளார்கள்.

உள்ளூர் மக்களின் பொழுது போக்கு வசதிக்காக மேட்டூர், சாத்தனூர் மற்றும் வைகை அணைப்பகுதியைச் சீர் செய்து சிறந்த சுற்றுலாப் பகுதியாக மாற்ற வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர் களின் உத்தரவுப்படி ரூபாய் ஒரு கோடியே 50 இலட்சம் மதிப்பீட் டில் திட்டம் தயாரிக்கப்பட்டு, ரூ.52 இலட்சத்து 50 ஆயிரம் அனுமதிக்கப்பட்டது. இதில் முதல் பகுதியாக, வைகை அணைப்பகுதி மற்றும் மேட்டூர் அணைப்பகுதியில் மேம்பாட்டுப் பணி நடைபெற்றுள்ளது. மீத முள்ள பணிகளுக்கு இந்த ஆண்டு நிதி ஒதுக்கீடு செய்து முடிக்கப்படும்.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர் களின் சீரிய ஆட்சியில் 3 புதிய சுற்றுலா அலுவலகங்கள் ஏற் படுத்த ஆணையிட்டார்கள். அவை கொடைக்கானல், திரு நெல்வேலி, தர்மபுரி ஆகிய 3 இடங்கள் ஆகும்.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையின்படி, தனிச் சுற்றுலா இயக்குநரகம் சைதாப் பேட்டை, பனகல் மாளிகையில் 1.4.95 முதல் இயங்கிவருகிறது.

**தீவுத்திடலில் பொருட்காட்சி**

தீவுத்திடலில் ஆண்டுதோறும் நடைபெற்றுவரும் சுற்றுலாப் பொருட்காட்சி இந்த ஆண்டும் 101 நாட்கள் நடத்தப்பட்டது. இதன் மூலம் கழகத்திற்கு ஒரு கோடியே 25 இலட்சம் ரூபாய் வசூலாகியுள்ளது.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தி வரும் விடுதிகளின் மேம்பாட்டுப் பணிக்காக ஒரு கோடி ரூபாய் ஒதுக்கிக் கொடுத் துள்ளார்கள்.

**விடுதிகளை நவீன மயமாக்குதல்**

கோயம்புத்தூர், உதக

மண்டலம், மாமல்லபுரம், கொடைக்கானல், மதுரை 2, தஞ்சாவூர், திருச்சி, சிதம்பரம் ஆகிய இடங்களில் உள்ள பெரிய விடுதிகளில் டிஷ் ஆண்டனா நிறுவப்பட்டுள்ளது. மீதமுள்ள பெரிய ஓட்டல்களிலும் டிஷ் ஆண்டனாவை நிறுவத் திட்ட மிடப்பட்டுள்ளது. பெரிய விடுதி களில் தொலைதூர நகல் பெருக்கி (பேக்ஸ்) சாதனங்கள் நிறுவப்பட்டு வருகின்றன. பெரிய உணவு விடுதி தங்கும் விடுதிகளில் சீர்வளி (ஏ.சி.) வசதி செய்யப்படாத அறைகள் சீர் வளி செய்யப்பட்ட அறைகளாக மாற்றப்பட்டு வருகின்றன.

உதகைக்கு நாள்தோறும் வருகை தரும் பயணிகளின் தேவையைக் கருதி, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அறிவுரைக் கிணங்க அப்பகுதியை அழகு படுத்தி சிற்றுண்டிச் சாலை வசதி செய்யப்பட்டுள்ளது.

உதகை ஏரியில் ஆண்டு தோறும் படகுச் சவாரி செய்யப் பயணிகள் வந்த வண்ணமுள் ளனர். குறிப்பாகக் கோடைக் காலத்தில், சுற்றுலாப் பயணி களின் வருகை அதிகமாவதால், உதகை ஏரியில் படகு சவாரி செய்வதற்கு நெடுநேரம் காத் திருக்க வேண்டியுள்ளது. இவ் வாறு பயணிகளுக்கு ஏற்படும் கால விரயத்தைத் தடுக்கவும், ஒரே இடத்தில் அதிகமான சுற்றுலாப் பயணிகளின் கூட்டத் தைத் தவிர்க்கவும், அதே நேரத் தில் மற்ற புதிய சுற்றுலாப் பகுதி களை உருவாக்கும் நோக்கத் துடன், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்




தலைவி அவர்களின் ஆணைக் கிணங்கவும், பைகாரா ஏரியில் படகு விடும் திட்டம் தீட்டப் பட்டு, படகு விடப்பட்டுள்ளது. பெரிய ஓட்டல்களுக்காக 130 தொலைக்காட்சிப் பெட்டிகள் வாங்கப்பட்டு உள்ளன.

**சுற்றுலாத் துறையின் சாதனை:**

தமிழ்நாட்டிலுள்ள தனியார் துறை ஓட்டல்களில் 1991 வரை மொத்தம் 61,000 படுக்கை வசதிகள் இருந்தன. மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அவர் களின் புதிய சுற்றுலாக் கொள் கையின் பயனாகப் படுக்கை எண்ணிக்கை தற்போது 81,088 ஆக உயர்ந்துள்ளது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஓட்டல்களில் 1991-இல் மொத்தம் இருந்த படுக்கைகள் 2,213. சீர்வளி வசதி செய்யப்பட்ட அறைகள் எண்ணிக்கை 90. தற்போது மொத்தப் படுக்கைகள் 2,326. சீர்வளி வசதி செய்யப் பட்ட அறைகளின் எண்ணிக்கை 210. தமிழகத்திற்கு வரும் அயல் நாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்துக்கொண்டே வரு கிறது.

தனியார் துறையிலும், அரசு நிறுவனமான தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திலும், மேலே காண்கின்றவாறு ஏற் பட்டுள்ள சாதனை, மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவியின் ஆட்சியில்தான் என்பதை இங்கே மிகப் பெருமை யுடன் தெரிவித்துக் கொள் கிறேன்.

**சிறுபான்மை மக்களின் நம்பிக்கை நட்சத்திரம்**

மாண்புமிகு தமிழக முதல்வர் நமது அன்னை டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதில் இருந்து, வக்பு நிறுவனத்திற்கு வாரி வழங்கும் வள்ளலாகத் திகழ்ந்து வருகிறார்கள். மசூதிகளைப் புதுப்பிக்கும் பணிக்காக ரூ.15,000 வீதம் மானிய உதவியை ரூ.25,000 ஆக உயர்த்தி வழங்கி ஆண்டுக் காண்டு ரூ.3.00 இலட்சம் என்று இருந்ததை ரூ.5.00 இலட்சமாக உயர்த்தி வழங்கி வருகிறார்கள்.

தமிழ்நாடு வக்பு நிர்வாகத் தின் பளுவை நீக்கும் நோக்கத் தோடு தாய் உள்ளத்தின் தலைவி கடந்த ஆண்டு ஒரு கோடி ரூபாய் வழங்கி, மேலும் ஆண்டுக் காண்டு வக்பு வாரிய நிர்வாகச் செலவிற்காக ரூ.30 இலட்சம் கொடுத்து வக்பு வாரிய ஊழியர் களின் வறுமையை விரட்டிய வள்ளலாக நம்பிக்கை நட்சத்திர மாகத் திகழ்கிறார்கள்.

தமிழகத்தில் உள்ள மௌல்விகள், பேஷ் இமாம்கள், அரபு மொழி ஆசிரியர்கள், மோதினார்கள் ஆகிய இஸ் லாமியப் பெருமக்களுக்கு ஓய் வூதியம் ரூ.250 என்பதை ரூ.400

# உங்களுக்காக உழைத்துக் கொண்டே இருப்பேன்!



தமிழகத்தின் ஒவ்வொரு வீட்டிலும், விளக்கேற்றி வைப்பதே என் குறிக்கோள் என்று சூளுரை எடுத்துத்தான், முதலமைச்சர் நாற்காலியில் நான் அமர்ந்தேன். அந்த என் இலட்சியம் நிறைவேறும் நாள் வரை, ஓயாது ஒழியாது உங்களுக்காக உழைத்துக்கொண்டே இருப்பேன்.

இந்த என் இலட்சியப் பயணத்திற்கு எதிராக, எத்தனை எத்தனை இடையூறுகள் வந்தாலும், புற்றீசல் போல, புல்லுருவிகளால், இன்னல்கள் தோற்றுவிக்கப்பட்டாலும், மக்கள் சக்தியின் துணை கொண்டு, அவற்றை வீழ்த்திக் காட்டுவதோடு, விரட்டி அடிக்கவும் முடியும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

தமிழகம் இன்றைக்கு ஆக்கபூர்வமான திட்டங்களை, ஆய்ந்து தீட்டி, அருஞ் செயல்கள் புரிந்து, மற்ற மாநிலங் களுக்கு முன்னோடியாக, முன்னேற்றப் பாதையில் வெற்றி நடைபோடுகிறது என்றால், அது மிகையாகாது.

(புரட்சித்தலைவியின் முழக்கம் தொகுதி-1 லிருந்து.)

ஆக உயர்த்தி வயோதிக நிலையில் வறுமையில் வாடிய பெருமக்களின் நலன்காத்த தாய் உள்ளத்தின் தனிப் பெருந் தலைவியாக உயர்ந்து நிற்கிறார்கள்.

மேலும் 1994-95-ஆம் ஆண்டு வரை 1,600 உலமாப் பெருமக்கள் பயன்பெற்று வருகிறார்கள். மேலும் இந்த 1995-96-ஆம் ஆண்டு 100 பேர்களுக்குக் கூடுதலாக வழங்க டாக்டர் புரட்சித் தலைவி உத்தரவு இட்டுள்ளார்கள்.

தமிழ்நாடு வக்பு வாரியத் தலைமை அலுவலகம் தற்போது வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இந்த நிலையை மாற்ற, சொந்தமாகத் தலைமை அலுவலகம் கட்ட மானியமாக ரூ.5 இலட்சம் வழங்கி உள்ளார்கள்.

ஹஜ் புனிதப் பயணம் மேற்கொள்வதற்கு உதவியாகச் செயல்படும் மாநில ஹஜ் கமிட்டியின் நிர்வாகச் செலவிற்காக இந்த ஆண்டு ரூ.2 இலட்சம் வழங்கியுள்ளார்கள்.

ஹஜ் பயணிகள் மக்கா, மதினாவில் தங்குவதற்காகக் கட்டடங்கள் தேர்வு செய்வதற்காக அனுப்பப்படும் குழுவில், தமிழகத்திலிருந்து ஒரு பிரதிநிதி செல்ல மேலான மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது.

ஹஜ் புனிதப் பயணம் மேற்கொள்பவர்களுக்கு உதவியாக ஒவ்வொரு ஆண்டும் ஹஜ் பயணிகளுடன் இரண்டு வாலண்டியர்களை மக்கா செல்ல ஒரு இலட்சம் ரூபாய் வழங்கி அனுமதி தந்துள்ளார்கள். *



# கதர் கிராமத் தொழில்துறையின் கவின்மிகு வளர்ச்சி

## மாண்புமிகு கதர் கிராமத் தொழில்துறை அமைச்சர்

## திரு பி. ஈசுவரமூர்த்தி



**மா**ண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சிக் காலத்தில் தமிழகத்தில் மிகப் பெரும் சாதனைகளை ஒவ்வொரு துறையும் படைத்துள்ளது. அவற்றிற்கு நிகராகத் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், கதர் மற்றும் கிராமத் தொழில் பொருட்களை உற்பத்தி செய்து, விற்பனை புரிந்து அதன் மூலம் கிராமப்புற ஏழை எளிய மக்களுக்கு அதிக அளவில் வேலைவாய்ப்பு அளித்திருக்கிறது. கடந்த நான்கு ஆண்டுகளில், சரித்திரம் படைக்கும் பல பயன்மிகு சாதனைகளை நிகழ்த்தியுள்ளது.

கிராமப்புற மக்கள் அவர்கள் வசிக்கும் பகுதிகளிலேயே கிடைக்கும் மூலப் பொருள்களையும், இதர வசதிகளையும் முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டு, சுயமாகத் தொழில் செய்து அவர்களது திறமைகளுக்கேற்ப கதர் மற்றும் கிராமத் தொழில் பொருட்களை உற்பத்தி செய்து, பொருள் ஈட்டிட, தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் நிதியுதவி, தொழில்நுட்ப உதவி ஆகிய அனைத்து உதவிகளையும் முழு அளவில் செய்து வருகிறது. இதன்மூலம், கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரம் குறிப்பிடத்தக்க அளவிற்கு மேம்பாடு அடைந்திடவும், அவர்கள் வேலைதேடி நகர்ப்புறங்களுக்கு வருவதைத் தவிர்த்திடவும் வாரியம் பெரும் பங்காற்றிவருகிறது.

**90,000 கைவினைஞர்களுக்குச் சுய தொழில் செய்திட நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. இதுவரை 14,67,000 கிராமப்புற ஏழை மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. இதில் 5,37,000 பேர் மகளிரும், 3,09,000 பேர் ஆதிதிராவிட மக்களும் 16,360 பேர் மலைவாழ் மக்களும் ஆவர்.**

கதர் கிராமத் தொழில்களைப் போற்றி வளர்த்து, அதன்மூலம் மக்கள் தற்சார்பு நிலையை அடையவும், வாழ்க்கையில் நல்ல வளத்தையும், மேம்பாட்டையும் ஏற்படுத்திக் கொள்ளவும் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் பல்வேறு வகைகளில் தொடர்ந்து உதவி செய்துவருகிறது.

பம்பாய் கதர் கிராமத் தொழில் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட 96 கிராமத் தொழில்களில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் 59 கிராமத் தொழில்களையும் அத்துடன் கதர்த் தொழிலையும் கீழ்க் காணும் மூன்று வகைகளில் தமிழ்நாட்டில் சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறது:

| ஆண்டு | உற்பத்தி | | மொத்தம் | விற்பனை | | மொத்தம் | வேலை வாய்ப்பு பெற்றுள் ளோர் இலட்சத்தில் |
|---|---|---|---|---|---|---|---|
| | கதர் | கிராமத் தொழில் பொருட்கள் | | கதர் | கிராமத் தொழில் பொருட்கள் | | |
| | | | (ரூபாய் இலட்சத்தில்) | | | | |
| ***1991-92*** | *2280* | *27041* | *29321* | *2895* | *29565* | *32460* | *10.93* பேர் |
| ***1992-93*** | *2650* | *29871* | *32521* | *2834* | *31862* | *34696* | *11.83* பேர் |
| ***1993-94*** | *3700* | *33000* | *37600* | *3850* | *37500* | *41350* | *12.88* பேர் |
| ***1994-95*** | *3760* | *34502* | *38262* | *3900* | *38510* | *42410* | *14.31* பேர் |
| ***1.4.95*** முதல் ***24.6.95*** வரை | *860* | *8500* | *9360* | *940* | *9500* | *10440* | *0.35* பேர் |
| ***1995-96*** இலக்கு | *4300* | *35400* | *39700* | *5000* | *39110* | *44110* | *1.40* பேர் (கூடுதல் வேலை வாய்ப்பு) |

செயல்படுத்தும் தொழில் விவரம் எண்ணிக்கை -

வாரியத்தின் சொந்தத் தொழில் பிரிவுகள் - *1,289*

வாரியம் பதிவு செய்த தொழில் கூட்டுறவு அமைப்புகள் - *1,880*

கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு அளிக்கும் உதவி போன்று நிதியுதவி அளிக்கப் பட்ட கைவினைஞர்கள் - *90,000*

எங்கள் இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர் களது ஆட்சிக் காலத்தில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் உற்பத்தி, விற்பனை மற்றும் வேலைவாய்ப்புகள் பன்மடங்கு அதிகரித்திருப்பதைக் கீழ்க்காணும் புள்ளி விவரங்கள் தெளிவாகக் காட்டுகின்றன:

**கூடுதல் வேலைவாய்ப்பு**

*1990-91*-ஆம் ஆண்டு செயல் பட்டுவந்த அலகுகள் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றையும் இன் றைய தேதியில் புரட்சித்தலைவி அவர்களின் ஆட்சிக் காலத்தில் செயல்பட்டுவரும் வாரிய அலகுகள், கூட்டுறவுச் சங் கங்கள் ஆகியவற்றின் எண் ணிக்கை விவரங்களையும் கீழ்க் காணும் புள்ளி விவரங்களி லிருந்து அறியலாம்:

*1990-91*-ஆம் ஆண்டில் சுயமாகத் தொழில் செய்திட,

| ஆண்டு | கதர் | | கிராமத் தொழில் | | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | வாரிய அலகுகள் | கூட்டுறவு சங்கங்கள் | வாரிய அலகுகள் | கூட்டுறவு சங்கங்கள் | |
| ***1990-91*** | *996* | *10* | *238* | *1579* | *2823* |
| ***1994-95*** | *1040* | *20* | *241* | *1834* | *3135* |

கிராமக் கைவினைஞர்களில் 67,170 பேருக்கு நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது. இன்றைய தேதியில் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் நல்லாட்சியில் 90,000 கைவினைஞர்களுக்குச் சுயதொழில் செய்திட வாரியத்தின் மூலம் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது. வறிய நிலையில் உள்ள கிராமப்புறக் கைவினைஞர்கள் கைத்திறனைப் பயன்படுத்தி, கிராமங்களில் தொழில் வளர்ச்சி பெருக வழி செய்யப்பட்டுள்ளது.

குறைந்த நிதி ஆதாரத்தில் அதிக அளவு வேலைவாய்ப்பு அளிக்கும் இத் திட்டம் கிராமப்புற ஏழை மக்களுக்கு ஒரு மிகப் பெரும் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. இவ்வாரியத்தின் மூலம் இதுவரை 14,67,000 கிராமப்புற ஏழை மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. இதில் 5,37,000 பேர் மகளிரும், 3,09,000 பேர் ஆதி திராவிட மக்களும், 16,360 பேர் மலைவாழ் மக்களும் ஆவர்.

மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் பொற்கால ஆட்சிக் காலத்தில் மட்டும், 5,73,000 கிராமப்புற ஏழை எளிய மக்களுக்குக் கூடுதலாக வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது என்பது ஒரு மிகப் பெரும் சாதனையாகும்.

வரும் 1995-96-ஆம் நிதியாண்டில் மேலும், 1,40,000 கிராமப்புற மக்களுக்குக் கூடுதலாக வேலைவாய்ப்பு அளிக்கத் திட்டங்கள் வேகமாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.



புரட்சித்தலைவி அவர்களின் ஆட்சிக்காலத்தில் நூற்பாளர்கள், நெசவாளர் ஆகியோரின் தினக் கூலி கணிசமான அளவுக்கு உயர்த்தப்பட்டுள்ளது. கதர் நூற்பாளர்களின் தினக்கூலி ரூ.15 யிலிருந்து ரூ.17 ஆகவும், நெசவாளர்களின் தினக்கூலி ரூ.25-யிலிருந்து ரூ.30 ஆகவும், பட்டு நெசவாளர்களின் தினக் கூலி ரூ. 35-லிருந்து ரூ. 42 ஆகவும், உயர்த்தப்பட்டுள்ளது. மேற்படி கூலி உயர்வு 1.1.95 முதல் அமல்படுத்தப்பட்டுள்ளது.

கதர்ப் பொருட்களின் விற்பனையை அதிகரிக்கத் தமிழக அரசு விழாக் காலங்களில் கதர் மற்றும் பட்டு ரகங்களின் விற்பனைக்கு 90 நாட்களுக்கும், கதர் பாலியஸ்டர் துணி வகைகளுக்கு 60 நாட்களுக்கும் 10 சதவிகிதச் சிறப்புத் தள்ளுபடி அளிக்கிறது. அத்துடன் கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு பருத்தி கதர் ரகங்களுக்கு 10 சதவிகிதம் தள்ளுபடியும் வழங்குகிறது.

இது தவிர, விழாக் காலங்களில் ஒவ்வொரு ஆண்டும் கதர் மட்டும் பட்டு ரகங்களுக்கும் பாலியஸ்டர் ரகங்களுக்கும் சிறப்புத் தள்ளுபடி வழங்குகிறது. இவ்விதம் முக்கியமான பண்டிகைக் காலங்களிலும், தலைவர்களின் பிறந்தநாள் விழாக்களின் போதும் கதர் ரகங்களுக்கு 35 சதவிகிதம், பாலியஸ்டர் ரகங்களுக்கு 30 சதவிகிதம், பட்டு மற்றும் உல்லன் ரகங்களுக்கு 20 சதவிகிதம் சிறப்புத் தள்ளுபடி அளிக்கப்படுகிறது. இதனால் கதர் ரகங்களின் விற்பனை



ஒவ்வொரு ஆண்டும் பன்மடங்கு அதிகரித்து வருகிறது.

மகளிருக்கு அதிக அளவில் வேலைவாய்ப்பு அளிக்க வேண்டும் என்கிற டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் அறிவுரைகளுக்கிணங்க மகளிருக்கெனப் பல புதிய திட்டங்கள் இந்த ஆட்சிக் காலத்தில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. 18 செயற்கை வைரம் பட்டைத் தீட்டும் மகளிர் கூட்டுறவுச் சங்கங்களும், 7 ஊரக மின்னணுத் தொழில் கூட்டுறவுச் சங்கங்களும் புரட்சித்தலைவி அவர்களின் ஆட்சிக் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டு, அவை மிகவும் வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகின்றன. இதன் மூலம் இந்தக் கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றும் மகளிர் கைவினைஞர்களுக்கு மிகவும் இலாபகரமான ஊதியம் கிடைக்கிறது.

தமிழக அரசின் 'எல்காட்' நிறுவனத்தின் பிணைப்புடன் சென்னை திருவொற்றியூரில் ஒரு கிராமிய மின்னணுத் தொழில் கூட்டுறவுச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டு, அது மிகவும் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. இந்தக் கூட்டுறவுச் சங்கம் 'எல்காட்' நிறுவனத்திடமிருந்து மின்னணு உபகரணங்கள் வாங்கித் தொலைக்காட்சிப் பெட்டிகளுக்கான ஸ்டெபிலைசர், குளிர்சாதனப் பெட்டி (பிரிட்ஜ்) ஸ்டெபிலைசர் ஆகிவற்றைத் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. இது நம் முதல்வர் புரட்சித் தலைவி அவர்களின் நான்காண்டுக் காலப் பொற்கால ஆட்சிக் காலத்தில் கதர் கிராமத் தொழில் துறையை நவீனப் படுத்தும் உயரிய நோக்குடன் தொடங்கப்பட்டுள்ள வெற்றிகரமான புதிய திட்டமாகும். தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கடந்த கால வரலாற்றுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, புரட்சித் தலைவி அவர்களின் நான்கு ஆண்டுக் காலச் சாதனைகள் பொன்னேட்டில் பொறிக்கப்பட வேண்டியவையாகும்.

# தமிழ் இலக்கியத்துக்குப் பெருமை சேர்த்த பேரறிஞர் அண்ணாவின் குடும்பத்துக்கு 75 இலட்சம் ரூபாய்:

## மாண்புமிகு முதலமைச்சர் ஆணை

தமிழ் இலக்கியத்திற்கும் தமிழ்ச் சமுதாயத்திற்கும் தன்னுடைய காலத்தால் அழியாத, புகழ்பெற்ற எழுத்துக்கள் மூலம் சிறப்பு சேர்த்த பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களுடைய இலக்கியப் படைப்புகள் மற்றும் எழுத்து வடிவங்கள் அனைத்தும் நாட்டுடைமை ஆக்கப்படும் என்ற அறிவிப்பினை, கடந்த ஆண்டு அறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் வெளியிட்டிருந்தார்.



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய அறிவிப்பின் அடிப்படையில் பேரறிஞர் அண்ணா அவர்களின் நூல்கள் நாட்டுடைமை ஆக்கப்படுவதை அடுத்து, அவரது குடும்பத்தினருக்கு இதற்குண்டான பரிவுத் தொகை (Exgratia) வழங்குவதை அரசுக்குப் பரிந்துரை செய்யும் பொருட்டு, மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களின் தலைமையில் குழு ஒன்றினையும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் அமைத்தார்.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தலைமையில் இக்குழு கூடி, குழுவின் இதர உறுப்பினர்களான மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர், மாண்புமிகு கல்வி அமைச்சர், அரசின் நிதித் துறைச் செயலாளர், சட்டத் துறைச் செயலாளர், தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறைச் செயலாளர் மற்றும் தமிழ் வளர்ச்சி இயக்குநர் ஆகியோர் தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையில், இக்குழுவானது தனது பரிந்துரையை அரசுக்கு அளித்திருந்தது.

இக்குழுவின் பரிந்துரைகளை முழுமையாக ஏற்றுக்கொண்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்களின் நூல்கள் அனைத்தும் நாட்டுடைமை ஆக்கப்பட்டதால், அவருடைய குடும்பத்துக்கு ஈட்டுத் தொகையாக 75 இலட்சம் ரூபாய், பேரறிஞர் அண்ணாவின் துணைவியார் திருமதி ராணி அம்மையார் அவர்களிடம் வழங்கப்படும் என்று ஆணை பிறப்பித்துள்ளார்.

சிறுசேமிப்பு – உங்கள் குடும்பத்தின் முதல் செலவாக இருக்கட்டும்

# கிசான் விகாஸ் பத்திரம்

# செழிப்பான வாழ்விற்கு சிறப்பான திட்டம்








## சி ற ப் பு  அ ம் ச ங் க ள்

- 5 $^{1}/_{2}$ ஆண்டுகளில் முதலீடு இரட்டிப்பாகும்.
- 18.18% சாதாரண வட்டி.
- முதலீட்டுக்கு உச்சவரம்பு இல்லை.
- இரண்டரை வருடங்களுக்குப் பிறகு தேவைப்பட்டால் பணத்தை திரும்பப்பெறலாம்.
- வங்கிகளில் அடமானம் வைத்து கடன் பெறலாம்.
- வாரிசுதாரர் நியமன வசதி உண்டு.
- 1.4.95 முதல் தமிழ்நாட்டில் உள்ள அஞ்சலகங்களில் ரூபாய் 1,000/-மும் அதற்கு மேலும் முதலீடு செய்வோருக்கு 2% ஊக்கத்தொகை வழங்கப்படும்.

*மேலும் விவரங்களுக்கு அணுகவும் :*

**ஆணையர்**, சென்னை மாநகராட்சி (சிறு சேமிப்பு பிரிவு), சென்னை – 600 003. தொலைபேசி : 584440.

**மண்டல இயக்குநர், தேசிய சேமிப்பு நிறுவனம்**, சென்னை – 600 002. தொலைபேசி : 849962.

மாவட்ட ஆட்சியாளர்கள், வட்டாட்சியர்கள்,

**வட்டார வளர்ச்சி அலுவலர்கள், அஞ்சலக அதிகாரிகள்** மற்றும் **சிறுசேமிப்பு முகவர்கள்.**

**இயக்குநர், சிறு சேமிப்புத்துறை,**

'சயர் மேன்ஷன்', 621, அண்ணா சாலை, சென்னை – 600 006. தொலைபேசி : 8251784, 8251685.

சிறுகுடும்பம் செல்வக்குடும்பம்

சிறுசேமிப்பு – செழுமையின் அடையாளம்.

DIRP/DIS/95

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தி. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927


தூய
பட்டு
தூய
சரிகை
ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ-ஆப்டெக்ஸ்.
கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி
HTA 7556.95



தமிழரசு
பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP-23